ஸ்ரீ

# உபய வேதாந்த க்ரந்தமாலை

ஆளவந்தார் அருளிச் செய்த

# சதுச்ச்லோகியும் ஸ்தோத்ரரத்னமும்

ஸ்ரீ அபிநவதேசிக

உத்தமூர் தி. வீரராகவாசார்யர்

இயற்றிய

பதவுரை பொழிப்புரைகளுடன்

*

ஸ்ரீ விசிஷ்டாத்வைத ப்ரசாரிணீ சபை வெளியீடு





1969

[விலை ரூ. 3-00

901

ஸ்ரீ

# உபய வேதாந்த க்ரந்தமாலை

ஆளவந்தார் அருளிச் செய்த

# சதுச்ச்லோகியும் ஸ்தோத்ரரத்னமும்


ஸ்ரீ அபிநவதேசிக

உத்தமூர் தி. வீரராகவாசார்யர்


இயற்றிய

பதவுரை பொழிப்புரைகளுடன்

*


ஸ்ரீ விசிஷ்டாத்வைத ப்ரசாரிணீ சபை வெளியீடு

1969 [விலை ரூ. 3-00

அச்சிட்டோர் :
தி இண்டியா பிரிண்டிங் ஒர்க்ஸ்
மயிலாப்பூர், சென்னை-4

# முன்னுரை

உபயவேதாந்த க்ரந்தமாலை வாயிலாக இப்போது ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்திக ளெல்லாம் அச்சிட்டு வெளியிடப்படுகிறபடியால் ஆளவந்தார் ஸ்தோத்ரங்களுக் கும் எம்பெருமானுர் கத்யத்ரயத்திற்கும் ஸ்ரீதேசிக பாஷ்யத்தைத் தமிழ் உரை யுடன் அச்சிட நினைத்திருந்தோம். நடுவில் ஸ்ரீமத் வேதாந்த தேசிக எழுநூற் ருண்டு ட்ரஸ்ட் நிர்வாஹிகள் கேட்டதன்மேல் மேற் குறித்த பாஷ்யங்களையே அவர்கள் அச்சிட ஸ்ரீமான் நமது சேட்லூர். ஸ்ரீவத்ஸாங்காசார்யரைக் கொண்டு ஏற்பாடு செய்தனம். அவை அச்சாயின. அதனுல் விசிஷ்டாத்வைத ப்ரசாரிணி சபையின் இஷ்டப்படி அந்த சபை வெளியீடாக இவற்றிற்குத் தமிழுரை மட்டும் இப்போது ப்ரசுரிக்கப்படுகிறது.

இந்த மூல க்ரந்தங்களுக்குப் பழைய உரைகள் பல இருந்தாலும் விசேஷ ப்ரசாரமாயிருக்குமவை பெரியவாச்சான்பிள்ளை தமிழில் அருளிச் செய்த வுரையும் ஸ்ரீ தேசிகன் ஸம்ஸ்கிருதத்தில் அருளிச்செய்த பாஷ்யமும். முதலுரையில் திவ்யப்ரபந்தங்களினின்று மேற்கோள்கள் நிறைந்திருக்கும். 2வது உரையில் ச்ருதிஸ்ம்ருத்யாதிகளின் உதாரணம் எண்ணற்றவை. பழைய காலத்தில் உரைகள் இயற்றுபவர் அர்த்தங்களில் ஸ்வாரஸ்ய அஸ்வா ரஸ்ய விசாரங்களைச் செய்யாமலிருப்பதில்லை. எம்பெருமானுர், எம்பார், பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, தேசிகன், திருவாய் மொழிப்பிள்ளை, மணவாளமா முனி கள் எல்லோருமே முன்னேர் மொழியாத பல யோஜனைகளையும் பாடபேதங் களையும் கொண்டிருப்பது வெகு க்ரந்தங்களினின்று நன்கு தெளியக் கூடியதே. ஆனுலும் ஸ்ரீ பாஷ்யகாரர் திருவடிகள் என்ற ஒரே மதிப்பாய் ஸ்ரீ வைஷ்ண வரிடத்தில் சிறிதும் திரஸ்கார புத்தி யிராமலே பெரும்பாலும் 'ஸர்வத : ஸாரம் ஆதத்யாத்' என்று கொண்டு களித்துக் சிலர் சுவைத்திருந்தனர். இப்போது தமர் பிறரென்று பேத புத்தியை வளர்ப்பதும், ஸ்ரீ வைஷ்ணவரென்ற கௌரவத்தை அடியோடு விட்டு அஹங்கரித்து அவமதித்து அலக்ஷ்யமாய் எழுதி கலஹவிருத்தி செய்வதுமே கைங்கர்யமாகக் கொண்டிருக்கின்றனர். இங்கே யுக்தாயுக்த விசாரம் ஒன்றுமே செய்யாமல் ஏதேனு மொருவிதம் பதவுரையும் சுருக்கமான கருத்தும் இருந்தாற்போது மென்று நினைத்திருந்தும், பலர் கேட்டுக்கொண்டதன்மேல் உண்மையில் பெரியவாச்சான் பிள்ளையுரை யைக் கூடுமானவரையில் கருத்து உரைத்து விடாமலிருக்க வேண்டுமென்பதே ஸ்ரீதேசிகனின் திருவுள்ளமென்று ஸமரஸமாக்க முயன்றதில் சில அம்சங்கள் எழுதுவது அவசியமாயிற்று. விமர்சத்தில் நோக்குள்ளவர் அந்த பாகங்களை ஆராய்ந்து கொள்ளலாம். அது வேண்டாதார் பதவுரை பொழிப்புரைகளிலுள்ள விசேஷங்களை கவனித்துக் கொள்ளல்ாம். மற்ற விவரம் கத்யத்ரயமொழி பெயர்ப்பு வெளியிடும் போதாம்.

பதிப்பாளர்

# ச்லோகஸூசி

ஸ்ரீ :

அஸ்மத்குருப்யோ நம :

ஸ்ரீமதே வேதாந்த குரவே நம :

ஸ்ரீபகவத்ராமாநுஜாய நம :

நமோ நமோ யாமுநாய யாமுநாய நமோ நம :

நமோ நமோ யாமுநாய யாமுநாய நமோநம :

ஸ்ரீமந்நாராயணனுக்கு அடிமைகளான நாம் அவனுக்கு உவப்பாகவே நடந்து கொள்ளவேண்டும். அதற்காகவே அவன் நமக்கு உள்ளம் உரை செயல் என்ற மூன்று கருவிகளைத் தந்தருளினது. அவற்றில் உள்ளத்தால் த்யானம் செய்வது எளிதில் ஆகக் கூடியதன்று. மேலும் உள்ளம் உடல் என்றவற்றின் கார்யங்கள் உண்டானவுடன் மறைந்துவிடும். செய்பவனுக்கு மட்டுமே பயன்படும். உரை யென்ற வாக்கின் கார்யங்க ளான ஸ்தோத்ரம் முதலானவை சொல்பவருக்கும் கேட்பவருக்கும் பயன் அளிக்கும். வெகு காலம் சேமிக்கப்படும். ஆகவே கதாப்ரவசனத்தை பெரிய தர்மமாக புராணுதிகள் கூறும். அவற்றில் வேதாந்தார்த்தங்களை சாஸ்த்ர நடையில் எழுதினுல் சிலரே அறிவார். அவை எம்பெருமானை நேரில் விளித்துப் புகழ்வனவுமாகா. காவ்யநடையில் ஸ்தோத்ரமாகில் வேதாந்த விழுப்பொருள்களையும் அடக்கி இயற்றினுலும் எல்லோரும் எளிதில் அறியலாம், 'ஸ்தவ்ய : ஸ்தவப்ரிய :' என்னப்பட்ட பகவானுக்கும் மிக்க உவப்பாகும். இந்நடையில் நம் பூர்வாசார்யர்கள் அருளிய ஸ்தோத்ரங்களில் வடமொழியில் முதன் முதலானவை சதுச்ச்லோகியும் ஸ்தோத்ரரத்னமும். பிராட்டி விஷயமானது சதுச்ச்லோகீ.

இந்த சதுச்ச்லோகிக்கும் ஸ்தோத்ரரத்னத்திற்கும் ஸ்ரீதேசிகன் அருளிச்செய்த பாஷ்யம் வேதம் ஸ்ம்ருதி இதிஹாஸம் புராணம் பாஞ்சராத்ரம் முதலான ப்ரமாணங்களை எடுத்துக் காட்டி விரிவான உரையாகும். முழுமையும் மொழி பெயர்த்து அதைச் சுவைக்கச் செய்வதே முக்கியமாயிருந்தும், முதலில் சுருக்கமாக ச்லோகங்களின் கருத்தை மட்டும் எல்லோரும் எளிதில் தெளிவதற்காக இதை வெளியிடுகிருேம். ஆசார்யன் காண்பித்த வழியிலே இறங்கிச் சிற்சில விசேஷங்களை முந்துற முன்னம் அறிதல் அந்த பாஷ்யத்தையும் அறிந்துகொள்ள அனுகூலமாகும்.

ஆளவந்தார் அருளிச்செய்த

# சதுச்ச்லோகீ

1. காந்தஸ் தே' புருஷோத்தம :' பணிபதி: சய்யாSSஸநம்' வாஹநம்'
வேதாத்மா' விஹகேச்வரோ' யவநிகா' மாயா' ஜகன்மோஹிநீ.
ப்ரஹ்மேசாதி ஸுரவ்ரஜ :' ஸதயித : த்வத்தாஸதாஸீ கண :
ச்ரீரித்யேவ' ச நாம'தே' பகவதி'ப்ரூம :' கதம் த்வாம்'வயம்.

பதவுரை: ஹே பகவதி—குற்றமொன்றுமின்றி குணங்களெல்லாம் நிறைந்த பிராட்டியே! புருஷோத்தம :—எல்லாபுருஷர்களுக்கும் மேம்பட்ட பகவான், தே காந்த:—உனக்கு ப்ரியனுன தகுந்த பார்த்தாவாகிருன். பணிபதி :—ஸர்ப்பராஜனுன திருவனந்தாழ் வான்தே உனக்கு சய்யா ஆஸநம்—பள்ளியும் ஆஸனமுமாகிருன். வேதாத்மா-வேதமே வடிவான, விஹகேச்வர :—பெரிய திருவடி தே வாஹநம் ஆஸநம்—உனக்கு வாஹனமும் ஆஸனமுமாகிருன். ஜகந்மோஹிநீ—உலகில் எல்லா ஜீவர்களுக்கும் விபரீதஜ்ஞானத்தை விளைக்கும் மாயா—மூலப்ரக்ருதி யென்ற ஆச்சர்ய கார்யம் செய்யும் வஸ்துவானது, தே யவநிகா-உனக்கு சேஷமாய்த் திரையாகும். ப்ரஹ்ம-ஈச-ஆதிஸுரவ்ரஜ:-பிரமன் ருத்ரன் முதலான தேவர்களின் திரள், ஸதயித:-தங்கள் மனைவிகளோடு கூடி, த்வத்தாஸதாஸீகண: உனக்கு அடிமையான ஸ்த்ரீகளுடன் சேர்ந்த அடிமையாண்கூட்டமாம். தே நாம—உனது திருநாமமோ ச்ரீ: இதி ஏவ-சிறந்த ச்ரீ என்றதேயாம். இப்படியிருக்க வயம்—நாங்கள்-யாராயினும் கதம்-எவ்வாறு த்வாம்—உன்னை, ப்ரூம:—தெளிவாகச் சொல்லுவம்.

பொழிப்புரை: ஜ்ஞானம் சக்தி பலம் ஐச்வர்யம் வீர்யம் தேசு என்ற ஆறு குணங்கள் பகவானுக்குப் போலே இயற்கையாகவே ஒருவித குற்றமுமின்றி உன்னிடமிருப்பதாலே பகவதீ என்று நீ சொல்லப்படுகிருய். இப்படி நாரீமணியான நீ புருஷோத்தமனையே பர்த்தா வாக விரும்பிப் பெற்றிருப்பது மிகவும் பொருத்தமானது. ஸ்த்ரீகளுக்கு பர்த்தாவே சிறந்த பூஷண மாகையாலே அந்த விஷயத்தை முன்னம் தெரிவித்துக்கொண்டேன். ஆனுலும் அவனைப் போலவே குணம் நிறைந்தவளானுலும், 'உத்தம: புருஷஸ்த்வந்ய: பரமாத்மேத்யு தாஹ்ருத: யோ லோகத்ரயமாவிச்ய பிபர்த்தி அவ்யய ஈச்வர :' என்றபடி சேதநாசேதநங் களான எல்லாவற்றையும் விபூதியாக உடையனுன அவனுக்கு நீ ஏற்ற மனைவியா என்ரு ராய்ந்தேன். அவனுடைய விபூதியெல்லாம் அவனுக்குப் போலே உனக்கும் விபூதியான படியாலே இருவருக்கும் சிறிதும் ஏற்றத்தாழ்வில்லை. உலகில் ஸ்த்ரீகளுக்கு, பிறந்த இடத்திற் கேற்ப வைபவம் இராமலிருக்கும், இருப்பது சொற்பமுமாகும். சில வைபவமுள்ள ஸ்திரீகள் தங்கள் வைபவத்தையே பர்த்தாவுக்கும் ஆக்குவதுமுண்டு. அங்கே ஏற்றத் தாழ்விருக்கும். உங்கள் இருவருக்கும் விபூதி வெவ்வேறில்லையாகையால் இதில் குறை கூறவாகாது. சிலர் எல்லா வைபவமும் பகவானுடையதே; அவனுக்கு மனைவியானமையால் உனக்கும் அது விபூதியாயிற்றென்று நினைப்பர். இப் பேச்சு பூமி நீளாதிகளான பிராட்டிகள்விஷயத் திலே தகும். உனக்கு அவ்வாறில்லை. உங்கள் இருவருக்கும் உலகைப் பற்றி ஒரே சேஷித் வமென்றது ப்ரமாணம். ஆகையால் நிருபாதிகமாய் நீயும் சேஷியாகிருய். விஷ்ணுபுராணத் திலே புருஷர்களெல்லாரும் பகவானுடைய விபூதி யென்றும் ஸ்திரீகள் உனது விபூதி

யென்றும் சொன்னதைக் கொண்டு யாருக்கும் வைபவத்தைக் குறைக்கலாகாது. எல்லாம் உங்களுக்குப் பொதுவாயிருந்தும் நீங்களே இஷ்டப்பட்டுக் கூருக்கிக் கொண்டதைப் பற்றியாம் அது. அதுவும் புருஷ குணங்கள் புருஷர்களிடத்திலும் ஸ்திரீகுணங்கள் ஸ்திரீகளிடத்திலும் விஞ்சித் தோற்றுவதற்காக நீங்கள் வகுத்தது, அபிமானிப்பதற்காகவே. ஆகையால் பிரமன் முதலானுரின் மனைவிகளைப்போலே அவர்களும் உனக்கு அடிமையேயாவார்கள். சிறிது ஆராய்ந்து பார்த்தால் உனக்கே அவனை விட ஏற்றமாகும். ச்ரீ என்கிற திருநாமம் உன்னுடையது. அத் திருநாமத்தைத் தன் திருநாமத்திற்கு முன் சேர்த்தே அவன் பெருமைப்படுகிருன். அதன் பொருள்களை ஆராய்ந்தபோது அவனைப்போல் எல்லாம் இருக்க அவனையும் திருத்தியமைக்கும் சக்தியும் புருஷகாரத்வமும் உன்னிடம் இருப்பது நன்கு விளங்கும். 'தஞ்சேயமஸிதேக்ஷணா' என்று வால்மீகியும் குணத்துடன் அழகிலும் உனக்கு உயர்ச்சியை யுரைத்தார். இப்படிப்பட்ட உன்னை யறியாமைக்குக் காரணம் இந்த மாயையே. அதுவும் உனக்கு சேஷபூதமாகும். இவ்வாறு சிறப்புற்றும் நீ அவனைத் தனக்கு ப்ரியனுன பர்த்தாவாகக் கொண்டது உனக்குள்ள குணச் சிறப்பையே குறிக்கும். இப்படி ஸ்வரூபரூபகுண விபவங்களை அளவின்றி பெற்றிருக்கும் உன்னை நாங்கள் எத்தனை பேர் சேர்ந்தால்தான் எவ்வளவு சொல்லவாகும் என்றபடி.

இங்கு முதலில் பகவான் பதி என்பதைச் சொல்லிப் பிறகு விபூதிகளைச் சொன்னது எதற்காக என்னில், பிராட்டியானவள் பகவானைப்போல் ஸர்வாதிகாரியானுல் ஈரரசுபட்டு உலகம் கெடுமே என்று நாம் நினையாமைக்காக. பிராட்டி தனக்குள்ள வைபவத்தை அவனுக்கு மனைவியாம் வேஷத்துடன் சேர்த்தே கொள்கிருள். அவனேடு இணைந்து ஸஹதர்மசாரிணியாய் ஆள்கிருள். இவள் அவனை விட்டு ஆள்வதோ, இவளை விட்டு அவன் ஆள்வதோ இல்லை யென்று தெளிந்தால் இவளுக்கும் மேலே முழு விபூதியை இசைவதில் குற்ற மொன்றும் மனதிற்படாமலிருக்குமே.

**பணீபதி: சய்யா** ; ஆனந்த பரவசனுய், வெண்மை மென்மை மணம் அழகு அகலம் உயர்ச்சியென்ற எல்லா குணங்களும் உள்ள திருப்பள்ளியாகிருன் திருவனந்தாழ்வான். நித்யவிபூதி யெல்லாம் உனக்கு சேஷ மென்றதாயிற்று.

**த்வத்தாஸதாஸீகண:**—கீழே ஸுரவ்ரஜ: ஸதயித: என்று பிரித்துச் சேர்த்ததற்கிணங்க இங்கும், தாஸீபி: ஸஹிதோகண: தாஸீகண:, தாஸாநா: தாஸீகணம்: தாஸதாஸீகண: தவதாஸ தாஸீகண: என்று விக்ரஹம் செய்வதாம். தாஸர்களின் கூட்டம் தாஸிகளுடன் கூடிய தென்றதாயிற்று.

இந்த முதல் ச்லோகத்தினுல் பெரிய பிராட்டியார் எம்பெருமானுக்குத் தானே விரும்பி சேஷமானமையும், நித்யவிபூதி லீலாவிபூதி என்ற மற்றெல்லாவற்றிற்கும் அவள் எம்பெருமானுடன் சேர்ந்து சேஷியாகிருளென்றதும் தெரிவிக்கப் பெற்றன. (1)

வயம் என்று, நாங்கள் எவ்வாறு சொல்லவல்லோமென்றீர்: ப்ரஹ்மாதிகளும் சொல்ல மாட்டிலர் என்றதாயிற்று. ஆயினும் புருஷோத்தமன் ஸர்வசக்தனுனபடியாலே சொல்லலா மென்று நினைக்கிறீர். அவர், வேண்டா என்ருலும் அன்பினுல் என்னைப் புகழ்ந்தவண்ணமே யிருக்கிருர். அதுவே போதுமாகையால் நீர் ஏன் இதில் இழிய வேண்டும். நன்ருகச் சொல்ல உம்மால் முடியாது. தவருகச் சொன்னுல் அபராதமாகும். ஆகையால் அஞ்சி விலகி நிற்கலாமென்ருள்—அதன் மேல் கூறுகிருர்—உனக்கு ஜ்ஞாநாதி பரத்வகுணங்கள் போலே ஸௌலப்ய குணங்களும் நிறைந்திருப்பதால் எனக்கு அச்சமில்லை. எம்பெருமானும் உன்னைப் பூரணமாக வர்ணிக்க மாட்டிலன். அடிமையான நான் உன்னை ஏத்துவது அவசியமாகையால் துணிந்து துதிக்க இழிகிறேன் என்கிருர்—

2. யஸ்யாஸ்தே' மஹிமாநம்' ஆத்மந' இவ' த்வத்வல்லபோபி ப்ரபு:
நாலம்' மாதும்' இயத்தயா நிரவதிம்'நித்யாநுகூலம்' ஸ்வத:.
தாம்' த்வாம்' தாஸ' இதி' ப்ரபந்ந' இதி'ச' ஸ்தோஷ்யாம்யஹம்' நிர்ப்பய:
லோகைகேச்வரி' லோகநாததயிதே' தாந்தே' தயாம்' தே'விதந்.

த்வத்வல்லப:—உனது ப்ரியனுன பெருமான், ப்ரபு: அபி—ஸர்வசக்தனே யானுலும், ஆத்மந: மஹிமாநம் இவ—தனது மேன்மையைப் போலே யஸ்யா:தே—யாதொரு உனது, நிரவதிம்—அளவற்றதும், ஸ்வத:—தானுகவே நித்யாநுகூலம்-எப்போதும் இனிதாயுமுள்ள மஹிமாநம்-மேன்மையை - இயத்தயா மாதும் - அளவிட்டுக்காண, நஅலம், சக்தியற்றவனுகிருனே, தாம் த்வாம்—அத்தகைய உன்னை, அஹம் நான், ஹே லோக ஏக-ஈச்வரி—உலகுக்கெல்லாம் ஒரே ஈச்வரனுன பகவானின் மனைவியே! லோகநாததயிதே—லோகநாதனுன அவனுக்கு மிகவும் இஷ்டமானவளே! தாந்தே—அடக்கமுள்ள ப்ரஜை யினிடம், தே தயாம்—நீ தயை புரிவதை, விதந்—அறிந்தவனுய், தாஸ இதி, அடிமையா கிறேன் என்றும், ப்ரபந்ந: இதி-சரணம் அடைந்தவன் என்றும் கருதி, நிர்பய:—அச்சமற்ற வனுய், ஸ்தோஷ்யாமி-ஸ்தோத்ரம் செய்யப் போகிறேன்.

பகவானெருவன் உன் மேன்மையை நன்கு பூரணமாகப் பணிக்கவல்லன் என்று நான் நினைக்கவில்லை. அவன் தன் மேன்மையைத்தான் சொல்லவல்லனு. அது அளவற்றதாயிற்றே என்னில், இதுவும் அளவற்றதே. உன் மேன்மையில் அவன் பொருமைப்பட்டோ, மேன்மையை அறியாததனுலோ சொல்வதில்லை யென்று யான் சொல்லேன். இது அவனுக்கு அவன் மேன்மையைப் போலே அனுகூலமாயிற்றே-ஆனந்தம் விளைப்பதா கிறதே. ஏதேனுமொரு காரணத்தினுல் ஒரு சமயம் அனுகூலமாகுமென்பதில்லை. இயற்கை யாகவே எப்போதுமே அனுகூலம். சில நாள் கழிந்த பிறகு மேன்மை போயிடுமென்ருே, இருந்தும் ப்ரதிகூலமாகுமென்ருே சொல்லவாகாது. அழியாமல் என்றும் அனுகூலமே. இப்படியிருக்க அவனுக்கு இதுவிஷயமான அறியாமையோ அசூயையோ சொல்வதற்கு

இல்லை. பின் ஏன் சொல்லவாகாதெனில். அநாதியான மேன்மை மேன்மேல் வளர்ந்து கொண்டிருக்கும்போது சொல்லி மாள்வது எங்ஙனே. அளவற்றதாகையாலே முடிக்க மாட்டிலன். அளவற்றதை அளவிட்டுக்காணல் கூடாது. ஸர்வஜ்ஞனபடியாலே அளவற்றதென்று தெரிந்திருக்கிருன். ஆகையால் பூரணமாகப் பணிக்க அவன் முயலான். முடிந்த வரையில் சொல்ல என்னுலுமாகும். ஆனுல் அறியாமையால் தவருகச் சில அம்சங்களைச் சொல்வேனே என்று அஞ்சினேன். பழிக்க வேண்டுமென்று சிலர் இழிந்து பழித்தால் அவர்கள் அடங்காதவர்களென்று நீ உபேக்ஷிப்பாய். நிக்ரஹம் செய்யா விட்டாலும் தயை புரியமாட்டாய். புகழ வேண்டுமென்று இழிந்தவன் சொல்வது பழிப்பானு லும் நீ, இவன் தாந்தன்—அடக்கமுள்ளவனென்று தயை புரிவாய் என்று நான் அறிந்த தால் எனக்கு அச்சமில்லை. 'நீர் என்னிடம் அஞ்சாமற் போனுலும், வெட்கமற்ற உமது துணிகரமான செயல் தகாததென்று கொண்டு ப்ரம்ம ருத்ராதிகள் ஏதேனும் விரோதம் செய்தால் என் செய்வீர்' என்கிருயோ. நீ லோகத்திற்கெல்லாம் ஒரே ஈச்வரனுன பகவானின் மனைவியாயிருக்க, உன்னைத் துதி செய்ய இழியுமென்னை அவர்கள் என்ன செய்யக்கூடும். ஸர்வேச்வரனே நீ இழிந்தது சரியல்ல என்று நினைத்தால் என் செய்வீரென்கிருயோ. அவன் உன்னிடம் வைத்திருக்கும் அன்புக்கு அளவில்லையே. நீ இசைந்த காரியத்தை அவன் மறுப்பானே. ஆகையால் யாரிடமும் எனக்கு அச்சமில்லை. ஆயினும் இது விஷயமான முயற்சி உமக்கு வேண்டாமென்று எனக்கே தோன்றுகிறதென்கிருயோ. அது நியாய மன்று. அடிமைக்காரனுக்கு ஆளுமவரைத் துதிப்பது அவசியமாயிற்றே. தெரியாமல் சிலர் வாளாவிருந்தாலும் நான் தெரிந்து வாளாவிருப்பேனே. மற்றவரைக்காட்டிலும் நான் பலன் அதிகம் பெற்றிருக்கிறேனுகையாலும் துதிக்காமலிருக்க முடியவில்லை. மிகப் பெரிய உபாயம் செய்து பெறவேண்டியதை ப்ரபத்தியினுல் பெறுகிறவனுகிறேன். இலகு வான விரகினுல் பெரிதான பலன் பெறுகின்ற நான் எல்லோர்எதிரிலும் என் சந்தோஷத் திற்கு ஏற்ப ஏதேனும் முடிந்தவரையில் சொல்லாமலிருக்க முடியாதே. ஆகவே துதிக்கப் போகிறேனென்றபடி.

இந்த ச்லோகத்தில் ஒவ்வொரு சொல்லின் உட்கருத்தும் செவ்வனே விளங்கும்படி பொழிப்புரை வரைந்தனம், ஊன்றியறிக. ஸ்தோத்ரம் செய்ய முடியாது, ஆனுலும் செய் கிறேனென்று சொல்வதிலேயே விசேஷமாக ஸ்தோத்ரம் செய்துவிட்டார். பிராட்டியின் வைபவத்தை முன்னே சொன்னுர். அவ் வைபவம் அளவற்றது; எம்பெருமான் வைபவத் திற்கு ஈடானது. ஒருவரால் வந்ததன்று. தானுகவேயுள்ளது. அவனுடைய குண வைபவங்களைக் கூற இழிந்த வேதம் ஒரு குணத்தைக் கூடக் கூறித் தலைக்காட்டமாட்டாமல் நின்றுவிட்டது. ஒன்றே முடியாதபோது வேறென்றில் ஏது இழிவது. இப்படி அவனுக்கும் அறிந்தோர்க்கும் அனுகூலமான அவள் மேன்மையை யாரும் மறுக்கமாட்டிலர் என்றபடி பரத்வ குணங்களுடன் ஸௌலப்யத்திற்கான தயாதி குணங்களும் நிறைந்தவள் என்றுர் இங்கு.

லோகைகேச்வரி என்கிற சொல்லுக்கு உலகை ஆள்கின்றவளே என்றே பொருள் கூறலாம். உலகையாள்கின்றவனின் மனைவியே என்று ஏன் பொருள் உரைக்கவேண்டும்.

இவ்வாறு உரைத்தால் லோகநாததயிதே என்றது மீமிசையாமே எனில்-ஈச்வரி என்ற சொல் இலக்கணத்திற்கிணங்க ஈச்வரனின் மனைவியென்ற பொருளையே கூறுமென்பர் வ்யாகரணப் புலவர். ஆனால் வேறு பொருளும் ஒருபடி கூற முடியுமென்று கத்ய பாஷ்யத்திலே தேசிகனின் கருத்திலுள்ளது. 'ப்ராணேச்வரீம்' என்று யாதவாப்யுதயத்தில் ப்ரயோகித்துமுள்ளார். ஆயினும் இங்கே லோகைகேச்வரி என்றவிடத்தில் ஏக என்ற சொல் இருப்பதால் ஒப்பற்ற ஈச்வரத்வம் கூறப்படுவதால் பகவான் சிறந்த ஈச்வரனிருக்கப் பிராட்டிக்கு அவ்வாறு சொல்லி அதற்கு ஏதேனும் வேறு கருத்து ஆராய்வதைவிட, சொற்புலவர் சொல்படியே பொருள் இருக்கட்டுமென்றிவ்வளவே கருத்தாம். மீமிசையாகாதபடி ஒருவாறு பயன் பாஷ்யத்திலும் கூறப்பட்டுளது. இதில் யாதொரு நிர்பந்தமுமில்லை. விரிவு வேறிடத்தில்.

தாந்தே என்பதற்கு க்ருபை நிறைந்தவளே என்று பொருள் கூறி முன்பதங்களைப் போல விளிச்சொல்லாக்கினார் பெரியவாச்சான்பிள்ளை. அப்பொருளில் ப்ரஸித்தியின்மையாலும் தயாம் தே என்பதால் அது கிடைத்துவிட்டதாலும் ஏழாம் வேற்றுமையாக ஸ்ரீதேசிகன் உரைத்தார். பொழிப்புரையில் கருத்துத் தெளிவாகும். (2)

இனி ஐச்வர்யம், கைவல்யம், மோக்ஷம் என்கிற பலன்களெல்லாம் இவளுடைய அனுக்ரஹத்தினாலேயென்கிறார் மூன்றாவதில்—எந்த ஜீவனுக்கும் எவ்வித நன்மையும் உன்னாலேயே என்று உண்மையைச் சொல்லித் துதிக்கிறார்.

3. ஈஷத் த்வத்கருணா நிரீக்ஷணஸுதாஸந்துக்ஷணாத் ரக்ஷ்யதே
நஷ்டம் ப்ராக் தததலாபதஸ் த்ரிபுவநம் ஸம்ப்ரத்யநந்தோதயம்.
ச்ரேயோ நஹ்யரவிந்த லோசநமந: காந்தாப்ரஸாதாத் ருதே
ஸம்ஸ்ருத்யக்ஷரவைஷ்ணவாத்வஸு ந்ருணாம் ஸம்பாவ்யதே கர்ஹிசித்.

ஸம்ப்ரதி—இப்போது, த்வத்கருணா நிரீக்ஷண—உனது க்ருபையுடன் சேர்ந்த நோக்காகிற, ஸுதா-அமுதை, நீ ஈஷத் ஸந்துக்ஷணாத்-சிறிது பரவச் செய்ததால், ப்ராக்—இதற்குமுன் தததலாபத:-அத்தகைய நோக்கைப் பெறுமையால், நஷ்டம்-கேடுற்றதான த்ரிபுவநம்-மூவுலகும், அநந்தோதயம்—எண்ணற்ற ஸம்ருத்தியையுடையதாய், ரக்ஷ்யதே-காக்கப்படுகிறது. அரவிந்தலோசந-செந்தாமரைக் கண்ணனுடைய மந:காந்தா-மனத்துக்கு இனியவளான உனது, ப்ரஸாதாத் ருதே, அனுக்ரஹமின்றி, ஸம்ஸ்ருதி - ப்ராக்ருத விஷயஸுகாநுபவம், அக்ஷர-கைவல்யமென்ற ஆத்மானுபவம், வைஷ்ணவாத்வ-பரமபதகதி என்ற இம் மூன்றில் ச்ரேய: எந்த நன்மையும், கர்ஹிசித்-ஒரு பொழுதும் நஹி ஸம்பாவ்யதே-ஆலோசிக்கப்படவுமாகாதே. கிடையாதே.

ஸுகமென்ற புருஷார்த்தத்தை ஐச்வர்யம் கைவல்யம் மோக்ஷமென மூன்ருகப் பிரிக்கலாம். தத்துவங்கள் மூன்ருனபடியாலே அவற்றின் அனுபவமாகிற புருஷார்த்தமும் மூன்ரும். அவற்றில் ப்ரக்ருதியின் அனுபவம் அதாவது கீழ்மேலுலகில் பெறும் விஷயானுபவமே ஸம்ஸ்ருதியாகும், இவை யெல்லாம் பிராட்டியின் க்ருபாகடாக்ஷமின்றி பெறப்படமாட்டா. இவ்விஷயத்திற்கு ஓர் உதாரணம் பூர்வார்த்தத்தினுல் காட்டப்படுகிறது. துர்வாஸ முனிவரின் சாபகாலத்திலே பிராட்டியின் கடாக்ஷம் பெருமையால் மூவுலகும் கேடுற்றன. பிறகு பாற்கடல் கடைந்து பிராட்டியின் கடாக்ஷம் பெற்றவுடன் எங்கும் எல்லாவகையிலும் ஸம்ருத்தி ஏற்பட்டு எல்லாம் இப்போதும் நிலைத்திருக்கின்றன. தேவர்கள் அமுது உண்டு புஷ்டிபெற்ருர்கள் பாற்கடல் கடைந்ததா லென்பது நிற்க. பிராட்டியின் கடாக்ஷமாகும் அமுதைச் சிறிது பெற்றே மூவுலகும் நிலைநின்ற செழுமையுடையனவாயின. இதைப் போலவே எல்லாப் பலன்களுமென்க.

இங்கே பூர்வார்த்தத்திற்கு லக்ஷ்மீகடாக்ஷமிராமல் ப்ரளயத்தில் அழிந்த உலகமெல்லாம் அவள்கடாக்ஷத்தால் ஸ்ருஷ்டியில் உண்டாகி காக்கப்படுகிறதென்று ப்ரளயமும் ஸ்ருஷ்டியும் பூர்வார்த்தத்திற்குப் பொருளாக பெரியவாச்சான்பிள்ளை உரைத்தார். பிராட்டி ஜகத் காரணமாகிருளென்று விசேஷமாகப் பெருமையைச் சொன்னதாகிறபடியால் இந்த உரை ச்லாக்யமானுலும், த்ரிபுவனம் என்ற சொல்லின் நயமும், ஸோதயம் என்னுமே அநந்தோதயமென்றதாலே, புவனமிருக்கின்றது அதில் அப்யுதயங்கள்-ஸம்ருத்திகள் பலவே பின் ஏற்பட்டன என்று தெரிவதாலும், விஷ்ணுபுராணத்தில், " த்வயா தேவி பரித்யக்தம் ஸகலம் புவநத்ரயம் விநஷ்டப்ராயமபவத் த்வயேதாநீம் ஸமேதிதம் " என்று தேவேந்த்ரன் துர்வாஸச்சாபம் விலகினபோது புகழ்ந்த விஷயமான ச்லோகத்திலுள்ள சொற்களெல்லாம் ஸ்பஷ்டமாக இங்கே சேர்க்கப்பட்டிருப்பதாலும் அந்த விஷயமாயிருத்தல் பொருந்து மென்று ஸ்ரீதேசிகன் திருவுள்ளம். முழு ஸ்ருஷ்டியைச் சொல்வதானுல் மேலே ஸம்ஸ்ருதி என்று சொன்னதெல்லாம் இங்கே சொன்னதாய்விடும், ரக்ஷ்யதே என்று எல்லா ரக்ஷணமும் கொள்ளப்பட்டால் உத்தரார்த்தமே வீணும், ஸம்ப்ரதி என்ற சொல்லும் வீணும் என்ற வாருராய்க. ஆயினும் சொன்னது ப்ராமாணிகமென்ற கருத்தாலே சிலர் இப்படி சொன்னுர்களென்று கூறினுர். அவர் உரையில் ஓர் ஐதிஹ்யம் உள்ளது. நடாதூரம்மாள் பிள்ளானைக் கேட்டாராம், பிராட்டிக்கு ஜகத் காரணத்வத்திலே ஸம்பந்த முண்டோ என்று. பிள்ளான் அருளினதாவது, ' ஆனுலென்ன? ஸஹதர்மசாரிணியாகையாலே எல்லாக் கார்யங்களும் சேர்ந்தே செய்வதாகும் 'நற்செயல்களைச் சேர்ந்து செய்வோம். ப்ரஜைகளைப் பிறப்பிப்போம், என்று தானே இப்போது விவாஹத்தில் சொல்வதென்றவாறு. விஷயம் சரிதான். பிள்ளானைக் கேட்கும் படிக்கு நடாதூர் அம்மாள் ஸமகாலமா என்பதை யாராய்ந்து, கூடுமாகில் கேட்டவர் அம்மாளாகவேயிருக்கலாமென்க. எப்படியும் அவ்வுரையில் பிராட்டியும் ஜகத் காரணமென்றதாயிற்று.

ததலாபத :. கடாக்ஷம் பெருமையால் என்ருரல்லது அவளுடைய சீற்றத்தாலென்னவில்லை. அதனுல் அவளுக்குச் சிறிதும் நிக்ரஹஸங்கல்ப்பம் கிடையாது. அனுக்ரஹம் முழுமையும் இவளுடைய ஸ்ங்கல்ப்பம் சேரவே உண்டாம். ச்ரேய :. அநிஷ்டநிவ்ருத்தியும்

இவளாலேயே. அபாவமும் ஒருவித பாவபதார்த்த மென்கிற பக்ஷமானபடியாலே இஷ்ட ப்ராப்தியிலே அநிஷ்டநிவ்ருத்தியும் அடங்குமென்னலாம். அரவிந்தலோசன என்றதால் அவர் கடாக்ஷமும் கூடவேண்டு மென்றதாயிற்று. மந:காந்தா. மற்ற பிராட்டியைக் காட்டிலும் வாசி தோற்ற மந: என்றது. வைஷ்ணவாத்வ. விஷ்ணுதாம என்னலாமே: விவேச வைஷ்ணவம் தாம என்றபடி வைஷ்ணவமென்றும் ஸ்தானத்தைச் சொல்லலாம். அத்வ என்பது எதற்கென்னில், பரமபதமென்றால், அங்குள்ள நித்யஸூரிகளுக்கு நன்மை என்றதாய் மோக்ஷப்ராப்தியென்று தெளியப்பெருதென்று அத்வா என்றது. பரமபதப்ராப்தி யென்றபடி. மேலும், பரமபதத்திற்கு மார்க்கம் ஒன்றே. அந்த மார்க்கம் போகின்றவர் வைஷ்ணவபதத்தில் அவனை யனுபவித்தாக வேண்டுமென்று குறிப்பிட என்னலாம். அன்றி, பரமபதம் சென்றபிறகுபோலவே மார்க்கத்திலேயே சில பக்தியோகத்திற்கு வஸ்வாதிகளின் ஸ்த்தாநப்ராப்தி, ஸூர்யஸாயுஜ்யம், சந்த்ரஸாயுஜ்யம் போன்ற பலன்கள் இடையில் உண்டு. அவ்வாறே அர்ச்சிராதிமார்க்கம் போகின்றுரெல் லோர்க்குமே 'தோரணம் நிரைத்து எங்கும் தொழுதனருலகே', 'தூபநன்மலர் மழை பொழி வனர்', 'நிதியும் நற்சுண்ணமும் நிறைகுட விளக்கமும் மதிமுகமடந்தையர் ஏந்தினர்', ('பதியினில் பாங்கினில் பாதங்கள் கழுவினர்) என்றுற் போன்ற பல ஸுகானுபவங்கள் வழியில் கிடைப்பதும் இவள் அனுக்ரஹத்தாலென்பதற்கென்க. ஸம்ஸ்ருத்யக்ஷர வைஷ்ண வங்களின் வழிகளிலும் என்றும் உரைக்கலாம். அத்வா என்பதற்கு நடை என்றும் ப்ரதேசம்—இடம் என்றும் பொருளுமுண்டு. ஸம்பாவ்யதே. பவதி என்னுமே இவ்வாறு கூறினது, அவ்வாறு நினைக்க இடமே இல்லையென்பதற்காக. ஆயினும், இவள் அனுக்ரஹத் தாலும் ஆகலாம், 'மாம் ப்ரபத்யேத வை கதிம், ஆதிதேவம் ஜகந்நாதமீசம் வா புருஷோத்த மம்' என்று பிராட்டியையாவது பெருமானையாவது ஆச்ரயிப்பதென்றிருப்பதால் அவனுல் மட்டுங் கூட பயன் கூடுமே என்று நினைக்கலாகாதென்பதற்காக கர்ஹிசித் என்றுர், ஒரு போதும் இவளுடைய அனுக்ரஹமிராமல் நன்மையில்லை. அங்கே வா என்றது வேறு. சிற்சில விடங்களிலே ஏதேனும் சிறிய பலனுக்காக ஒருவரை தனியே யாச்ரயித்தாலும் இரு வரும் அனுக்ரஹிக்கவே பலனும் என்று கருத்திலுள்ளது. மேலும், கீழே ஸ்ரீஸூக்தத்திற்கு விவரணம் செய்யப்பட்டது. ஆக பஞ்சாக்னிவித்யையில் ''தத் ய இத்தம் விது: யேசேமே அரண்யே ச்ரத்தாதப:'' என்கிற வாக்யத்திற்கு ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச்செய்திருப்பது போல் இங்கும் பொருளாம். அதாவது—விஷ்ணுபத்னீ என்ற ஆகாரத்திலே விஷ்ணுவை விசேஷணமாக்கி என்னை விசேஷ்யமாக்கி சரணுகதி செய்தாலும், ஸ்ரீமந்நாராயணனென்று என்னை விசேஷணமாக்கி அவனை விசேஷ்யமாக்கி சரணுகதி செய்தாலும், 'பலனென்றே. 'லக்ஷ்மீநாராயணுகாரா பவிதா தே மநஸ்ஸ்த்திதி:' என்கிற நிலையே எங்குமென்றதாம். இங்கே ஸம்ஸ்ருதி, கைவல்யம் என்ற விரண்டிற் போலவே வாசியிராமல் மோக்ஷத்திலும் எங்கும் இவளுடைய அனுக்ரஹம் வேண்டு மென்றது குறிகொள்ளத்தக்க தாம். லக்ஷ்மீ தந்த்ரத்தில் (50) பிராட்டிவிஷயமாகவே விசதமாக ஆனுகூல்யஸங்கல்ப்பம் முதலான அங்கங்களைத் தொடங்கி, உபேயமான உன்னை யடைவதற்கு நீயே உபாயமாக வேணுமென்கிற ப்ரார்த்தனையைப் பணித்து அவளுடைய திருவடிகளிலே பரந்யாஸமும் அதற்காகச் செய்யப்படவேண்டுமென்றதையும், முடிவான அத்யாயத்திலே இருவரும் சேர்ந்தே உபாய மென்று அத்ரி மஹர்ஷிநிர்ணயத்தையும் காண்க, வசனங்கள் தனியே

குறிக்கப்படும். பிராட்டியும் உபாய மென்பதை இடைக்காலத்திலே அப்ரதாநாசார்யர் சிலர் மறுத்திருந்தாலும் இப்போது எல்லோரும் இசைந்திருக்கின்றனர். 'ஆத்மபித்தி ஸமுந் மீலச்சுத்தாசுத்தாத்மவர்கிணீ' என்றதால் அவளும் ஜகத்காரண மென்பதையும் இசைந் தேயிருக்கின்றனர். மற்று அவற்றில் விசேஷ விசாரம் அவச்யமுமன்று. (3)

'இப்படி என்னை எல்லாப் பலனுக்கும் உபாய மென்கிறீரே; நானில்லாதபோதும் எம் பெருமானையாச்ரயிக்க நேரும்போது நான் எவ்வாறு உபாயமாவேன்; ஆகவே உபேயமுமாக மாட்டிலேன்' என்ன—நீ எங்குமே பிரியாமல் எம்பெருமானிடம் சேர்ந்திருப்பதால், எங்கும் வியாபித்த பரமாத்மஸ்வரூபத்தில் எந்த இடத்திலே நின்று, 'க்ரந்தாமி ஸம்ப்ரத்யகதிஸ் தவாக்ரே' என்றாலும் நீயும் விபுவாய் அங்கும் சேர்ந்திருப்பதால் அவனுக்குத் தனியே இருப்பு எங்குமில்லை யென்கிறார்—

4. சாந்தாநந்த மஹாவிபூதி' பரமம்' யத்'ப்ரஹ்ம' ரூபம்' ஹரே:
மூர்த்தம்' ம்ரஹ்ம' ததோऽபி' தத்ப்ரியதரம்' ரூபம்' யத்' அத்யத்புதம்.
யாந்யந்யாநி' யதாஸுகம்' விஹரதோ' ரூபாணி' ஸர்வாணி' தாநி'
ஆஹு:' ஸ்வைரநுரூப ரூபவிபவைர் காடோபகூடாநி'தே.

சாந்த—பசி தாகம் சோகம் மோகம் மூப்பு இறப்பென்ற ஊர்மிகளும், பிறவி முதலான விகாரங்களும் இல்லாததும், அநந்தம்-முவ்வகையளவு மற்றதும், மஹாவிபூதி-பெரிய விபூதி கள் இரண்டையும் பரவியாள்வதும், பரமம்—தனக்கு மேலொன்றில்லாததுமான ப்ரஹ்ம— ப்ரம்மமென்ற (எல்லாமேன்மையுமுடைய) ஹரே: ரூபம் விஷ்ணுவின் (பரமாத்ம) ஸ்வரூபம், யத்—யாதொன்றோ, ததோபி—அதினும் தத் ப்ரியதரம்—அவனுக்கு மிகவும் இனிதாய், அத்யத்புதம்—அழகு அமைப்பு போன்ற அம்சங்கள் அனைத்தாலும் மிக்க ஆச்சரியமாய், ப்ரஹம—பெரிதுமான, மூர்த்தம் ரூபம் யத்-ரூபாதி குணங்களைப் பெற்ற அவனது திருமேனி யாதொன்றோ, யதாஸுகம், ஸுகத்திற்குச் சிதைவின்றி, விஹரத:-லீலைகளைச் செய்கின்ற அவனுக்கு அந்யாநி ரூபாணி யாநி-வேறு திருமேனிகள் யாவையோ, தாநி-அந்த முவ்வகை ரூபங்களையும், தே—உனது, அநுரூப ரூபவிபவை:—அததற்கேற்ற சிறந்த ரூபங்களாலே, காடோபகூடாநி—கெட்டியாக இணைக்கப்பட்டுள்ளனவாக, ஆஹு :-ப்ரமாணங்கள் கூறும்.

எங்கும் பரவின பரமாத்ம ஸ்வரூபம் உனது ஆத்ம ஸ்வரூபத்தோடும், பரமபதத்தில் வீற்றிருக்கும் பரவாஸுதேவ திவ்ய மங்கள விக்ரஹம் தன் ஆத்ம ஸ்வரூபத்தை விட பக்தர்களை வசப்படுத்தும் பெருமையுடையதாகி மிக்க ஆச்சரியமாய் அவனுக்கும் மிகவும் ப்ரியமானது உனது நித்யமான திருமேனியோடும், உலகில் ஸ்ருஷ்டி முதலிய லீலைகளைச் செய்ய அவன் தன் இஷ்டப்படி எடுக்கும் வ்யூஹ-விபவ-ஹார்த்த அர்ச்சா ரூபங்கள் யாவும் அதற்கேற்ப விடாமல் நீ கொள்ளும் ரூபங்களோடும் திடமாய் இணைந்தேயிருக்கின்றன. ஆகையால் ப்ரமாணங்களும் பரமர்ஷிகளும் இப்படி பணித்திருப்பதால் அவனும் நீயும் சேர்ந்தே உபாயமாகவும் உபேயமாகவும் இருக்கைக்குக் குறையில்லை என்றபடி.

சாந்தாநந்த என்றவிடத்தில் சாந்த—ஆனந்த என்ற பாடம் பெரியவாச்சான் பிள்ளையுடையது. ஜ்ஞாநஆநந்த ஸ்வரூபமென்று உரைத்தார். தமிழில் சாந்தாநந்த என்று எழுதினல் அதை அநந்த என்றும் படிக்கலாம், ஆனந்த என்றும் படிக்கலாம். இதிலே —ஆனந்த பதத்தைச் சேர்த்து சாந்தாநந்த என்ருர்களாகில் ஆனந்தம் சாந்தமாயிற்று— இல்லாமலிருப்பதென்று விபரீதமாகப் பொருள்படுமே, மேலும் ப்ராஸத்திற்கும் அநந்த ஒன்பதே பொருந்துகிறதே என்று மட்டும் தோன்றியிருந்தது. பிறகு லக்ஷ்மீதந்தரத்தைப் பார்த்தபோது முதற்பாதம் முழுமையும் அங்குள்ளதைக் குறிப்பதற்காகவே அந்தச் சொற்களையே சேர்த்து ஆளவந்தார் அருளினரென்றும் தெளியலாயிற்று. அங்கே பரமாத்ம ஸ்வரூபத்தை 2வதுஅத்யாயத்திலே வர்ணிக்கிருள் பிராட்டி, ''ஸர்வதச் சாந்த ஏவாஸௌ நிர்விகாரஸ் ஸநாதந:. அநந்தோ தேச காலாதிபரிச்சேதவிவர்ஜித:. மஹாவிபூதிரித் யுக்தோ வ்யாப்திஸ் ஸா மஹதீ யத:. தத் ப்ரஹ்ம பரமம் தாம நிராலம்பநபாவநம் .....லக்ஷ்மீ நாராயணுக்யா தம்......அந்யோந்யேநாவிநாபாவாத்' அந்யோந்யேந ஸமந்வயாத். தாதாத்ம் யம் வித்தி ஸம்பந்தம் மம நாதஸ்ய சோபயோ;'' என்றெல்லாம் அருளினுள். சிலவிடத்தில் சாந்த ஆனந்த என்றும் இருப்பதானலும் இந்த இடத்தில் அனந்த பதமே. இங்கே, சாந்த அநந்த மஹா விபூதி—பரமம்—ப்ரஹ்ம என்ற சொற்களெல்லாம் உள. சாந்த என்பதற்கு நிர்விகாரமென்ற பொருளும், தேசகாலவஸ்துபரிச்சேதங்கள் இல்லையாகையாலே அநந்தம் என்று அநந்தமென்பதன் பொருளும் அங்கே பணிக்கப்பட்டது காண்க. ஆகையால் அநந்த என்றே பாடமாம். மஹாவிபூதி என்ற சொல்லுக்கு அங்கே மஹதீ வ்யாப்தி: என்றே பொருள் உரைக்கப்பட்டது. இதை பெரியவாச்சான்பிள்ளை உரைத்த விபுத்வ மென்னலாம். ஆயினும் அது அநந்த பதத்தில் தேசபரிச்சேதமில்லை யென்றதாலேயே சொல்லப்பட்டதாலும், விபூதி என்ற சொல்லுக்கு ஐச்வர்யமென்ற பொருள் கீதை முதலானவற்றில் ப்ரஸித்தமாகையாலும், 'சுத்தே மஹாவிபூத்யாக்யே' என்ற ஸ்ரீ விஷ்ணுபுராண வாக்யத்திலே ச்ருத ப்ரகாசிகையிலே உபயவிபூதி நாதனென்று உரைத்திருப்பதாலும், 'நமோ நமோநந்த மஹாவிபூதயே' என்றவிடத்தில் மேலே பெரியவாச்சான்பிள்ளையே சொல்வதற்குமிணங்கவும், லீலாவிபூதி நித்ய விபூதி யென்ற ப்ரசித்தியைக் கொண்டும் ஸ்ரீ தேசிகன் உபய விபூதிகளுக்கு ஸ்வாமி என்றே பொருள் கொண்டது. லக்ஷ்மீதந்திரத்திலும் விபூதி-வ்யாப்தி என்பதற்கு; 'விசேஷேண ஆப்தி வ்யாப்தி; விசேஷமாவது நியமன சக்தி; வ்யாப்திக்கு மஹத்துவமாவது இருவிபூதிகளிலுமிருக்கை என்று பொருள் கொள்ளலா மென்ற திருவுள்ளமாம். அந்த லக்ஷ்மீதந்தர வாக்யம் வாஸுதேவ விக்ரஹத்தைச் சொல்வதன்று, பரமாத்ம ஸ்வரூபத்தையே சொல்வது. இது அங்கே 'நிராலம்பநபாவநம்' என்றதனல் ஸ்பஷ்டம். இதனை யறிவிக்கவே அடுத்த பாதத்திலே ஸ்ரீ தேசிகன் ஸாலம்பந யோகத்திற்கு விஷயமான திவ்யமங்களவிக்ரஹத்தை மேலே சொல்லுகிருரென்றதென்க.

யதாஸுகம்—ஸுகத்தை விடாமல். இதனின்று எத்தகைய அவதாரத்திலும் எம்பெருமானுக்குச் சிறிதும் துக்கமில்லை, ஒரே விதமாக ஆனந்தானுபவமே யென்றதாயிற்று. ஸ்ரீராமாத்யவதாரத்தில் துக்கம் அனுபவிப்பது போன்ற தோற்றம் மட்டுமே. எல்லாம் அபிநயமே. விஹரத:-பகவானுக்கு உலகின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரமெல்லாமும் விளையாட்டு. இதற்காக நான்கு வ்யூஹமாக முதலில் தோன்றுகிருர். அவற்றில் அநிருத்த மூர்த்தி

யினின்று விபவ மூர்த்திகளெல்லாம் அப்போதைக்கப்போது கொள்ளப்படுகின்றன. அவை ப்ரஹ்மாண்டத்தினுள் சிற்சில இடங்களில் ஸ்த்திதி முதலானவற்றை நடத்தவாம். ஹார்த்தம் அர்ச்சையென்பனவும் ஒரு வகையில் விபவங்களே. ஹ்ருதயத்தில் இருப்பதால் ஹார்த்த மென்றும், பிம்பங்கள் முதலானவற்றில் புகுவதால் அர்ச்சை யென்றும் பெயர் பெறுகிறன.

**அநுருபரூபவிபவை:**—இந்த லக்ஷ்மீதந்த்ரத்திலேயே மேல் அத்யாயங்களிலே வ்யூஹங்கள், வ்யூஹாந்தரங்களான கேசவாதி மூர்த்திகள், பத்மநாபாதிகளான 38 விபவங்கள், அம்மூர்த்திகளில் பத்னியாகத் தோன்றிய பிராட்டிமூர்த்திகளின் திருநாமங்கள் எல்லாம் விரிவாக உரைக்கப்பட்டிருப்பதால் அவற்றையெல்லாம் திருவுள்ளத்திற் கொண்டே இந்த ச்லோகம் அருளியதென்க. ஆகமஸித்தாந்தத்திலே வாஸுதேவாராதனம் முக்கியம். பகவத் வாஸுதேவமந்த்ரமே பராசர-பாராசர்யாதி மஹர்ஷிகள் ஆதரித்தது. இத்தகைய ஸ்ரீ பாஞ்சராத்ரத்தில் ஈடுபட்டே பிராட்டியின் பெருமைகளை ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் பராசரர் விளக்கினர்.

**அநந்தமஹாவிபூதி** என்பதோடு சேர்த்தே ஸமாஸமாக **சாந்த** என்பதை யருளினது பரமாத்மஸவரூபத்தில் சாந்தத்வம் அவற்றோடு சேர்ந்திருக்கும். பரவாஸு தேவரூபத்தில் அவற்றுடன் சேராமல் சாந்தத்வம் மட்டுமிருக்கு மென்றறிவிப்பதற்காக. இங்கே சாந்தத்வமாவது 'ஸதைகரூபரூபாய' என்றபடி உற்பத்தி வளர்ச்சி மாறுதல் இளைப்பு இறப்பென்ற விகாரங்களில்லாமை. மேலே லக்ஷ்மீதந்திரத்திலே சுத்தமான ஆராதன வழிக்கான சுத்த ஸ்ருஷ்டியையும் அசுத்தமான (தேவதாந்தரக் கலப்பான) ஆராதனத்திற் கான அசுத்த ஸ்ருஷ்டியையும் எடுத்து வ்யூஹவிபவ ஹார்த்தார்ச்சைகளாகிற சுத்த ஸ்ருஷ்டியின் தொடக்கத்திலே (சாந்ததாச்யுதி:) சாந்தத்வம் போகிறதென்று சொன்னதாலே பரவாஸுதேவரூபம் சாந்தமென்பது அறிவிக்கப்பட்டது.

லக்ஷ்மீதந்த்ராதிகளில் பகவானுக்கும் பிராட்டிக்கும் ஸமமாக எல்லா அம்சங் களும் சொல்லப்பட்டிருப்பதற்கு இணங்க, ப்ரஹ்மஸூத்ரத்திலே நான்கு அத்யாயங்களிலே பகவானுக்குச் சொன்ன நாலு அம்சங்களும் பிரார்ட்டிக்கும் உண்டென்பதை யறிவிக்க நாலு ச்லோகமாக அருளினர். அங்கே முதல் அத்யாயத்தில் உலகுக்கெல்லாம் சேஷியாய் உலகைப் படைப்பவனென்றும், 2ல் அவனுடைய மேன்மை குன்றுதது, மறுக்க முடியாத தென்றும், 3ல் எல்லாப் பலன்களையும் அவன் அளிக்கிறனென்றும், 4ல் அவனே ப்ராப்யமுமாகிறனென்றும் அறிவித்தபடி இங்கே பிராட்டிக்கு அதே முறையில் நான்கையும் அருளினர். ஆதிசேஷன் முதலான நித்யஸூரிகள் உள்பட யாவற்றிற்கும் சேஷியாய்ப் பிராட்டியை முதலிற் பேசினதினின்றும் மூலப்ரத்கிருதிக்கு சேஷி என்றும் சொன்ன தினின்றும் எங்கும் எல்லாவற்றிற்கும் இவள் காரணமென்றதாயிற்று. சேஷித்மாவது இஷ்டப் படி வஸ்துவை உபயோகிப்பதாம். மூலப்ரக்ருதியை இஷ்டப்படி உபயோகப் படுத்தவதா வது ஜீவராசிகளுக்கு வேண்டும் நன்மைகளைத் தரும்படி பல மாறுதல்களை அதில்

செய்கையுமாம். 2வது ச்லோகத்தில் 'ஆத்மநஇவ, ஸ்வத: என்று பகவானுக்கும் இவளுக்கும் மேன்மை ஒரே விதமாய் தானாக ஏற்பட்டதென்றார். 3ல் மோக்ஷமும் இவள் அனுக்ரஹத்தினாலென்றார். 4ல் எங்கும் பரவின அவனது திவயாத்ம ஸ்வரூபத்தில் நெருக்கமாக இணைந்தது இவளது திவ்யாத்ம ஸவரூபமென்றதாலே இவளுக்கும் விபுத்வமே ஸ்வரஸமாகச் சொல்லப்பட்டது. சில இடத்தில் இணைந்து சில இடத்தில் இராமலிருந்தால் வஸ்து வேறென்பது தெளியப் பெறும். இரண்டும் சமமாய் இணைந்திருப்பதாலே, 'வ்யாபகாவதிஸம்ச்லேஷாத் ஏகதத்துவமிவோதிதௌ' என்னப்படுகிறது, இப்படி பாஞ்சராத்ரங்களும் ஸ்ரீ விஷ்ணுபுராணமும் பறைசாற்றின விஷயம் ஆளவந்தார்திவ்யஸூக்'தியிலும் ஸ்வரஸமாய்க் கிடைப்பதாயிருக்க, இதை மறுத்து, பிராட்டிக்குச் சில அம்சங்களைக் குறைப்பது மூலஸம்ப்ரதாயத்திற்கு மாறாகுமென்று ஸ்ரீ தேசிகனின் திருவுள்ளம். மாத்வஸம்ப்ரதாயத்திலும் லக்ஷ்மி ஜீவர்களிற் சேர்ந்தவளல்லளென்று கூறி அவளுக்கு விசேஷ வைபவங்களை வர்ணித்தனர். ஈச்வரனைப்போல் எல்லாம் நியமிக்கின்றவளென்பதை இசைந்த பிறகு ஜீவ கோடியிற் சேர்ப்பது அர்த்தமற்றது. ஜீவத்வம் இசைந்ததற்காக அணுத்வமாகாது. ஜீவன்களையெல்லாம் விபுவாகவே சிலர் இசைந்தனரே; அப்போது ஜீவத்வம் ஆத்மாக்களுக்கு எப்படி. ஆகையால் ஜ்ஞானத்வமும் ஸ்வயம்ப்ரகாசத்வமும் வேறாகிறதுபோல் உண்மையில்அணுத்வம் வேறு, ஜீவத்வம் வேறு.

பிராட்டி விஷயத்தில் பலபேருடைய வாதங்களும் அவற்றுள் மேன்மேற்படிகளும் முடிவான கொள்கையும் ஸ்ரீ தேசிகனின் பாஷ்யத்தில் விரிவாகக் காணலாகும்.

பிராட்டியை ஜீவகோடியில் சேர்த்து, ஜீவனாகில் அணுவாயிருக்க வேண்டுமென்றும் கொண்டு, பிராட்டியை அணுவாக்கி அவள் எங்குமுளதாகச் சொன்ன வாக்யங்களின் நேர்ப்பொருளைச் சிலர் விட்டனர். ஜீவகோடியிற் சேர்ந்தாலும் விபுத்வம் இவளுக்கு மட்டும் ப்ரமாண பலத்தினால் இசைய வேண்டுமென்றனர் மற்றும் சிலர். ஜீவகோடியிலும் ஈச்வரகோடியிலும் சேராமலே விபுவான இவளைப் பிரிக்கலாமென்றனர் வேறு சிலர். ஈச்வர கோடியிற் சேர்த்து, 'இருவருக்கும் பொதுவான ஈச்வரத்வம் வேறு; இவளுக்கும் ஈச்வரனான படியாலே ஸர்வேச்வரனான் ஒருவன்' என்றனர் பிறர். ஈச்வரத்வமிசைந்தும் பிராட்டிக்கு ஜகத்காரணத்வத்தை இவர்களில் சிலர் இசையவில்லை. இவளுக்குத் தெரியவரும் சில பெருமைகளெல்லாம் எம்பெருமான் திருவுள்ளத்தால் கிடைத்தவை. இவளுடைய ப்ரீதிக்காகவே எம்பெருமான் உலகம் படைப்பதால் இவளையும் காரணமென்பது ; உண்மையில் இவள் காரணமல்லள். ஏதேனும் சிலவற்றிற்கு இருவரும் காரணமாகலாமென்பர். இனி முடிவான பக்ஷம்—பெருமானைப் போலே இப்பிராட்டியும் தானாகவே ஈச்வரையாய்க் காரணமுமாகிறாள். பெருமானுக்கும் தானே தன்னை சேஷமாக்கிக் கொண்டாள். அதனால் அவனை ஸர்வேச்வரனென்கிறது - இவளுக்கு விபுத்வம் ஈச்வரத்வம் காரணத்வமெல்லாமுண்டென்பதாகும். விஸ்கலஹம் வளராமைக்காக—இந்த வாதங்களில் ஒன்றே ப்ராமாணிகமென்றும் அந்த நிர்ணயம் பெறுதவர்க்கும் முக்கியமான தெளிவால் மோக்ஷமென்றும் அருளினார். முடிவிற் சொன்னபக்ஷமே ஸ்வபக்ஷமென்பது இங்குச் சொல்நடையாலும், கத்யபாஷ்யம், ஸாரசாஸ்த்ரம், நியாயஸித்தாஞ்ஜனம்முதலான மற்ற க்ரந்தங்களிலும் தெளிவாம்.

இதுவே மடைப்பள்ளியாச்சான், நடாதூர் அம்மாள், பட்டர், நஞ்சீயர் வரையிலான முன்னோர்களின் கொள்கை என்பது ஸ்ரீ தேசிகஸித்தாந்தம். பெரியவாச்சான்பிள்ளையும் பிராட்டிக்கும் ஜகத் காரணத்வமுண்டென்று பிள்ளான் அருளிச் செய்ததாகக் கூறித் தாமும் (3.) உரைத்தார். பினனுசிரியர்களாலும் உபாயத்வமும் அனேகமாக இசையப் பெற்றது. ஆளவந்தாருடைய சதுச்ச்லோகி லக்ஷ்மீதந்த்ரத்தை ஆதாரமாகக் கொண்டு பிறந்ததென முன்னமே அறிவித்தோம். லக்ஷ்மீதந்த்ரத்தில் பிராட்டியின் பெருமையெல்லாம் விரிவாக உள்ளது. குறைவாகக் கூறுதல் குற்றமாகும். அம்மாளின் ப்ரபன்னபாரிஜாதத்தில் மற்ற ஸம்ஹிதைகளையும் காண்க. இந்த ச்லோகத்திலும் 'ஆஹு:' என்ற பதத்தால், ப்ரமாண ஸம்ப்ரதாய வசனங்களில் ஸ்வரஸமாகத் தெளிந்த பிராட்டியின் மெருமைகளை மறுத்துப் பேசுவது தர்க்க வாதமாகும், அது ப்ராமாணிகர்களுக்குத் தகாதென்று உபதேசித்ததாம். ச்ரீ: என்றவிடத்தில் நான்கு அக்ஷரங்கள் அடங்கியிருப்பதற்கிணங்கவும் நான்கு ச்லோகங்களை யருளினர்.

சதுச்ச்லோகி உரை முற்றும்.

திருமாமகள் திருவடிகளே சரணம்—
ஆளவந்தார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

# ஸ்தோத்ரரத்னம்.

(ஆளவந்தார் அருளிச்செய்தது)

---

அலர்மேல்மங்கையும் அரியும் நமக்கு தெய்வம். அலர்மேல்மங்கைவிஷயமான ஸ்தோத்ரம் கீழே கூறிய நாலு ச்லோகங்கள். இனி ஹரிவிஷயமான ஸ்தோத்ரத்தை விரிவாக அருளிச் செய்கிறார். ஸ்தோத்ரமாவது—புகழ்ச்சியுரை; குணங்களையும் செயல்களையும் செவ்வனே எடுத்துக் கூறல். பிராட்டி பெருமாள் இருவர் விஷயமல்லாமல் வேறு விஷயமாக ஸ்தோத்ரமென்றால், அதில் சொன்ன அம்சங்கள் எல்லாம் அவ்வாறே அந்த ஆத்மாவினிடம் இருக்குமென்று சொல்ல முடியாது. இல்லாதவற்றையும் ஏறிட்டே உலகில் பெரும்பான்மை ஸ்தோத்ரங்கள் காணப்படுகின்றன. அவர்களுக்குள்ள குணங்களும் செயல்களும் பகவானுக்கு அதீனம். மூலகாரணமான அவனைத் துதி செய்தால் பொருந்துமே யல்லது அவர்களுக்குத் தனிப்பட அவற்றைப் பெருமையாக்கல் கூடாததாம். பிறர் செய்ததையும் பகவானிடத்திலே அவன் செய்ததாகச் சொல்லலாம், அவனுக்கே எல்லாம் அதீனமாகையாலே. ஒருக்கால் உள்ளபடி சொல்லாமல் குறைத்துச் சொல்லுகிறேமென்ற குறை சொல்லுகிறவர்களுக்கு உண்டானாலும் சொன்ன குணங்களும் செயல்களும் உண்மை

யாகவே இருப்பதால் திவ்யதம்பதிகள் விஷயத்திலே செய்யும் ஸ்தோத்ரம் உண்மையான ஸ்தோத்ரமாகும். 'ந ஹி அஸதா குணேந கதிதேந நுதிர்பவதி' என்றார் எம்பெருமானார்.

இப்படி செய்யும் ஸ்தோத்ரமானது அறியவரிய வேதாந்தார்த்தங்களை எடுத்துக் கூறுவதானால் அதற்கு ஏற்றமுண்டு. அப்பொருள்களை மிகத் தெளிவாக விளக்குவதோடு தெய்வத்தினிடம் மனம் நின்று உருகும்படி அமைந்தால் அது சிறப்பாகும். உபநிஷத்துக்களையே யன்றி ஓதினாலும் அறியவாகாத விஷயங்களைத் திரட்டிக் கூறுவதும், நமக்கு அதைக்கூறுவது போலல்லாமல் தெய்வத்தைத் தாம் தொழுவது போல் அமைந்ததும், அதே சமயத்தில் நம் மனமும் தெய்வத்தினிடம் தெளிந்து படிந்திருக்கச் செய்வதுமாய் வெகு ஸரளமானஇந்த ஸ்தோத்ரம் ஸ்தோத்ரரத்னமே. இதனைப் பின்பற்றி ஸ்தோத்ரங்கள் பல பிறந்த பிறகும் அவற்றுடன் இதை இணைத்துப் பார்த்தாலும் இது ஸ்தோத்ர ரத்னமாகவே நிற்கிறது. ஸ்ரீமத் ராமாயணம் போலே மனம் உருக்கும் காவ்யமொன்று கிடையாது. இதைப் போன்ற ஸ்தோத்ரமும் கிடையாது.

ஆசார்யனை முன்னிட்டே பகவானை யணுகவேண்டுமாகையால், க்ரந்த காலக்ஷேபாதிகளில் முன்னும் பின்னும் ஆசார்ய நமஸ்காரம் செய்வதே ஸம்பிரதாயமுமாகையால் இதில் ஆசார்யரை முதலிலும் முடிவிலும் அனுஸந்திக்கிறார். ஆக இந்த ஸ்தோத்ரரத்னம் ஒரு சிறந்த ரத்னமாகையால் இதனை ஆசார்ய ஸ்துதி என்ற ஸம்புடத்திலே வைத்திருக்கிறாரென அருளினார் ஸ்ரீ தேசிகன். ஸம்புடம் கீழே பெரிதாகவும் மூடி நீளம் குறைவாகவுமிருக்கும். அது போல் முதலில் மூன்று ச்லோகங்களில் ஆசார்யரின் புகழ்ச்சி; முடிவில் ஒரு ச்லோகத்தில். பிறருக்காகவன்றி தமக்காக எல்லாம் செய்தவாறு இங்கு அநுஸந்தானம் மனதிலிருப்பது. ஒவ்வொருவரும் இதைத் தன் விஷயமாகக் கொண்டுவந்தால் அவரவர் எம்பெருமானைத் துதித்ததாகும். ஆசார்யரைப் புகழ்ந்து பகவானைப் புகழத் தொடங்கி, தமக்கு ஏது இதில் அதிகார மென்றஞ்சி, பிறகு தேறி, வேதாந்தங்கள் அவனைப் புகழ்கிறவண்ணமே தாமும் விரிவாகப் புகழ்ந்து, அவனைப் பெறவாசைப்பட்டு அதற்குத் தம்மிடம் விரகொன்றுமில்லையே என்று நொந்து சரணாகதியைச் செய்து, சிறிய உபாயங்களும் பெரிய பலன்களைத் தருமென்பதை எடுத்துக் காட்டி, அந்த சரணாகதிக்குத் தாம் கோரும் பலன் பரமபதத்தில் அவனுக்கு அடிமை செய்வதே யென்பதை மேலே விரிவாகக் கூறி, அத்தகைய பலன் பெறுதற்குத் தடையான மஹாபாபங்கள் தம்மிடமிருப்பது உண்மையாயினும் அவன் குணம் கண்டு உறுதியுடனிருப்பதாக மேலே குறித்து, அந்த சரணாகதியும் தெளிவு உண்டாகி செய்யப்படவில்லை யானாலும் அவன் காக்க வேணுமென்றும், இனியாவது பக்தியும் பெரியோர்களை யணுகி வஸிப்பதும் அவர்களின் கடாக்ஷம் பெறுதலும் வேணுமென்றும் கேட்டு, கடைசி வரையில் கர்வப்படாமல் தன் குறைகளையே நினைத்துவரவேண்டுமென்ற சாஸ்த்ரார்த்தத்தை மனதிற் கொண்டு தம்மை வெகு நீசரீதியில் இருப்பதாக அனுஸந்தித்து, ப்ரபத்தியின் பெருமையும் ஆசார்ய ஸம்பந்தத்தின் வாய்ப்பும் அவசியம் நன்மை யளிக்குமென்ற உறுதியையும் அவனிடம் விண்ணப்பம் செய்து ஸ்தோத்ரத்தை முடித்திருக்கிறார். இதே நாம் பெற வேண்டும் சிக்ஷையுமாம்.

இப்படியே இதில் த்வயத்தின் பொருள்கள் அடக்கப்பட்டிருக்கின்றன. சதுச்ச்லோகியில் பிராட்டியினிடம் புருஷகாரப்ரபத்தி. பிறகு பகவானிடம் சரணுகதி செய்யத் தொடங்கும்போது குருபரம்பராநுஸந்தானம், நாராயண சப்தத்தின் பொருளும் மேலே விரிவாக, பிறகு சரணுகதி. அதன் பிறகு பரமபதத்தில் பூர்ணுநுபவ கைங்கர்ய மாகிற பலனைக் காட்டும் ஸ்ரீமதே நராயணுய என்பதன் பொருள்விரிவு. அதன் மேல் தனக்கு இப்பொழுதிருக்கும் அநிஷ்டங்களும் அவை இனிப் போக வேண்டுமென்பதும் நம: என்றவிடத்திலே அனுஸந்திக்க வேண்டுமென்பதற்கான ச்லோகங்கள். மீண்டும் குருபரம்பராநுஸந்தானம். ஆக இது முழுத்வயார்த்தமாம். இதில் ச்லோகங்கள் 65. மூன்று ரஹஸ்யங்களுக்கும் சேர்த்துப் பார்க்க எழுத்துக்கள் 65ஆம். ஆகவே இது ரஹஸ்யத்ரயஸாரமுமாம்.

## தனியன்கள்.

(1) ஸ்வாதயந் இஹ ஸர்வேஷாம் த்ரய்யந்தார்த்தம் ஸுதுர்க்ரஹம்.
ஸ்தோத்ரயாமாஸ யோகீந்த்ர: தம் வந்தே யாமுநாஹ்வயம்.

இஹ—இவ்வுலகில், ஸுதுர்க்ரஹம்—அறிய மிகவும் அரிதான த்ரயீ. அந்த. அர்த்தம்—வேதாந்தத்தின் பொருளை, ஸர்வேஷாம்—எல்லோருக்கும், ஸ்வாதயந்—சுவைப்பதாம்படி செய்கின்றுராய், யோதீந்த்ர:—யோகிச்ரேஷ்டர், ஸத்தோத்ரயாமாஸ—ஸ்தோத்திரம் அருளினர். தம்—அந்த, யாமுநாஹ்வயம்—யமுனைத்துறைவரென்பவரை, வந்தே—தொழுகிறேன்.

(2) நமோ நமோ யாமுநாய யாமுநாய நமோ நம:.
நமோ நமோ யாமுநாய யாமுநாய நமோ நம:.

யாமுன முனிவருக்கு எனது மானஸ நமஸ்காரமும், வாசிக நமஸ்காரமும், காயிக நமஸ்காரமுமாகுக. உபாயமாக நின்ற இந்த நமஸ்காரங்களோடு இங்கும் பரமபதத்திலும் ஸ்வயம் ப்ரயோஜனமான எனது நமஸ்காரமும். அந்தந்த நமஸ்காரத்தால் வரும் நன்மையெல்லாம் எனக்கல்ல—சேஷியான அவருக்கே ஆகவேணும். இப்படி பல நமச்சப்தங்களின் கருத்து.

திருமாலைத் துதி செய்யும் முகத்தாலே அவன் திருவருளுக்குப் பாத்ரமாகும்படி ப்ரஜைகளுக்கு பரதத்துவ பரமஹித பரமபுருஷார்த்தங்களைத் தெளிவிக்கத் திருவுளங்கொண்டு முதலில் ஆசார்யானுஸந்தானத்தைத் தொடங்குகிருர். 'நாதோபஜ்ஞம் ப்ரவ்ருத்தம்' என்றும், 'ப்ரதமமபி குரும் நாதமீடே' (பட்டர் 60) என்றும் அருளியவாறு பிறமதங்களைக்

களைந்து பரமார்த்த ஸ்த்தாபனம் செய்தருளிய முதலாசார்யரான நாதமுனிகளைத் தொழ மூன்று ச்லோகங்கள். தமக்கு நேராசார்யரான மணக்கால்நம்பிகளைத் தொழாமல் நாதமுனிகளைத் தொழலாமோ, இருவரும் சேர்ந்திருப்பராகில் முதலில் ப்ராசார்யனைத் தொழுதுவிட்டு ஆசார்யனை வணங்குவதென்று வசனம் கூறும். மற்றபோது அவ்வாறில்லையே என்னில்—ஆசார்யனும் எதிரில்லையாகில் ப்ராசார்யனை முதலில் தொழலாமே. உண்மையில் இவர் ஆசார்யனைத் தொழவில்லை யென்றேங்ஙனே தெரிந்தபடி? அவர்விஷயமான ச்லோகம் ஒன்று இங்குச் சேர்க்கவில்லையே யென்னில்—அப்படியும் நிர்பந்தமுண்டோ? மற்ற ரிஷிகளையும் ஆழ்வார்களையும் விட்டு இருவருக்கு மட்டும் ச்லோகம் இயற்றியதுபோல் முக்கியமானவர் இவரென்பதைக் குறிக்கவாகும் இது. மேலும், ஆசார்ய ஸம்பந்தம் சிஷ்யனுக்கு ஏற்பட மூலம் ப்ராசார்ய ஸம்பந்தமுமாகும். இவருக்கு ப்ராசார்ய ஸம்பந்த மூலமாகவே ஆசார்ய ஸம்பந்தம். நாதமுனிகளின் நியமனம் தலைக்கட்டவேண்டுமென்றல்லவோ மணக்கால்நம்பிகள் இவருக்கு ஆசார்யரானது, ஆளவந்தாரின் திருவுள்ளத்திற்கிணங்கி பெரிய நம்பிகள் எம்பெருமானருக்கு ஆசார்யரானது போலவே. மேலும், உரிய காலங்களில் குருபரம்பரானுஸந்தானம் முறை தவருமல் செய்யப்படுகிறதானுலும், தம்மை நாதமுனிகளைப் போல் உலகம் பிற்காலத்தில் நினைக்கலாகா தென்று க்ரந்தங்களில் தம்மைக்கூடக் கூட்ட வேண்டா என்றுஆசார்ய நியமனமாயிருக்கும். சிற்சில போது ப்ரதானமாகச் சிலரை மட்டும் அனுசந்திக்கும் வழக்கமும் பெரும்பாலும் எங்கு முள்ளதே. இவ்வாறு ஆராய்ச்சியை ஸ்ரீதேசிகபாஷ்யத்தினின்று செய்துகொள்க. மூன்று ச்லோகங்கள் நாதமுனிகள் தம் ஆசார்யரின் ஆசார்யருக்கு ஆசார்யர் என்று மூன்று படிகளையும் குறிக்கும். பிறவியினின்றே ஸம்பந்தமிருப்பதைக் கருதி (இதுவே ஆசார்ய ஸம்பந்தத்திற்கும் காரணமாகியதால்) முதல் ச்லோகம். ப்ரசார்யனுனமையைக் கொண்டு 2-ஆவது ச்லோகம், லோகோபகாரம் செய்ததைக்கொண்டு 3-ஆவது ச்லோகம். ஜ்ஞானம் வைராக்யம் பக்தி என்ற மூன்று குணங்களே இவரென்று அனுபவிக்கிருர் முதலில்—

1. **நமோऽசிந்த்யாத்புதாக்லிஷ்ட ஜ்ஞாநவைராக்ய ராசயே.**
   **நாதாய முநயே அகாதபகவத் பக்திஸிந்தவே.**

பதவுரை:—அசிந்த்ய – ஆராயவியலாத, அத்புத - ஆச்சர்யமான, அக்லிஷ்ட - அநாயாஸமாய்ப் பிறந்த - குன்ருத, ஜ்ஞாந வைராக்ய ராசயே – நல்லறிவும் வைராக்யமும் சேர்ந்ததொரு குவியலாய், அகாத - ஆழமான பகவத்பக்தி - திருமால்விஷயமான பக்தியின், ஸிந்தவே – கடலுமான, நாதாய முநயே, நாதனென்ற மாமுனியின் பொருட்டு நம: எனது வந்தனம்.

அசிந்த்யம்—எப்படி இவருக்கு ஜ்ஞானம்? எவ்வளவு? என்றதை எவ்வாறு ஆராய்ந்தாலும் தெளிவதில்லை. ஆதலாலும், இப்படிப்பட்ட ஜ்ஞானம் எங்குமில்லையாகையாலும், விஷயம் அபூர்வமாயிருப்பதாலும் அற்புதம். அக்லிஷ்டம். ஆயாசப்பட்டு ஸம்பாதிக்கவில்லை.

ஸநகாதிகளுக்குப் போலே பிறவியினின்றே தோன்றியது. ஆதலாலேயே நிர்ஹேதுக மென்பர். அன்றி, ப்ரமாணங்களுக்கு ஸ்வரஸமாகாத பொருளை ஏற்றி க்லேசப்பட்டுப் பலர் ஜ்ஞானத்தைக் கொள்வர். இது க்லேசமில்லாமல் ஒரு சொல்லையும் இயற்கைநிலையை விட்டு மாற்ருமல் பிறந்த அறிவு. ஆகவே தான்.அழிவதும் கெடுவதுமின்றியிருப்பது. இத் தன் மைகள் இவருடைய வைராக்யத்திற்குமாம். அத்தகைய பராவரதத்துவ ஜ்ஞானத்தாலே கீழ் தத்துவங்களின் அனுபவத்தில் வைராக்யமும் உயர்ந்த தத்துவத்தில் அன்பும். இதர வைராக் யத்தினுல் பக்தி ஆழமாயிற்று. இவரே பக்தி வெள்ளம். ஜ்ஞானம் எல்லாவற்றிலுமாம்; பக்தி யென்பது பகவானிடத்திலே மட்டும். இவருக்கு ரங்கநாதனென்பது திருநாமம். சுருக்கமாக வழங்கியது அதில் ஒரு பாகம். இதனின்று எல்லோருக்கும் நாதனென்பதும் இதன் பொருளாம்.இவர்குலத்திற் பிறவி பெற பாக்யம் பெற்றேனே. பேரனுகிய நான் பிதாமா ஹருக்கு உரிய ப்ரணுமத்தைச் செய்கிறேன். அதற்கு அவரிடமுள்ள குணங்களும் காரணங்களென்றபடி. (1)

கீழ் எல்லா விஷயத்திலும் ஜ்ஞானமும் பெருமான்விஷயத்திலே பக்தியும் பேசப் பெற்றன. பக்தியாவது அன்புடன் சேர்ந்த த்யானம். அவற்றில் எம்பெருமான்விஷய மான ஞானத்திற்கும் அன்பிற்கும் அளவற்ற வளத்தைக் கூறும் வாயிலாக அவருடைய சரித்திரத்தைச் சிறிது குறிப்பிடுகிருராய் அதன் மூலம் தமக்கும் மற்ருேருக்குமான ஒரு குரு பரம்பரையை அமைத்தவரென்றும் தெரிவித்து ஈடுபடுகிருர்—

2. தஸ்மை நமோ மதுஜிதங்க்ரிஸரோஜதத்வ—
ஜ்ஞாநுராகமஹிமாதிசயாந்தஸீம்நே.
நாதாய நாதமூநயேऽத்ர பரத்ர சாபி நித்யம்
யதீய சரணௌ சரணம் மதீயம்.

தஸ்மை—அப்படிப்பட்டவரும், கீழ்க்கூறியபடி ஜ்ஞான வைராக்ய பக்திகள் நிறைந்த வரும், மதுஜித் - மதுவென்ற அசுரனை வென்ற பகவானின், அங்க்ரிஸரோஜ. திருவடித் தாமரைகளின், தத்துவ – உண்மை நிலையின், ஜ்ஞான - அறிவினுடையவும், அநுராக - அன்பினுடையவும் மஹிமாதிசய - மேன்மையின் சிறப்புக்கு, அந்தஸீம்நே - கடையெல்லை யானவரும், நாதாய - ஸ்ரீவைஷ்ணவநாதருமான நாதமுனயே – நாதமுனிகளுக்கு, நம: - எனது வந்தனம். யதீய சரணௌ - எவரது திருவடிகள், அத்ர பரத்ர அபிச - இங்கும் அங்கும், ப்ரக்ருதி மண்டலத்திலும் உபாயம் வேண்டாத பரமபதத்திலுங்கூட, மதீயம் சரணம் - எனக்காக ஏற்பட்ட சரணமாகும், உபாயமும் உபேயமுமாகுமோ. தஸ்மை என்ற சொல்லால் முன் கூறிய நிலையைக் காட்டி மேல்நிலையை மேலே யருளினர்.

ஸ்ரீநாதமுனிகளுக்கு ஜ்ஞான வைராக்ய பக்திகள் லோகோத்தரமாய் ஆச்சர்ய மாய் முதலினின்றே இருந்தன. அப்படிப்பட்டவர் மேலே அவற்றின் மேன்மைக்குக் கடையெல்லையானர். அதாவது ஸ்ரீமந் நாராயணனே பரதத்துவம், அத்வைதாதி மதங்கள் ஆபாஸங்கள் என்று ந்யாயதத்துவம் என்ற பெரும் சாஸ்த்ர க்ரந்தம்

எழுதி நிருபித்தருளினுர். அதற்கிணங்க வேறு விஷயங்களில் வைராக்யத்தினுல் பக்தியி லாழ்ந்தார். யோக சக்தியை நிரம்பப் பெற்று எம்பெருமானை அன்புடன் தியானம் செய்து வந்தார். கர்மயோக ஞானயோக மூலமாக ஜீவாத்ம தத்துவத்தைக் கண்டு உள்ளே பரமாத்ம த்யானம் செய்வது எங்ஙனம், எம்பெருமானின் திருமேனியைத்தானே ஸாக்ஷாத் காரம் செய்கிருேமென்றெல்லாம் ஆராயலானுர். நாளுக்குநாள் பகவானிடத்தில் அன்பு வளர்ந்தேறி வந்தது. அப்பொழுது இவரை அணுகின சில வைஷ்ணவர்கள் ஆராவமுதன் விஷயமான திருவாய்மொழிப் பாசுரங்களை யெடுத்துக் கூற, அதில் ஊன்றினுர். அன்பு நிறைந்த இவருக்கு அங்குள்ள 'ஆராவமுதே! அடியேனுடலம் நின்பால் அன்பாயே நீராயலைந்து கரைய உருக்குகின்ற நெடுமாலே!, வானேர்கோமானே!, யாழினிசையே! அடியேனுவி அகமே தித்திப்பாய்' இத்யாதிகளைக் கேட்டபோது அன்பார்ந்த ஆழ்வாரிடம் மனம் ஈடுபட்டது. 'என் நான் செய்கேன். யாரே களைகண். உன்னுலல்லால் யாவராலும் ஒன்றும் குறை வேண்டேன். தனியேன் தரியேனினியுன் சரணம் தந்து என் சன்மம் களை யாயே' இத்யாதிகளைக் கேட்டபோது இந்த திவ்விய ப்ரபந்தம் பெற்ருல் நமக்கு வீட்டுக்கு வழிபிறக்குமென முடிவுசெய்தார். இப்படி அன்பின் மேன்மை பாகவதரான ஆழ்வார் வரையில் சென்றதால் எல்லை நிலம் எட்டிற்று. பிறகு ஆழ்வார்திருநகரி சென்று கண்ணி நுண்சிறுத்தாம்பை உபதேச மூலம் பெற்று ஆவ்ருத்தி செய்து யோகத்தில் ஆழ்ந்து நிற்கவே, இவர்மூலம் உலகை உய்யச் செய்ய மனேரதம் கொண்ட திருமால் மனமகிழ்ந்து பரம பதத்திலே ஆழ்வாரை நியமித்தருளினுன் இவருக்கு ஆசார்யகமும் செய்யும்படி. ஆழ்வார் ஸேவை தந்தருளி இவர் வேண்டின திருவாய்மொழியை மற்ற திவ்ய ப்ரபந்தங்களோடு சேர்த்து உபதேசித்துவிட்டு, இவர் ஏற்கனவே தெளிந்தபடியே தத்துவமும் பலனுமென் றருளி, பக்தியோகம் செய்யவரிதாகையால் ப்ரபத்தியை உபாயமாகக் கொள்ளுமென்றருளி த்வய மந்த்ரோபதேசம் செய்து அங்கங்களுடன் பூரணமாக ப்ரபத்திசெய்யுமென்று நியமித்த ருளினுர்.இதனுல் இவரது அனுராகம் கடையெல்லையைப் பெற்றது. எம்பெருமான் இவருக்குச் செய்த பரமானுக்ரஹத்தைக் கண்டு, இவருடைய அனுராகத்தின் எல்லையைக் காணலாமே, 'ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோத்யர்த்தம் அஹம் ஸ ச மம ப்ரிய:' என்றபடி ஆச்ரிதனின் அன்பின் அளவுக்கிடாகவே அன்பு வைத்து அவன் அருள்புரிவது. இவ்வளவு யாரிடம் எம்பெருமான் செய்துளான். இப்போது பரம ஹிதத்தின் ஞானம் தெளிவானதால் ஞானத்திற்கும் கடை யெல்லையானுர். (அந்த ஞானம் த்வயமூலமாக எம்பெருமான் திருவடியே உபாயமென்ற விஷயமானதென்பதை யறிவிக்கவே அங்க்ரிஸரோஜதத்வ என்றும் அருளினது.) ப்ராப்யம் ப்ராபகமெல்லாம் அதுவேயாயிற்று. பகவான் இவ்வளவு தெளிவை உண்டுபண்ணதால் மதுஜித்தான ஹயக்ரீவனிடம் ஈடுபட்டு, அடியிலே பிரமனுக்கு வேதங்களை யனுப்பிய உன்னைப் பற்றி, 'முமுக்ஷுர்வை சரணமஹம் ப்ரபத்யே' என்று ச்வேதாச்வதரோபநிஷத்து ஓதினதை இப்போதே தெரிந்தேன். 'ஸந்த: தச்சரணம் யதா' என்றும், 'திண்கழல்சேரே', 'துயரறுசுடரடி' என்றும் அருளியிருப்பது தெளிவாயிற்று என்று ஜ்ஞாநாநுராகங்களை நிறையப்பெற்ருர்.

இப்போது த்யானம் என்கிற அம்சத்திற்கு முக்யத்வம் சிறிது குறைந்ததே. அதனைக் கருதியே இந்த ச்லோகத்தில் பக்தி என்று ப்ரயோகிக்கவில்லை. ப்ரபன்னருக்கு

பக்தியோகம் செய்பவரைவிட அனுராகம் அதிகமாகலாம். அனுராகம் தொடர்ச்சியான ராகம். பக்தி என்ற சொல்லை விட்டு அனுராக என்றதால் பரஸ்வரூபத்திற்போல் அவதாரங்களிலும் புத்ரன் ஸுஹ்ருத்து என்ருற்போன்ற பாவனைகள் பகவானிடம் ஏற்பட்டு வரும் அன்பும் அறிவிக்கப்படும். இப்படி பூர்வார்த்தத்தின் சொற்பொருளின் விரிவு கண்டு சுவைக்க.

நாதமுனிகள் மறுபிறவியின்றி மோக்ஷம் செல்ல வழி கண்டோம் என்று மகிழ்ந்தார். இப்படி பரமபதத்தினின்று கொணர்ந்த ஞானமானபடியாலே இந்த ஞானம் உலகிலுள்ளாரின் ஞானத்திற்கெல்லாம் மேம்பட்டதாயிற்று. இவரைப் பலர் பணிந்து நிற்கவே பலருக்கு நாதருமானுர். வித்யாவம்சம் வளரத் தொடங்கிற்று. பால்யத்திலிருந்தே பிறமதங்களை நிரஸித்துப் பாதிராஜ்யம் பெற்று ஸுகமாய் வாழ்ந்துவரும் ஆளவந்தாருக்கு நாதமுனிகள் நம்மாழ்வாரிடம் பெற்ற விசேஷங்களெல்லாம் பிறகு அவர் நியமனத்தாலே அவருடைய ப்ரசிஷ்யரான மணக்கால்நம்பிகள் மூலம் கிடைத்தன. அதனை யறிவிக்கிருர் அத்ர பரத்ரசாபி இத்யாதியால். உபாயம் தெளியாதபோது அத்ர என்றதோடு நின்றேன். அது தெளிந்தபடியால் பரத்ரசாபி என்கிறேன். இங்கே யதீயசரணென என்றவிடத்தில் யதீய என்றதாலே உய்யக்கொண்டாரைக் கொண்டு, சரணெள என்று அவருடைய திருவடிகளான மணக்கால்நம்பிகளைச் சொல்லி, அவரே நமக்கு சரணமென்கிருரென்னலாம். அன்றி, யதீய சரணள என்ற விடத்திலே அபி என்ற முன் சொல்லைச் சேர்த்து எவருடைய திருவடிகளும் சரணம், நேராசார்யரான மணக்கால்நம்பிகளின் திருவடிகளைப்போல அவரை ஆசார்யராக்கத் தகுந்த நாதமுனிகளின் திருவடிகளும் சரணமென்று உரைக்கலாம். நாதமுனிவிஷயமான ச்லோகத்திலே தம் ஆசார்யரையும் விட இஷ்டப் படாமல் அடக்கி இவ்வாறு கூறியருளினுர்.(2)

தமக்குப் பிதாமஹரும் தமக்கும் பிறருக்கும் ஆசார்யருமான நாதமுனிகள் தம்முடைய ஸ்ரீ ஸூக்திகளாலும், தமக்குக் கிடைத்த அருளிச் செயல்களை யாராய்ந்து அமைத்துத் தாளம் வழங்கித் தமிழ்மறை இன் இசை தந்ததாலும் லோகோபகாரம் செய்ததை முக்கியமாகக் கொண்டு எவ்வளவு ப்ரணமம் செய்தாலும் போதாதென்று கருதி யருளிச் செய்கிருர்.

3. பூயோ நமோऽபரிமிதாச்யுத பக்திதத்வ—
ஜ்ஞாநாம்ருதாப்தி'பரிவாஹ'சுபைர்வசோபி :.
லோகேऽவதீர்ணபர்மாத்த'ஸமக்ர'பக்தியோகாய
நாதமுநயே யமிநாம் வராய.

அபரிமித — அளவற்றனவான, அச்யுத—எம்பெருமான் விஷயமான, பக்தி தத்வஜ்ஞான-பக்தியென்ன தத்வஜ்ஞான மென்ன இவைகளாகிற, அம்ருதாப்தி—அமுதத் தேக்கத்தின், பரிவாஹ—மேல்வெள்ளமான, சுபை:-மங்களகரமான, வசோபி: - தமது ஸ்ரீஸூக்தி

களாலும் மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களின் ஞானபக்தி பரீவாஹமான அருளிச் செயல்களாலும், லோகே-இவ்வுலகில் அவதீர்ண-இறங்கின, பரமார்த்த—உண்மை யான-எம்பெருமானைப் பற்றிய-ஸமக்ர-குறைவற்ற பக்தியோகாய-பக்தியோகத்தையுடை யரும், யமிநாம் வராய-யோகிச்ரேஷ்டருமான, நாதமுநயே-நாதமுனிவருக்கு, பூய:- மேன் மேல், நம:—வந்தனம் ஆகக்கடவது.

அச்யுத பக்தி தத்துவஜ்ஞான என்றவிடத்தில் இவருடையவும் ஆழ்வார்களுடையவும் பராசராதி மஹர்ஷிகளுடையவும் பத்திஜ்ஞானங்களைக் கொள்ளலாம். ஆகவே வசோபி: என்ற சொற்களும் பொதுவாகும். இவர்அருளிச் செய்த க்ரந்தங்கள் ந்யாயதத்வம், யோக ரஹஸ்ய மென்ற இரண்டு. மற்றும் அப்போதைக்கப்போது பிறந்த உபதேசஸூக்திகளும். இவர் ப்ரபன்னரான பிறகும் இங்கு ஸ்வயம்ப்ரயோஜனமாக பக்தி யனுஷ்டித்து வந்தார். அதுவும் த்யானமானபடியாலே யோகமே. யோகமென்றால் உபாயமென்றதல்ல. இனி யோகம் உபாய மென்றால் பராமார்த்த பக்தி யென்பதற்கு ஸாத்யபக்தி என்பது பொருளாய் ஸ்வயம்ப்ரயோஜனமான அன்பு என்பதும் பக்த்யம்சங்கொண்ட ப்ரபத்தியோக மென்பதும் பொருளாம். அதை உலகில் ப்ரசாரம் செய்தாரென்பது சாலப் பொருந்தும்-த்யான யோகமும் இவருக்குப் பிறகு குருகைக்காவலப்பனிடம் இறங்கிற்று. பிறகு தொடர்ச்சியில்லை. யோகரஹஸ்யம் எழுதி வைத்தது பின்னுள்ளார் கைவிட்டாலும் ஆளவந்தார் காலத்தில் இருந்தபடியாலே 'லோகேவதீர்ண' என்னக் குறையில்லை. 'பக்த்யா சாஸ்த்ராத் வேத்மி ஜநார்தநம்' என்றதால் ஜ்ஞானத்திற்கே உபாயமாக பக்தி வேண்டும். அது உண்டானதும் திவ்யஸூக்திகளாலென்னலாம். முடிவுவரையில் வைராக்யமும் யோகமும் இவரிடம் நிலைத் திருந்தன. ப்ரபத்தி யென்கிற உபாயம் கிடைத்ததற்காக யோகத்தை விடவில்லை யென்ற றிவிப்பதற்காக, யமிநாம் வராய என்றது. யோகிகளால் வேண்டப்படுகிறவர், யோகிகளுள் ச்ரேஷ்டர். (3)

இப்படி தமக்கு தேஹஸம்பந்தம் ஆத்மஸம்பந்தம் ஸ்ரீஸூக்தி ஸம்பந்த மென்ற மூன்று அல்லது நாதமுனிகளின் இயற்கையான அக்லிஷ்ட ஞானுதிகள் யோகாதி ச்லேசபூர்வ ஜ்ஞானம் உபயவேதாந்தப்ரவர்த்தனம் என்ற மூன்று ஆகாரங்களைக்கொண்டு ஒரு தரத்திற்கு மூன்று தரமாக ஆசார்ய மங்களம் செய்து, அவர் ஈடுபட்ட ஸ்ரீஸூக்திகளில் முக்கியமான வற்றை மேலே இரண்டு ச்லோகங்களாலே காட்டுகின்றாராய் அவற்றை யருளினவர்களையும் வந்தனம் செய்கிறார். இதிஹாஸபுராண கர்த்தாக்களாக நாம் நினைத்திருப்பது ப்ரஸித்தமாக வால்மீகி பராசர வ்யாஸ சுக மஹர்ஷிகளை. வால்மீகி ஸ்ரீராமாவதாரவரலாற்றைக் கொண்டு வேதப் பொருளான தத்துவஹித புருஷார்த்தங்களைக் குறித்தவர். ஸ்ரீராமன், சரணுகதி, அயோத்தி சராசரம் முற்றவும் அழைத்துச் சென்றது இவற்றை யருளினரே. ஆனால் மோக்ஷத்தில் நோக்கு முக்கியமாகத் தெரியவில்லை. வ்யாஸர் பாண்டவ வரலாற்றைக் கொண்டு கண்ணனுடைய அவதாரத்தை ப்ரதான மாக்கி முடிவில் மோக்ஷதர்மங்களைச் சொன்னாராகிலும், தத்துவத்ரயாதிகளின் பிரிவுகளை சுருக்கமாய்த் தெளிவாய் வேறென்றும் கலக்காமல் சொன்னாரல்லர். சுகரும் கிருஷ்ணனை ப்ரதானமாக்கிப் பெரும்பான்மை பகவா

ஊயே வர்ணித்தாரானுலும் எல்லா விஷயங்களையும் எளிதில் அறியும்படி ஸ்ரீபாகவதம் அமையவில்லை. மற்ற புராணங்களும் பற்பலகதைகளால் விஷயங்களை மறைத்துவிட்டன. வ்யாஸ சுகர்களுக்கும் முன்னோராய் அவர்களுக்கு வழிகாட்டின பராசரபரமர்ஷியின் க்ரந்தம் வெகு ஸரளமானது. எல்லாவிஷயங்களையும் கண்ணுற்காண்பதுபோல் தெளியலாம். ஆகவே இது புராணரத்னம். ஸ்தோத்ராத்ன மூலமாக மந்த்ரரத்னத்தின் பொருளை வெளியிடும் ஆளவந்தாருக்கு புராணரத்னமான ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் விசேஷ கௌரவம். இது நாத முனிகள் முதல் வந்ததாகும். பெயரே விஷ்ணு புராணம். அருளினவர் பெயர் பராசரர் என்பது. ராக்ஷஸ நரசம் செய்தவர். உலகில் ராக்ஷஸாம்சம் ஆஸுராம்சம் போக்கி தேவாம்சம் வளர்த்தவர், புலஸ்த்யவஸிஷ்டர்களின் பூர்ணனுக்ரஹத்தாலே பராமார்த்த தேவதையைத் தெளிந்தவர். பிற மத நிரஸனம் செய்தவர். 'ப்ரதிசது பகவாந் அசேஷபும்ஸாம்' என்று எல்லோருக்கும் நன்மை கோரின பரமகாருணிகர். இவருடைய க்ரந்தம் வியாஸாதிகளுக்கும் ஆழ்வார்களுக்கும் மூலமாயிருந்தது. ஆகையால் பராசரரை முன்னம் வணங்குகிருர். குருபரம்பரையை க்ரமமாக இங்கே சொல்லவரவில்லையாகையாலே நாதமுனிகளுக்கும் ஆழ்வாருக்கும் இடையில் பராசரரைச் சேர்த்ததில் குற்றமில்லை.

4. தத்வேந யச்சிதசிதீச்வரதத் ஸ்வபாவ போகாபவர்க ததுபாயகதீருதார:.
ஸந்தர்சயந் நிரமிமீத புராண ரத்னம் தஸ்மை நமோ முனிவராய பராசராய.

ய:-எந்த மஹர்ஷி, உதார :-வள்ளலாகி, சித்-ஜீவர்களென்ன, அசித்-அசேதனதத்துவங்களென்ன, ஈச்வர-ஸர்வேச்வரனென்ன, தத்ஸ்வபாவ-இம்மூன்றின் தன்மைகளென்ன, போக-சித்தின் அனுபவம் அசித்தின் அனுபவமென்ற கைவல்ய ஐச்வர்ய புருஷார்த்தங்களென்ன, அபவர்க-பகவத் ப்ராப்தியாகிற மோக்ஷமென்ன, தத் உபாய-அந்த போகாபவர்கங்களைப் பெற விரகுகளென்ன, கதி-அவற்றிற்குப் போம் வழி என்ன, இவற்றையெல்லாம், தத்வேந-உள்ளது உள்ளபடியாக, ஸந்தர்சயந்-தெளிவாகப் பிரித்துக்காணவைப்பாராய்-(காண்பிப்பதற்காக) புராணரத்நம்—சிறந்த புராணத்தை-நிரமிமீத, இயற்றியருளினரோ, தஸ்மை அப்படிப்பட்ட, பராசராய. பராசர ரென்னப்பட்ட, முநிவராய-பரமர்ஷிக்கு, நம :-எனது வந்தனம்.

இவ்வளவு அழகாகப் பிரித்து இதிலேயே நோக்கோடு சொன்னவர் வேறு யாருமில்லை. போகாபவர்க. போகமென்ருல் அனுபவம். 'போகமாத்ரஸாம்யலிங்காச்ச' என்றபடி மோக்ஷாநுபவத்தையும் போகமென்பதுண்டு. ஆயினும் போகம் மோக்ஷம் என்று மோக்ஷம் நீங்கலாக மற்றவற்றை போகமென்கிறது. சிதசிதீச்வர என்று மூன்று தத்துவங்கள் கீழே கூறப்பட்டன. அதற்கேற்ப, புருஷார்த்தங்கள் மூன்று, கைவல்யம், ஐச்வர்யம் பகவத்ப்ராப்தி என்றவை. இவற்றில் கைவல்யத்தை போகத்தில் அடக்காமல் அபவர்க்கதில் அடக்கினுர் பெரியவாச்சான்பிள்ளை, அதனையும் மோக்ஷமென்றும் வீடு என்றும் அங்கங்கே வழங்குகிறபடியால். ஆனுல் அது முக்யமான மோக்ஷமாகாது. ஜராமரண மோக்ஷ மென்று கீதையில் அருளினர். அபஹத பாப்மா விஜரோ விம்ருத்யு: என்ற வரிசையிலே பாப்ம என்பதை விட்டு ஜராமரண என்றதால் அங்கே பாபமோக்ஷமில்லையென்று தெளியலாம். ஜாமரண என்பதால்

ஜரையை முன்னிட்டுவரும் மரணமில்லை, ஜரையில்லாமலே மரணம் அங்கு கூட தோற்றும். கைவல்யத்தைப் பற்றிய விரிவு வேறிடத்தில், இங்கே சிதசிதீச்வர என்றவற்றில் நடுவிலுள்ள அசித்தின் அனுபவத்தை மட்டும் போக மென்று சொல்லி முன்னும் பின்னுமான சித் ஈச்வர என்ற இரண்டின் அநுபவங்களை அபவர்க்க என்கிற தென்பதைவிட சிதசித்துக்களின் அனுபவத்தை போக என்று கூறி மூன்ருவதை அபவர்க்க என்கிருரென்பது பொருத்தமாகும்; நமக்குக் கழிக்க வேண்டியதில் கைவல்யம் சேரவேண்டியது. பிரித்து எடுக்க வேண்டியது முக்கியமோக்ஷமான பகவத் ப்ராப்தி என்றவாறெல்லாம் ஆராய்ந்து ஸ்ரீதேசிகன் போகங்கள் ஐச்வர்யகைவல்யங்கள், அபவர்க்கம் பகவத் ப்ராப்தி என வருளினுர். எதில் எதைச் சேர்த்தாலும், தராதரம் அறிந்து பெறப்படுவது ஒன்றேயாம். கைவல்யத்தைக்காட்டிலும் பரம பதத்திற்கு வேறுபாடு கூறும்போது பெரியவாச்சான்பிள்ளை, 'ந ச புநராவர்த்ததே' என்ற வாக்யத்தை சதுச்ச்லோகியில் எடுத்ததால் கைவல்யத்தில் புனராவ்ருத்தியும் வேறுஸ்த்தானமும் அவருக்கு ஸம்மத மென்னலாம். போகோபாயங்கள் வர்ணுச்ரமதர்மாநுஷ்டானம் முதலியனவும் ஞான யோகாதிகளும். மோக்ஷோபாயங்கள் பக்தியும் ப்ரபத்தியும். (4)

ஸந்தர்சயந்: ஸம்-ஸம்யக்-செவ்வனே. வால்மீகி வியாஸாதிகளும் தங்கள் க்ரந்தங்களில் காண்பித்திருக்கிருர்கள். ஆனுல் இப்படி வகுத்தும் தெளிவாகவும் காண்பிக்கவில்லை. இதைவிடத் தெளிவாகும் ஆழ்வார் திவ்ய ஸூக்தியிலே கைவல்யத்தைப் பற்றியும் அர்ச்சிராதி மார்க்கத்திலே நடக்கும் உபசாரத்தைப பற்றியும் திருவும் பெருமானும் ப்ரபன்னருக்கும் உபாயமும் உபேயமுமாகிறது பற்றியும். இப்படி க்ரந்தங்கள் அருளிச் செய்தவர்களை இங்கே சிறப்பாகச் சொன்னது இந்த ஸ்தோத்ரத்திலே இந்த க்ரந்தங்களின் பொருள் பொதிந்திருப்பதைக் குறிக்கவாம். ஆகவே சிறந்த க்ரந்தங்களையே காட்டுவது. (4)

ஆழ்வார்களும் ஆதரித்த மஹர்ஷிகளையும் அவர்களின் ஸ்ரீஸூக்திகளையும் முதலிற் கூற முன்வந்து ப்ரதானமான பராசரரைப் புகழ்ந்துவிட்டு, தம் வித்யாவம்சத்திலே கூடஸ்தராய் வேதமோதுகின்றவர்களுக்கு மட்டுமல்லாமல், 'ஸ திசது பகவான் அசேஷ பும்ஸாம்' என்று பராசரர் வேண்டினது நிறைவேறும்படி எல்லா ஜனங்களும் கற்றுணரக்கூடிய பாஷையிலே திவ்ய ப்ரபந்தம் அருளிச்செய்தவராய், அந்த ப்ரபந்தங்களில் ஒவ்வொரு பாசுரமும் பகவானை விடாமற் கொள்ளும்படியும், மனத்தைப் பறிப்பதிலும் நெடுமாலிடம் மனம் பதிந்து மகிழ்ச்சி பெறச் செய்வதிலும் புராணுதிகளுக்குப் பன்மடங்கு மேம்படும்படியும் அமைத்தவராய், மற்றும் பல திவ்யப்ரபந்தங்களையும் உபதேசித்தருளினவராய் தம் நாதமுனிகளுக்காகவே தோன்றி ஆசார்யரானவருமான நம்மாழ்வாரை நன்கு வணங்குகிருர்.

5. மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதி:
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்.
ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத் ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா.

மத் அந்வயாநாம் - எனது வம்சத்தார்க்கு, யத் ஏவ - எந்த திருவடியிணையே நியமேந - எப்போதும், மாதா - தாயும், பிதா - தந்தையும், யுவதய:-மனைவிமாரும், தநயா:-

பிள்ளைகளும், விபூதி:-ஐச்வர்யமும்-ஸர்வம் - எல்லாபோக்யமுமாகிறதோ. தத் - அந்த, ந:-நமது, ஆத்யஸ்ய குலபதே:-முதற் குலபதியான நம்மாழ்வாருடைய, ஸ்ரீமத்-ஸம்பத்து உடையதும், வகுளாபிராமம் மகிழம்பூ அணிந்து அழகுற்றதுமான, அங்க்ரியுகளம்-திருவடியிணையை, மூர்த்நா-தலையால், ப்ரணமாமி-வணங்குகிறேன்.

தன் உடல் நோவு மறந்து முதலிலே சுமந்து பெற்று வளர்த்து, எவ்வளவு அலட்சியம் செய்தாலும் அன்புடனேயிருந்து ப்ரியமெல்லாம் அளிப்பவள் தாய். பிறகு பேசத் தெரிந்த போது எடுத்து உலாவி நல்லொழுக்கம் கற்பிப்பவன் பிதா. யௌவனம் வந்த போது முதலின்று உதவும் தாய் தந்தைகளுக்கு மேலாக அன்புக்கு இடமானவர்கள் மனைவிமார். அவர்கள் சொல்லே வேதம் போல் மதிக்கப்படும். மூப்பிலே பணிவிடை செய்து மேலுலகிலும் ஸுகத்திற்கு வழி செய்பவர் ஆணும் பெண்ணுமான மக்கள். இவர்கள் எல்லோர் மூலம் பெறும் ஸுகமெல்லாவற்றிற்குக் காரணம் சொத்து. இவ்வளவால் பெறப்படும் உண்ணும் சோறும் தின்னும் வெற்றிலையும் மற்றுமான போக்யங்களும் அவற்றிற்கான வஸ்துக்களும் பந்துக்களும் சினேகிதர்களும் உலகில் ப்ரஜைகளுக்கு அந்தந்தக் காலங்களிலே வேண்டும். என் வம்சத்திலே முன்னோரான தந்தை பாட்டனர் அவர்களைச் சேர்ந்தவருக்கும், ஆசார்யன் ப்ராசார்யன் அவர்களைச் சார்ந்தவர்களென்னப்பட்டவருக்கும் போல் பின்பட்டவரான ஜந்ம வம்சம் வித்யா வம்சமென்ற இரு வம்சங்களில் ஸம்பந்தப்பட்டவருக்கும் இவை யெல்லாமாக நின்றவர் முதற் குலபதியான நம்மாழ்வார். குலபதி யென்றால் பரம்பரையாய் பல கிளையாக வித்யை பெருக மூலமாயிருப்பவர். முதல் குருவான எம்பெருமான் முதற் குலபதியானாலும் நமது பரம்பரையென்ற பிரிவிலே மூல புருஷராவார் நம்மாழ்வாரானபடியாலே ப்ரபன்ன ஜநஸந்தாந கூட ஸ்த்தரான அவரே நமக்கு முதல் குலபதி. ஒவ்வோர் ஆசார்யரும் பலருக்கு உபதேசம் செய்து பல கிளைகளுக்கு மூலமாயிருப்பதாலே நாளடைவில் குலபதியாகலாம். அவர்களில் முதல்வரான ஆழ்வார் எல்லாவுறவுமானபோது அவருடைய திருவடியும் அத்தகையதே. அத்திருவடியிணையைத் தலையால் வணங்குகிறேன். அந்தத் திருவடிகளுக்கு இருக்கும் பெருமை யென்னவெனில், கஜேந்த்ரன், விபீஷணன், லக்ஷ்மணன் போன்றுரை ஸ்ரீ உள்ளவராக வசனங்கள் கூறுவது எதனுல்? பகவத்கைங்கர்யத்திற்கு முயன்றபடியால். அவ்வாறே ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டுமென்று விரைந்து, எய்த்திளைப்பதன் முன்னம் அடைமினோ! பாடிப் பறந்தும் குனிந்து முழலாதார், தடுகுட்டமாய்ப் பறவாதார், கும்பிடு நட்டமிட்டாடி என்றெல்லாம் திருப்பதிகளுக்குச் செல்வதையே செல்வமாகக் கொள்கையும் கூறினபடி உபதேசம் விரும்புவர் பலரிடம் பரிந்திருக்கையும் ஸ்ரீயாம். இந்தச் செல்வம் அழியா தென்று தோன்றும்படி அழியா மணமுள்ள மகிழ் மாலை பூண்டு முளது. எம்பெருமானுக்குத் துளவம் போலே ஆழ்வாருக்கென்றே ஏற்பட்டது வகுளம். மகிழ்ந்து பாடும் ஆழ்வார் மகிழ்மாலைமார்பினராயிருப்பதாலே ஆச்ரிதர்கள் திருவடிகளிலும் மகிழம் பூக்களை ஸமர்ப்பிப்பதாம். நாத முனிகளை நான் வணங்கினேன். நம்மாழ்வார் தாளிணையை என் தலையும் வணங்குகிறது. பூரணப்ரணாமம் இங்கே. மூன்று ச்லோகங்களாலே முவ்வகை ப்ரணாமம் முன்னே செய்தது. இங்கு எல்ம் ஒரே சமயத்தில் ஒன்றாகச் சேர்வதால் இந்த நமஸ்காரம் ப்ரணாமமாகிறதென்றபடி.

ஆழ்வார்க்கு மாதா பிதா என்றவாருனஎல்லாம் (உண்ணும் சோறும் தின்னும் வெற்றிலையும் எல்லாம்) கண்ணன். நமக்கு எல்லாம் நம்மாழ்வார் திருவடி. மாதா முதலானுே ராலாம் ப்ரியம் ஹிதமென்ருற் போன்ற எல்லா ஸுகங்களும் இத்திருவடியிணையின் அநுபவத்திலே கடலிற் குளம்படிநீர் போல் அடங்கியது. ஆழ்வாரனுபவம் பெரிது; அவ்வளவு வேண்டா. திருவடியே போதும். பின்னுள்ள நாதமுனிகள் முதலான ஆசார்யகௌல்லோரும் கூட அவர் திருவடிகளே. 'யஏவ:-எந்த ஆழ்வாரே' என்னுமே, 'யதேவ' என்றதால் திருவடிக்கே எல்லாமென்கிருர்—எம்பெருமானை சரணமென்னுமே அவனது சரணமே சரணமென்ருற் போலாம் இது. கோயில்களில் எம்பெருமான் திருவடிகளையே ஸ்ரீசடாரியாக நினைத்திருக்கிருேமாகையால் அதற்கு இணங்க இங்கும் குலபதே. என்று பகவானைக் கூறி அங்க்ரியுகளம் என்று ஆழ்வாரைக் கொள்ளலாம்; மகிழ்மாலையை மார்பிலே யணிந்தவரென்றே பொருள் கூறலாம். ஆனுலும் ஆழ்வார் குலபதியானதால் குல பதிம் என்னுமையால் அவர் திருவடி நமக்கு மாதா பிதாவாயிற்றென்று கூறி ஆழ்வாரைக் கூடஸ்த்தராகக் கூறுவதில் ஏற்றமென்றே எல்லோரும் இசைந்தனர். ஆளவந்தார்காலத்தில் அவர் திருமாளிகையில் ஆழ்வாரின் திருவடிநிலைகள் மகிழ்மாலையிட்டு ஆராதிக்கப் பட்டிருந்தமையால் இங்கு அந்தத் திருவடிநிலைகளை முக்கியமாக்கி யருளினுரென்றும் கொள்ளலாம். (5)

மேல் தாம் அருளிச்செய்யும் ஸ்தோத்ரமானது நாதமுனிகளுடைய ஜ்ஞாநபக்தி வைராக்ய மூலமான ஸ்ரீஸூக்திகளின் பொருளையும் அவர் அனுஷ்டித்தருளிய ப்ரபத்தியையும் அவற்றிக்கு மூலமான பராசராதி மஹர்ஷிகளுடையவும் ஆழ்வார்களுடையவும் ஸூக்தி களின் பொருளையும் பொதிந்துகொண்டிருக்க வேணுமென்ற கருத்தாலே அவர்கள் விஷய மான ஸ்தோத்ரப்ரணுமங்களைச் செய்து அவர்களின் அனுக்ரஹம் பெற்ருராய் ஸ்தோத்ரத் தைத் தொடங்குகிருர். உபப்ரும்ஹணங்களான ஸூக்திகளின் பொருளைப் போல வேதங் களின் பொருளும் இதில் அடங்கியிருக்கிற தெனத் தோற்றும்படி அருள்கிருர்.

6. யந் மூர்த்த்நி மே ச்ருதிசிரஸ்ஸு ச பாதி யஸ்மிந்
அஸ்மந் மநோரதபத: ஸ்கலஸ் ஸமேதி·
ஸ்தோஷ்யாமி ந: குலதநம் குலதைவதம் தத்
பாதாரவிந்தம் அரவிந்த விலோசநஸ்ய.

யத்—எந்த திருவடி, மே மூர்த்நி - எனது முடியிலும், ச்ருதி சிரஸ்ஸு ச - வேதங் களின் முடிகளிலும், பாதி—விளங்குகின்றதோ, அஸ்மத்—நம்முடைய, மநோரதபத :-ஆசை களின் போக்கு, ஸகல-:எல்லாம், யஸ்மிந், எந்த இணையிலே, ஸமேதி-ஒன்று சேருகிறதோ, அரவிந்த விலோசநஸ்ய—செந்தாமரைக் கண்ணனுடைய, தத் - அப்படிப்பட்ட, ந: குலத நம் குலதைவதம் - நமது குலத்தின் சேமிப்பாயும் தெய்வமாயுமுள்ள, பாதாரவிந்தம்— திருவடித் தாமரையை, ஸ்தோஷ்யாமி - துதிக்கப் போகிறேன்.

முன்னோர்களை வணங்கி அவர்களின் திவ்யஸூக்திகளை ஆய்ந்ததில் புண்டரீகாக்ஷனுக்கு நான் சேஷனென்பதைத் தெளிந்து வணங்கினேன். எப்போதும் அவனை சேஷியாகவே நினைத்திருப்பதால் எனது சிரஸ்ஸின் மேலே அவன் திருவடி விளங்கின வண்ணமிருக்கிறது. ஆகா என்ன ஸௌலப்யம். எண்ணிறந்த வேத முடிகளில் விளங்குமது எனது சிரஸ்ஸையும் இடமாகக் கொண்டது. நமக்கும் பூவின்மிசை நங்கைக்கும் இன்பனாய் என்றபடியாமிது. என் சிரஸ் ஒன்று அத்தனை வேதமுடிகளுக்கு ஈடாகிறது. என் சிரஸ்ஸில் நிற்பதற்காகவே வேதமுடிகளில் முதலில் நின்றது. அவையும் இடமென்பது அவ்வளவு முக்கியமாகாது. வேதங்களில் விளங்கும் அது அதற்கு மேலாக வேதமுடிகளில் விளங்கினதுபோல் அவற்றினும் மேலாக இங்கே விளங்கும். உபப்ரும்ஹணங்களின் பொருளையும் சேர்த்தல்லவோ அதன் மேன்மையை யான் அறிந்தேன். என் தலையென்றால் எனது ஆசார்யர்கள்; எனது மூளை என்றதுமாம். வேதங்கள் அவனைத் தெரிவிக்குமேயல்லது அனுபவிக்காது; அசேதனமாதலின். என் தலையில் வந்தபோது நான் அனுபவிக்கிறேன். எனக்கு இதற்கு முன் எந்தெந்த தசையில் எங்கெங்கு ஆசைகள் பெருகினவோ, அவையெல்லாம் இங்கே ஒன்றின. மாதா பிதா என்றவாறுன ஆழ்வார் இட்ட கட்டளைப்படி நடக்கவேண்டியவனானேன். அவர் இத்திருவடிகளே எல்லாமென்று உணர்த்தினர், ஆகையாலிங்கே நன்கு எல்லா மனோரதங்களும் சேர்ந்தன. இனி வேறிடம் தாவா. எனக்கு மட்டுமல்ல, நமக்கு எல்லோருக்குமே எல்லாமாகும் இது. எல்லாப் பலன்களுமான இதைப் பெற உபாயம் வேண்டுமே என்னில் - இது நம் குலத்திற்கே தனமாகையால் இதே உபாயம். தனவான் ஸுகீ. தனம் இருந்தால் எல்லாம் பெறலாம். ஆனாலும் தனத்தினால் மேலுலகப் பலன் பெற வேண்டுமாகில் தேவதை மூலமாகத்தானே பெற வேண்டுமென்னில், அந்த ஆராத்யமான தேவதையும் வம்ச பரம்பரையாக நமக்கு இதே ஆகும். தேவதைகளில் சிறந்த தேவதை தன்னைத் தந்த கற்பகமென்பவர். அந்த போக்யமான தேவதையும் இதே. அரவிந்த மன்றோ இது. அமுது நிறைந்த இதே வண்டுகளுக்கு வேண்டுமிடம். திருவடியில் எனது துதிச் சொற்கள் பட்டவுடனே திருக்கண்கள் தடந்தாமரை போல் மலர வேண்டும். எல்லா ப்ரமாணங்களின் பொருள்களை நிறைத்துத் துதி செய்கிறேன். தலையில் அத் திருவடியை நிறுத்தி - ப்ரபன்னனாகிச் செய்கிறேன். பிராட்டியை 'ப்ரபன்ன இதி ச ஸ்தோஷ்யாமி' என்றேன். அவ்வாறே, யந்மூர்த்நி எனவாக்கி, ஸ்தோஷ்யாமி என்கிறேன். துதி நிறைவேறுதற்காக ஒரு சரணாகதி. அல்லது மோக்ஷத்திற்காக ப்ரபத்தி செய்தவன் இங்கே அந்த க்ருதஜ்ஞதையைக் கொண்டு அதனையே வெளியிடுகிறேனாகையால் என் சிரஸ்ஸில் விளங்கி எல்லாம் அவன் ஏற்க வேண்டும். அவனைத் துதிக்காமல் அவன் திருவடியைத் துதிப்பதென் என்ன வேண்டா. பகவத் விஷயத்தில் இழிந்த ஆழ்வார் துயரறு சுடரடி தொழுதெழு என்று பரனடிமேல் தானே பாடியருளினர். அவனை ஸ்வாமியாக, நம்மை அடிமையாக அறிவிக்கவே ஸ்தோத்திரமாகையால் இது திருவடியின் ஸ்தோத்ர மாகிறது. ஆகையால் மேலே முழுமையும் அவனையே வர்ணித்தாலும் திருவடியின் துதியேயாகும். (6)

குருகைக்காவலப்பன் யோகம் செய்து கொண்டிருக்கும் தருணத்திலே அவரைத் தெண்டனிடச் சென்றார் ஆளவந்தார். யோகத்திலாழ்ந்திருந்தமை கண்டு நிச்சப்தமாய்

நின்ருர். அவருக்குத் தன் தர்சனம் அளித்துவந்த கண்ணன் அவரை விட்டுத் திருமுகத்தை திருப்பி ஆளவந்தாரைக் கடாக்ஷித்தான். தன்னைக் கண்டு உவக்குமவனது முகம் திரும்பின தென்று பார்த்து, சொட்டைக் குலத்தார் எவரேனும் வந்தாரோ என்ருர். உடனே அடியேன் என்று ஆளவந்தார் தெண்டனிட்டாரென்பது ஐதிஹ்யம். அவ்வளவு கிருபையுள்ளவன் கண்ணன் என்பதை, 'யத்ரக்ருஷ்ண: க்ருதாதர:' என்று வெளியிட்டார் தேசிகன். இப்படிப்பட்டவர் துதி செய்ய மனேரதம் கொண்டபோது உபாய மாகைக்காகத் தனது ஸ்வரூப ரூபகுணவிபவங்கள் எல்லாம் கொண்டு தோன்றினன். அங்கே ப்ரஹ்ம ருத்ராதிகளும் தடுமாறுவதைக் கண்டார். உடனே வியந்து நான் எங்கே இவனைத் துதிப்பதென்று அஞ்சி ஒருவாறருளிச் செய்கிருர்.

7. தத்வேந யஸ்ய மஹிமார்ணவசீகராணு:
சக்யோ ந மாதும்அபி சர்வ பிதாமஹாத்யை:
கர்த்தும் ததிய மஹிமஸ்துதி முத்யதாய மஹ்யம்
நமோஸ்து கவயே நிரபத்ரபாய.

யஸ்ய—எவனுடைய, மஹிமார்ணவ—மேன்மைக் கடலின், சீகர—ஒரு திவலையின், அணு:அபி-ஒரு நுண்ணிய பாகங்கூட, சர்வ - பிதாமஹ—ஆத்யை: அபி—சிவன் பிரமன் போன்றவர்களாலும், தத்வேந மாதும்—உள்ளபடி அளப்பதற்கு, ந சக்ய:-அரிதாகிறதோ, ததிய—அவனது திருவடியின், மகிம - மேன்மையின், ஸ்துதி—துதியைச் செய்வதிலே, உத்யதாய - முயற்சி கொண்ட, நிரபத்ரபாய - வெட்கங்கெட்ட, கவயே மஹ்யம் - பிறர் அறியாததை அறிந்த அல்லது கவித்வ ப்ரகடனம் செய்கிற எனக்கே, நம; அஸ்து- எனது நமஸ்காரம். எல்லோருங்கூட எனக்கே பரிஹாஸ நமஸ்காரம் செய்யட்டும்.

'விச்வாசார்யா : விதி சிவமுகா: ' என்றபடி முதலாசார்யர்கள் ப்ரஹ்மருத்ராதிகள். முதலில் அவர்கள் உபதேசிக்கவில்லையாகில் யார் என்ன அறிய முடியும். அவர்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து அவர்களோடு கூடியே நானுமிருந்தாலும் ஒரு திவலையின் துளிகூட துதித்ததாகாதிருக்க, மேன்மை முழுமையும் சொல்ல நான் முயன்றேன். இது தவறு என்று வெட்கப்பட வேண்டியிருக்க வெட்கப்படாமலிருந்தேன். இப்படி ஊர் சிரிக்கின்ற எனது மூடத்தன்மைக்கு எனது நமஸ்காரம். இனி நின்றேன் என்றபடி. அல்லது, இவ்வளவு தெரிந்தும் கவியாக இருக்கிறேன். இதற்கும் கவனம் செய்து வருகிறேன். வெட்கம் ஏற்படவில்லை. இந்த பொல்லாங்கைக் கண்டு எல்லோரும் எனக்கு ஏளனமாக நமஸ்காரம் செய்யட்டும். அப்போதும் நான் வெட்கமற்றேயிருப்பேன். கவனமே செய்வேன். அளவற்ற மேன்மைக்கும் கவி பாட வருமென்று நினைத்துப் பாடுவது அவனுக்குப் புகழ்வாகாமல் பழிப்பாகுமென்ருலும் நிற்க மனம் வரவில்லை. நா என் வசமன்று, நானே என் வசமல்லேன். இந்தக் குற்றத்திற்கு ஏதேனும் சிக்ஷைதான் பலனென்ருலும் இதனில் துணிந்தேன் என்றபடி, 'மஹ்யம் நமோஸ்து கவயே நிரபத்ரபாய' என்பதற்கு - நான் எட்டாததை

யும் எட்ட வெட்கமின்றி முயன்றேனே, நமஸ்காரம் என்று சொல்லி துதி செய்வதினின்று விலகினுரென்றும் கருத்துரைக்கலாம். தவறென்று தெரிந்தது; நமஸ்காரம் செய்துகொள்கிறேன். ஆனுலும் கவித்வம் நிற்காது. வெட்கமில்லாமல் செய்வேனென்றும் கருத்தாகலாம். முழுமையும் சொல்லலாமென்ற மனோரதப் பெருக்கை இங்கே சொன்னது, முழுமையென்பதில்லை முடிந்த வரையில் என்று வேறு பக்ஷம் சொல்லிகிறது மேலே. (7)

கீழ் ச்லோகங்கள் பகவானை விளித்து வரவில்லை. இங்கே அதற்குத் தொடக்கம். இவர் நிற்பவரென்று எம்பெருமான் நோக்கினுன். நான் வெட்கப்படவில்லை யென்பது நிற்க. ப்ரஹ்மருத்ராதிகள் ஏன் வெட்கப்படவில்லை, வேதங்கள் அவர்களைப் பரிஹஸிக்குமே என்று ஆராய்ந்தார். பழிப்பாகுமென்ற குற்றமில்லை; முழுமையும் சொல்லவியலாதாயினும் முடிந்தவளவு மொழிவதாமென்று தெளிந்து அருளிச் செய்கிறுர்—

8. யத்வா ச்ரமாவதி யதாமதி வாऽப்யசக்த:
ஸ்தௌம்யேவமேவ கலு தேபி ஸதா ஸ்துவந்த:
வேதா: சதுர்முக முகாச்ச மஹார்ணவாந்த:
கோ மஜ்ஜதோரணு குலாசலயோர் விசேஷ:.

யத்வா--அல்லது, அசக்த: அபி—சக்தியற்றவனுகிலும் நான், ச்ரமாவதி—களைப்பு நேரும் வரை, யதாமதி வா—புத்திக்கு எட்டின வரையிலாவது, ஸ்தௌமி - துதிக்கிறேன் ஸதாஸ்துவந்த: - விடாமல் எப்போதும் துதியா நிற்கும் வேதங்களும், சதுர்முகமுகா: அவற்றிக்குக் கீழ்ப்பட்ட நான்முகன்முதலானேரும். ஏவம் ஏவ—இப்படித்தானே; ச்ரமாவதியோ யதாமதியோ தானே துதிப்பர். மஹார்ணவ அந்த: - இருங்கடலினுள்ளே மஜ்ஜதோ:—மூழ்கின்ற, அணுகுலாசலயோ:-பரமாணுக்கும் பெரிய குல மலைக்கும் விசேஷ நீரில் அமிழ்ந்தொழிகையில் வேறுபாடுகள் க:-ஏது? இரண்டும் காணுதபடி மூழ்கினவையே. களைப்பு நேரும் வரையில் சொல்லுகிறேன் என்ருர். இரண்டு நாள் சொல்லி மூன்றுநாள், 'ஏன் சொல்லலாமே களைப்பில்லையே உண்டு திடமாயிருக்கிறீரே யென்பரே' என்று பார்த்து தெரிந்த வரையில் சொல்லுகிறேன் என்ருர். ஒரு சமயம் தாம் தெரிந்தவரையில் சொல்ல முயன்று களைப்பினுல் நிற்க வேண்டியதாகும்; இவ்வாறு சில நாள் கழித்த பிறகு தெரியாமையால் நிற்கலாமென்று அறிவிப்பதற்காகவும் அபி என்ற சொல்லலாம்.

என்ன ஆளவந்தார்! எனது மஹிமையிற் சிறிதளவும் சொல்லவாகாது; வெட்கப்பட வேண்டுமென்றீரானுல், இதுவும் எனது ஸ்தோத்ரம் தானே என்ருன் எப்பெருமான்: அதனுல் ஸ்தோஷ்யாமி என்னுமல் ஸ்தௌமி என்கிருர். "எப்போதும் துதிக்கின்ற" என்றது வேதத்திற்கு நன்கு பொருந்தும். பிரம்மாதிகளுக்குச் சேராது. முடிந்தவரையில் எப்போது மென்ருவது கொள்க. முன்னே சர்வபிதாமஹாத்யை: என்று சிவனை முதலிற் சொன்னுர். சிவனுக்கு முடியாவிட்டாலும் பிரமனுக்குக் கூடுமே

என்ற கேள்வியைக் களைய. இப்போது உயர்ந்த வேதங்களை முதலிற் கூறியதால் அடுத்த படியில் பிரமன், அதன் கீழ் சிவன் என்ற கருத்தாலே சிவனை முதலிற் கூறவில்லை. அதிக மாக அவர்கள் சொல்வதானுலும் முழுமையும் மொழியமாட்டாமை எல்லோருக்கும் ஒக்கு மென்றதற்குத் தக்க உதாரணம் மேலே. ஆக முழுமையும் சொல்வேன் என்றெண்ணினுல் தவருகுமேயல்லது துதி செய்வது தவருகாது. ஒருவரும் முழுமையும் சொல்லமாட்டிலராகை யாலே குறைவாகக் கூறுவது குற்றமாகாதென்றதுமாயிற்று. கரைகாணுமையும் நடுக்கடலில் மூழ்கலும் ஸமான மென்ருர். ஆயினும் எதற்காகத் துதிப்பதென்ருல், ப்ரமமாதிகள் எதற் காகத் துதிப்பது ? சேஷியினுடைய தயைக்கு சேஷன் பாத்ரமாவது இவனிடம் ப்ரீதி பூர்வ மான மனோவாக்காய வ்யாபாரங்களிருக்கையாலே. ஆகவே துதியும் ப்ராப்தமாகிற தென்னில், அப்போது நானும் துதிப்பது நியாயமே என்றதாயிற்று. (8)

தீநாநுகம்பியான நீ என்னிடம் தயை புரிவது விரைவில் ஆகுமாகையாலே அவர்களைவிட எனக்கே துதியில் அதிகாரம் மிகு மென்கிருர்.

9. கிஞ்சைஷ சக்த்யதிசேயந நதேऽநுகம்ப்ய :
ஸ்தோதாऽபிது ஸ்துதிக்ருதேந பரிச்ரமேண-
தத்ர ச்ரமஸ்து ஸுலபோ மம மந்தபுத்தே :
இத்யுத்யமோऽயம் உசிதோ மம சாப்ஜநேத்ர.

கிஞ்ச—மேலும், ஏஷ :-இந்த, ஸ்தோதா-துதிப்பவன், சக்தி அதிசேயந-துதிக்க வல்லமை வாய்ந்திருப்பது காரணமாக, தே—உனக்கு, ந அநுகம்ப்ய:—தயைக்குப் பாத்ரமாகிருனல் லன். அபிது—மற்று, ஸ்துதி க்ருதேந—துதிப்பதில் ஏற்பட்ட, பரிச்ரமேண—அவாவுடன் கூடிய இளைப்பினுலேயே. தத்ர—ஆனபின்பு, தத்ர—துதிவிஷயத்திலே, ச்ரம: - இளைப் பானது, மந்தபுத்தே:—புத்திக் குறைவு உடைய, மம து, எனக்கே-ஸுலப: இதி—விரைவில் பெறவா மென்கிற காரணத்தினுல், மம ச—எனக்கே, அயம் உத்யம:- இந்த முயற்சியானது உசித:—தகுந்ததாம். அப்ஜநேத்ர—செந்தாமரைக் கண்ணு !

தம் ஸ்வரூபத்திற்கு ஏற்ப எம்பெருமானைத் துதிக்க வேண்டுமென்று அன்பு அடங்கா மகிழ்ந்து துதிப்பதில் சிலர் வல்லமையினுல் வெகு காலம் துதிப்பர். சிலர் வல்லமையற்று விரைவில் ஒய்வர். ஆனுலும் மேல் சொல்ல மாட்டிலோமே என்று, அன்பினுல் அவஸ்தைப் படுவர். நீ தீநாநுகம்பி. அகிஞ்சனனிடத்திலே அதிகம் இரக்கம் உடையவன். ஆகவே அவஸ்தைப்படுவது கண்டு அருள்புரிகிருயல்லது வல்லமைக்காக அருள் புரிவதில்லை. அன்பில்லையாகில் வல்லமையெல்லாம் வீணே. அதனுல் எனக்கு அருள்புரிவது விரை விலாம். எனவே எனக்கே அதிகாரம் விஞ்சுமென்றபடி. ஏஷ:. ஸ்தோதா என்றபோது கீழ்ச் சொன்ன வேதமும் கொள்ளப்பட்டால் அதற்கு அநுகம்ப்யத்வம் சொல்லவாகா தென்று ஜீவனை மட்டும் கொள்வதற்காக ஏஷ என்ற பதமாம்.

பரிச்ரமேண. கதறித் துதி செய்ததாலான களைப்பு; அடங்காத அன்பினாலான மோஹம்; ஸ்வரவிகாரம் முதலியனவுமாம்.

மமச என்பதற்கு எனக்கும் என்ற பொருள் ஸ்வரஸமானாலும் பூர்வார்த்தத்தினின்று சொல்லும் விஷயத்தை யொட்டிக் கேட்கும் போது எனக்கே என்ற பொருள் கொள்வதாகும். பெரியவாச்சான்பிள்ளையும் எனக்கே என்ற பொருளுக்குத் தக்கவாறே அவதாரிகை வைத்து அவ்வாறே உரைத்துவிட்டு, ச என்பதற்கு உம்மைப் பொருள் கொள்வதானால் முன் ச்லோகத்திற் சொன்னவரையும் சேர்ப்பதென்று அதில் அவ்வளவு திருப்தியிராமலே உரைத்தார். அதற்கிணங்கவே ஸ்ரீ தேசிகனும் தேற்றப் பொருளையே இசைந்து உம்மைப் பொருள் மந்தமானதென்றார். அந்தப் பொருள் மந்தமென்பது முதலுரையின் கருத்திலு முள்ளதே இவரால் வெளியிடப்பட்டது. அப் பொருள் கூறியவரை மந்தரென்று யாரும் சொல்லவில்லை: இப்படி இரண்டும் ஸமரஸமாயிருக்க ஸ்ரீ தேசிகன் மேல் அம்பெறிவதற்குக் காரணமென்ன? உம்மைப் பொருளே இஷ்டமாகில் இவர் தம் உரையில் மமச என்பதற்கு எனக்கே என்று பதவுரையிட்டு அதையே விளக்கி உம்மைப் பொருளை அடியோடு விட்டது ஏன்? ''அப் பொருளில் என்ன அஸ்வாரஸ்யம் கண்டாரோ'' என்று ஆர்பாட்டம் செய்கிற வர் அதன் ஸ்வாரஸ்யத்தையே சொல்லி ஏன் கீழே உரைசெய்திருக்கவில்லை? 'இருக்கு வாய் முனிக்கணங்களேத்த நானும் ஏத்தினேன்' என்று ஸமுச்சயமில்லையா என்கிறார். ஏதேனும் ஸமுச்சயமிருந்தால் போதுமா. துதித்தது இருவருமாகையாலே அங்கு ஸமுச்சயம் தகும். இங்கே உசித: என்றதோடு சேர்க்க வேண்டும். எனக்கும் உசிதம், அவர்களுக் கும் உசிதம் என்று சமமாகச் சொல்வதானால், கீழ் மூன்று பாதங்களாலே தமக்குச் சிறப்புச் சொன்னதோடு இணங்குமா. இரண்டும் உசிதமென்று முன் ச்லோகத்திலே முடிந்த விஷய மாகையாலே இந்த ச்லோகமே வீணாம். ஆகையால் இங்கு ஆக்ரஹப் பேச்சு அநுசித மாகும். தேசிகனும் மந்தமென்றே அருளினார். முக்கிய பக்ஷமாகாதென்றபடி. கருத்து ச்ரமப்பட்டு நிர்வஹிக்க வேணுமென்று கருத்தாம். எவ்வாறெனில், ச என்ப தற்கு அவர்களுக்கு மென்று பொருள் கொள்க. எனக்கு மிகவும் உசிதம். அவர்களுக்கும் உசிதம். அவர்களும் தாஸர்களாகையாலே ப்ரீதியினால் பரவுவது நியாயந்தானே என்றவாறு.

இப்படி விடாமல் துதியில் இழந்தவரின் அன்பைக் கண்டு எம்பெருமான் மலர்ந்த திருக்கண்களாலே கடாக்ஷிக்க அதை யனுபவித்து அப்ஜநேத்ர என்று விளித்தார். தீநாநு கம்பி என்ற காரணமாக முதலிலேயே அருள்புரிந்து நிறுத்த வேண்டா. எனது நோக்கம் சிறிதாவது தலைக்கட்டும்படி கடாக்ஷிக்க வேணு மென்கிறாரென்னலுமாம். ஆக இது விஷயத் திலே உத்யமம் ப்ரயத்னம் மமச - எனக்கும் உசிதம். உனக்கும் உசிதமென்னலுமாம். (9)

துதியிலிழிந்து, உடனே விலகக் காரணமிருப்பதாக விலகப் பார்த்தபோது, போர் நிறுத்தின அர்ஜுனனை ப்ரியமாகக் கடாக்ஷித்தாற் போலே அவன் கடாக்ஷிக்க அதன் மேல் துதியை விடுவதில்லை யென்ற உறுதி யேற்பட இதற்குக் காரணம் அவனது விசேஷ கடாக்ஷமே என்று கண்டு அதன் காரணமான ஆச்ரிதவாத்ஸல்யமென்ற குணத்திலே முதலிலீடுபட்டு, ஸ்தௌமி என்றதாலே என்னை ஸ்வதந்த்ர கர்த்தாவாகக் கொள்ளவில்லை, எல்லாம் உன்னாலே என்று ஸாத்துவிகத்யாகம் தாம் செய்வதை ஒரு படி குறிக்கிறார்.

புண்ய பாபங்களுக்குத் தக்க பலனளிப்பது பொது; 'ஏஷ ஏவ ஸாது கர்ம காரயதி' என்றபடி நல்ல விஷயத்திலே பக்தர்களைத் தானே இழியவைப்பது வாத்ஸல்யத்தாலே. ஸ்தோத்ரத்தை நிறுத்தாமல் நடத்துவது வாத்ஸல்யத்தின் பலனும்.

10. நாவேக்ஷஸே யதி ததோ புவநாந்யமூநி
நாலம் ப்ரபோ பவிதுமேவ குத: ப்ரவ்ருத்தி ;
ஏவம் நிஸர்க்க ஸுஹ்ருதி த்வயி ஸர்வஜந்தோ :
ஸ்வாமிந் ந சித்ரமிதம் ஆச்ரிதவத்ஸலத்வம்.

ப்ரபோ - ஸர்வேச்வரனே, பலன் அளிப்பவனே! ந அவேக்ஷஸே யதி–நீ கடாக்ஷிக்க வில்லையாகில், உனது ஸங்கல்ப்பம் இல்லையானால், அமூநி புவநாநி, இவ்வுலகங்கள், பவிதும் ஏவ–இருப்பதற்கே, நஅலம்-வல்லமையற்றனவாகும். பரவ்ருத்தி :-செயலென்பது குத :- ஏது? ஏவம்-இவ்வாறு, ஸர்வஜந்தோ:-ஸர்வப்ராணிகளுக்கும், நிஸர்க்கஸுஹ்ருதி-இயற்கையில் அன்பு வைத்துள்ள த்வயி-உன்னிடத்தில், ஆச்ரித-பக்தர்களிடத்திலே, வத்ஸலத்வம் அதிக அன்புடையனாகை, ந_சித்ரம்-ஆச்சர்யமன்று.

உலகில் சிலர் காரணமின்றி பிறர்க்கு அபகாரமே செய்வர். அப்படிப்பட்டவரும் தம்மை யண்டி யிருப்பவரிடத்திலே அன்பு காண்பிப்பதுண்டு. எல்லோருக்கும் நன்மையையே தேடும் ஸர்வஸுஹ்ருத்தான நீ அண்டினவரிடம் வாத்ஸல்யம் கொண்டிருக்கையில் வியப்பொன்றுமில்லை. எல்லோரும் தன்னை யணுக வேண்டுமென்றே லோக கார்யம் செய்கிறாயாகையால், நீ அணுகினவர்களிடம் அதிகம் அன்பு கொள்வதில் வியப்பில்லை. என்னுடைய இந்த ஸ்தோத்ரப்ரவ்ருத்தி மட்டுமல்ல, உலகில் எல்லாருடைய ப்ரவ்ருத்தியும் எத்தகையதும் உனது கடாக்ஷத்தால் ஆவதே. ப்ரவ்ருத்தி யென்பதென். அவற்றின் இருப்பே-ஸத்தையே உனக்கு அதீனம். ஸத்தையாவது இரண்டுவிதம். ப்ரதமக்ஷணஸத்தை (முதல் க்ஷணஸம்பந்தம்) உற்பத்தி யெனப்படும். மேலெல்லாம் இருப்பு ஸத்திதி எனப்படும். ஆக ஸத்தாஸ்திதி ப்ரவ்ருத்திகள் உனக்கு அதீனம். ஸ்ருஷ்டி வாக்யத்திலே 'தத் ஐக்ஷத பஹு ஸ்யாம்' என்று ஈக்ஷணம் —ஸங்கல்ப்பம் சொல்லப்பட்டது. அது போல் காரணங்களுடைய ஸத்தையும் உனது ஸங்கல்ப்பத்தால். உனது ஸ்வரூபானந்தத்திலேயே த்ருப்தி பெற்றிருக்கும் உனக்கு இவற்றாலாவதென்? நீ ஸுஹ்ருத்தானபடியாலே இவை கர்மபந்தம் கழன்று தனக்கு ஈடாக ஆனந்தம் அனுபவிக்க வேணுமென்கிற நன்னோக்கே. இப்படி 'ந மே த்வேஷ்யோஸ்தி ந ப்ரிய:' என்றவாறு நாஸ்திகனுக்கும் ஸுகம் அளித்துவரும் உனக்கு, 'யே பஜந்தி து மாம் பக்த்யா மயி தே தேஷு சாப்யஹம்' என்றபடி பக்தவாத்ஸல்யத்தில், அதனால் அவர்களை மேன்மேல் விரைவிலேற்றி த்ருவனுக்கு ஸ்துதி செய்ய அனுக்ரஹித்தாற் போலே அனுக்ரஹித்து வருவதில் வியப்பொன்றுமில்லை யென்றபடி. இங்கே காரணத்வம், நியந்த்ருத்வம், ஸுஹ்ருத்துவம் ஸ்வாமித்வம் என்பவற்றோடு சேர்த்து வாத்ஸல்யம் அனுஸந்திக்கப்பெற்றது. (10)

உலகில் யாருடைய எத்தகைய செயலும் உனக்கே அதீன மென்பதில் ஐயமில்லை. எல்லாவற்றின் ஸ்வரூப ஸ்திதிகளும் உனக்கே அதீனமாகின்றபடியாலென்று கீழே ஸ்வாதீந த்ரிவித சேதநாசேதநஸ்வருபஸ்த்திதி ப்ரவ்ருத்திபேதன் என்றார். இத்தன்மை ப்ரஹ்மாதிகளுக்கு ஏன் இருக்கலாகாது. இவனுக்கேயானாலும் இவனுக்குமேல் ஒருவன் இருந்து அவனால் இவனுக்குச் சிறிது வந்ததாகி, வ்யோமாதீதவாதமே இருக்கலாமே என்று கேள்விகள் பிறக்க - வைதிகன் - வேத பரிசீலனம் செய்கின்றவன் இவ்வாறு கேட்க மாட்டிலன். வேத மனைத்தும் நாராயணனுக்கே இதனை நிரூபிப்பதாலென்கிறார்.—

11. ஸ்வாபாவிகாநவதிகாதிசயேசித்ருத்வம்
நாராயண த்வயி ந ம்ருஷ்யதி வைதிக : க :
ப்ரஹ்மா சிவ: சதமக: பரம: ஸவராடித்யேதேऽபி
யஸ்ய மஹிமார்ணவவிப்ருஷஸ்தே.

நாராயண - நாராயணனே ! ப்ரஹ்மா-பிரமன், சிவ :-பரமசிவன், சதமக :-இந்த்ரன், பரம: ஸவராட்-நித்யஸூரி, இதி ஏதே அபி-என்றாற் போன்றவர்களும், யஸ்யதே-யாதொரு உனது, மஹிம அர்ணவ-விபூதியாம் கடலின், விப்ருஷ:-திவலைகளாகின்றரோ, த்வயி-அப் படிப்பட்ட உன்னிடத்தில், ஸ்வாபாவிக-ஏதேனும் வ்யாஜமின்றி இயற்கையாய், அநவதிக அதிசய-உயர்வற உயர்ந்ததுமான ஈசித்ருத்வம் ஆள்கின்றமையை, க : வைதிக:—வேதம் வல்லானான எவன் தான், ந ம்ருஷ்யதி-பொறுக்க மாட்டான்.

வேதங்களில் பலவிடங்களில் பல பெயரைக் கொண்டு பரதத்துவத்தைப் பேசி யிருப்பது உண்மை. அங்கே ஸத், ப்ரஹ்மமம், ஆத்மா, ஹிரண்யகர்ப்பன், சிவன், இந்த்ரன் என்றாற் போன்ற சொற்களுமிருக்கின்றன. புருஷன் நாராயணன் என்றவாறுமுள. ஆனால் ஸத்ப்ரஹ்மாத்ம சப்தங்கள் பொதுவான சொற்களானபடியாலே ப்ரஹ்மருத்ராதிகளையும் பொருளாக்கலாம். ப்ரஹ்மா என்றால் சிவனைக் கொள்ளலாகாது, சிவ என்றால் ப்ரஹ்மாவைக் கொள்ள முடியாது. இப்படியிருக்க நாராயணாநுவாகம் என்ற ஒரு வேதபாகமானது, சம்பு: விச்வம் ப்ரதத்வம் சோதி ஆத்மா ப்ரஹ்மா சிவ: இந்த்ர: என்றவாறான சொற்களை யெல்லாம் எடுத்து எதுவும் நாராயணனே என்றது. எல்லா சொற்களாலும் நாராயணனே சொல்லப் படுகிறானென்றது. நாராயண என்ற சொல்லானது திருமாலான உன்னைத்தவிர வேறு யாரையும் சொல்லாதென்பது உலகம் அறிந்த விஷயம். மற்ற சொற்களாலும் நாராயணனே சொல்லப்படுகிறானென்று வேதம் சொன்ன பிறகு நாம் முடிவு செய்ய வேண்டியதென்ன? எங்கெங்கு நமக்கு ப்ரஹ்ம சிவாதி சொற்களுக்கு ப்ரஹ்ம சிவாதிகளையே பொருள் கொண்டால் ஒன்றுக்கொன்று முரண்படுவதால் பொருட் தெளிவு கிடைப்பதில்லையோ, அங்கங்கே நாராயணன் ஒருவனையே பொருளாகக் கொண்டால் ஒரு முரண்பாடுமில்லை யென்பது இதனால் தெரிவித்ததாம். அச் சொற்களுக்கு நாராயணன் எங்ஙனே பொருளா வான் என்று கேட்கலாம். அதற்கு நாராயண என்ற சொல்லின் பொருளை ஆராய்ந்தாலே ஸமாதானம் பிறக்கும். நாரங்களுக்கெல்லாம் அவனே அயநமாகின்றானே. அந்த நாரா

யணுநுவாகமே ‘அந்தர் பஹிச்ச’ என்றதொரு வாக்யத்தாலே உலகில் எல்லா வஸ்துக்களிலும் உள்ளும் புறமும் பரவி நியமிக்கின்றவன் நாராயணனுனபடியாலே எச்சொல்லும் அந்தராத்மாவான அவனைக் கூறுமென்று தெரிவித்து, அவனே ப்ரஹ்மா சிவன் என்கிறது. மேலே, பத்தர்களான ஜீவர்கள் மட்டுமல்ல; அக்ஷர : பரம : ஸ்வராட் - முக்தாத்மாவுக்கும், என்றுமே கர்மவச்யனுகாமல் எப்போதுமே அக்ஷரமாய் பரமஸ்வராடக்ஷரமென்ற நித்ய ஸூரிக்கும் நாராயணனே அந்தராத்மா. அத்தகைய ஆதிசேஷாதி நித்யஸூரிகளின் அபிமானத்திற்கு உட்பட்டு ஐச்வர்யம் பெற்ற ருத்ரப்ரஹ்மாதிகளுக்கு முழு ஐச்வர்யம் எவ்வாறு வருமென்கிறது. ஆக ப்ரஹ்மாதிகளுக்கு உள்ள ஈச்வரத் தன்மை அவர்கள் செய்த தவப்பயனுய் வந்தது, நித்யஸூரிகளுக்கும் அதீனமானது. அவர்களை ஆளும் நித்யஸூரிகளுக்கும் அத் திறமை நாராயணனின் ஸங்கற்பத்தினுலாம். நித்யஸூரிகளுக்கும் பெருமை கர்மாதீனமன்ருகிலும் தானே யிருப்பதன்று. மேலும் அதற்குள்ள வளர்ச்சி எம்பெருமானின் பெருமைக்குக் கீழ்ப்பட்டிருப்பதால் உயர்வற உயர்ச்சியாகா. நாராயணனுக்கு உள்ளடங்காத வேறு ஒருவனும் வேதத்தில் எங்கும் ஓதப்படவில்லையாகையால் வ்யோமாதீதவாதத்திற்கும் இடமில்லை. ஆக உனது ஐச்வர்யம் உயர்வற உயர்ந்ததாகும். இவ்வளவு நாம் நிருபிக்கும்போது இதற்கு முன்னே ப்ரஹ்மருத்ராதிகளையே ஸர்வேச்வரனுக நினைத்திருந்து அதிலே விசேஷமாகப் பற்றுடையானுக்கு இதை மறுக்க முடியாமையால் பொருமை யேற்பட்டால் அவன் தான்தோன்றியாவான்; வேதப்ரமாணம் சொன்னபடி நடக்க வேண்டுமென்றெண்ணிய வைதிகனுகான். வைதிகனுகில் பொறுக்க வேண்டுமென்றபடி. (11)

நாராயணுநுவாகாதிகளைக் கொண்டு எல்லாம் நாராயண பரமாக்க வேண்டுமென்பது மட்டுமே யன்றி, பிரமன், ருத்ரன், சூர்யன், வ்யோமாதீதன் என்று எந்த வேத வாக்கியங்களைக் கொண்டு சொல்ல நினைக்கிருர்களோ, அந்தந்த வாக்யங்களுக்கு முன்னும் பின்னும் பார்க்கும் போதும் அவை நாராயணனுன உன்னையே சொல்லுகின்றன என்பது தெளிவாகுமென்று தெரிவிக்கிருர். இதற்கு முன் ச்லோகங்களும் 14 வதான மேல் ச்லோகமும் நாராயணனை விளித்து அவனேடு பேச்சாகிறபடியால் இடையிலும் அதேயாம். (ஆக்ஷேபிக்கும் அரைகுறை வைதிகனைப் பார்த்துக் கேட்பதற்குமாம் இதுமட்டும்.)

12. க: ஸ்ரீ: ச்ரிய: பரமஸத்துவஸமாச்ரய : க :
க : புண்டரீகநயந: புருஷோத்தம: க:.
கஸ்யாயுதாயுதசதைககலாம்சகாம்சே
விச்வம் விசித்ர சித சித்ப்ரவிபாகவ்ருத்தம்.

ச்ரிய :—ஸ்ரீதேவிக்கும், ஸ்ரீ :—ஆச்ரயமாய் சோபையளிப்பவன், க :—யார். பரமஸத்துவ - சிறந்த ஸத்துவ குணத்திற்கு, ஸமாச்ரய:- நிர்வாஹகன், க:-யார். புண்டரீகநயந:க:- செந்தாமரைக்கண்ணன் யார். புருஷோத்தம : க:—புருஷர்களுக்கெல்லாம் மேலாய் புருஷோத்தமனென்னப்பட்டவன் யார். கஸ்ய - எவனுடைய அயுதாயுத - பதினுயிரத்தால் பெருக்கப்பட்ட பதினுயிரம் - அதாவது பத்து கோடி, அதனுல் பெருக்கப்பட்ட சத-நூறு,

அம்சங்களின் ஏக - ஓரம்சத்தின் கலா அம்சத்தின், அம்சக – ஒரு பாகத்தின் அம்சே - மிகச் சிறிய பாகத்திலே, அதாவது எண்ணற்ற பாகங்களி லொரு பாகத்தினுள்ளேயே, விச்வம் - ப்ரபஞ்சமானது, விசித்ர-பலவிதமான, சித் அசித்-சேதநாசேதநங்களின், ப்ரவிபாக - பற்பல பிரிவாக, வ்ருத்தம் - நிலைத்திருக்கின்றதோ.

உலக ஸ்ருஷ்டியை ஓதும் வேத வாக்கியங்கள் பல உண்டு. அவற்றை ஆராய்ந்தால் ஸாமாந்ய விசேஷ ந்யாயத்தாலே நாராயணனே காரணமென்று தெரிய வரும். 'பிரமன் தான் காரணமாகலாமே. படைப்பவன் பிரமன், காப்பவன் விஷ்ணு, நாராயணநுவாகத்தில் நாராயணனை அந்தர்யாமியாகச் சொன்னது அவன் காக்கின்ற வனுகையாலே' என்று நீங்கள் சொல்லவாகாது. புருஷஸூக்தம் ஸ்ருஷ்டிவாக் யங்களிலே சிறந்தது. அது எல்லா வேதங்களிலுமுள்ளது. அங்கு நாராயணன் தானே சொல்லப்படுகிருன். ஏன்? அந்த மஹா புருஷன், ஹிரண்யகர்ப்ப: ஸமவர்த்தாக்ரே என்பதற் கிணங்க பிரமனு யிருந்தாலென்ன என்பீர்களோ, அது தகாது. உத்தர நாராயணத்தில், அவனுக்கு பூதேவியும் ஸ்ரீதேவியும் பத்னிகள் என்று சொல்லப்பட்டிருப்பது பொருந்தாதே.

ச்வேதாச்வதரோபநிஷத்திலே, ஏகோ ருத்ர:, விச்வாதிகோ ருத்ர:, யா தே ருத்ர சிவா தநூ:, தஸ்மாத் ஸர்வகத: சிவ: என்ற வாக்யங்களால் சிவனே முதல்வனெனத் தேறுமென்னில் - அங்கும் புருஷஸூக்தாதிமந்த்ரங்கள் நன்கு கலந்திருக்கின்றன. வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம். நாந்ய: பந்தா:. தேநேதம் பூர்ணம் புருஷேண ஸர்வம் என்றவாறு. இது நிற்க. அங்கே, மஹாந் ப்ரபுர்வை புருஷ: ஸத்வஸ்யைஷ ப்ரவர்த்தக: என்ற வாக்யம் உளது. ஸத்துவ குணத்தைச் சரிவர அளிப்பவன் யார். பிரமன் ரஜோ குணத்திற்கும், சிவன் தமோ குணத்திற்கும், நாராயணன் ஸத்துவ குணத்திற்கும் அதிபதிகளென்பது எல்லோரும் இசைந்த விஷயம். பிறக்கும்போது ஒருவனை மதுஸூதநன் கடாக்ஷித்தால் அவன் ஸாத்து விகனுவான், பிரமன் பார்த்தால் ரஜோகுணம் மேலிடும், ருத்ரன் பார்த்தால் தமஸ்ஸூ சூழும் என்கிறது மாபாரதம். ஆகையால் அங்கே ருத்ரனென்ற சொல்லுக்கு ஸம்ஸார ரோகத் தைப் போக்குகின்றவனென்றும், சிவன் என்றுல் மங்களமானவனென்றுமே பொருளாம்.

இனி சாந்தோக்யத்திலே, யஏஷோந்தராதித்யே ஹிரண்மய: புருஷ: என்று சூர்ய மண்டலத்திலிருப்பவனை கீழ் மேலுலங்களுக்கெல்லாம் ஈச்வரனுகச் சொல்லியிருப்பதால் சூரியனே பரதேவதையென்பராகில், அதுவும் தகாது. அங்கேயே, 'தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகம் ஏவம் அக்ஷிணீ என்று செந்தாமரைக்கண்ணன் என்றதே. புண்டரீகாக்ஷன் என்ற ப்ரஸித்தி நாராயணனுக்கே யுள்ளது. எண்கண்ணனுக்குக் கண்ணின் வர்ணனம் எங்குமில்லை. முக்கண்ணனை விருபாக்ஷன் என்பார்கள். சிலர் – சாந்தோக்யத்திலே தஹர வித்யையிலே ஹ்ருதய புண்டரீகத்திலே ஆகாச என்ற சொல்லின் பொருள் ஒன்றிருப்பதா கச் சொல்லிற்று; இது எங்கும் ப்ரகாசிக்கும் பரமாத்மா என்கிருர்கள். இவன் நாராயணநுவா கத்திலே சொன்ன நாராயணனு யிருக்கலாம். தைத்திரீயத்திலே 'ககநம் விசோக:' என்று இவனைச் சொல்லி மேலே நாராயண நுவாகம் ஓதப்பட்டதாலும் இது பொருந்தும். ஆனல்

அவனுக்கும் பரனுயிருப்பவன் மஹேச்வரன் என்பது 'ய: பர: ஸ மஹேச்வர:' என்பதின் பொருளாகலாம். அவனைத் தான் தஹரவித்யையிலே, 'தஸ்மிந் யத் அந்த:, ததந்வேஷ்டவ் யம்' என்று அவனுள்ளும் ஒன்றிருப்பதாக ஓதின தென்பர். இதுவும் தவருகும். அந்த பரவஸ்துவை உபாஸித்தால் அவனைத் தானே பெற வேண்டும். மேலே பலனைக் கூறும் போது ஜீவாத்மாவுக்கு பரஞ்சோதியைப் பெற்றவுடனே சுயரூபம் செவ்வனே தோன்றிடு கிறது. அவன் உத்தம புருஷன். அப்போது அங்கு அவனை வணங்கி வழிபட்டுக் கூடி யிருந்து குளிர்ந்திருப்பான் ஜீவன் என்று, 'ஸ உத்தம: புருஷ: ஸ தத்ர பர்யேதி' என்றது தொடக்கமான வாக்யங்களாலே வர்ணிக்கப்பட்டிருக்கிறதே. உத்தம புருஷன் - புருஷோத் தமன் யார். கீதையில் கண்ணனே புருஷோத்தமனென்பது கண்கூடு. ஆகில் தஹரவித் யையில் கூறியது என்னவெனில், ஆகாச மென்ற பகவானிடத்திலே கல்யாண குணங்களும் திருமேனியுமான விசேஷங்கள் உள. அவற்றையும் உபாஸிக்க வேண்டுமென்றதே யாம்.

ஆகிலும் இவனை தஹரவித்யையில் ஹ்ருதயத்திற்குட்பட்டவனென்றதே. கடோபநிஷத் திலே அங்குஷ்டமாத்ர: புருஷ: என்று கட்டைவிரலளவாகக் கூறிற்று : புருஷ ஸூக்தத்திற் கூட சதுஷ்பாத்தாக, நான்கு பாகமாக அளவிட்டு ஓதப்பட்டான். ஆகையால் அளவற்ற பரம்பொருள் வேறென்ருக வேண்டுமென்னில்—இவனுடைய எண்ணற்ற அம்சங்களில் ஒரு நுண்ணிய ப்ரதேசத்திலே ப்ரபஞ்சமனைத்தும் அடங்கியிருப்பதாக வேதம் ஓதும். கீதையில் விச்வ ரூபத்திலே இவன் திருமேனியில் ஓரிடத்திலே எல்லாம் அடக்கமாகை காண்பிக்கப் பட்டது. நான்கு பாதங்களையுடையனுகை இவனைச் சொல்லும் புருஷஸூக்தமும் உலகனைத் தும் ஒரே பாதத்தில் அடங்கினதாகக் கூறினபிறகு இவனை அளவிடவாகுமோ. அளவற்ற மையே அவ்வகையில் சொல்லப்பட்டதாம். மனத்தில் பதியவைக்கவும் உபாஸனத்திற்கு அநுகூலமாகைக்காகவும் அவ்வாறு கூறுமென்க.

க: ச்ரீ: ச்ரிய: = ச்ரீக்கும் ச்ரீ. திருவுக்கும் திருவாகியவன். ச்ரீ யென்பவள் ச்ரீ பதத்தினுலே சொல்லப்படுவது எந்த காரணத்தினுல் ? நம்மைக் குறித்து அவள் ச்ரீயா கிருளாகையால் என்ருல், அவனைக் குறித்து அதே காரணத்தினுல் அவன் ச்ரீயாகிருன் என்றதாம். நாம் சொல்வதைக் கேட்டு பகவானிடம் அதைக் கேட்பிக்கிறபடியாலே அவள் நமக்கு ஸ்ரீயாகிருள் என்ருல் பகவானும் பிராட்டியினுல் நம்மைப் போல் ஸம்ஸார வாதை களால் துயருண்டு சொல்லப்பட்டு அதைக் கேட்டு வேருெருவரைக் கேட்பிக்கிருனு என்று வினவலாகாது. எதெது ப்ராமாணிகமோ, அதைத் தான் கொள்ள முடியும். இங்கே நாராயண முனி என்பவர் 'எல்லோரும் தங்கள் ஸ்வரூபஸ்த்திதிப்ரவ்ருத்திகளுக்குப் பிராட்டியை யாச்ரயிப்பதுபோல் பிராட்டியும் அவனை யாச்ரயிக்கிருளென்னலாம் என்ருர். இதனையே பெரியவாச்சான்பிள்ளையும் பிறகு வரைந்து அவளும் அவ்வாறு பற்றும்படியான மேன்மை யுடையன் என்ருெருவிதமாக உரைத்தார். அவள் தானுகப் பற்றினுளா, அவள் அவ்வாறு ஆனது அவனுலேயா என்ற விசாரம் வரும் என்று விவாதத்திற்கு இடமாமதை விட்டு பத்னிக்குப் பதியினுல் எல்லா அழகும் என்றவாறு தேசிகன் பொருள் உரைத்து, மற்றது ப்ரமாணம் உள்ளபடி யாவதென்று]கருதினர்.

பரமஸத்துவஸமாச்ரய : என்ற சொல்லுக்கு, உயர்ந்த ஸத்துவ குணத்திற்கு இருப்பிடமென்று பொருள் கொண்டால் பரமாத்மஸ்வருபத்திலே ஸத்துவகுணமில்லை யாகை யாலே கூடாது. இனி அவன் திருமேனியிலே ஸத்துவகுணமிருப்பதால் ஸத்வகுணமுடைய திருமேனிக்கு ஆதாரமென்ன வேண்டும். ப்ரக்ருதியில் சிறந்த வஸ்துவும் அல்லது நித்ய விபூதியுங்கூட ஸத்துவ குணத்திற்கு ஆச்ரயமே. இனி ஸம் என்ற உபஸர்க்கத்தாலே நியமனம், நிர்வாஹகத்வம் சொல்லப்பட்டால்தான் வேறுபாடு தோற்றும். ஆகவே ஸத்துவகுணத்திற்கு பரம்பரையாக ஆதாரமாயிருந்து நிர்வஹம் செய்கின்றவன் என்றே பொருளாம். இதனால் இவ்வுலகில் ஸத்துவ குண நிர்வாஹம் செய்வது சொன்னதாகும். அப்ராக்ருத விஷயம் மேலே வரும். இவ்வுலக வரலாறு இப்போது சொல்லப்படும். (12)

வைதிக: என்று சொன்னதற்கு இணங்க வேத ப்ரமாணங்களுக்கு உன்னிடமே பொருத்த மென்பதை யறிவித்து இனி இதிஹாஸ புராணங்களிலும் நீயே பரதத்துவமென்பது ஸ்பஷ்ட மென்று அங்குள்ள விருத்தா ந்தங்களைக் கொண்டு காட்டுகிறூர்—

13. வேதாபஹார-குருபாதக தைத்ய பீடா -
த்யாபத் விமோசந மஹிஷ்ட்ட பலப்ரதாநை:-
கோந்ய: ப்ரஜாபசுபதீ பரிபாதி கஸ்ய
பாதோதகேந ஸ சிவ: ஸ்வசிரோத்ருதேந -

வேத அபஹார - வேதங்கள் பறிக்கப்பட்டதென்ன, குருபாதக - தகப்பன் தலையை யறுத்த மஹாபாதகமென்ன, தைத்யபீடா - ஹிரண்யாக்ஷ பஸ்மாஸுராதிகளாலான வாதை களென்ன, ஆதி ஆபத் - இவை முதலான ஆபத்துக்களினின்று, விமோசந – விடுவிப்பதா லும், மஹிஷ்ட்ட பல - மிகச் சிறந்த பலன்களை ப்ரதாநை: - அளிப்பதாலும், ப்ரஜாபசுபதீ - ப்ரஜாபதிபசுபதிகளை - ப்ரஹ்மருத்ரர்களை, க: அந்ய :- வேறு யார், பரிபாதி - செவ்வனே காக்கின்றுன். ஸ :- அவன், ஸ்வசிரோ த்ருதேந. தன் தலையால் தாங்கப் பெற்ற, கஸ்ய பாதோதகேந. எவனுடைய திருவடித் தீர்த்தத்தால், சிவ : – மங்களங்களுக்கு இடமானுன்.

ப்ரஜாபதி பசுபதி என்ற பெயர்களைக் கேட்டு பசு என்ற சொல்லுக்கும் ப்ரஜை என்றே பொருளாகையால் பிரம்மருத்ரர்களே எல்லா ஜீவர்களுக்கும் நாதர்களென்று நினைக்க வேண்டா. ருத்ரன் பிரமனுக்கு நாதனுகான். பிரமனும் ஒரு ப்ரஜை - ருத்ரனும் ஒரு பசு. அவர்களுக்கு அவர்களே நாதராகமாட்டிலர். அவர்கள் புண்யபாபங்களின் பலன்களை யனுபவித்துவருவதால் ப்ரஜைகளும் பசுக்களும் ஆவர். ஆக விஷ்ணுவுக்கு ரக்ஷணம் மட்டும் தொழில் என்பாரும் இவ்விருவருடைய ரக்ஷணமும் விஷ்ணுவின் தொழில் என்று தெளிய வேண்டும். இதில் ஐயத்திற்கு இடமில்லை. ஏனெனில், ரக்ஷணமென்பது இருவிதம்—அனிஷ்டத்தை அகற்றல், இஷ்டத்தையிடுதல் என்றவாறு, பலவிதமாக ஆபத்துக்களினின்று விடுவித்துக் காத்தாய் நீ அவர்களை. முதலில் பிரமனைப் படைத்து

வேதங்களை அனுப்பியபோது மதுகைடபர்கள் பறித்துப் போயினர். கதறியழுத பிரமனுக்கு அவற்றை மீட்டுக் கொடுத்து அருள் செய்தாய். தகப்பனான பிரமனின் தலையைக் கிள்ளிப் பாபியாய் கபால மேந்தித் திரிந்து பட்ட பசுபதிக்குத் தன் உதிரம் இட்டுக் கபாலத்தைச் சுக்கலாக்கி ஹரசாபவிமோசனம் செய்தருளினாய். பஸ்மாஸுரன் போன்ற பல அசுரவரலாறு கள் ப்ரசித்தங்களே. எல்லாம் ஸாத்விக புராணங்களிலும் மஹாபாரதத்திலும் உள்ள கதை கள். ஸர்வமேதயாகம் செய்து நாராயணனை ஆராதித்து மஹாதேவன் தேவதேவனானான். இத் துடன் அவனுக்கு மஹாதேவத்வமும் விஷ்ணுவால் அளிக்கப்பட்டதொரு விசேஷமேயாம். பிரமனைவிட சிவன் கீழ்ப்பட்டவனென்பதற்கு ஒரு வரலாறு போதும். த்ரிவிக்ரமாவதாரத்திலே பிரமன் பெருமானின் திருவடிக்குக் கங்கையின் தீர்த்தம் சேர்த்து உபசரிக்க, அந்தப் பாத தீர்த்தத்தால் தன்னைப் புனிதனாக்கிக்கொள்ளவேண்டுமென்று தலையால் தரித்து சிவனென்ற பெயர் பெற்றான். ஸ்ரீபாகவத்தில் 'பாதோதகேந வித்ருதேந சிவ : சிவோபூத்' என்றது காண்க. ஸ்ரீமத் ராமாயணத்திலும் இவ்வரலாறு உளது. ஆக இவர்கள் ஸம்ஸாரிகள். இவர் களையும் காக்கின்றவன் நாராயணனென்றான பிறகு ஸர்வேச்வரனாகை யாருக்காம். இப்படிப் பட்ட மிகக் கொடிய ஆபத்து பகவானுக்கு நேர்ந்து அவர்கள் போக்கினதாகவோ, விஷ்ணு ஸ்தானமே அவர்களால் அளிக்கப்பட்டதென்றோ எங்காவது உளதா. அவதாரங்களில் ஏதோ சிலவற்றைக் கொடுத்ததாக இருக்கலாம். அதெல்லாம் தசரத வஸுதேவாதிகள் பிள்ளை போன்ற பகவானுக்குச் செய்யும் நன்மைகளைப் போல அவன்விளையாட்டுக்காகும். (13)

ஆயினும் ப்ரஜாபதி பசுபதி என்ற பெயர் இருப்பதால் இவர்களுக்கு நான் அதிகாரம் அளித்துவிட்டபடியால் ப்ரஜைகளின் பிறவி இருப்பு இறப்பெல்லாம் எனக்கு அதீனமல்ல. எனவே நீங்கள் அவர்களுக்கே உட்பட்டவர்களென்பாயோ—அதுவுமில்லை. அவர்களைத் தலைவர்களாகப் பெற்ற முழு ப்ரபஞ்சத்திற்கும் எல்லாம் உன்னாலே யாகிறதென்கிறார்—

14. கஸ்யோதரே ஹரவிரிஞ்சமுகப்ரபஞ்ச :
கோ ரக்ஷதீமமஜநிஷ்ட ச கஸ்ய நாபே:.
க்ராந்த்வா நிகீர்ய புநருத்கிரதி த்வதந்ய:
க: கேந வைஷ பரவாநிதி சக்யசங்க:.

ஹரவிரிஞ்ச முக: - ருத்ரனையும் பிரமனையும் முதலாகக் கொண்ட, ப்ரபஞ்ச :-இவ்வுல கானது. கஸ்ய - யாருடைய, உதரே - வயிற்றில் (ஆம்). வயிற்றுனுள் வைத்த வஸ்துவைப் போல் காணப்படாமலெங்கு லயிக்கும்? இமம்—பிரமன் ருத்ரன் தொடக்கமான இதையெல் லாம், க: ரக்ஷதி எவன் காக்கிறான். இதெல்லாம், கஸ்ய நாபே:- யாருடைய, நாபியினின்று, அஜநிஷ்ட - உண்டாயிற்று. த்வத்-உன்னைக்காட்டிலும் அந்ய: - வேறான ஜீவன், க:- யார் இதை க்ரந்த்வா-அடியளந்து, நிகீர்ய-விழுங்கி, புந:-மீண்டும், உத்கிரதி கக்குகிறான். ஏஷ:- இந்த வுலகம் – கேந வா–வேறு யாரால்தான், பரவாந்—மேம்பட்டவனையுடையது என்று, சக்ய சங்க: - நினைக்கப்படக் கூடும்.

ப்ரஹ்மருத்ராதிகளுக்கு முன்னுன ஸமஷ்டியும் அது போல் அவர்களும் அவர்களுக்குப் பின்னுன ப்ரபஞ்சமுமெல்லாம் உன்னைத் தவிர்த்து வேறு யாருடைய வயிற்றில் ஒடுங்கு வதாம், எவன் காப்பான். உனது நாபியினின்று தானே எல்லாம் பிறந்தது. ஆதிஸ்ருஷ் டியும் முடிவான ப்ரளயமும் உன்னுலாகிறது போல், இடையிலே பிரமனின் நாள்தோறும் இரவின் தொடக்கத்தில் வரும் நைமித்திக ப்ரளயமும், பகலின் முகத்திலே வரும் படைப்புங் கூட உன்னுலேயே யாகையால் நீயே விழுங்கி உமிழ்கின்றவன். எல்லாம் திருவடியால் அளந்து உன்னுல் காக்கப்பட்டது. மாவலி எல்லாம் தன் வசமாக்கினபோது யாரால் மீட்க முடிந்தது. மற்ற அவதாரங்கள், முழுவுலகும் உன்னுடைய தென்பதை த்ரிவிக்ரமாவதாரம் போல் காட்டா என்று அதனைச் சிறப்பாகக் கூறுகிறேன். அத்தனை லோகங்களில் சிற்சில லோகங்களை யழிப்பதும் படைப்பதும் நானே என்று அதனின்றே அறிவிக்கிருய். பிரமனும் ருத்ரனுமே அவற்றைச் செய்வதானுல் நீ விழுங்குவதும் உமிழ்வதுமாக புராணங்கள் ஏன் சொல்லவேண்டும். அவர்கள் சிலவற்றைச் செய்விதிலும் அவர்களை நிமித்தமாக்கி நீயே எல்லாம் செய்வது சிலர்தாம். மூர்த்தி வெவ்வேருனதாலே பிரமனும் ருத்ரனும் விஷ்ணுவும்— வெவ்வேறு ஆத்மாவாகிருப் போல் இவற்றை யெல்லாம் செய்யும் விஷ்ணு வேறு, மோக்ஷ மளிக்கும் பொதுவான பரமாத்மா ஸர்வஸ்வாமி வேறு என்று நினைப்பர். 'வ்ருக்ஷ இவ ஸ்தப்த்தோ திவி திஷ்ட்டத்யேக: தேநேதம் பூர்ணம் பூருஷேண ஸர்வம்' என்று உபய விபூதிகளுக்கும் நாதன் புருஷன், புருஷஸூக்தத்தில் சொல்லப்பட்டவன் என்றும், 'அபஹத பாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண:' பரமபதத்திலே யிருப்பவனும் ஸர்வாந்தர்யாமியு மானவன் நாராயணனே என்றும் நன்கு தெரிவிக்கிறதே. ஆதலால் விஷ்ணுவும் அந்த பரமாத்மாவும் ஒரே நாராயணனே. ப்ரஹ்மருத்ராதிகளும் ப்ரபஞ்சமெல்லாமும் அத்தகைய உனக்கே அதீனம். உனக்கு அதீனமாகாமல் வேறு யாருக்கும் ஒரு க்ஷணங்கூட எதுவும், அதீனமாயிருக்குமென்று நினைக்க இடமேயில்லையே என்றபடி.

முதற்பாதத்தாலும் மூன்றும் பாதத்தில் நிகீர்ய என்றும் ப்ரளயமே சொல்லப்படுகிறது. முதலில் மஹாப்ரளயம், பிறகு அவாந்தர ப்ரளயம். மஹாப்ரளயத்தில் வ்யஷ்டியான லோகங்களும் ஸமஷ்டியான மஹாபூதங்கள் முதலாக எல்லாம் அழிந்து மூலப்ரக்ருதிமட்டும் ஸூக்ஷ்மஜீவர்களோடிருக்கும். எல்லாவற்றிற்கும் லயம் பரமாத்மஸ்வருபத்திலேயே யாகிற படியால் திருமேனியில் லயிப்பதென்பதில்லை. ஆகையால் உதரே என்பதற்குத் திருமேனி யைச் சேர்ந்த வயிறு என்ற பொருளல்ல. பரமாத்மஸ்வருபத்தின் இடையிலே என்றே பொருளாம். வயிற்றில் விழுங்கப்பட்டதுபோல் தெரியாமல் எங்கோ ஒரு மூலையில் மறை கின்ற காரணத்தினுல் வயிற்றில் என்றதாம். கடைசி பாதத்தில் க: என்பது முன் பாதத் தோடு சேரும். அங்கே ஏஷ: என்பதற்கு பரமாத்மா என்கிற பொருள் சேராது. அப் போது த்வம் - நீ என்றிருக்க வேண்டும். முன்வாக்ய ரீதிக்கும் அது இணங்காது. (14)

இவ்வளவு உறுதியாகச் சொல்லுகிறீரே. ஏன் இவ்வாறு எல்லோரும் அறியவில்லை என்றுன் எம்பெருமான், அதற்கு உத்தரம் மேலே—

**15. த்வாம் சில ரூப சரிதை : பரமப்ரக்ருஷ்டஸத்வேந
ஸாத்விகதயா ப்ரபலைச்ச சாஸ்த்ரை :
ப்ரக்யாததைவ பரமார்த்தவிதாம் மதைச்ச
நைவாஸுரப்ரக்ருதய : ப்ரபவந்தி போத்தும்—**

*சீல* - ஸௌசில்ய குணம், ரூப - அப்ராக்ருததிருமேனி, சரிதை : - லோக விலக்ஷண மான செயல்கள், இவற்றைக் கொண்டும், பரமப்ரக்ருஷ்டஸத்வேந - மிக்க சிறப்புடைய ஸத்துவகுணத்தைக் கொண்டும், ஸாத்விகதயா – ராஜஸதாமஸமாகாமல் ஸாத்விகமாகை யாலே, ப்ரபலை : – மற்றவற்றைவிட மிக்க திடமான, சாஸ்த்ரை : மநுவ்யாஸாதி சாஸ்த்ரங் களைக் கொண்டும், ப்ரக்யாததைவ பரமார்த்தவிதாம் – தைவம் எது உயர்ந்ததென்பதை யறிந்தவராகப் பேர் பெற்றவர்களின், மதை : ச - முடிவான கொள்கைகளைக் கொண்டும், த்வாம் - உன்னை, போத்தும் - அறிவதற்கு, ஆஸுரப்ரக்ருதய : - அசுரப் பிறப்பானவர்கள் ந ஏவ - ப்ரபவந்தி - வல்லமை பெறவேயாகார்.

எவ்வளவோ பரத்வம் இருந்தும் நீ உலகினில் அன்பு வைத்து நீசரோடு நீசன்போல் கலந்து ஸௌசில்யத்தைக் காண்பித்தருள்கிறாய். அதற்காகப் பல ரூபங்களை யெடுக் கிறாய். நன்மைக்கான, அதிமாநுஷமான, தேவதைகளுக்கும் மாளாத பல செயல்களைச் செய்து நம்பிக்கையுண்டுபண்ணுகிறாய். ஸத்துவகுணம் செழிப்பதற்காக உனது கருணா கடாக்ஷத்தைச் செய்து, நீ அமுதுசெய்து மிகுதியானதால் ஸாத்விகமான ஆஹாரங் களுக்கும் வழி வைத்து மனத்தில் ஸத்துவ குணத்தை நிறுத்தப் பாடுபடுகிறாய். அத்தகைய மனத்தால் தெளிவதற்காகப் பல சாஸ்த்ரங்களுக்கு ப்ரசாரமும் செய்கிறாய். அவற்றில் ஸாத்துவிக ராஜஸ தாமஸப்பிரிவுகளை விளக்கி (பாஞ்சராத்ரம் உள்பட) ஸாத்துவிக சாஸ்த்ரங்களிலே இழிய வழி தேடுகிறாய். அந்த ஸ்ரீமத் ராமாயண மஹா பாரத ஸ்ரீபாகவதாதிகளால் ஆராய்ந்து பெறப்படும் தெளிவை அநாயாஸமாக அறிய தெய்வ உண்மை யறிந்து பெருங்கருணைக் கடலான பராசர வ்யாஸாதிகள் செய்த முடிவுகளையும் - விஷ்ணோஸ் ஸகாசாத் உத்பூதம் - த்யேயோ நாராயணஸ் ஸதா-ந தைவம் கேசவாத் பரம். ஓமித்யேவம் ஸதா விப்ரா : படத்வம் த்யாத கேசவம். நாஸ்தி நாராயணாத் பர: - என்றவாறான தெளிவான சொற்களால் காட்டி யிருக்கின்றாய். பராசரரென்பவர் வஸிஷ்ட புலஸ்த்யர் என்ற மஹான்களின் மனமார்ந்த அனுக்ரஹத்தால் மேம்பட்ட தெய்வ மின்னதென்பதை மிக்குணர்ந்த பரமர்ஷியாவர். அவருடைய புதல்வர் வ்யாஸர். இவ்வளவு வழிகள் ஏற்பட்டிருந்தும் உன்னையறியாமல், உனக்கு விரோதமும் செய்து இப்பவக் கடலில் மூழ்கின்றார்களே, அதற்குக் காரணம் அவர்கள் செய்த பாபத்தினால் நேர்ந்த அஸுரராக்ஷஸப் பிறவியே. அந்த ஸ்வபாவம் உடலைச் சார்ந்ததன்று, உள்ளத்தைச் சார்ந்தது. உயர்ந்த பிறவியிலிருப்பார்க்கும் சில சமயங்களிலே மனம் மாறி ரஜோகுண - தமோகுணங்களின் கார்யம் மிக நடக்கும். ஸத்துவம் உள்ளவர்க்கே முன்னேற்றமுண்டு. (15)

அறிவதற்கு வேண்டும் ஸாதனங்கள் இருந்தும் அசுரஸ்வபாவமுடையர் அறிய மாட்டிலரென்றார். நீயே மறைத்தால் கூட உனது ப்ரபுத்வத்தை நன்குக் காண்கின்றனர் பக்தரென்கிறார்—

**16.** உல்லங்கித த்ரிவிதஸீமஸமாதிசாயி -
ஸம்பாவநம் தவ பரிப்ரடிமஸ்வபாவம்.
மாயாவசேந பவதாऽபி நிகுஹ்யமாநம்
பச்யந்தி கேசித் அநிசம் த்வதநந்யபாவா :-

த்வத்—உன்னிடத்தில், அநந்ய-வேறிடத்திலிழியாத, பாவா :, மனப்போக்கை உடைய, கேசித்—சில மஹான்கள், தவ-உனது, உல்லங்கித - கடக்கப்பட்ட- த்ரிவிதஸீம முவ்வகை அளவுகளென்ன, ஸம - ஸமமானதென்ன, அதிசாயி—மேம்பட்டதென்ன இவற்றின், ஸம்பாவநம், இவையிருக்கலாமோ என்னும் எண்ணத்தையுடைய—அதாவது இவையிருக்கு மென்ற எண்ணத்தைக் கடந்த, பரிப்ரடிம ஸ்வபாவம்—ப்ரபுத்தன்மையை, பவதா அபி-உன்னுலும், மாயாபலேந மூலப்ரக்ருதியின் மறைக்கும் சக்தியைத் துணையாகக் கொண்டு, நிகுஹ்யமாநம் - மறைக்கப்பட்டிருக்குமதை, பச்யந்தி—நன்கு அறிகின்றனர்.

மூன்றளவுகள் காலபரிச்சேதமும் தேசபரிச்சேதமும் வஸ்து பரிச்சேதமும். 1-வது ஒரு காலத்தில் இருந்து மற்றெரு காலத்தில் இல்லாமை. 2வது ஒரு தேசத்தில் இருந்து வேறு தேசத் திலில்லாமை. 3வது ஒரு வஸ்துவாகும், வேறு வஸ்துவாகாதென்கை அல்லது மாற்றுக்கு உத் கர்ஷக்குறைவு. உலகிலுள்ள வஸ்துக்களில் இவ்வளவுகளும், ஒன்றுக்கொன்று ஸமமாகையும் ஒன்றுக்கு மேலோன்றுமிருப்பதால் உன்னிடமும் இவை எல்லாம் நினைக்கவாகுமோ என்பதற்கு மாகாதபடி மிக்க சிறப்பான ப்ரபுத்வம் உனது. நீ மனிதவுலகில் தோன்றி உன்னை எல்லோருக்கும் மறைத்தால் கூட மாயையின் வலைக்குட்படாமலிருந்து உன்னை நன்கு உணர்ந்து வருகிறவர்கள் உண்டு. அதற்குக் காரணம் உன்னைவிட்டு வேறிடம் மனம் செல்லாமையாம்.

'மூன்றளவுகளிவனுக்கில்லை, ஸர்வாந்தர்மியாகிருன் என்றதாலேயே ஸமனில்லை யென்றும், ஸமனேயில்லை யென்னும்போது மேம்பட்டவனில்லையென்றும் சொல்லாமலே விளங்கும். ஆயினும் அவ்வித ஓர் ஆகாரம் நீங்கலாக வேறு எல்லாம் சேர்ந்து ஸமத்வமோ, அவற்றில் ஓரம்சத்திலாவது மேம்பாடோ இல்லையென்றும் தெளிவிப்பதற்காக எல்லாம் சொல்லப்பட்டன. 'அநந்யா ராகவேணுஹம்' என்ற விடத்திற்போல் 'த்வத்' என்பது தனிப்பதமுமாகலாம். (16)

உலக ரீதியைக் கடந்தது அவன் ப்ரபுத்வமென்பதை விளக்கிக்காட்டுகிருர்.

**17.** யதண்டம் அண்டாந்தரகோசரஞ்ச யந்
தசோத்தராண்யாவரணுநி யாநி ச.
குணு : ப்ரதாநம் புருஷ : பரம் பதம்
பராத்_பரம் ப்ரஹ்ம ச தே விபூதய :

யத்அண்டம்-பூதபவிஷ்யத்வர்த்தமாந அண்டங்கள் யாவை. அண்டாந்தர-அவ் விடங்களின் உட்புறத்தையே, கோசரம் ச யத் - இடமாகக் கொண்டவையும் யாவை, தசோத்தராணி - அவ்வண்டத்திற்கு மேன்மேல் பத்து மடங்கு அதிக விஸ்தாரங்களான, ஆவரணுநி ச யாநி - மேன்மேல் சூழ்ந்திருக்கும் நீர் நெருப்பு முதலானவையும் யாவை, அவைகளும், குணு:-ஸதுவரஜஸ்தமோ குணங்களும், ப்ரதாநம் - அவற்றிற்கு ஆதாரமான மூல ப்ரக்ருதியும், புருஷ :- பத்த ஜீவர்களும், பரம் பதம்-சுத்த ஸ்த்துவத்ரவ்ய மான ஸ்ரீ வைகுண்டமும், பராத் பரம் - இவற்றில் பரமானதற்கும் மேலாய் பூர்ணசைதன்ய விகாஸமுடைய முக்த நித்ய ஜீவாத்மாக்களும், ப்ரஹ்ம – அவர்களும் நீயும் மிகப்ரியமாய் அனுபவிக்கும் உனது திவ்யமங்கள விக்ரஹமும் எல்லாம், தே - உனது விபூதய:— ஐச்வர்யங்களாம்.

விபூதியாவது–விசேஷண பூதி:; சொத்தாகையும் நியமன சக்தியுடன் பரவியிருக்கை யும். கீட்சொன்ன வஸ்துக்கள் யாவும் உன்னுல் பரவி நியமிக்கப்பட்டு உனது சொத்தாயிருக்கின்றன. இப்படியிருக்க, உனக்கு ஓர் அளவாவது ஒத்தார் மிக்கார் இருக்கலாமென்ருவது சொல்ல இட முண்டோ. அண்டமாவது ப்ரம்மாண்டம். பதினுன்கு லோகங்களையும் உட்கொண்ட முட்டை, அதுவும் அதனுள் அடங்கியவையும் உன் விபூதி. இவ்வாறு அண்டங்கள் ஒரே காலத்தில் பகவானின் ஒரு மயிர்க்காலுக்கு ஒன்ருக எண்ணிறந்து இருக்கின்றன என்று புராணங்கள் கூறும். அண்டத்தைச் சுற்றி அதன் விஸ்தாரத்திற்குமேல் பத்து மடங்கு விஸ்தாரமான ஜலமும், மேன் மேல் அததற்குப் பத்து மடங்கு அதிகமாக அக்னி, வாயு ஆகாயம் அஹங்காரம் மஹத் என்பவையும் இருக்கின்றன. இப்படி மேலும் கீழுமான ஸத்வாதி குணங்கள் உள்ள இடம் போக, ஏற்றக் குறைவிராமல் அக்குணங்கள் இவற்றிற்கு மேலிருக்கின்றன. அக்குணங் களுக்கு ஆதாரமாய் எங்கும் பரவினது ப்ரக்ருதி. இங்கு இருப்பவர் ஸம்ஸரிக்கும் ஜீவர்கள். ப்ரக்ருதிக்கு அப்பாலுள்ளது பரமபதம். அங்குள்ளவர் முக்தரும் நித்யரும். அவர்கள் அடி பணிவது உனது திருமேனியில். அதனையும் ஆள்பவனுய் அதற்கு மேலான பரமானந்தமா யிருக்கும் உனக்கு எதில் குறை கூறவாகு மென்றபடி. (17)

இவ்வளவு பெருமையிருப்பதாலே யாரும் அணுக முடியாதபடி யிருக்கிருனென்ற குறை கூறலாமே யென்னவேண்டா; ஸௌலப்யச் சிறப்பு முடையன் என்கிருர்—

18\. வசீ வதாந்யோ குணவாந் ருஜு: சுசிர்
ம்ருதுர் தயாளுர்மதுரஸ்ஸத்திரஸ் ஸம :—
க்ருதீ க்ருதஜ்ஞ: த்வமஸி ஸ்வபாவத:
ஸமஸ்த கல்யாண குணும்ருதோததி:—

வசீ. முன் சொன்னபடி எல்லாம் உன் வசத்திலுடையவனுயிருந்து பக்தருக்கு வசப் படுகிறவன், வதாந்ய:-வள்ளல், குணவான்-நீசருடனும் நெருங்கிப் பழகுகிறவன். ருஜு :-

முனேவாக்காயயங்களில் வேறுபாடில்லாதவன்-சுசி:-மனச்சுத்தியுடையவன், ம்ருது:-குற்ற முள்ளவரிடம் குறையைக் காட்டாதவன், தயாளு:-பிறர் துக்கம் போக்கும் நோக்கேயுடைய வன்,மதுர:-ப்ரியமானவன், ஸ்த்திர :-ஸமயோசிதமாக மாருதவன், ஸம:-ஜாதி முதலியவற் றில் குறையுள்ளவரிடமும் ஸமமாயிருப்பவன், க்ருதீ-தனக்கு எல்லாம் சித்தமாக உடைய வன். க்ருதஜ்ஞ:-பிறர் செய்யும் நலத்தை மறக்காதவன் என்றவாறு த்வம்-நீ, ஸ்வபாவத:—இயற்கையாகவே, ஒருவருடைய நிர்பந்தம் போன்ற வேறு காரணமின்றியே, ஸமஸ்த கல்யாண குண அம்ருத-அமுதம் போல் போக்யமான சிறந்த குணங்களெல்லாவற்றிற்கும், உததி :-கடலாகவே, அஸி-விளங்குகிருய்.

க்ருதீ க்ருதஜ்ஞ:-நீயே எல்லாம் செய்பவனுகி பிறர் உனக்குச் செய்ததாக நினைக்கின்ற வன் நீ என்னலுமாம். (18)

எல்லாம் இருந்தாலும் ஒரு சிலர் ஒன்றுமில்லையென்று நினைத்து வருந்தியேயிருப்பர்; இருப்பதில் திருப்தி பெறமாட்டிலர். அவ்வாறெல்லாமின்றி பூர்ணுநந்தன் நீ என்கிருய் கீழ்க் கூறிய குணங்கள் அளவற்றன என்பதற்கும் உனது ஆனந்தமே உதாரணமென்கிருர். ஏதேனும் சிறிது குறையிருக்குமாயின் ஆனந்தம் குறையும். அதில் குறையில்லையாகையால் எல்லாம் நிறைந்தவனென்பது தெளிவாமென்றும் கருதியருளிச் செய்கிருர். ஆனந்தம் அளவற்றதென்பதை வேத மூலமே அறிந்தோமென்கிற விஷயத்தை அற்புதமாக வர்ணித்து அறிவிக்கிருர்.

19. உபர்யுபர்யப்ஜபுவோऽபி பூருஷாந்
ப்ரகல்ப்ய தேயே சதமித்யநுக்ரமாத்.
கிரஸ் த்வதேகைக குணுவதீப்ஸயா
ஸதாஸ்த்திதா நோத்யமதோऽதிசேரதே.

கிர:-தைத்திரீய ப்ருஹதாரண்யக வேத வாக்யங்கள் த்வத்-உன்னுடைய, ஏகைககுண-ஒவ்வொரு குணத்தினுடையவும், அவதி-கடையெல்லையை, ஈப்ஸயா-பிடிக்க விரும்பி, தேயேசதம் இதி அநுக்ரமாத்-நூறு மடங்கானவை என்று தொடங்கி வெகு தூரம் சென்று, அப்ஜபுவ உபரி உபரி அபி-அனேகம் பிரமன்களுக்கு மேன் மேலாகவும், பூருஷாந். நூறு மடங்கு ஆனந்தமுள்ள புருஷர்களை, ப்ரகல்ப்ய-தாமாகவே கற்பனை செய்து, ஸதாஸ்த்திதா:-இன்னும் எப்பொழுதும் அந்நிலையிலேயேயிருப்பனவாகி, உத்யமத:-கடையெல்லையைக் கூறும் முயற்சிக்கு, நஅதிசேரதே-மேல் ஒன்றும் செய்தனவாகவில்லை, என்றும் தொடக்க மாகவே இருப்பு.

உலகில் ஒரு மனுஷ்யனுக்கும் காணுத ஒரு பேரானந்தத்தை மனுஷ்யானந்தமாகக் கட்டி அதனின்று நூறு நூருக வெகுதூரம் பெருக்கி நான்முகனின் ஆனந்தத்தையேயெடுத்து

அது நூறு மடங்காகுல் பரப்ரஹ்மத்தின் ஆனந்தம் என்றது வேதம். இதில் முதலானந்தமே அளவற்றதாயிருப்பதால் நான்முகனின் ஆனந்தமும் அளவற்றதென்பதில் ஐயமில்லை. அது நூறு மடங்கென்றுல் அளவாகுமா. நூறுமடங்கென்றதோர் அளவு சொன்னேமே. இதற்கும் மேம்பட்ட ஆனந்தத்தை இவ்வளவில் சொல்லலாகாதென்று பிரமனுக்கு மேலும் பெருக்கப் பார்த்து, ப்ரம்மாண்டத்தில் வேறு சிறந்த ஜீவன் இல்லாததால் இப்படிப்பட்ட ப்ரம்மாவையே ஒரு மனிதனுகக் கற்பனை செய்து, அதற்குமேல் மனுஷ்ய கந்தர்வர், தேவகந்தர்வர் என்ற வாறு மேன்மேலிருப்பதாகக் கற்பனை செய்து மீண்டும் பெருக்கிப் பார்த்தது. அனுதியான வேதத்தை எத்தனை தரம் ஓதியிருப்பரோ அத்தனை தரத்திற்கு இவ்வாறு திருப்பித் திருப்பிப் பெருக்கினுலும் போதாதென்று நினைத்து இன்னும் ஓதியே வருகின்றது. என்ன ஓதினுலும் எல்லை காணமுடியாதென்பதையும் மேலே 'யதோ வாசோ நிவர்த்தந்தே' என்றும் சொல்லிற்று. இப்படியானந்தமென்ற குணம் ஒன்றையே முழுமையும் காணுதபோது மிகுந்த குணங்களின் எல்லை காண ஸமயம் ஏது. இது அளவற்றிருப்பதாலேயே எல்லாம் நிறைந்திருப்பவனென்பது தெளிவாம். அப்ஜபுவ என்பது த்விதீயாபஹுவசனம்; பல பிரமன்களைச் சொல்லும். அவர்களுக்கு மேன்மேல் என்பதாலே பிரஹ்மாவை மனுஷ்ய ஸ்த்தானத்தில் வைத்துப் பலகால் மீண்டும் மீண்டும் பெருக்குவது பணிக்கப்பட்டதாம். ப்ரஹ்மா வேதாத்யயனம் செய்பவரானதால் 'யுவா ஸ்யாத் ஸாது யுவாத்யாயக:' என்று அவரையே சொல்லும். இயம் ப்ருதிவீ என்று முழுப்ரமாண்டத்தைக் கொள்ளலாம்: இப்படி இருக்கும் கீழ் ஆனந்தங்களுக்குள் மேலான ஒரு பிரமனுனந்தத்தையோ எல்லா ப்ரஹ்மானந்தத்தையோ மானுஷாநந்தமாக்கி மேன்மேல் சொல்லுகிறபடியால் இதைப்போல் இவ்வாறு பெருக்கின ப்ரஹ்மானந்தத்தையும் முதற்படியாக வைப்பதில் வேதத்திற்குக் கருத்திருக்கலாம். இங்கே ஸ்வரூப ரூபகுண விபூதிகளைச் சொல்லி ஆனந்தத்தை வர்ணிப்பதால் பகவானுடைய ஸ்வரூப ரூபகுணவிபூதிகளின் மேம்பாடு அவனுடைய ஆனந்தத்திற்குக் காரணமென்றதாகும். (19)

இப்படி ஜகத்காரணமாய் எல்லாம் நிறைந்தவன் எம்பெருமானென்று கூறின பிறகு, மேலே 'ச்ரோத்ரியஸ்யச அகாமஹதஸ்ய' என்று சொன்னபடி பூர்ணுனந்தமான மோக்ஷம் அளிப்பவனும் இவனே என்றும், ஆகையால் 'பூர்ணன் எதற்காக ஸம்ஸார காரணமாவான். அதற்காகவே மோக்ஷம் கொடான். இவன் மோக்ஷம் அளிப்பவனுகில் ஸம்ஸாரம் நடத்துகின்றவன் வேறும் என்று நினைக்க வேண்டா. மோக்ஷமளிக்க வேறு யாருக்கும் வல்லமையில்லை. இவன் அதையளிப்பதற்காகவே ஸம்ஸாரம் நடத்துவது என்றெல்லாமும் கருதியருளிச் செய்கிறுர்-

20. த்வதாச்ரிதாநாம் ஜகதுத்பவஸ்திதி
ப்ரணுச 'ஸம்ஸார விமோசநாதய:
பவந்தி லீலா விதயச்ச வைதிகா :
த்வதீயகம்பீர மநோநுஸாரிண:.

த்வதீய-உன்னுடையதான, கம்பீர-வேறெருவர் காணவாகாத, மந :-ஸங்கல்பங்களை அநு ஸாரிண:—பின்பற்றிய, வைதிகா:—வேதத்தில் அறிவிக்கப்பெற்ற, வித்ய :-ஆஜ்ஞை களும், ஜகத்-உலகங்களுடைய, உத்பவ ஸ்திதி ப்ரளய-ஸ்ருஷ்டி ஸ்திதிப்ரளயங் களும், ஸம்ஸார விமோசந-ஸம்ஸாரத்தினின்று விடுவிப்பதும்,ஆதய: (இவை முதலாக) மற்றும் புகுந்து நியமிக்கையுமான, லீலா: ச-உனது லீலைகளும், த்வதாச்ரிதாநாம்-உனது பக்தர்களுக்கு, பவந்தி ஆகின்றன.

எக்காலத்திலும் எவ்வுலகுக்கும் ஆகும் ஸ்ருஷ்டி ஸத்திதி ஸம்ஹாரங்களும், சிலருக்கு மோக்ஷமளிப்பதும், எல்லோரையும் தகுமாறு புகுந்து நியமிப்பதும் உனது லீலைகள். இவற்றை விடாமல் நடத்தவேண்டியதென் என்னில், அநாதியாக ஏற்பட்ட விதி நிஷேதங் களுக்குத் தகுந்தபடி, அவரவர்கள் செய்த புண்ய பாபங்களுக்குப் பலன் அளிப்பது அவச் யமாகையாலே. இருக்கும் ஆஜ்ஞைகளை மாற்றிப் புதிய படியாகப் புகவிட்டால் உனக்கு வைஷம்ய தோஷமும் நைர்க்ருண்ய தோஷமும், அதாவது பக்ஷபாதி, கருணையற்றவன் என்ற பழிகள் வரும். இப்படி எல்லாம் கர்மாவைத் துணையாக்கி நடத்துகிறபடியால், ஸம் ஸாரம் நடத்துவதும் சிலருக்கு மோக்ஷம் அளிப்பதும் உனக்கு இருக்கக் குறையில்லை. இவற்றையெல்லாம் தகுமென்று தெளிந்தவர்கள் உனது பக்தர்கள். இவையெல்லாம் அவர் களுக்கு ஆகின்றன. அதாவது—இவற்றைத் தெளிந்தே ஸம்ஸார வேரைக் களைந்து மோக்ஷத்திற்காக உன்னை ஆச்ரயிக்க முன் வருகிறார்களாகையால் அதற்கு இவை உப யோகப்படுகின்றன. உன்னையாச்ரயித்து மோக்ஷம் சென்றவர்கள், எல்லாம் நியாயமாகக் கண்டு இவற்றையும் போக்யமாக அனுபவிக்கிறார்கள். இவ்வுலகிலும் அவ்வாறு தெளிந்து அனுபவிப்பவர் உண்டென்றபடி.

இவ்வளவால் எல்லாம் கர்மாநு குணமாகவே ஈச்வரனே நடத்துகிறனென்றும் தர்மா தர்ம விவேகத்திற்கு வேத விதிகளே மூலமென்றும் அவையும் அவனுடைய ஆஜ்ஞை யென்றும் இப்படி ஸ்ருஷ்டி ப்ரளயங்களை அடிக்கடி நடத்துவது எம்பெருமானை ஆச்ரயிக்கப் பயன்படுவதால் அவனுடைய முக்கியமான மனோரதமும் பூர்த்தியாகிறதென்றும் இவ்வளவு தெளிந்தவர் சிலரேயென்றும் ஆக இவனையே மோக்ஷம் அளிக்க வேண்டி ஆச்ரயிக்க வேண்டுமென்றும் அறிவித்ததாம்.

த்வதாச்ரிதாநாம் என்பதன் கருத்து இருவிதமாக ஸ்ரீதேசிகனால் குறிக்கப்பட்டது, ஆச்ரயித்தவர்களின் இஷ்டம் நிறைவேறுதற்காகவும் அவர்கள் போக்யமாய் அனுபவிப் பதற்காகவுமென்று. எல்லாம் கீழே விரித்து உரைக்கப்பட்டன. ஸ்ருஷ்டியில்லையென்றால் தேஹம் முதலிய கருவிகளில்லையாகையாலே அவனை எங்ஙனே ஆச்ரயிக்கலாகும். மேலே உரையில் தவ என்றதொரு பதம் சேர்க்கலாம் ‘த்வத் என்ற பதத்தைப் பிரித்து உன்னிடத் தினின்று என்று உரைக்கலாம் என்ற பல வழிகள் சொல்லியிருந்தாலும் முதலில் அருளிய அந்வயத்திலே முக்கிய நோக்காகும், ச்லோகத்தில் விதயச்ச என்று தொடங்கி வேறு வாக் யம் போலேஉரையில் தோன்றும். ஆயினும் அங்கும் இவையும் ‘உன்னையாச்ரயித்தவர்களுக்

காகவே' என்று மேலே யருளினபடியால் அங்கும் த்வதாச்ரிதாநாம் என்பது சேருமென்ற தாயிற்று. அவர்களுக்கு வேண்டுவது சிறந்த தர்மாநுஷ்டானமே யாகையாலே அவற்றை விசேஷமாக உரையிற் சொல்லியிருந்தாலும், எல்லா விதிகளுமே பொருளாம். இப்படியொரு வாக்யமாக்கும்போது த்வதிய கம்பிரேத்யாதி விசேஷணம் ஸ்ருஷ்ட்யாதிகளுக்கும் சேரலாம். முன்னமே, 'பச்யந்தி கேசித் அநிசம் த்வதநந்யபாவா:' என்று பக்தர்கள் அவனது ப்ரபுத்வத்தை நன்கு அறிகிருர்களென்று சொல்லி விட்டபடியால், இங்கே ஆச்ரிதர் களுக்கு எல்லாம் உன் ஸங்கல்ப்பத்திற்கு ஆதீனமாகும் அதாவது எல்லாம் உன்னுலென்று ஆச்ரிதர்கள் முடிவு செய்வர் என்று உரைப்பதில் புநருக்தி தோஷம் வருமென்று ஆராய்ந்து அவ்வாறு உரைக்காமல், ஆச்ரிதாநாம்-ஆச்ரிதரின் நன்மைக்காக என உரைத்ததாம்.

இவ்வாறு உரைக்காமல் உலகின் ஸ்ருஷ்டி ஸித்தி முதலான எல்லாம் உன்னை யாச்ரயித்தவர்களின் லீலா கார்யங்களென்று உரைக்கலாகாது. அந்த வ்யாபாரங்களை அவனை யாச்ரயித்த நாம் செய்யவல்லரோ. இனி ஆச்ரிதாநாம் என்று எல்லோரையும் கொள்ளாமல் ப்ரஹ்மா இந்த்ரன் ருத்ரன் என்ருற் போன்றவரை எடுத்து அவர்களுக்கு அவை லீலையென்னலாம். அப்போதும் ஜகத் என்றவிடத்தில் அந்தந்த ப்ரஹ்மாதிகளுக்கு எவ்வளவு முடியுமோ அவ்வளவையே கொள்ள வேண்டும். ஸம்ஸார விமோசனத்திற்கும் அவர்களுக்கும் ஸம்பந்தமேயில்லை. ஆயினும் ஆசார்யகம் பண்ணுகிருர்களாகையாலே அதைக் கருதி ஸம்ஸார விமோசனம் அவர்களாலென்ற தென்னல் வேண்டும். ஆனுலும் அவையெல்லாம் அவர்கள் செய்த வினைகளின் பலாநுபவமாகையாலே அவர்களுக்கு லீலை யென்னலாமோ என்னில் அல்லீலையாக-அநாயாஸமாகச் செய்கிருர்களென்பது கருத்தென்க. இதனுல் ஸர்வம் நிர்வஹிப்பவனுனுலும் உன்னை யாச்ரயித்தார்க்கு நீ சில அதிகாரங்களை யளிப்பதாலே அவர்களும் பேர் பெறுகிருர்களென்றதாயிற்று. இதற்கிணங்க நான்காம் பாதத்திற்கும் பொருள் வேரும். அதாவது த்வதிய-உன்னைச் சார்ந்த மஹான்களின், திரு வுள்ளத்திற்கிணங்கவும் நீ சில விதிகளை யேற்படுத்துகிருய். இப்படியாச்ரயித்தாரிடம் அபி மானம் என்றபடி. இப்படியும் பொருள் கொள்ளலாமாகில், ச்லோகத்திற்கு பொருள் இரண்டு விதமாகிறது. இங்கு முதற் பொருளைப் பின்னும் இரண்டாம் பொருளை முன்னும் கூறினர் பெரியவாச்சான்பிள்ளை, மாற்றி உரைத்தனர் தேசிகன். இருவருடைய கருத்தும் ஒன்றே.

இனி வினவலாம்—ஸம்ஸாரிகளான ப்ரஹ்மாதிகளுக்கே ஜகத் ஸ்ருஷ்டி முதலானவற்றைச் சொல்லலாமாகில் த்வதாச்ரிதாநாம் என்று முக்தர்களையே எடுத்து உரைக்கலாமே என்று. இதற்கு விடையாவது — முக்தர்கள் ப்ரஹ்மத்தோடு ஐக்யமாய்விட்டார்களென்று நினைத்து ப்ரஹ்மத்தின் வியாபாரமெல்லாம் இவர்களுக்கும் கூடுமென்றா, அல்லது வேருகக் கொண்டே கூறுவதா. முதல் விஷயம் சாஸ்த்ரப் பொருளன்று. அபஸித்தாந்தமுமாம். ப்ரஹ்மம் வேருயிற்றே. இரண்டாவதும் தகாது. அவர்கள் ஜகத் ஸ்ருஷ்டிசெய்ய வில்லையே. ஏற்கனவே படைக்கப் பட்டிருக்கும் உலகில் தங்களுக்குச் சில போக்யங்களைச் செய்து கொள்வார்களென்றே உபநிஷத்தில் ஓதப்பட்டதல்லது உலகப் படைப்பு அவர்கள்

செயலாக ஓதப்படவில்லை. ஜகத்வ்யாபாரமில்லை யென்றது ப்ரமஸூத்ரத்திலும் முடிவு செய்யப்பட்டது. ஆகவே நித்யஸூரிகளுக்கும் அவை சொல்லவாகா. சில போக்ய வஸ்துக்களைச் செய்கிறார்களே அவ்வளவே கொள்ளலாமே யென்னில்—ச்லோகத்தில் ஜகத் என்பது சேராது. செய்யாவிட்டாலும் சக்தியிருக்கலாமே யென்னில்—இங்கே சக்திமட்டும் சொல்லப்படவில்லையே, உலகம் உண்டாவது முதலானவை அவர்களால் பவந்தி—நடை பெறுகின்றன என்றன்றோ சொல்லியிருப்பது. ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகளில் ப்ராப்தியில்லை இவர்களுக்கென்று பெரியவாச்சான்பிள்ளையே சொல்லியிருப்பதால் முக்தர்களைக் கொள்வதற் கில்லை. அதனாலேயே அவரும் முதலில் ப்ரஹ்மருத்ரேந்த்ராதிகளையும் ஸநகாதிகளையுமே பொருளாகக் கொண்டார். அவர்களால் எல்லாம் நடைபெறுகிறனவாகையால் பவந்தி என் பது பொருந்தும். இனி சில நித்யஸூரிகளைத் கொள்ளலாமே யென்று கேட்கலாம். 'புருடன் மணி வரமாகப் பொன்று மூல ப்ரக்ருதி மறுவாக' என்றவாறு எம்பெருமானுடைய அஸ்த்ர பூஷணங்களான நித்யஸூரிகள் உலகவஸ்துக்களுக்கு அபிமானிகளாயிருக்கிறார்களே, அவர்களால் நடைபெறுகின்றன என்னலாமே என்று. இது உண்மை, கொள்ளலாம். ஆனால் அவர்கள் நேராகவே யெல்லாம் செய்கிறார்களா, ப்ரஹ்மருத்ராதிகள் மூலமாகவா. அபிமானிகளானபடியாலே இவர்கள் மூலமென்றுதான் சொல்ல வேண்டும். இவர்கள் ஸம்பந்தப்படாமல் ஒன்றும் ஏற்படவில்லையே. ஆக ப்ரத்யக்ஷமான இவர்களையே எடுத்து இந்த ஸம்ஸாரிகளுக்கும் பெருமை யளிக்கிறானென்று புகழ்வதை விட்டு, நித்ய ஸூரிகளைக் கொள்வதில் விசேஷமில்லை. ஆச்ரிதாநாம் என்றதால் அவர்களின் ஆச்ரயணத்திற்கு இத்தகைய அதிகாரம் பெறுதல் பலன் என்று பொருந்தக் கூறும்படி ப்ரஹ்மாதிகளையே கொள்ளலாமென்பது உரைகாரர்களின் கருத்து.

இப்படி ச்லோகப் பொருள் ஒத்திருந்தாலும் தனி விசாரம் வேறொன்று உளது. முக்தர்களுக்கு உலகப் படைப்பு முதலானவற்றில் சக்திமட்டும் உள்ளது. ஆனாலும் செய் வதில்லை என்பது எவ்வளவில் நிற்கும் என்று ஆராய வேண்டும். இங்கே முக்தருக்கும் சக்தியுண்டென்றவர் அர்த்தபஞ்சகத்திலே நித்யருக்கு மற்றவரைக்காட்டிலும் வாசியைச் சொல்லுமிடத்திலே, 'ஈச்வரநியோகாத் ஸ்ருஷ்டி ஸித்திஸம்ஹாரங்களைப் பண்ணவும் சக்தராய்' என்று சொன்னார். அதனால் முக்தருகில்லை யென்று அங்கே தெரிகிறது. அங்கே அபிமானிக்கிறவர்களாயென்று சொல்லியிருந்தால் நன்றாயிருக்கும்; அபிமானிக்க ஈச்வர நியோகமுடையராய் என்றாவது சேர்த்திருக்க வேண்டும். அந்த சக்தியையும் விசாரிப்போம். ப்ரஹ்மாதிகளுக்கு மேல் அபிமானிகளாயிருப்பாரும் ப்ரஹ்மாதிகள் உலகம் உண்டாவது முதலானவற்றில் உபாதாந காரணமல்லாமல் நிமித்த காரணமேயாகிறபடியால் அதற்கு அபிமானிப்பார்கள் என்பதே தேறும். அவர்களுக்கு உபாதாநமாம் சக்தியில்லை. ஸர்வத்திற்கும் அந்தராத்மாவாகாமல் உபாதாநமாகை முடியாது. ஆத்மா என்றால் தாரண நியமனாதிகளைச் செய்பவன். செய்யாதபோதும் ஆத்மாவாக வேண்டும் என்று ஸ்ரீபாஷ்யத் திலே, 'ஸர்வாத்மநா நியந்தும் தாரயிதும்ச சக்யம்' என்று சரீர லக்ஷணத்திலே சக்தியைச் சேர்த்தருளினார். இந்த சக்தியை நித்ய முக்தர்களுக்கு இசைந்தால் அவர்களும்—ஸர்வாத் மாக்களுமே ஸர்வ சப்தவாச்யருமாக வேண்டியதாகும். அந்த சக்தி நித்யமாகையால்

பத்தர்களாயிருக்கும் போதும் ஸர்வாத்மத்வாதிகள் எல்லாருக்குமாயிடும். எல்லாம் கருதியே ஸ்ரீதேசிகன் 'அச்ருதத்வாத் அநுபபத்தேச்ச' என அருளினர். இது குயுக்திவாதமன்று. சாஸ்த்ரார்த்த விசாரம். நாம் எல்லோரும் ப்ரமாண சரணராகிறமையால் இதை இசைய வேண்டும்.

ஸர்வ சரீரித்வாதிகள் இல்லையென்றும் அதன் மூலமான, 'நானே உலகமாகிறேன்' என்ற ஸங்கல்ப சக்தியும் கிடையாதென்றும் ஏற்கனவே இசைந்தோமென்னில், இதனுல் சில சக்தியுமில்லையென்றதாயிற்று. பின் என்ன சக்தியுள்ளது. ப்ரஹ்ம ருத்ர விச்வாமித்ராதிகளைப் போலே உலகங்கள் விஷயத்தில் நிமித்த காரணமாகலாமென்னில், அவர்களால் அது மூலம் கார்யங்கள் நடைபெறுகிறனவா? ப்ரஹ்மாதிகள் தாமே செய்கிருர்கள்; அவர்கள் செய்யவில்லையே. பதவிகளைப் பெறப் பலர் தவம் புரிந்து காத்திருக்க இவர்களை விட்டு அவர்களை எதற்கு எம்பெருமான் ஏவப்போகிருன். செய்யாதவர்களுக்கு அச்சிறிய சக்தியை இசைந்ததால் இந்த ச்லோகத்தில் அவர்களைக் கொள்ள முடியுமா. பவந்தி என்று அவர்களால் நடைபெறுவதையன்ரோ அருளினரிங்கு. ஆக அந்த சக்தி ஸ்த்தாபனத்திற்கு இங்கு என்ன உபயோகம்?

நாரதீயத்தில் (ஹரிபக்த ஸுதோதயத்தில் 66 அ) இஷ்டமிருந்தால் ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களையவர்கள் செய்யக் கூடும் என்றதால் சக்தி உண்டென்னில்-அதனுலேயே ஸர்வ சரீரித்வம் 'பஹு ஸ்யாம் என்கிற ஸங்கல்ப்ப சக்தியெல்லாம் கூட இசையலாமே. இசையாமை யுக்திவாதமா, ப்ரமாண வாதமா. விசாரித்தால் அந்த சக்தியும் ஓரளவில் தான் நிற்கும். எம்பெருமானுரே, 'ஸ்வஸங்கல்ப்பமாத்ராவக்லுப்த ஜகஜ்ஜந்மஸ்த்தித்வம்ஸாதிகே ஸ்ரீமதி விஷ்வக்ஸேநே' என்றருளினுரே என்னில், அங்கே சக்தி மாத்திரத்தைச் சொல்லவில்லையே. அவகல்ப்ய என்னுமே அவக்ல்ப்த என்றே அருளினதால் அவரால் ஜன்மாதிகள் நடைபெற்றிருப்பதாகவே தெரிகிறது. ஆகவே சத்தியுண்டு ப்ராப்தியில்லையென்பதற்கு இது அனுகூலமாகாதே. சக்தியிருக்கிறது ஆனுலும் அப்ராப்தியே என்னவொண்ணுது. விஷ்வக்ஸேனருக்கு ப்ராப்தியுமுண்டே. சிலருக்கு ப்ராப்தியுமுண்டாகையால்தான் "அப்ராப்திச்ச துர்வசா" என்ருர் தேசிகன். அபிமானியான நித்ய ஸூரிகளுக்குப் போலே விஷ்வக்ஸேநருக்கு எல்லா ப்ரஹ்மருத்ராதிகளையும் கவனிக்கும் அதிகாரம் உண்டென்பதாலே முக்தர்களுக்கும் எல்லா நித்யர்களுக்கும் இந்த வ்யாபாரங்கள் இசையப்படா. உபாதாநத்வம், ஸமஷ்டி ஸ்ருஷ்டி என்ற பகவத் கார்யங்களாகிற வியாபாரமில்லையென்ற ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி பெரியவாச்சான்பிள்ளையின் கருத்தை வேறுவிதமாக்காமல் சரியாகத் தெளிவதற்கு ஏற்பட்டிருக்க, ஸமரஸத்திற்கு வந்த ஸ்ரீஸூக்தியின் மேல் கலஹத்திற்குப் புறப்படுவது பொருந்தாது. ஆகையால் 'அதவா கிந்து ஸமர்ப்பயாமி' என்றவிடத்திற்போல் இங்கும் இருவருக்கும் கருத்து ஒன்றே என்று சொல்லி நிற்பது நியாயமாகும்.

பெரியவாச்சான்பிள்ளையின் உரையின் பொருள் பின்வருமாறு :—முதலில் த்வதாச்ரிதாநாம் என்பதற்கு ப்ரஹ்மருத்ரஸநகாதிகளுக்கு என்று பொருள் உரைத்தார். ஆனால் அவர்களுக்கு ஜகத் ஸ்ருஷ்ட்யாதிகள் கர்ம பலனைய் அனுபவிக்க வேண்டியவை யாகையாலே அமுக்யமான லீலையாகாவே என்று தோன்றிற்று. அதன்மேல் முக்தர்களைக் கொள்ளலாமென்றார். அவர்களுக்குச் செய்ய நேராமற் போனாலும் சக்தியுள்ளது; அவர் களுக்கு இது அமுக்யமாகையால் லீலையாகுமென்று கருதினர். ஆயினும் இங்கே சக்தி மட்டும் சொல்லப்படவில்லையே. உத்பத்திஸ்த்திதி நாசங்களெல்லாம் இருக்கின்றன என்றதே; முக்தர்களுக்கு ப்ராப்தியில்லை யென்றதால் இங்கே அவர்களைக் கொள்ள முடியாதே என்று நினைத்து வேறே பொருள் கொண்டார். அந்தக் கடைசிப் பொருளையே முதலில் தேசிகன் தெரிவித்துப் பிறகு முக்த விஷயமான பொருள் கூடாமற் போனாலும் முதலில் பெரிய வாச்சான்பிள்ளை கூறினபடி ப்ரஹ்மருத்ராதிகளைக் கொண்டும் கூறலாம். லீலா என்பதற்கு அவலீலை பொருளாய் இதைவிட அதிகமும் செய்ய சக்தி அவர்களுக்கு எம்பெருமானால் உண் டென்பதிலே நோக்கு என்றறிவித்தார். எம்பெருமானின் வியாபாரமெல்லாம் முக்தர்களுக் கும் அவலீலை யென்று பெரியவாச்சான்பிள்ளையும் சொல்லவில்லை. பிரமன் முதலானவர் களிடத்தில் கண்டிருக்கும் சத்தியை முக்தர்களிடத்தில் மறுப்பதும் இல்லை. ஈச்வரனிடத்தில் இருக்கும் மஹாசக்தியை இவர்களிடத்தில் யாரும் இசைவதுமில்லை. இதே ஸமரஸமான ஸாரம் (20)

கீழ் எம்பெருமானுடைய பரத்வ ஸௌலப்யங்களும், அவன் நமக்கு அளிக்கும் அம்ச மாகையால் முக்கியமான ஆனந்தத்தின் ஸம்ருத்தியும், அதை யளிப்பதற்காக ஸம்ஸாரத்தி னின்று விடுவிக்கத்திருவுளம் கொண்டு ஆச்ரிதர்களுக்காகவே ஸ்ருஷ்டி முதலான வியாபாரங் களைத்தானும் தன் மூலமான ப்ரஹ்மாதிகளைக் கொண்டும் செய்கிறானென்பதும் கூறப் பெற் றன. இப்படி நினைத்தபோது தாமும் அவனை மோக்ஷத்திற்கு ஆச்ரயிக்க வேண்டுமென்று முடிவு செய்தார். இது ஒழுங்காக நிறைவேற வேண்டுமே என்று நொந்து பரத்வத்தோடு ஸௌலப்யமும், உபயவிபூதிநாதனானபடியாலே ஒரு விபூதியினின்று மற்றொரு விபூதிக்கு கொண்டு போவதற்குத் தான் ஒரு புருஷனை எதிர்பார்க்க வேண்டாமென்பதும் பரமதயாளு வானபடியாலே வேறொரு பேருபாயத்தையும் நம்மிடம் பார்க்க வேண்டாமென்பதும் தெளியப் பெற்று அதனையே விஞ்ஞாபனம் செய்து, உபாய பூர்த்திக்கு நேரும் இடையூறுகளை நீக்குவதற்காகவும் ஈடுபாட்டின் மிகுதியாலும் மேன்மேலே நமஸ்காரங்களைச் செய்கிறார்.

21. நமோ நமோ வாங்மநஸாதி பூமயே
நமோ நமோ வாங்மநஸைகபூமயே.
நமோ நமோऽநந்த மஹாவிபூதயே
நமோ நமோऽநந்ததயைக ஸிந்தவே.

வாங்ம நஸ—வாக்குக்கும் மனத்திற்கும், அதிபூமயே—இடத்தைக் கடந்தவனுக்கு, நமோநம:—மீண்டும் மீண்டும் ப்ரணாமம். வாங்மநஸைகபூமயே— அவையிரண்டுக்குமே

முக்கிய விஷயமானவனுக்கு, நமோ நம. அநந்த மஹாவிபூதயே—அளவற்ற இருவிபூதிகளுக்கும் ஸ்வாமியானவனுக்கு நமோ நம: அநந்த தயைகஸிந்தவே—அளவற்ற தயைக்கு ஒப்பற்ற கடலானவனுக்கு, நமோ நம:.

அவன் தயை யில்லாதபோது ஒருவருக்கும் வாக்குக்கும் மனத்துக்கும் நிலமாகான். அனுக்ரஹம் பெற்றவருக்கும் பூரணமாகச் சொல்லவும் நினைக்கவும் ஆகான். யதோவாசோ நிவர்த்தந்தே என்றதே வேதம். ஆகிலும் வாக்குக்கும் மனத்திற்குமே விஷயமாவான். வேறு இந்திரியங்களாலோ அனுமானத்தாலோ அறியப்படமாட்டான். வாக்காலும் சுத்தமான மனத்தாலும் அறியவேண்டும். மேலும் நாம் வாக்கும் மனமும் பெற்றதற்குப் பலன் முக்கியமாய் இவனை யறிவதேயாம். அவனைப்போல் அவனுடைய விபூதிகளையும் நன்கு அறிவது வேதவாக்கைக் கொண்டேயாம். இருவிபூதிகளுக்கும் நாதனானபடியாலே இங்கிருந்து அங்கே அவனே சேர்த்தருள வேணும். அந்த விபூதியில் மனம் சென்றிருக்கிறது. அங்கே நாம் சேர உபாயம் என்ன எனில், அவனே அவனது தயையேயாம், நாம் என்ன செய்யவாகுமென்கிறாராய் ஒவ்வொரு குணத்தை நினைக்கும்போதும் நம: என்கிறார்.

முப்பத்திரண்டு கபளம் உண்பதானாலும் உண்கிறான் என்று ஒரு தரம் சொன்னால் போதுமே. அதுபோல் ஒருதரம் நம: என்று சொன்னாலும் சாஸ்த்ரம் விதிக்கிற எண்ணிக்கையில் அது செய்யப்படுவதாக எளிதில் அறியலாம். அங்ஙனமிருக்க நமோ நம: என்றிருதரமும் மேலே பலகாலும் ஏன் அருளினரென்னில், அன்பின் மிகுதியால் பேசும்போது ஆதரம் தோற்ற இருதரம் சொல்லுவது வழக்கு. முக்தர்கள் மனோவாக்காயங்களாலே எப்போதுமே நம: என்றிருப்பர். அன்றி 'த்விதா ப்ரதக்ஷிணம் குர்யாத் ப்ரணாமஞ்ச ததா விதம். நைக த்ரி பஞ்ச ஸப்தாக்யகணநாவிஷமஞ்ச யத் யதஸ் ஸமோ ஹி பகவாந் தேவஸ் ஸர்வஸ்ய வை ஹரி:' என்ற பாரமேச்வரஸம்ஹிதை (6. 416) முதலான ப்ரமாணங்களாலே ஒற்றையாகப் ப்ரணாமமோ ப்ரதக்ஷிணமோ தகாது, இரட்டையாக இருக்க வேண்டுமென்று அறுதியிடப்பட்டதால் இரண்டுதரம் செய்யுமதை மட்டும் சொல்லியும் நம: என்பது முடிவுறும், அவ்வாறின்றி இரட்டை யிரட்டையாகப் பலகால் செய்யப்படுகிறதென்று தோற்றவும் நமோ நம என்றதாம். மேலும், சாஸ்த்ரங்களில் எத்தனை விதமான ப்ரணாமங்கள் சொல்லப்பட்டன, அந்த தண்ட ப்ரணாமம் அஷ்டாங்கப்ரணாமம் ஸக்ருத ப்ரணாமம் போன்றவை எல்லாம் சேர்ந்ததும், மானஸம் வாசிகம் காயிகம் எல்லாமும் உனக்கென்றும் திருவுளமாம்.

அனந்த மஹாவிபூதயே. லீலாவிபூதியும் போகவிபூதியும் அழிவற்றன. லீலாவிபூதியில் ப்ரக்ருதிக்கு அழிவே யில்லை. ப்ரபஞ்சம் அழிந்தாலும் மீண்டும் மீண்டும் வெள்ளம் போல் வந்துகொண்டேயிருக்கும். லீலாவிபூதியில் ப்ரக்ருதிக்கு மேலே பரமபதமிருப்பதால் அங்கே ப்ரக்ருதி இராமையால் மேலெல்லையுண்டு. கீழெல்லை முதலியன இல்லையாகையால் அனந்தமாகும். பரமபதத்திலுள்ள உலகம் முதலானவை எப்போதும்

அழிவதில்லை. அது ப்ரக்ருதியுள்ளவிடத்திலே யில்லையாகையால் கீழெல்லை யுண்டு, மேலெல்லை முதலியன இல்லை. ஸம்ஸாரத்தினின்று, தானே ஒரு சமயம் விடுபடுவதில்லை யாகையாலே நீ உனது தயையினுல் இதனின்று விடுவித்து மேலே சேர்க்கவேணுமென்று விரும்பி இவ்வாறு கூறினது. (21)

உமக்கு ஜ்ஞான வைராக்யங்கள் ஏற்பட்டிருந்தாலும் சாஸ்த்திரத்தில் விதிக்கப்பட்ட விரகொன்றை யனுஷ்டிக்காதாரிடத்தில் எனது தயையை மட்டும் உபயோகித்து மோக்ஷ மளிப்பது கூடாததாமென்ருன் எம்பெருமான். அதன்மேல் ஆராய்ந்து, தமக்கு பக்தி யோகத்திலும், அதற்கு முன் ஜீவாத்மாவைக் காணச் செய்ய வேண்டும் ஞானயோக கர்ம யோகங்களிலும் அதிகாரமில்லையே யென்று வருந்தி அதையே காரணமாக்கி ப்ரபத்தி யென்னும் உபாயத்தை யனுஷ்டிக்கிருர்.

**22. நதர்மநிஷ்ட்டோऽஸ்மி' நசாத்மவேதீ ந பக்திமாந் த்வச்சரணுரவிந்தே.**
**அகிஞ்சநோऽநந்யகதிச் சரண்ய த்வத்பாதமூலம் சரணம் ப்ரபத்யே.**

சரண்ய—சரணமாவதில் தகுதியுடையவனே! நான், தர்மநிஷ்ட: நஅஸ்மி—கர்ம யோகம் செய்யவல்லனல்லேன். ஆத்மவேதீ ச நஅஸ்மி—ஞானயோகம் செய்யவும் வல்லனல்லேன். த்வத் சரணுரவிந்தே-உனது திருவடித் தாமரையில், பக்திமாந் ந அஸ்மி-பக்தியோகம் செய்கிறவனல்லேன். ஆகையால் அகிஞ்சந:—ஓர் உபாயமுமற்றவனுய், அநந்யகதி:—வேறு பலனில் நோக்கற்றவனுமாய், த்வத்பாத மூலம்—உனது திருவடி யடியை, சரணம்—உபாயமாக, ப்ரபத்யே—அத்யவஸிக்கிறேன், திடமாகக் கொண்டேன்.

முதலில் ஸாத்விகத்யாகத்துடன் கீதையில் குறித்த தேவார்ச்சனை முதலிய பலவகை கர்மயோகங்களில் ஒன்றைச் செய்ய வேண்டும். வெகுகாலம் அதைச் செய்து மனம் சுத்தமானுல், ஜீவாத்ம தத்துவத்தைச் சிந்தனை செய்வதென்கிற ஞானயோகம் செய்ய வேண்டும். அதனுல் ஜீவனை ஸாக்ஷாத்காரம் செய்துவிட்டால் அதன்மேல் உன்னிடம் பக்தியோகம் செய்ய இழிவதாம். உனது திருவடியைப் பெற விரும்புவார்க்கு இது முறை. இவற்றில் ஒன்றும் செய்யவல்லேனல்லேனுகையால் என்னிடம் அவ்வுபாயத்தை எதிர் பார்க்கலாகாது. அதற்காகப் பலனில் ஆசை விடாது. வேறு பலனை ஒருக்காலும் விரும்ப மாட்டேன். அதில் நோக்கிருந்தால், வேறு தேவதையினிடம் போகலாமே என்ரெருக்கால் கேட்கலாம். அதுவுமில்லை. எனவே உனது திருவடியின் உட்புறத்தை சரணமாகப் பற்று கிறேன். வெளிப்புறம் பற்றி வேறு பலன் பெற்றுப்போகேன். உன் திருவடியின் உட்புறத் தில் மறைந்தாலல்லது என்னை வல்வினையாம் யமகிங்கரர்கள் விடமாட்டார்களென்றபடி.

உலகில் கர்மயோகம் செய்கிறவர், ஏற்கனவே அது நிறைவேறினதால் ஞானயோகம் செய்கின்றவர், அதுவும் பூர்த்தியாகவே பக்தியோகம் செய்கின்றவர் என மூன்றுவிதமாக முமுக்ஷுக்கள் இருப்பார்கள். அவர்களில் நான் சேரவில்லை யென்றார் பூர்வார்த்தத்தில். இப்போது நான் கர்மயோகம் செய்யாவிட்டாலும் ஒருக்கால் முன் ஜன்மங்களில் அதைச் செய்திருந்து அதன் பயனாக ஞானயோகமே செய்யவாகு மென்று என்னை நினைக்கலாகாது. அவ்வாறே ஜ்ஞானயோகம் இப்போது செய்யாவிட்டாலும் ஏற்கனவே அதன் பலன் பெற்ற வனாய் பக்தியோகாதிகாரி என்னவுமொண்ணாது என்றறிவிப்பதில் நோக்கு. இல்லையேல் பக்தியோகம் ஞானயோகம் கர்மயோகம் என்ற முறையில் கழித்திருக்க வேணும்.

குளித்து மூன்றனலை யோம்பும் குறிகொள் அந்தணமை தன்னை
ஒளித்திட்டேன் என்கணில்லை நின்கணும் பத்தனல்லேன்' (25)

என்ற திருமாலைப் பாசுரத்திற்கு இசைந்ததாம் இது. 'ந சாத்மவேதீ' என்ற சகாரமானது கர்மயோகமும் ஞானயோகமும் சேர்ந்து ஒரு பலனை—அதாவது ஜீவாத்மாவின் காட்சியை யளிக்கு மென்றறிவிக்கும்.

அன்றி, கர்மயோகம் என்கிற முதற்படியை நன்றாகச் செய்ய என்னாலாகாதென்றே பூர்வார்த்தத்திற் பணித்ததாம். கர்மயோகம் ஞானாகாரமாக ஆத்ம சிந்தனையோடு சேர்த்து தானே செய்யப்பட வேண்டும். அந்த ஞானமில்லை யென்பதற்காக நசாதமவேதீ என்றா ரென்னலாமே. பக்தியோகத்தில் பரமாத்ம ஸ்வருப த்யானம் செய்ய வேண்டுமென்பது நிற்க; கர்மயோகாதிகள் செய்கின்றவனும் பகவத்யோகம் செய்யாமல் ஜீவனைக் காண மாட் டிலன். அவற்றிற்கு இந்த்ரிய ஜயம் வேண்டுமே. அந்த ஜயம் பெறுதல் உனது திவ்யமங்கள விக்ரஹத்தை த்யானம் செய்தால்தான். 'தாநி ஸர்வாணி ஸம்யம்ய யுக்த ஆஸீத மத்பர:' என்றும் உபதேசிக்கவில்லையோ. நான் ந பக்திமாந் த்வச்சரணாரவிந்தே. உன் திருவடியைக் கூட—உன் திருமேனியைக்கூட அன்போடு த்யானம் செய்ய சக்தனல்லே னென்றபடி. இனி, நபக்திமாந், நாத்மவேதீ, நதர்மநிஷ்ட்ட: என்று மாற்றி அந்வயமுமாம். முன் கருத்துக்களையும் தெரிவிப்பதற்காக அவ்வாறு இயற்ற வில்லை.

செய்யாவிட்டாலும் செய்ய இழியலாமே என்றால் அதற்கு முதலுமில்லை யென்கிறார் அகிஞ்சந: என்று. சரணாகதி செய்பவனுக்கு முக்கியமாக வேண்டுவது ஆகிஞ்சந்யமும் அநந்யகதிகத்வமும். அதன்மேல் ஐந்து அங்கங்களுடன் பரந்யாஸத்தை முறைபடி செய்ய வேண்டும். அவ்வாறு செய்கிறேனென்றதாயிற்று.

ஜ்ஞானயோகம்போல் கர்மயோகமும் ஸ்வதந்த்ரமாக ஜீவாத்மாவைக் காண உபாயமா மாகையாலே அதையும் சேர்த்தது. காமயோகாதிகளைமட்டும் கூறினால், ஜீவாத்மானுபவத்

திற்காகவே சரணுகதி என்று நினைக்கவாம். பக்தியைமட்டும் பேசினுல் வேறு பலனுக்காக வும் சரணுகதியாகலாமென்று நினைக்கலாகும். எல்லாம் சேர்த்துத் கழித்தால் மோக்ஷம் விரும்பியே சரணுகதி செய்கிறது தெரியலாகுமென்று மூன்றையும் மொழிந்ததாம்.

மேலும் ஒரு சூக்ஷ்மம் கவனிக்கவேண்டும் — ப்ரவ்ருத்திதர்மம், நிவ்ருத்திதர்மம் என தர்மம் இரண்டு வகையாகும். வேறு பலனுக்கான தர்மமெல்லாம் ப்ரவ்ருத்தி தர்மம். மோக்ஷத்திற்கான தர்மம் நிவ்ருத்தி தர்மம். அந்த மோக்ஷம் பரமாத்மாவைப் போல் ஜீவாத்மா வையும் இயற்கையான ஸ்வரூபத்தின் ஆவிர்பாவமென்ற தோற்றத்துடன் பெறவேண்டி யிருப்பதால் 'தத்க்ரது' ந்யாயத்தாலே ஜீவாத்மத்யானம் அவசியமாகும். அதற்காகக் கர்ம யோகமும் ஞானயோகமும் விதிக்கப்பட்டிருப்பதால் கர்மயோகம் தொடங்கும்போதே வேறு பலனில் நோக்கின்றி ஸாத்துவிகத்யாகத்துடன் தொடங்குவார்கள். ஆகையால்தான் எல் லாம் நிவ்ருத்தி தர்மமாகும். அதனுல்தான் லக்ஷ்மீதந்த்ரம் முதலானவற்றில் கர்மயோகம் முதலாக மூன்று உபாயங்களைக் காண்பித்து 'உபாயச்'ச சதுர்த்தஸ்தே ப்ரோக்த: சீக்ரபலப்ரத:. பூர்வே த்ரய உபாயாஸ்தே பவேயு ரமநோஹரா:. சதுர்த்தமாச்சர்யந் ஏவம் உபாயம் சரணுச்ரயம்' என்றெல்லாம் மூன்றையும் கழித்து நான்காவது உபாயமாக ப்ரபத்தியைப் பணித்தது. அதனைப் பின்பற்றியே கீதையும் மூன்றை முதலிற் கூறிற்று. நம் மாழ்வாரும், ''நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன்'' என்று முதலிரண்டையுங்கூட கழித்தார். ஆகவே தன் ஸ்வரூபத்தோடு சேர்த்து பகவத்ப்ராப்தி வேண்டியிருப்பதால் அதற்காக மூன்றையும் கழித்து ப்ரபத்தியை அதற்காக இவ்வாறு அனுஷ்டித்தார். அஞ்சலி ப்ரணமம் முதலானவற்றைப் போலல்லாமல் கர்மயோகாதிகளுக்குள்ள வாசி இது. (22)

இனி ஏழு ச்லோகங்களால் சரணுகதியில் இழிந்த தமக்குள்ள உறுதியைத் தெரிவித்துக் கொள்ளுகிருர். மோக்ஷத்தை எதற்கு விரும்பவேண்டும், தாமதித்தாலென்ன, வேறு யாரை யாவது கேட்டும் பெறலாமே, உபாயமும் சிறிதாயிருக்கிறதே என்ற கேள்விகளுக்குப் பரி ஹாரங்கள் இவற்ருலாம்.

**23. ந நிந்திதம்'கர்ம'தத்'அஸ்தி'லோகே'ஸஹஸ்ரசோ யந்நமயாவ்யதாயி.**
**ஸோஹம் விபாகாவஸரே முகுந்த க்ரந்தாமி'ஸம்ப்ரத்யகதிஸ் த்வாக்ரே.**

யத்-எந்த பாபமானது, ஸஹஸ்ரச: - ஆயிரமாயிரம்தரமாக, மயா-என்னுல், ந'வ்யதாயி- செய்யப்படவில்லையோ, தத்-அந்த, நிந்திதம் கர்ம - தீவினையானது, லோகே - உலகிலும் சாஸ்திரத்திலும் எங்கும், ந அஸ்தி-இல்லை. ஸ:அஹம்-இவ்வளவு பாபியான நான், ஸம் ப்ரதி-இப்போது, விபாகாவஸரே-அவை பலிக்கும் சமயத்தில், துக்கானுபவம் நேர்ந்தபோது, அகதி:-பரிஹரிக்க வழியற்றவனுய், தவ அக்ரே-உன் எதிரில், க்ரந்தாமி-கதறுகிறேன்.

நான் செய்யாத பாபம் ஒன்றை உலகத்தில் எங்கும் காணமுடியாது. உலகத்தில் ப்ரஸித்தமாகாத பாபங்களும் பல வேத சாஸ்திரத்திலே நீ கூறியிருக்கலாம். அவற்றையும் அநாதிஜந்ம பரம்பரையில் நான் செய்தேயிருக்கிறேனுகையால் பலவாயிரம்தரமாக நான் செய்யாத பாபம் வேதத்திலும் கிடையாது. ஒருக்கால் வேதத்திலும் விடப்பட்டு நீ மனத்தில்மட்டும் வைத்திருக்கும் பாபமேதேனுமுண்டானுலும், அதையும் நான் செய்தவனே. ஆனுலென். இவ்வளவு நாள்போல் இப்போதும் இருக்கலாமே என்பதற்கில்லை. இப்போது அவை பலிக்கப் புறப்பட்டன. ப்ராயச்சித்தங்களைப் பண்ணு என்னவேண்டாம். எத்தனை ப்ராயச்சித்தங்களை எவ்வளவு நாளில் பண்ணுவது? ஒன்றுக்குச் செய்யும்போது மற்ரென்று பலன் விளைவிக்கிறதே. எனக்கு ஒன்றுமே செய்ய அறிவும் சக்தியுமில்லையே. கஷ்டப்படுவதால்தான் கதறுகிறேன். நான் கதறுவது உனக்குத் தெரியாதென்பதற்கில்லை. உன் எதிரிலேயே கதறுகிறேன். வெகுதூரத்தில் விளங்கின திருமேனியோடு உன்னை யழைத்து கண்ணு என்று கதறினபோதும் த்ரௌபதிக்கு உதவினுய். மோக்ஷமளிக்க எங்கும் பரவின உன்னை முகுந்த என்று அழைத்து உன் எதிரிலேயே கதறுகிறேன். மோக்ஷம் அளிப்பதாவது எல்லா வினைகளினின்றும் விடுவிப்பதே. அதில் வல்லவனுன உன்னிடமே கதறும்போது, நான் என்ன செய்வேன் என்னவொண்ணுது. நான் இங்கும் ஸுகமாயிருந்துகொண்டு, இதற்காட்டிலும் பெரும் ஸுகமென்கிருர்களே பரமபதத்தை, அங்குச் செல்வோமென்ற நோக்கத்துடன் சரணுகதி செய்வதாகில், நீ தாமதிக்கலாம். இப்போது தாமதிக்கலாகாது. இப்படி நான் கதறுகிறேனுகையால் அனுதாபம் விஞ்சினது கண்கூடு. சரணுகதியே இனி ஸர்வ பாப ப்ராயச்சித்தம். அதனுல் அதைச் செய்தேன் (23)

அநாதியான ஸம்ஸாரத்திலே எண்ணிறந்த பாபங்களைச் செய்ததுபோல் புண்ணியங்களையும் செய்திருக்கிறீர். அவையெல்லாம் அனுபவிக்கப்பெற்றன என்னவொண்ணுது. துக்கமே அனுபவிப்பது தாங்காமல் கதற வேண்டா. ஸுகம் பல அளிக்க வழி பார்க்கிறேன். மோக்ஷத்திற்கு விரையவேண்டா என்ருன். அப்போது அறிவிக்கிருர்:—

24. நிமஜ்ஜதோऽநந்த பவார்ணவாந்த: சிராய'மேகூல மிவாஸிலப்த்த:
த்வயாபி லப்த்தம் பகவந் இதாநீம் அநுத்தமம்'பாத்ர மிதம் 'தயாயா:.

அநந்த - ஸர்வவ்யாபியாய் அளவற்றவனே! பவ அர்ணவ - ஸம்ஸாரக்கடலின், அந்த:-உள்ளே, நிமஜ்ஜத:-மூழ்கிக்கொண்டிருக்கிற, மே-எனக்கு, கூலம் இவ-கரைபோல, சிராய-எண்ணிறந்த காலத்திற்குப் பிறகு, லப்த: அஸி-அடையப்பட்டிருக்கிருய். பகவந்-கல்யாண குணபூர்ணனே, த்வயா அபி-உன்னுலும், இதாநீம்-இவ்வளவு காலம் கழித்து இப்போதே, தயாயா:-உனது கிருபைக்கு-அநுத்தமம் பாத்ரம்-இதற்கு மேலான பாத்ரம் வேறில்லை யென்னப்படும் பாத்ரமான, இதம்-இது (நான் என்ற வஸ்து) லப்தம்-அடையப்பட்டிருக்கிறது.

நான் கடலினுள்ளே மூழ்கிக்கொண்டிருக்கிறேன். கரையோரத்தில் இருப்பவனுக்குக் கரை கிடைக்கலாம்'; நடுவிலிருப்பவனுக்கு கரை பெறப்படா. சிற்சில ஸமயங்களில் கிணற்றில் மூழ்கி உள்ளேயே போம்போது உள்ளே கரை அகப்படுவதுண்டு. கடலின்இடையே அது ஏது? ஆனல் வேறு கரைகளைப் போலன்றி நீ அநந்தனுய் எங்கும் இருப்பதாலே உள்ளே மூழ்கும்போதும் கரை எனக்குக் கிடைத்தது. நீரின் நடுவே தடுமாடுகின்றவனுக்குக் கரை போய் சேரும்படி ஏதேனும் கட்டை, ஓடம் கப்பல்போன்றன கிடைக்கலாம். கரையே அகப்படு மென்னலாகாது. உபாயமும் உபேயமும் ஒன்ருனபடியாலே கரையே கிடைத்தது இப்போது. ஏதேனும் ஆபாஸ ஸுகங்களை யளித்து இக்கடலிலேயே மூழ்கப் பண்ண வேண்டாம். ஸுகானுபவமென்ருலும் அதுவும் கடலில் முழுக்கே யாகும். அனுதி ஸம்ஸாரத்தில் இப்போதாவது கரை கிடைத்ததற்குக் காரணம் எனக்கு துயரம் தாங்கமாட்டாமல் கதறும் நிலையினுல்தான். ஸுகமே யளிப்பதானுல் மீண்டும் கரையை விட்டு அப்புறமே செல்வேன். உன்னை மறப்பேன். மறுபடி கிடைப்பது எப்போதென்பது தெரியாது. நீரில் இருப்பவனுக்கு வலது பக்கம் கரை அருகில் நீண்டு வந்தும், இடதுபக்கம் ஓடம் ஒன்றுமிருந்தால் அவன் ஓடத்தில் ஏறியுட்காருவானு, கரையேறுவானு. அதுபோல் நீ வருந்துமெனக்குச் சிலஸுகங்களை யளித்து ஸமாதானம் செய்தால் அதைப் பெறுவேனு, நீயே ஆராயலாம். நிற்க, நீயும் நானும் இருவரும் முயன்று வருகிருேம். 'சன்மசன்மாந்தரம் காத்து' என்றபடி இத்தனை சன்மங்களாக என்னைப் பார்த்துவந்தாய். நீயே எத்தனையோ சன்மங்களையும் என்னைப் பெற எடுத்தாய். இன்று நான் சிக்குண்டேன். அகப்பட்டபோதும் என்னை விட்டால் மீண்டும் நீ எவ்வளவு பிரயாசைப்படவேண்டும். இதற்குமேல் உயர்ந்த வஸ்து உனக்கு அகப்படுமா? உனக்கு குணம் அனந்தம். எனக்குக் குற்றம் அனந்தம். அதனுல் அனந்த துக்கக்கடலில் மூழ்கின என்னைக் காத்தால் மிக்க தயையுடையன் என்ற பெயர் நிற்கும். தயை யென்ற குணத்திற்குக் குறைவு ஏற்படுமாகில் மற்ற குணங்கள் குணங்களாகாமல் தோஷமாய்விடும். தோஷம் சிறிதுமின்றி குணங்கள் நிறைந்தவனென்றல்லவோ உன்னை பகவான் என்கிறது. ஆக நீ என்னை அடைந்தால் உன் தயையையும் குணங்களையும் உன்னையுமே நீ அடைந்ததாம். ஆக நான் செய்யும் சரணுகதி எதற்காக என்ருல், உனக்கு லாபத்திற்காகவே. ஆகையால் நான் வேண்டுகிறபடியே அருளவேணுமென்றபடி. (அனந்தமான'பவமென்று' சேர்ப்பதுமுண்டு). (24)

அவனுடைய லாபத்திற்காகவும் அவன் உதவவேண்டும் மென்ருர். உதவாமற் போனுல் அவனுக்கு அனிஷ்டம் அதிகம் என்றும் அறிவிக்கிருர். 'உமது கஷ்டங்களையெல்லாம் விலக்கி நான் அருள் செய்தால் அவ்வளவு கஷ்டங்கள் நீங்கியதற்கு நன்றிபாராட்ட வேண்டியது நியாயமாயிருக்க, எனது நன்மைக்காக நான் காக்கவேண்டு மென்னலாமோ' என்ருன் எம்பெருமான். அதற்கும் உத்தரம் அருளிச் செய்கிருர்.

25. அபூதபூர்வம்'மம'பாவி'கிம்'வா'ஸர்வம் ஸஹே'மே ஸஹஜம்ஹிதுக்கம்.
கிந் து த்வதக்ரே சரணுகதாநாம்'பராபவோ நாத'ந'தேsநுருப:

மம-எனக்கு, கிம்வா–எத்தகைய'துக்கம்தான், அபூத பூர்வம்-இதுவரையில் அனுபவிக்கப் பட்டதுபோலன்றி, பாவி-வரப்போகிறது. ஸர்வம் ஸஹே-எல்லாம் பொறுப்பேன். துக்கம்-துக்கமென்பது, மே ஸஹஜம்ஹி—எனக்கு உடன்பிறந்ததாயிற்றே. கிந்து-மற்றென் எனில், த்வதக்ரே - உன் எதிரில், சரணுகதாநாம் – சரணுகதி செய்தவர்களுக்கு, த்வதக்ரே-உன் எதிரிலேயே, பராபவ: - சரணுகதியின் பலனின்றி வினைகளால் பாதிக்கப்பட்டிருக்கை, தே-புகழே வடிவமான உனக்கு, நஅநுரூப: - தகுந்ததாகாது.

சரணுகதனுன என்னை நீ விடுகிருய்போலும். இவ்வாறு எத்தனையோ சரணுகதர்களை நான் விட்டிருக்கிறேன். அதனுலும் எவ்வளவோ துக்கங்களை யனுபவித்திருக்கிறேன். அந்த அந்த அபகீர்த்தியின் கொடுமை எனக்கு நன்ருகத் தெரியும். நீ இப்போது உபேக்ஷித்தால் முன்போல் வல்வினைகள் என்னை நலியப்போகின்றன. உன் எதிரிலே சரணுகதி செய்தும் உன் எதிரிலேயே முன்போல் பாதிக்கப்பட்டுமிருப்பது உனக்குப் பழியை விளைக்குமாகையால் தகாது, உனக்கு அதனுல் துக்கமில்லையென்ருலும் சாஸ்த்ரம் பொய்யாகும். விதிநிஷேதங்களிலே விச்வாஸம் போம். ஜீவர்களுக்கு மோக்ஷம் தர நினைத்து உலக ஸ்ருஷ்டி என்பதும் பொய்யாம். என்னை ஒருவனைவிட்டால் இவ்வளவு கேடா என்ன வேண்டா. நிஷ்பக்ஷபாதியான நீ என்னைமட்டும் விடுவதேன். சரணுகதர்களை யெல்லோரையுமே விடவேண்டியதாம். நான் என்னேடு என் ஜனங்களையும் சேர்த்துக்கொண்டு சரணுகதி செய்தேனுகையால் என்னையே விடும்போது அவர்களை விடுவது நிச்சயம். இப்படி என்னை யாச்ரயித்த பரம்பரையில் அகப்பட்ட எல்லோருக்கும் இதே நிலை. ஆகையால் உனக்காகவே காத்தருளவேணும். (25)

எம்பெருமான் சொல்லுகிருன்-நான் எல்லோரையும் விடவில்லையே. கர்மயோகாதிகளைச் செய்கிறவர்களுக்கு மேன்மேல் யோகம் நிறைவேற அருள்புரிகிறேன். அதற்காக சரணுகதி செய்தால் அந்த சரணுகதிக்கும் பலன் அளிக்கிறேன். தர்மார்த்தகாமங்களில் எதைக் கேட்டாலும் அளிக்கிறேன். அவர்களுக்கு அருள்புரிவதற்கே காலம் போராமலிருக்க மோக்ஷத்திற்காகவே என்று சரணுகதி செய்யும் உம்மை விடுவதால் குறையில்லை. நீரும் படிப்படியாகப் பாவங்களைப் போக்கி பக்தியிலிழிந்து வரலாம் என்றவாறு. ப்ரபத்தி பலிக்குமென பூரண நம்பிக்கையும் கார்ப்பண்யத்தில் உறுதியுமிருக்கிறதா என்று பரீட்சைக்காகச் சொன்ன வார்த்தை இது. இதற்கு உத்தரமாக மேலே ச்லோகம்—

26. நிராஸகஸ்யாபி ந தாவத் உத்ஸஹேமஹேச ஹாதும் தவ'பாதபங்கஜம்,
ருஷா நிரஸ்தோsபி சிசுஸ் ஸ்தநந்தயோ ந ஜாது மாதுச்
சரணௌ ஜிஹாஸதி.

ஹே மஹேச-ஈச்வரர்களுக்கும் ஈச்வரனே !-நிராஸகஸ்ய அபி, நீ அப்பால் தள்ளு கிறவனானாலும், தவ-உனது, பாதபங்கஜம்-திருவடித்தாமரையை, ஹாதும்-விடுவதற்கு, ந தாவத் உத்ஸஹே-உத்தேசிக்கவேமாட்டிலேன். ஸ்தநந்தய:...முலைப்பால் குடிக்கும், சிசு-குழந்தையானது, ருஷா - தாயால்கோபத்தால், நிரஸ்த: அபி - தள்ளப்பட்டாலும், மாது: - தாயின், சரணௌ - தாள்களை ஜாது, ஒருபொழுதும். நஜிஹாஸதி - விடவிரும்பாதே.

தாய் தனக்குப் பல வேலைகள் இருப்பதாலோ, பால்கொடுத்து ஸ்தனத்தைத் தளரச் செய்ய விரும்பாமலோ எந்த காரணத்தாலாகிலும் கோபித்து உதைத்துத் தள்ளினாலும், குழந்தை உதைக்கும் அவள் காலையே பிடித்திருக்கும். விட நினைப்பதேயில்லை. அந்த முலைப்பால் தவிர வேறொன்றும் அதற்கு ஆஹாரமாகிறதில்லை. ஆரோக்யமுமில்லை. வேறு உண்ணவும் முடியாது. விரும்பாது. அதுபோல் உனது திருவடியொன்றே போக்யமாய் ஹிதமாகக்கொண்ட நான் நீ தள்ளினாலும் விடேன். வேறொன்றில் விருப்பமுமில்லை. நல்லதுமல்ல. கொள்ளவும் முடியாது. தவிர, முதலில் உதைத்தாலும் தாய் உடனே பால் கொடுக்காமல் இருக்கமுடியாது. அப்படியே நீயுமென்று நான் மஹாவிச்வாஸத்தோடிருப்பேன். 'அரிசினத்தாலீன்ற தாயகற்றிடினும் மற்று அவள்தன் அருள் நினைந்தேயழுங் குழவியதுவே போன்றிருந்தேனே' என்று குலசேகராழ்வார் அருளிய உவமையானது மேலே அவரே கூறும் 'கொண்டான், மருத்துவன், வங்கம், கதிரோன், மாமுகில், தொடுகடல், என்ற திருஷ்டாந்தங்களைவிடச் சிறந்தது. குழவிக்குப் பால்கொடாமலிருக்கும் தாய்க்கு முலையும் மனமும் உடனே நொந்தொழியுமென்ற சிறப்பு இங்கே. எம்பெருமான்நிலையும் அவ்வண்ணமே. முலைப்பால் குடித்துத் தேறின குழந்தைக்குப் பின்னே மற்ற ஆஹாரங்கள்போலே சரணாகதி செய்து மோக்ஷத்தில் ஸ்வரூபம் தேறினபிறகு அங்கே பரபக்தி பரஞ்ஞானபரமபக்திகள். இப்போது அதற்கு சக்தி யொருபோதும் வாராது. அக் குழவிநிலையே இங்கு எனக்கு என்றபடி. (26)

பக்தி முதலானவற்றைச் செய்யாமல் சரணாகதியே செய்வதானாலும் எதற்காக இப் பிறவியிலேயே மோக்ஷம் வேண்டுவது. அடுத்த பிறவியில் அற்புதமாய் திவ்யமான ஸ்த்தானங்களிலே நிறுத்திப் பிறகு அழைத்துக்கொள்ளுகிறேன் என்பானோ என்றாராய்ந்து அப் பலன்கள் ஆபாஸங்களென்கிறார். —

27. தவாம்ருதஸ்யந்திநி பாதபங்கஜே நிவேசிதாத்மா கதமந்யதிச்சதி.
ஸ்த்திதேऽரவிந்தே மகரந்தநிர்ப்பரே மதுவ்ரதோ நேக்ஷுரகம் ஹி வீக்ஷதே.

தவ-உனது, அம்ருதஸ்யந்திநி-அமுதைப் பெருக்குகின்ற, பாதபங்கஜே-திருவடித் தாமரையிலே, நிவேசிதாத்மா - வைக்கப்பட்ட புத்தியுடையவன், எவனாகிலும், கதம்-எங்ஙனே, அந்யத்-வேறொன்றை, இச்சதி-விரும்புவான் ? விரும்பான். மகரந்தநிர்ப்பரே-தேன் நிறைந்த, அரவிந்த-தாமரைப்பூ, ஸ்த்திதே-அருகில் இருக்கும்போது, மதுவ்ரத:-தேன் அருந்தும் வண்டு, இக்ஷுரகம்-நீர்முள்ளிப்பூவை, ந ஹி வீக்ஷதே-நோக்காதே.

உன் திருவடி கமலமாகும். ஆகையால் அமுது இல்லையென்ன வொண்ணுது. அதை யளிப்பதே அதற்கு சீலம். நான் இவ்வளவு நாள் போலன்றி அதில் புத்தியை வைத்து விட்டேன். நீயே என் புத்தியை அங்கே வைக்கச் செய்து விட்டாய். இந்நிலை பெற்ற எவன்தான் திருவடியை விட்டு வேறென்றை விரும்புவான். அம்ருதத்தை விட்டு, ம்ருதத்தை எவன் விரும்புவான்? தேன் அருந்தும் வண்டு தாமரைப்பூ இருக்கும்போது நீர் முள்ளியை நோக்குமோ. தாமரைப்பூ எப்போதுமே இருக்குமே. இருக்கும்போதுஎன்பதென் என்னவேண்டா. தேனுடன் அது வண்டு பெறும்படி இருக்கும்போது என்றே கருதிக் கூறினேன். நீர்முள்ளிப் பூவைக் காணுதென்பதென். அருகில் இருந்தால் கண் தானுக விழுந்தால் காணுமலிருக்க முடியுமா. கண்டாலும் நோக்காது, அதை விரும்பிக் காணுது. அது போல் இங்குப் பெற்றிருக்கும் பலன்களிலேயே விருப்பமில்லாமலிருக்க, வேறு ஜன்மாந்தர பலங்கள் எதற்கு? அவற்றின் குறைகளை யெல்லாம் அறிவேன் என்றபடி.

நிவேசிதாத்மா-இங்கே கர்மதாரயம் பஹுவ்ரீஹி என்ற ஸமாஸங்கள் இரண்டும் கூடும். ஆனுல் பொதுவாகக் காவ்யங்களில் இத்தகைய ப்ரயோகங்களில் அனேகமாக பஹுவ்ரீஹியைத்தான் கொள்வார்கள். இல்லையேல் பிரித்தே பதப்ரயோகம் செய்வர். பெரியவாச்சான் பிள்ளை மனஸ்ஸானது என்று உரைத்துவிட்டபடியால் கர்மதாரயத்திலே ஆஸ்த்தை அதிகமாகிறது. தேசிகன்பாஷ்யத்தில் அவஸத்தாபிதபுத்தி: என்ற பாடமே எங்கும் உளது. அவஸ்த்தாபிதா புத்தி: என்ற பாடம் இரு வ்யாக்யானங்களையும் ஒரேவிதமாக்க கல்ப்பிதமென்பர். பெரியவாச்சான்பிள்ளைக்கும் ஆத்மா என்பதற்கு மனஸ்ஸு என்பது பொருள் என அறிவிப்பதிலே நோக்கு. அது கருத்துரை. பஹுவ்ரீஹிதான் லோக ப்ரஸித்தியின்படி இஷ்டமென்பாருமுண்டு. தேசிக பாஷ்யத்திலே 'ததாமி புத்தியோகம்' என்று உதாஹரித்திருக்கிருர். அந்த புத்தி மனமன்று. ஜ்ஞானமே. அதைத்தானே மேலே புத்தி: என்ற சொல்லாலே கொள்ள வேண்டும். அந்த ஞானம் இச்சிக்குமோ. ஆகையால் அவஸ்தாபிதபுத்தி: என்ற பழைய பாடமே சிறக்கும். இச்சிப்பது மனமன்று. ஜீவனே. ஆகையால் 'நிவேசிதாத்மா' பஹுவ்ரீஹியாகலாம். நான் என்பது இங்கு வேண்டா. பொதுவாக தன்னுலும் பகவானுலும் மனம்செலுத்தப்பட்டவர் எல்லோருமே வேறு விரும்பாரென்று இங்கு பொருளாம். கர்மதாரயமே கொண்டாலும் கொள்க. வைக்கப்பட்ட ஜீவனையே ஆத்மபதத்தாலே யாரும் கொள்ளவில்லை, ஸ்ந்திதோ ரவிந்தே என்ற பாடமே பொருந்துமென்பவர் இங்கே ஆத்ம பதத்திற்கு ஜீவனென்ற பொருளையும் கொள்ளலாம். பஹுவ்ரீஹி ஸ்வாரஸ்யத்தால்தான் அப்பொருளை விட்டது. அவஸ்த்தாபிதா என்று பிரித்ததும் அதனுல்தான். (27)

தாய் சேயின் அழுகையைக்கூட எதிர்பாராமல் பால் கொடுப்பாள். நான் அப்படியில்லை. எல்லோருக்குமே தாயானபடியாலே உமக்கு மட்டும் கொடுத்தால் பக்ஷபாதி என்பர். 2, 3 குழந்தைகளைப் பெற்றவள் அழுகிற குழந்தைக்கு முதலில் கொடுக்கிறது போல் எனக்குக் கொடுக்கலாமே; அழுது சரணுகதி செய்கிறேனே என்பீர். இவ்வளவு சிறிய சரணுகதியை குழந்தையின் அழுகைக்கு ஈடாக நான் நினைக்கவில்லை. மோக்ஷமென்ற முலைப்பாலுக்கு பக்திதான் ஈடாம் என்கிருன் பிரான். அதன்மேல் நீ இதற்கும்

கீழான உபாயத்திற்குப் பெரிய பலன்களை யளிக்க நினைத்திருப்பதால் நீ சொல்வது வெறும் பரீக்ஷையே. ப்ரபத்தியானது 'பூயிஷ்டாம் தே நம உக்திம் விதேம' என்றபடி மிகப் பெரிய து—என்ற திருவுளத்துடன், வாயால் கேட்காமல் காயத்தாலாக்கும் அஞ்சலிக்கே மஹிமை அளவற்றதாயிற்றே என்கிறார்—அஞ்சலிக்கும் அன்புக்கும் மஹிமையைச் சொல்வதால் கீழ்ச்செய்த ப்ரபத்தியை உபேக்ஷித்தாரென்று நினைக்க வேண்டா. நம்பிக்கை யூட்டுவதற்கே எல்லாம் சொல்வதாம்.

28. த்வதங்க்ரி முத்திச்ய கதாபி கேநசித் யதாததா॓வாபி ஸக்ருத்க்ருதோஞ்ஜலி:
தததைவ முஷ்ணாத்யசுபாந்யசேஷத: சுபாநி புஷ்ணாதி ந ஜாது ஹீயதே.

த்வத் அங்க்ரிம்—உனது திருவடியை, உத்திச்ய—குறித்து, கேநசித்—எவனுலாவது, கதா அபி—எப்போதாவது, யதாததாவா அபி—எப்படியாவது (செய்யப்பட்டாலும்), ஸக்ருத் க்ருத:-ஒருதரம் கூடசெய்யப்பட்ட, அஞ்சலி:-இருகையும் சேர்த்துக்கூப்பென்பது, ததா ஏவ கூப்பினக்ஷணத்திலேயே, அசுபாநி-தீமைகளை, அசேஷத: - முழுமையும், முஷ்ணாதி - கொள்ளை கொள்கிறது. சுபாநி—மங்களங்களை, அசேஷத:-முழுமையும், புஷ்ணாதி—மேன் மேலோங்கச் செய்கிறது. அவ்வளவேயன்றி, அவ்வஞ்சலியும், ஜாது—ஒரு பொழுதும், நஹீ யதே—சக்திக்குறைவின்றி நிற்கிறது, மேல் என்னவளிக்கலாமென்று.

அஞ்சலியைப் போன்ற மிகச்சிறிய உபாயம் வேறில்லை. அதை யாரும் எப்பொழுதும் செய்யலாம். யார் செய்தாலும் அவனது ஜாதி குணம் முதலியவற்றையோ, செய்த காலத்தையோ, எவ்வாறு செய்தான், எத்தனைதரம் செய்தான் என்பவற்றையோ ஆராயாமல் திருவடியைக் குறித்துச் செய்தானென்பதே காரணமாகத் தானே அவ்வஞ்சலி அவனுக்கும் அவனைச் சார்ந்தாருக்கும் ஓர் அசுபமும் ஒருசமயமும் வராதபடி செய்து சுபங்களையே யளித்துக் கொண்டு. தான் ஒன்றும் செய்யவில்லை யென்று நினைப்பது போல் காத்திருக்கிறது. சில ஸத்கர்மங்கள், செய்பவனிடமுள்ள சில குற்றங்களாலே பலன் அளிக்காமலே யொழியும், அவ்வாறில்லையென ப்ரமாணங்களாலும் அனுபவத்தாலும் தெரியவருகிறது. இப்படியிருக்க அந்த அஞ்ஜலியென்ற காய வ்யாபாரமும் வாசிகம் மானஸமெல்லாமும் அடங்கிய ப்ரபத்தி சிறிய தாகுமோ. இதெல்லாம் வியாஜமே. யாருடைய திருவடிக்கு இந்த அஞ்சலி? உனது உதார குணத்தினால் நீ அளிப்பதை இந்த வ்யாஜத்தின் தலையில் வைத்திருக்கிறாய். வேறு யாராவது பலன் அளிப்பவனாயிருந்தால் உபாயம் எத்தகையதெனப் பார்க்க வேண்டும். நீ அவ்வாறு வைத்துக்கொள்ளவில்லையே என்றபடி. இந்த ச்லோகத்திற்கு விவரணமாக ரஹஸ் யசிகாமணி என்ற ரஹஸ்ய க்ரந்தமொன்றும் ஆசார்யன் அருளியிருப்பது காண்க. (28)

நீர் சொல்வதை ஒருவாறு அங்கீகரிக்கிறேன். அஞ்சலிக்கு மேன்மையுண்டு. ஆனாலும் எல்லாம் அதனாலாமா. ஜ்ஞானத்தினால்தானே மோக்ஷம் பெறவாகும்என்றான்.

அதற்கு அஞ்சலி பண்ணுகிறவன் உனது திருவடியை உத்தேசித்துதானே செய்கிருன். உனது திருவடியை மனத்திற் கொண்டானே. அந்த ஜ்ஞானம் ப்ரபத்திரூபமாகக்கூட நேர்ந்ததே. ஆகையால் அது மோக்ஷம் அளிக்கும். அஞ்சலிகூட வேண்டா. புற்பா முதலாப் புல்லெறும்பாதி ஒன்றின்றியே நற்பால் அயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும் மோக்ஷம் சென்றது அஞ்சலியினலா. அவற்றிற்கெல்லாம்கூட அனுகூலமாவதற்காகவே ஜ்ஞானம் மட்டும் போதுமென்று நீ கொண்டிருக்கிருயென்று கூறுகிருர்—

29. உதீர்ண ஸம்ஸாரதவாசுசுக்ஷணிம் க்ஷணேந நிர்வாப்ய பராஞ்ச நிர்வ்ருதிம்
ப்ரயச்சதி த்வச்சரணருணம்புஜ த்வயாநுராகாம்ருதஸிந்து சீகர:-

த்வத் – உனது, சரண – திருவடியாகிற, அருண அம்புஜ – செந்தாமரையில், அநுராக - அன்பாகிற, அம்ருதஸிந்து - அமுதக்கடலின், சீகர:- ஒரு திவலையேகூட, உதீர்ண - மேலோங்கியுள்ள, ஸம்ஸார-ஸம்ஸாரமாகிற, தவ ஆசுசுக்ஷணிம்-காட்டுத்தீயை, க்ஷணேந- -ஒரே நொடியில், நிர்வாப்ய - அணைத்தொழித்து, பராம் நிர்வ்ருதிம்ச - பேரானந்தத்தையும், ப்ரயச்சதி - அடைவிக்கின்றது.

வெகுநாள் அன்பே வடிவான த்யானத்தில் அமர்ந்திருக்கவேண்டும், அந்த பக்தி தான் மோக்ஷமளிக்குமென்பதில்லை. சிசுபாலன் என்ன செய்தான். வாக்கும் காயமும் விரோதச் செயலில் இழிந்ததோடு நின்றது. ஏதோ முடிவில் ஒருநொடி அன்பு வைத்ததால் தான் மோக்ஷம் பெற்றிருக்க வேண்டும். ப்ராயச்சித்தாநி அசேஷாணி தப:கர்மாத்மகாநி வை. யாநி தேஷாம் அசேஷாணும் க்ருஷ்ணநுஸ்மரணம் பரம். (இப்படி ஓர் அஞ்சலிக்கும் அன்பின் துளிக்கும் மேன்மை போல் நாமஸங்கீர்த்தனமஹிமையும் சிறந்ததாகும்.) இப்படி தம் உறுதியைத் தெரிவித்து, 'சரணகதிக்குப் பலனக ஸம்ஸார நிவிருத்தியை யளிக்கலாம். தாம் செய்த உபாயம் மிகப் பெரிது' என்று அறிவித்தார். இவற்றை யெல்லாம் ஆராய்ந்தால் சரணகதி மிகப் பெரிய விரகாகும். அளிப்பவனுடைய வாத்ஸல்யாதி குணம்தான் பலனுக்கு முக்கிய காரணமாகும். இங்கே க்ரந்தாமி என்றதாலே, 'நானும் கதறுகிறேனென்றேன். சரணகதி செய்த த்ரௌபதிக்குப் பலன் அளித்த பிறகும் நீ, 'கோவிந்தேதி யதாக்ரந்தத்' என்று அவள் கதறியதற்குப் பலன் அளிக்கவில்லையே என்று வருந்தினய். வாசிகத்தின் மேன்மையும் அத்தகையது என்றும் அறிவித்தார்.) (29)

உமக்குப் பாபபலன்களை யனுபவிப்பதில் அச்சம் ஏற்பட்டிருக்கிறது. புண்யபலன் களையும் நீர் பாப பலன்களாக நினைத்துவிட்டீர். இனி உமக்கு இந்த வேதனைகள் இராமலிருக்க மூலப்ரக்ருதியிலே லயித்து எண்ணிறந்த காலம் இருக்க ஏற்பாடு செய்கிறேன். வேதனையற்று நிம்மதியாயிருமென்ருன். அந்த நிம்மதியான தசை வேண்டா. எனக்கு அநிஷ்ட்டநிவ்ருத்தி மட்டிலே நோக்கில்லை. இஷ்டப்ராப்தியும் வேண்டும். நீ செய்யும்

அநிஷ்ட நிவிருத்தி சாச்சவதமுமாகாது. கைவல்யமும் எனக்கு இஷ்டமாகாதென்று தம் இஷ்டத்தை மேலே விரிவாக 17 ச்லோகங்களாலே விண்ணப்பம் செய்கிறார். கர்ம யோகாதிகளோடு சேர்ந்த பக்தியோகத்திற்கு ப்ரதியாகப் பரபத்தி யென்றதாலே மோக்ஷம் எனத் தெளியலாம். ஆயினும் அப் பலன் பெறத் தமக்கு தீவிரமான ஆசை யென வறிவிக்க வாம் இது.

**30. விலாஸவிக்ராந்த பராவராலயம் நமஸ்யதார்த்திக்ஷபணே க்ருதக்ஷணம்.**
**தநம் மதீயம் தவ பாதபங்கஜம் கதா நு ஸாக்ஷாத்கரவாணி சக்ஷுஷா.**

விலாஸ - அநாயஸமாக, விக்ராந்த - அளவிடப்பட்ட, பராவர ஆலயம் - மேற் கீழிடங்களையெல்லாம் உடையதும், நமஸ்யத் - வணங்குகிறவர்களின், ஆர்த்தி - கஷ்டங் களை, க்ஷபணே - போக்குவதில், க்ருதக்ஷணம் - அவகாசம் செய்துகொள்வதும், மதீயம் தனம் - எனது சொத்துமான, தவ - உனது, பாதபங்கஜம் - திருவடித்தாமரையை, கதாநு– எப்போதுதான், ஸாக்ஷாத்கரவாணி - காண்பேனோ.

மூவுலகையும் அனாயாசமாக அளந்து தன் சேர்க்கையை எல்லாவற்றிற்கும் விரும்பிற்று. வணங்குகின்றவனைக் காணும்போது வேறு வியாபாரமின்றி அவகாசம் பெற்று ஆர்த்தியைப் போக்குகிறது. இப்படிப்பட்ட உனது திருவடித்தாமரையே எனக்கு தனம். என் குலதன மென்று முன்னமே கூறினேனே. என்தனம் எனக்குக் கண்ணுற்காண முடியவில்லையே. த்ரிவிக்ரமாவதாரத்தில் எல்லோரும் கண்டு ஸ்பர்சஸுகமும் அனுபவித்தார்கள். நான் இப்போது பிறந்தவன் காண்பதேது. பரபதத்தில்தான் காணவேணும். அதை யனுக்ரஹிக்க வேணும். அங்கே தர்மபூதஜ்ஞானம் மலர்ந்துவிடுவதால் அதுவே கண்ணாகும். இங்கும் காண எனக்கு பாக்யம் உண்டாகில், மிகவும் இஷ்டமே. எனக்காக அவதரிக்கப்போகிறாயா. மனக்கண்ணால் காண ஒருசமயம் தோற்றம் அளிப்பாய். அது போதாது, வெளிக்கண்ணால் காணும்படி எதிரில் உண்மையில் உனது திருமேனி விளங்கவேணுமென்றபடி.

பராவராலயம். மேலான ப்ரமஹ்மாதிகளின் இடங்களும், கீழான மனுஷ்யாதிகளின் இடங்களுமான எல்லா உலகங்களும் அளக்கப்பட்டன என்றதாம். க்ருதக்ஷணம்-க்ஷண மாவது அவகாசம்;–அல்லது இதற்காகவே வேறு வியாபாரங்களைவிட்டு ஓய்வு கொண்டிருக்கை. (30)

தாம் அனுஷ்டித்த ப்ரபத்திக்குத் தாம் விரும்பும் பலன் மோக்ஷம். அதில் முதலிற் பெறப்படுவது ஸாக்ஷாத்காரம். அதைக் கூறின பிறகு அத் திருவடியைத் தலைமேலணிய விருப்பமுள்ளதை யறிவிக்கிறார்—

**31. கதா புந : சங்க ரதாங்க கல்பக த்வஜா ரவிந்தாங்குச வஜ்ர லாஞ்ச்சநம். த்ரிவிக்ரம, த்வச்சரணருணம்புஜம் மதிய மூர்த்தாநம் அலங்கரிஷ்யதி.**

ஹே த்ரிவிக்ரம-மூவடிவைத்தருளினவனே!, சங்க-சங்கென்ன, ரதாங்க-சக்ரமென்ன, த்வஜ—கொடிமரமென்ன, அரவிந்த—தாமரைப்பூ என்ன, அங்குச - மாவட்டியென்ன, வஜ்ர—வஜ்ராயுதமென்ன இவற்றை, லாஞ்ச்சநம்—ரேகைகளாக உடைய, த்வத்—உனது, சரண அருண அம்புஜம் - செந்தாமரைப்பூப் போன்ற திருவடியானது, மதீய-என்னுடைய தான, மூர்த்தாநம்—சென்னியை, கதாபுந:—எப்போதுதான், அலங்கரிஷ்யதி—தன்னால் பூஷணமுள்ளதாக்குமோ.

'யந்மூர்த்நி மே பாதி' என்று கீழே கூறினேன். நினைக்கும்போது உனது திருவடி எனது தலையின்மேல் தோற்றுகிறது. இது போதாது. உண்மையாகவே அலங்கரிக்க வேண்டும். உன் திருவடி பட்டதற்கு அடையாளமாக உன் திருவடியிலுள்ள ரேகைகள் எல்லாம் என் உச்சியில் படியுமாகில், மிகவும் பாக்கியமாகும். செந்தாமரைப் பூப்போன்ற திருவடிக்குத் தலை பாங்காயிராமற் போயின் என்ன செய்வதென்ன வேண்டா. ரேகைகள் படியும்படி என் தலைக்கு ஒருவகையான மென்மையை யளித்து அடி வைத்தருளலாமே. தன்மை பெறுத்தித் தன் தாளிணைக் கீழ் என்னை எப்போது கொள்ளப்போகிருயென்று மிகவும் ஆர்த்தியுடன் அறிவித்தார். (3)

இனி 32-வது ச்லோகம் முதல் 46-வது ச்லோகம் வரையில் ஒரே வாக்யம். 46-வது ச்லோகத்திலுள்ள பவந்தம் (உன்னை) என்கிற விசேஷ்யத்திற்கு இங்குநின்று அடைமொழிகளைக் கூறி இப்படிப்பட்ட உன்னை அடிமை புரிந்து ஆனந்தப்படுத்துவது எப்போதோ என்று அதில் விருப்பத்தை அறிவிக்கிருர் - திருமேனியின் ஒவ்வோர் அங்கத்தின் வர்ணனம் முதலில். 37—38ல் பெரியபிராட்டியை வர்ணித்து அவளோடு திருவனந்தாழ்வான்மேல் சேர்த்தியை 39ல் கூறி, 40ல் அந்த அனந்தாழ்வானுக்கு அடைமொழிகளைக் கூறி, 41ல் பெரிய திருவடியாலும், 42ல் சேனைமுதலியாரென்ற விஷ்வக்ஸேநராலும் 43ல் மற்ற பரிஜனங்களாலும் அடிமை செய்யப் பெற்றிருப்பவனுகவும், 44ல் பெரிய பிராட்டியை உவப்பிப்பதையே தொழிலாகக் கொண்டிருப்பவனுகவும் 45ல் மற்றும் நாம் அடிமை செய்வதற்கான எல்லா அம்சங்களும் பொருந்தியிருப்பவனென்றும் கூறி அவனிடமீடுபடுகிருர். இப்படி பரமபத வைபவம் பேசப்படுகிறது—

32-வதான முதல் ச்லோகத்தில் கீழிருந்து திருமார்புள்பட திருமேனிபாகம் அனுபவிக்கப்படுகிறது. திருவடியை முன்னமே யனுபவித்தாராகையால் மேலே மனம் சென்றது. அங்கே முழங்கால், திருத்தொடை, திருவரையெல்லாம் பீதாம்பரத்தால் மறைக்கப்பட்டிருப்பதால் அவ்வுடையழகை மட்டும் அனுபவித்து மேலே திருமேனிநிறம், திருவுந்தி, திருவிடை, திருமார்பு இவற்றை வர்ணிப்பதாம்.

32. விராஜமாநோஜ்ஜ்வல பீத வாஸஸம் ஸ்மிதாதஸீஸூந ஸமாமலச்சவிம்
நிம்மந நாபிம் தநுமத்யம் உந்நதம் விசால வக்ஷஸ்ஸ்த்தல சோபிலக்ஷணம்.

விராஜமாந—(கரிய திருமேனிச் சேர்த்தியால்) சிறந்து விளங்குகின்றதும், உஜ்ஜ்வல—இயற்கை யொளியுள்ளதுமான, பீதவாஸஸம்—பீதாம்பரம் அணிந்தவனும், ஸ்மித—மலர்ச்சி யுற்ற, அதஸீஸூந—காயாம்பூவுக்கு, ஸம - ஒத்திருக்கும், அமல - தெளிவான, ச்சவிம்—திருமேனியொளியுடையனும், நிமக்ந நாபிம்—ஆழமான கொப்பூழ் உடையனும், தநுமத்யம்—சிறிய இடையுடையனும்-உந்நதம்-(பெருமைக்கிணங்க) உயர்ச்சியுற்றவனும், விசால அகன்றதான, வக்ஷஸ்ஸ்த்தல-திருமார்வின் தலத்தில், சோபி-விளங்கா நிற்கும், லக்ஷணம்-திருமறு உடையனுமான (உன்னை யென்று 46 வது ச்லோகத்தில் சேர்க்க).

திருவடிக்குமேலே திருவயிறு வரையில் திவ்யபீதாம்பரமணிந்திருப்பதால் திருமேனிக்கு ப்ரதியாக அதுவே காணலாகிறது. மேலே திருமேனி யொளி காயாம்பூவின் மலர்ச்சிக்கு ஒத்து வீச அதன் பகைத் தொடையான இதன் ஒளியும் சேர, அற்புதமான தோற்றம், சிறிய இடையின் நடுவில் அழகு வெள்ளத்தின் அற்புதமான சுழி போன்ற கொப்பூழ். நிமிர்ந்த திருமேனியின் உயரம் எல்லாம் மிக்கபோக்யமாம். அகன்ற மார்பில் ஸ்ரீவத்ஸம் என்கிற மறு மனத்தைக் கவர்கின்றது. இத்தகைய உன்னை யனுபவித்துக் கொண்டு ஒழிவில் காலமெல்லாம் உடனுய் மன்னி வழுவிலாவடிமை செய்வது எப்போது வாய்க்குமோ என்றபடி.

நான்கு புஜங்களைத் தனியே வர்ணிக்கிறுர்.—

33. சகாஸதம் ஜ்யாகிணகர்க்கசைச் சுபை: சதுர்பி ராஜாநுவிலம்பிபிர் புஜை:
ப்ரியாவதம்ஸோத்பலகர்ணபூஷண ச்லதாலகாபந்த விமர்தசம்ஸிபி:.

ஜ்யா கிண—நாண்கயிற்றின் அடியினுலான காய்ப்புகளாலே, கர்க்கசை:-கடினமான (மணிக்கட்டையுடையவும்) சுபை:—ஆச்ரிதர்க்கு மங்களம் அளிக்கின்றனவும், ஆஜாநு, முழந்தாள் வரையில், விலம்பிபி:-தொங்குகின்றனவும், ப்ரியா-பிராட்டிமார்களின், அவதம்ஸ உத்பல-செவ்விக்கு அலங்காரமாய் வைத்த கருநைதலென்ன, கர்ணபூஷண-காதணியென்ன, ச்லத-அவிழ்ந்த, அலக ஆபந்த-கூந்தற் கற்றையென்ன, விமர்த்த இவற்றிஞேடு நெருக்குண்டதை, சம்ஸிபி :—இவை பதிந்ததால் தெறிவிக்கின்றனவுமான, சதுர்ப்பி : புஜை :-நான்கு புஜங்களாலே, சகாஸதம் - விளங்குகின்றவனும்-

அவதாரத்தில் போர்புரியும்போது மணிக்கட்டுகளில் நாணையடிப்பதால் தழும்பு ஏறலாம். பரவாஸுதேவரூபத்தில் இதற்கு எங்கே அவகாசம். திருவனந்தாழ்வான்மேல் எப்போதும் வீற்றிருக்குமவனுக்குத் திருப்பள்ளியில் படுக்க ஸமயமே யிராமலிருக்க பிராட்டிமார்களின் புஷ்பாதிகள் திருமேனியில் அழுந்துவதற்கும் இடமில்லையே யென்னில்-பல

அவதாரங்களுக்கும் இதே முதலான மூர்த்தியென அறிவிக்க இவ்வாறு கூறினது. இங்கே அனுபவித்த ரூபங்களின் அமைப்பு அங்கே நினைவுக்கு வர இவற்றையும் அங்கே கலந்தனு பவிப்பதாம். மேலும் முன் கண்டதும் அப்போது காணப்பெறும். அன்றி, மணிக்கட்டிலுள்ள சில அமைப்பைப் பார்க்கும்போது நாண்தழும்போ என்னும்படியாகலாம். உத்தரார்த்தத்தில் கூறியது வீற்றிருக்கும்போதும் அணைவதால் பெறப்படலாம். நான்கு புஜங்கள் இயற்கையில் எம்பெருமானுக் கென்பதற்குப் பல ப்ரமாணங்கள் பாஷ்யத்தில் விசாரிக்கப்பெற்றன. (33)

திருத்தோள்களினின்று திருக்கழுத்துக்குச் சென்று மேலே பொதுவாகத் திருமுகத்தின் அழகிலுமீடுபடுகிறார்—

**34. உதக்ரபீநாம்ஸ விம்பி குண்டலாலகாவளீ பந்துர கம்புகந்தரம்—**
**முகச்ரியா ந்யக்க்ருத பூர்ண நிர்மலாம்ருதாம்சுபிம்பாம்புருஹோஜ்ஜ்வல ச்ரியம்.**

உதக்ரபீந-உயர்ந்தும் பருத்துமிருக்கிற, அம்ஸ-திருத்தோள்களில், விலம்பி-தொங்குகின்ற, குண்டல – மகரகுண்டலங்களென்ன, அலகாவளி - தலைமயிர்ச்சுருள்களென்ன இவைகளால், பந்துர-அழகுற்ற, கம்பு - சங்குபோன்ற (மூன்றுகோடுகள் படிந்த) கந்தரம்-திருக்கழுத்தையுடையனும், முகச்ரியா–திருமுகத்தின் ஒளியாலே, ந்யக்க்ருத–தாழ்த்தப்பட்ட, பூர்ண நிர்மல-நிறைந்தும் களங்கமின்றியுமுள்ள, அம்ருதாம்சுபிம்ப-அமுதக்கிரணனான சந்த்ரனின் உருவமென்ன, அம்புருஹ-தாமரைப்பூவென்ன இவற்றின், ச்ரியம்-அழகையுடையனும். (சந்திரன் தாமரைப்பூ இரண்டின் அழகை அவமதிக்கின்ற திருமுகச் சோதியுடையனும் என்றதாம்).

மகரகுண்டலங்களும் மயிர்ச் சுருளும் தொங்குகின்றபடியாலே திரண்டுயர்ந்த திருத்தோள்களுக்கு ஓர் அழகு. அத்துடன் மூன்று ரேகைகள் கொண்டு வட்டமாய்ச் சங்கம் போன்ற (திவ்யமான த்வனிக்குமிடமான) திருக்கழுத்தின் அழகும் சேரும். அமுதே கிரணங்களான சந்திரன் நிறைந்த வடிவும் களங்கம் சிறிதுமின்றியுமிருந்தால் கூட திருமுகத்திற்கு ஒவ்வாது. தாமரைப்பூவும் அங்ஙனமே. இரண்டும் சேர்ந்தாலும் ஒத்திருக்கவாகா. இப்படி திருமேனியில் அங்கங்களின் அழகு பெற்ற உன்னை யென்றபடி. (34)

பொதுவாக அனுபவித்த திருமுகத்தில் ஒவ்வொரு பாகத்தையும் தனித்தனியனுபவித்து இனியராகிறார்—

**35. ப்ரபுத்த முக்தாம்புஜ சாரு லோசநம் ஸவிப்ரம ப்ரூலதம் உஜ்ஜ்வலாதரம்,**
**சுசிஸ்மிதம் கோமலகண்டம் உந்நஸம் லலாடபர்யந்தவிலம்பிதாலகம்.**

ப்ரபுத்த - மலர்ந்த, முக்த்த - புதிய - அல்லது வ்யாமோஹம் கொண்ட, அம்புஜ - செந்தாமரை போன்று, சாரு - அழகான லோசநம் – திருக்கண்கள் உடையனும், ஸவிப்ரம -

அழகாய் நெறித்த, ப்ருலதம், கொடி போன்ற புருவங்களை யுடையவனும், உஜ்ஜவல - ஒளி வீசுகின்ற, அதரம் - திருப்பவளமுடையனும், சுசி- வெளுத்த சுத்தமான (அருள்புரியவான) ஸ்மிதம் – புன்சிரிப்புற்றவனும், கோமல - மென்மை நிறைந்த - கண்டம் - கபோலங்களை (தாடைகளை) யுடையனும், உந்நஸம் – உயர்ந்த மூக்குள்ளவனும், லலாட—நெற்றியின், பர்யந்த-ஓரத்தில், விலம்பித - தொங்குகின்ற, அலகம்-சுருள்மயிருடையனும்.

புருவத்தைக் கொடிபோன்றதாகக் கூறினதால் நீட்சியும், 'விப்ரம' என்றதால் வளை வும் தெரிவித்ததாம். உஜ்ஜவல என்று புன்சிரிப்பில் திருப்பவளவொளியும் கலந்திருப்பதைக் குறித்ததாம். முன் ச்லோகத்தில் பின்மயிர்கள் மிடற்றின் அருகே தொங்குகின்றமை கூறப் பெற்றது, இங்கே முன்மயிர் நெற்றியின் மேல் நேர்த்தியாயிருப்பதை நுவன்றார்.

ப்ரபுத்த - முக்த என்ற இரண்டும் தாமரைக்கும் விசேஷணமாகலாம். திருக்கண் களுக்குமாம். (35)

திவ்யங்களான பூஷணங்களும் ஆயுதங்களும் மாலைகளும் அணிகளானமை அருளப்படுகிறது—

36. ஸ்ப்புரத்கிரீடாங்கத ஹார கண்ட்டிகாமணீந்த்ர காஞ்சீ குண நூபுராதிபி :
ரதாங்க சங்காஸி கதா தநுர்வரை : லஸத்துளஸ்யா வநமாலயோஜ்ஜ்வலம்

ஸ்ப்புரத் - ஒளி வீசுகின்ற - கிரீட-கிரீடம், அங்கத - தோள்வளைகள், ஹார - முத்து ரத்ன மாலைகள், கண்ட்டிகா, திருக்கழுத்தணி, மணீந்த்ர - கௌத்துவம், காஞ்சீ குண – அரை நாண், நூபுர – கழல், ஆதிபி: இவை முதலான அணிகளாலும், ரதாங்க - திருவாழி, சங்க-பாஞ்சன்னியம், அஸி - நாந்தகம், கதா - கௌமோதகீ, தநுர்வர - சார்ங்கம்-என்ற திருவாயுதங்களாலும், லஸத் துளஸ்யா - திருமேனிச் சேர்க்கையால் தளிரும் பூவுமாய் விளங்கும் திருத்துழாய் மாலையாலும், வநமாலயா-திருவடிவரையில் தொங்கும் தனிப்பட்ட மாலையாலும், உஜ்ஜவலம் - சிறந்த ஒளியுற்றவனும்.

கதிராயிரமிரவி கலந்தெறித்தாலொத்த நீண் முடியனனென்றும், முடிச் சோதியாய் உன் முகச்சோதி மலர்ந்ததுவோ என்றும் அருளினபடி ஒளிவீசும் ரத்னகிரீடமும், அதற் கேற்ற மற்ற திவ்யாபரணங்களும், பரமபதத்திலே படையாகிப் பண்ண வேண்டியதொன்று மில்லையாகையாலே திருவணிகலன்களே யென்னும்படியான திவ்யாயுதங்களும், துளஸி என்ற இலைமாலை, வனமாலை யென்ற பூமாலை யெல்லாமும் அணிந்து, தானே உபய விபூதி நாதன், வேத ஜபமும் செஞ்சடையுமாய்த்தவத்திலிருக்கும் ப்ரம்மருத்ராதிகள் நாதராக மாட் டிலரென்று அறிவிப்பவன் போல் பொலிகின்றவனு மென்றபடி. தநுர்வர என்றவிடத்தி

ளுள்ள வர என்பது சங்கம் முதல் எல்லாவற்றிலுமே சேரலாம். லஸத்துளஸ்யா என்பதை பூர்வார்த்தத்தில் ஸ்புரத் இத்யாதியைப் போல் கர்மதாரயமாகக் கொள்ளலாம். பஹுவ்ரீஹி யாகுல் வநமாலைக்கு விசேஷணமாய் ஒன்ருல் மற்றென்றுக்கு உண்டாம் அழகையும் அது குறிக்கும். (36)

இனி உடன் வீற்றிருக்கும் பெரிய பிராட்டி விஷயமாக இரண்டு ச்லோகங்கள். முதல் ச்லோகத்தில் எம்பெருமானுக்கு இஷ்டமாய் ஈடாயிருப்பது அறிவிக்கப் பெறும்—

37. சகர்த்த யஸ்யா : பவநம் புஜாந்தரம் தவ ப்ரியம் தாம யதீய ஜந்மபூ:
ஜகத் ஸமஸ்தம் யதபாங்கஸம்ச்ரயம் யதர்த்தம் அம்போதி:
அமந்த்தி அபந்தி'ச.

தவ புஜாந்தரம் - உனது திருமார்யை, யஸ்யா :-எவளுக்கு பவநம் - குடியிடமாக சகர்த்த - அமைத்தனையோ; யதீய ஜந்மபூ:-எவளுடைய தோற்றத்திற்கு இடமான திருப் பாற்கடல் ,தவ - உனக்கு ப்ரியம் - இஷ்டமான தாம - வாஸஸ்தானமாகிறதோ; ஸமஸ்தம் ஜகத்-எல்லாவுலகும், யத் - எவளுடைய, அபாங்க - கடாக்ஷத்தை, ஸம்ச்ரயம் - இருப்புக்குக் காரணமாக உடையதோ; யதர்த்தம் - எவளைப் பெறுதற்காக, அம்போதி :-கடலானது அமந்த்தி - கடையப் பெற்றதோ, அபந்த்தி ச - அணைகட்டப்பெற்றதோ - அத்தகைய.– (39ல் தயா என்பதோடு எல்லாம் சேரும்.)

திருமேனியை விட்டுப் பிரிக்க இஷ்டப்படாமல், ஹ்ருதயம் அவளை விட்டுப் பிரியா தென்றும் அறிவிப்பானுய் எப்போதும் திருமார்பில் திருவை வீற்றிருக்கச் செய்தாய். ப்ரக்ருதி மண்டலத்தில் ப்ரஜைகளின் நன்மைக்காகத் தங்க எழுந்தருளினபோது அவளுடைய பிறவி யிடமான பாற்கடலே உனக்கு ப்ரியமாயிற்று, இதெல்லாம் உனக்கு அவளிடமுள்ள அன்பைக் காட்டும். உனக்கு சேஷமான உலகெல்லாம் அவளது கடாக்ஷத்தினலே இருப்புப் பெறுவதாகி அவளுக்கும் சேஷமேயானதால் உனக்கு அவள் ஈடானவளென்பதும் தெளிய லாகும். பிரிவைப் பொறுக்காதவன் என்பதை யுணர்த்த, நீ பிரிந்து சேர்வதுபோல் சில அபிநயங்கள் பண்ணுவதினின்றும் உனக்கு அவளிட முள்ள அன்பு திடமாய் அறியப்படு கிறது. நீ பட்ட பர்டுகளை கடல்கடைவதிலும் கட்டுவதிலும் பல படி கண்டோமே என்றபடி— (37)

தன் ரூபங்கள் எல்லாவற்றிலும் அவளை யனுபவித்தும் திருப்தி பெருதபடியான அன்பும் அத்தகைய அன்பை விளைக்கும்படி அவளுக்கு இயற்கையிலுள்ள சக்தியும், இப்படி அவனைத் தன் வசமாக்கியிருக்கும்போதே அவனுக்கு வசமாய் அவள் தன்னைச் செய்துகொண்டிருக்கும் குண விசேஷமும் மேலே யறிவிக்கப்படும், அதனுல் அபிமதாநு ரூபை என்பது விரிவாக உரைக்கப் பட்டதாகும்—

38. ஸ்வவைச்வருப்யேண ஸதா஽நுபூதயா஽ப்யபூர்வவத் விஸ்மய மாததாநயா.
குணேந ரூபேண விலாஸ சேஷ்டிதைஸ் ஸதா தவைவோசிதயா தவ ச்ரியா.

ஸ்வ-தன்னுடைய (உன்னுடைய) வைச்வரூப்யேண-உருக்கள் எல்லாவற்ருலும், ஸதா-அந்தந்த ரூபங்கள் உள்ள காலமெல்லாம், அநுபூதயா அபி – உன்ஞல் அனுபவிக்கப் பட்டவளாயிருந்தும், அபூர்வவத்—ஒவ்வொரு க்ஷணமும் அதற்கு முன் அனுபவிக்கப் படாதவள் போலே, விஸ்மயம், வியப்பை-புதிய அனுபவத்தை, ஆததாநயா—உண்டு பண்ணுகின்றவளும், குணேந-ஆத்மகுணங்களாலும், ரூபேண-வடிவினுலும், விலாஸ-திருமேனியின் இயற்கையாக வரும் க்ரியைகளாலும், சேஷ்டிதை:-ப்ரயத்ன பூர்வமான செயல்களாலும், ஸதா-எந்த க்ஷணமும், தவ ஏவ - அதற்குப் பொருந்திய குண ரூபவிலாஸ சேஷ்டிதங்களை உடைய உனக்கே, உசிதயா-பொருந்தினவளும்-தவ ச்ரியா-உனது ஸம்பத் தாய் உனக்கு சேஷபூதையுமான-(அடுத்த ச்லோகத்தில் தயா என்பதோடு இது சேரும்.)

ரூபமாவன–ஸ்வரூபம், திருமேனி, குணங்கள், செயல்களெல்லாமாம். அவளுடைய மனம் உவக்கும்படியே நடந்து கொள்ளும் நீ எல்லாவிதத்தாலும் அவளை உவப்பித்து ஆனந்தமாக அவளுடைய ஸாக்ஷாத்காரம் செய்துவருகிருய். இது ஒரு க்ஷணங்கூட விடாம லிருக்கிறது. இப்படி அனுபவித்தும் புதியதோர் இனிய வஸ்துவைப் பார்ப்பதுபோல அவளை நீ பார்த்திருக்கும்படி உன்னைச் செய்யும் அவளுடைய ஸ்வரூபஸ்வபாவங்களை என்ன வென்று வர்ணிக்க முடியும். தனக்குள்ள எல்லாம் உன் உவப்பிற்கென்றே அவள் நினைத்திருக்கிருள். உனக்கு மேன்மை யளிப்பவளாயிருந்து உனக்கே யானுள். உங்களிரு வருக்கும் 'பரஸ்பரம் உவப்பிப்பது' என்பது இருந்தாலும் உன்னை சேஷியாக்கித் தான் அப்ர தானமாயிருப்பதே அவள் இஷ்டப்பட்டது. ஜீவர்களுக்கெல்லாம் இருவரும் ஸமமாய் சேஷி யானுலும் உங்களுக்குள்ள வாசி இது. துக்கயோக்யத்வமென்பது ஜீவலக்ஷணம். நித்யஸூரி களுக்கும் ஸம்ஸரிக்க ஸ்வரூபயோக்யதையுண்டு. அத்தன்மையில்லாமல் ஆனந்த பூர்ணத் வம் உங்களிருவருக்குமே யாம். இப்படி எவ்விதத்திலும் அபிமதாநுரூபையானவள். (38)

ஸ்ரீ வைகுண்டத்திலே அவளோடிருப்பு வர்ணிக்கப்படுகிறது.

39. தயா ஸஹாஸீநமநந்தபோகிநி ப்ரக்ருஷ்ட விஜ்ஞாநபலைகதாமநி.
பணாமணி வ்ராதமயூகமண்டல ப்ரகாசமாநோதரதிவ்யதாமநி.

தயா ஸஹ-அந்தப் பிராட்டியுடன், ப்ரக்ருஷ்ட-சிறந்தனவான, விஜ்ஞான பல-ஜ்ஞானம் பல மென்றவற்றிற்கு, ஏகதாமநி-முக்யமான இடமாய், பணா-தன் படங்களிலிருக்கும், மணி வ்ராத-ரத்னங்களின் திரளினுடைய, மயூக மண்டல - ஒளிவட்டத்தாலே,ப்ரகாசமாந உதர-

ப்ரகாசமான உட்ப்ரதேசமெல்லாம் உடையதான. திவ்யதாமநி - அப்ராக்ருதமான மணி மண்டப விமானத்தையுடையனுமான, அநந்தபோகிநி - திருவனந்தாழ்வானென்ற நாகணை மேல், ஆஸீநம் - வீற்றிருப்பவனும்.

'வைகுண்டே து பரே லோகே ச்ரியா ஸார்த்தம் ஜகத்பதி: ஆஸ்தே விஷ்ணு ரசிந்த்யாத்மா' என்றதை இங்கு அறிவிக்கிறர். எம்பெருமானைப் போலே ஆதிசேஷனும் அனந்தனென்ற பெயருடையவன். 'நாந்தம் குணாநாம் கச்சந்தி தேநாநந்தோSயம் உச்யதே' என்று இவனையே ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் வர்ணித்தார். எம்பெருமான் எவ்வளவு பெரிய திருமேனியைக் கொண்டாலும் அதற்கேற்ப, தானும் உருவைப் பெறுகின்றவனாகையாலும் அனந்தன். அளவற்ற பணிகளைச் செய்கிறவனென்றும் மேலே மொழிவர். இவ்வளவு குணங்கள் இருந்தும் தான் ஸங்கர்ஷணஸ்வரூபியான எம்பெருமானுக்கு அபிமான பாத்ரமென்பதை யறிவிக்க ஜ்ஞானம் பலமென்ற குணங்களிரண்டை மட்டும் உலகுக்குச் சிறப்பாகக் காண்பிப்பான். ஐந்துவித ஜ்யோதிச் சாஸ்திரம் இவ்வாழ்வானே இயற்றிய தென்பர். (ஆயுர்வேதம் யோக சாஸ்த்ரம் சப்த சாஸ்த்ரமான மஹாபாஷ்யம் எல்லாம் இயற்றியதோடு (பரமார்த்த தத்துவஜ்ஞானம் பெறுவிக்க ஸ்ரீபாஷ்யாதிகளையியற்ற எம்பெருமானாராக அவதரித்ததாகவும் பின்புள்ள நாம் அனுஸந்திப்பதாம்) பூமியைத் தாங்குவதோடு எல்லாவற்றிற்கும் ஆதாரமான எம்பெருமான் இஷ்டப்படி திவ்யமஹிஷிகளோடு யதேஷ்டமாகத் துவைக்கும்படி யிருப்பதாலும் பலம் விஞ்சியிருப்பது தெளியப்பெறும். ஆயிரம் படங்களின் மணிகள் தேஜோமயமான திவ்ய திருமாளிகையின் ஒளியை மறைத்துத் தங்கள் ஒளி பரவும்படி இவனுக்கு விளங்குகின்றன. இனி மணிவிளக்காம் என்றபடி மணி விளக்காகவும் ஓர் உருவம் கொள்வது மரியாதைக்காகவேயாம் பரமபதத்தில். அங்கே பெரிய பிராட்டியார் திவ்யமஹிஷி என்று காண்போர் எளிதிலறியும் வண்ணம் அவளோடு நீ வீற்றிருப்பவன் என்றபடி. 'ஸவ்யம் பாதம் ப்ரஸார்ய' என்று ஸ்ரீபாஞ்சராத்ரரக்ஷையில் அருளிச் செய்த ச்லோகத்தை இங்கு அனுஸந்திப்பதாம். (39)

திருவனந்தாழ்வானுக்கு சேஷன் என்கிற திருநாமம் ப்ரஸித்தமானது. அதன் பொருளை விளக்க மேல் ச்லோகம்—

40 நிவாஸசய்யாஸநபாதுகாம்சுக—உபதாந வர்ஷாதபவாரணாதிபி:
சரீரபேதைஸ்தவ சேஷதாம் கதை: யதோசிதம் சேஷஇதீரிதே ஜநை:.

நிவாஸ—திருக்கோயில், சய்யா—திருப்பள்ளி, ஆஸந—சிங்காசனம், பாதுகா—திருவடி நிலை, அம்சுக—பீதாம்பராதி, உபதாந-தலையணை முதலானவை, வர்ஷ ஆதப வாரண—மழையையும் வெய்யிலையும் விலக்கவான குடை, ஆதிபி:-பாதபீடம் முதலாக மற்றுமான, யதோசிதம்—தகுமாறு, தவ-உனக்கு, சேஷதாம்-பணிவிடைக் கான நிலையை,

க்தை:-பெற்றனவான சரீர பேதை:-தனது உருவங்களாலே, யதோசிதம்-அந்தந்த கார்யத் திற்கிணங்கவே, ஜநை: - எல்லா ஜனங்களாலும் சேஷனென்றே, ஈரிதே - வழங்கப்படுகிற. (இதற்கு முன் ச்லோகத்திலிருக்கும் அனந்த போகிநி என்ற சொல் விசேஷயமாகும். ஆகை யால் முன் ச்லோகத்தோடு இது சேரும்.) எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் எல்லாக் கோயில்களாகவும் உரு எடுப்பவன் திருவனந்தாழ்வான். இருந்தாற் சிங்காசனமாம் நின்றால் மரவடியாம் பூம்பட்டாம் புல்குமணையாம் சென்றால் குடையாம் வீற்றிருக்குமிடத்தில் திருவடி யூன்றும்படி பாதபீடமாம் என்றிவ்வாறு எண்ணற்ற உருக்களைக் கொண்டு எல்லா கைங்கர்யங்களையும் செய்துவருவதால், சேஷனாயிருப்பவனின் செயலெல்லாமிருப்பதாலே சேஷனெனென்றே பேர் பெற்று, அறிந்தவர் அறியாதார் எல்லோராலும் சேஷனென்றே பேசப்படுகிறான் என்று அவனுடைய செயலெல்லாம் இங்கே குறித்தபடி. (40)

அனந்த கருடவிஷ்வக்ஸேநர்கள் என்கிற அடைவில் திருவனந்தாழ்வான் திருப் பள்ளியாய் திருமேனி ஸ்பர்சத்துடன் இருப்பதாலே அவரை வர்ணித்து பிறகு நேரெதிரில் காத்திருக்கும் பெரிய திருவடியை வர்ணிக்கிறார். பெரிய திருவடி என்று தெரிவிப்பதற்கா கவே இந்த ச்லோகத்தில் மட்டும் முதலிரண்டு பாதங்களில் முதலில் குருவான அக்ஷரம், மற்றெங்கும் இலகுவான அக்ஷரமே தொடக்கத்தில் காண்க.

41. தாஸஸ் ஸகாவாஹநம் ஆஸநம் த்வஜோ
யஸ்தே விதாநம் வ்யஜநம் த்ரயிமய:
உபஸ்த்திதம் தேந புரோ கருத்மதா'
த்வதங்க்ரி ஸம்மர்த்த கிணாங்க சோபிநா.

த்ரயீமய:-முழுவேத மூர்த்தியான, ய;-எந்த கருத்மான், தே - உனக்கு, தாஸ:-அடி யானும், ஸகா - தோழனும், வாஹநம் - வாகனமும், ஆஸநம் - வீற்றிருக்குமிடமும், த்வஜ: - கொடியும், விதாநம் - மேலார்ப்புமாகிறானோ, தேந - அப்படிப்பட்ட, த்வத் அங்க்ரி - உனது திருவடி, ஸம்மர்த - அழுத்துவதாலான, கிண - காய்ப்பாகிற, அங்க - நிலைத்த அடையாளத்தாலே, சோபிநா - பெருமை பெற்ற, கருத்மதா - பெரிய திருவடியால், புர:- எதிரில், உபஸ்திதம் - தொழப்பட்டவனும். (பவந்தம் என்கிறதோடு மேலே சேரும்.)

அனந்தாழ்வானுக்கு சேஷனென்றே பெயர். சேஷத்வமென்பது சேதனம் அசேதனம் இரண்டுக்கும் பொதுவாகும். தாஸத்வமாவது சேதனனுக்குச் சேதனன் சேஷமாயிருக்கை. இது ஆதிசேஷனுக்கும் உண்டு. ஆனால் அவர் திருப்பள்ளியாய் உபயோகப்படுவதாலும், நிவாஸ என்ற கீழ் ச்லோகத்தில் கூறியபடி அசேதனம் போலிருந்து உபயோகிப்பது அதிகமா யிருப்பது எல்லோருக்கும் அறியப்பட்டிருப்பதாலும் சேஷபதத்தாலே சொல்லப்பட்டார்: கெரு டன் பறக்கும் பக்ஷி ஸஞ்சார ப்ரதானமாயிருப்பதாலே சேதனகார்யம் விஞ்சியிருப்பதாலே

தாஸனெனப்படுகிறர். மேலே வாஹனம் ஆஸனமென்றவாறுமாகுகை உண்டு. இப்படி தாஸ னுயிருந்துகொண்டே சேஷனுயுமிருப்பர். அடிமையைத் தோழனென்னல்லாமோ என்னில், ஸமான ஸுகதுக்கனுயிருக்கை யென்ற குணமுள்ளவனென்பது கருதப்படும். கெருடனுகவேயிருந்து (வேற்றுருக் கொள்ளாமலே) ஸ்ரீராமனுக்கு இலங்கையில் நாகபாச பந்தத்தின்போது உதவி, நான் ஸகாவானபடியாலே உனது துக்கம் தாங்காமல் வந்தே னென்று கூறினது காண்க. கெருடன் மேலேறிச் செல்பவன் பின்னும் ஸஞ்சாரம் செய்ய வேண்டியிருந்த போது கீழே இறங்காமல் கெருடனையே சிங்காசனமாக்கிக்கொண்டு திரு வோலக்கத்தில் ஆச்ரிதர்களுக்கு அருள்புரிவதால், இவர் ஆஸனமுமாகிறர். கீழே பெருமாள் விற்றிருந்தால் மேலார்ப்பாகி நிழலளிப்பரென்று, 'க்ருதச்சாயம் ஹரேர்மூர்த்நி பாதாப்யாம் பக்ஷிபுங்கவம்' என்று பராசரர் அருளினர். அவதாரத்தில் பிறர்க்குக் காணுமலிருந்து செய்யும் உபகாரம் இது. 'விநதை சிறுவன் சிறகென்னும் மேலார்ப்பின் கீழ்வருவானை' என்று நாச்சி யார் அருளினதும் காண்க. திரயிமய: - 'கெருடனுருவாம் மறையின் பொருளாம் கண்ணன்' என்றபடி வேத வேத்யனை பெருமானுக்கு வேதவாக்யங்களை யெல்லாம் தமக்கு அவயவங் களாகக் கொண்டு வேதமூர்த்தியாகி வாஹனமாகிறவர். இதனுல் நாராயணனே வேதப்ரதி பாத்யனென்றறியலாம். இவர் கைகளை நீட்டிக் கொண்டு எம்பெருமான் தம் மேலேறுவதற்குப் பாங்காக விற்றிருப்பாராகையால் பெருமாள் திருவடியால் நெருக்குண்டது தோற்ற விளங்கும் காய்ப்பை மேலே வர்ணித்தார். அப்ராக்ருதமான திருமேனியில் காய்ப் புக்கு இடமில்லையானுலும் கீழே ஜ்யாகிணகர்கசை: என்றது போல் பிறர்க்கு அவ்வாறு தோற்றும் நிற வமைப்பு அங்கே என்னலாம். இப்படிப்பட்டவராலே தொழப்பட்டானென்ன உபஸத்திதம் என்றது. 'உபாந்மந்த்ரகரணே' என்ற வ்யாகரணப்படி ஆதித்யமுபதிஷ்ட் டதே, கார்ஹபத்யம் உபதிஷ்டடதே என்றவிடங்களிற் போல் மந்த்ரங்களைக் கூறிப் புகழ்ந்து உபாஸிக்கப்படுவது கருதப்படும், இவர் வேதமயராகையாலே. 'ப்ருஹத்யேவ உக்தி' என்றிருப்பதாலும் இவர் த்வனி மந்த்ரமாகுமே. நித்யஸூரிபரிஷதுபகியமாநபுண்ய ச்லோ கனைக் கண்டு வேதமூர்த்தி வெறுமனேயிருக்கமாட்டிலர். (41)

எதிரிலிருக்கும் கெருத்மானைக் கூறின பிறகு வடகிழக்கிலிருக்கும் விஷ்வக்ஸேனரை வர்ணிக்கிறர்.

42. த்வதீய புக்தோச்சித சேஷபோஜிநா
த்வயா நிஸ்ருஷ்டாத்மபரேண யத் யதா.
ப்ரியேண ஸேநாபதிநா ந்யவேதி தத்
ததாऽநுஜாநந்தம் உதாரவீக்ஷணை:

த்வதீய - உனக்கென்று பிரிக்கப்பட்டதாலே உனதான, புக்த உச்சித – உன்னுல் அமுது செய்யப்பட்டு உண்கலத்திலே விடப்பட்டதாய், சேஷ - மிகுந்த வஸ்துவையே,

போஜிநா - உண்பவரும், த்வயா - உன்னுல், நிஸ்ருஷ்ட - அளிக்கப்பட்ட, ஆத்மபரேண—நீ செய்ய வேண்டும் கார்யங்களையுடையரும், ப்ரியேண - ப்ரீதி பாத்ரமுமான, ஸேநாபதிநா - சேனைமுதலியாரால், யத் - எந்த விஷயம், யதா - எவ்வாறு செய்யப்படுகின்றதாக, ந்யவேதி - விண்ணப்பம் செய்யப் பெற்றதோ, தத் - அந்த விஷயத்தை, ததா-அவ்வாறே, உதாரவீக்ஷண:—ஸம்மதியளிக்கும் பார்வைகளைக் கொண்டே, அநுஜாநந்தம் - இசைகின்றவனுமான (உன்னை...)

திருமடைப்பள்ளியில் எம்பெருமானுக்காகச் சமையல் செய்யப் பெற்ற அன்னம் முதலானவை சமைக்கும் பாத்திரங்களினின்று வேண்டுமளவு தேவபாத்ரங்களில் நிவேதநத்திற்காக மாற்றிக் கொண்டுவரப்பட்டு நிவேதனம் செய்யப்பெறும். பிறகு அதில் ஒவ்வொன்றிலும் ஒரு பாகத்தை விஷ்வக்ஸேனருக்காகப் பிரித்துவிட்டு மற்றதைமேல் செலவிடப்போவதற்குத் தக்கவாறும் தனக்காகவும் பிரித்து, பெரியோர்களுக்கும் ஸமர்ப்பித்துவிட்டு, முன்விஷ்வக்ஸேனருக்காகப் பிரித்திருப்பதை அவருக்கு நிவேதனம் செய்து, அதன் பிறகு அதை அவருக்கு இஷ்டமாய் பாதாளத்திலிருக்கும் ப்ராணிகளுக்காக ஆழமான ஜலத்தில் சேர்த்து விடவேண்டும். (தன்னையும் விஷ்வேக்ஸேன ப்ரஜையாக நினைக்குமாறு சிஷ்யத்வாதிகளைக் காரணமாக்கித் தானே உட்கொள்வதும் ஸ்ரீவங்கிசகாரிகையில் அருளப் பெற்றது) இப்படி பகவானுல் அமுது செய்யப்பெற்று உண்கலத்திலே விடப்பட்டதை அமுது செய்கின்ற மஹா பக்தராவார் விஷ்வக்ஸேனர். அவர் கொண்ட ஆஹார நியமத்திற்கு உவந்து உலகத்திற்குத் தான் செய்ய வேண்டிய சிக்ஷை முதலானவற்றில் பூர்ணுதிகாரம் பகவான் அவருக்கு அளித்துவிட்டான். அதனுல் ஆங்காங்குச் செய்ய வேண்டியதை ஒழுங்காக நடத்துமவர், முறை தவருமைக்காக, இதிது இப்படி நடத்தப்படுகிறதென்று விண்ணப்பம் செய்ய வருவார். திருப்பள்ளியில் பிராட்டிமார்கள் அவர் வருமது தெரிந்து அதற்கு யாதொரு தடையும் கிடையாதானபடியாலே தாங்கள் தங்களைத் தக்கவாறு அமர்த்திக்கொள்வர். மிக ப்ரியமான அவர் வரும்போது, நம் பாரம் மொத்தம் ஏற்றுக்கொண்டு நன்ருக நடத்திவருகிருனென்று விசேஷ அன்போடு அதே நோக்காயிருந்து அவர் விண்ணப்பம் செய்யுமவற்றில் ஒன்றையும் மறுக்காமல் தான் இசைந்திருப்பதைத் தன் உபய விபூதி நாதனென்ற பெருமைக்கிணங்க பேசாமல் ஆனந்தமாய் அவரைக் கடாக்ஷித்தருளும் வகையிலேயே (பூர்ண சம்மதியை) ப்ரகாசப்படுத்துகின்றவன் பகவான் என்றபடி.

கீழே அனந்தனுக்கும் கருடனுக்கும் சொன்னது போலே சேனைமுதலியாருக்கும் அவர் செய்யும் கைங்கர்யத்தை முக்கியமாக மொழிய வேண்டியிருக்க, அவர் அமுது செய்வதை முதன்முதலாக மொழிவதேன். சேஷாசன ரென்ற திருநாமத்திற்குப் பொருள் கூற வேண்டுமே யென்னில், பக்தர்கள் எல்லோருமே சேஷாசனரனல்லரோ. பகவானுக்கு நிவேதனம் செய்யாததை உண்கிற பக்தர்கள் உண்டோ. அவன் அமுது செய்ததைப் பிரித்துதானே வைச்வதேவம், பித்ருயாகம், அதிதிபூஜை யெல்லாம் செய்யப்படு மென்னில்—கேண்மின். இவர் சேனைமுதலியார். சேனையிற் சேர்ந்தவர்களுக்கெல்லாம் தடையின்றி ஊண் அளிப்பது முக்கியமான விஷயம். அப்படிப்பட்டவர் தாமும் தம்மைச் சார்ந்

தாரும் யதேஷ்டமாக உண்பது கூடாதென்று எம்பெருமான் அமுதுசெய்ததையே கொள்வ தென்பது ஆச்சர்யமே. அதிலும் மற்றபேர் பகவானுக்கு நிவேதனம் செய்ததில் ஒரு பாகம் பெற்று அதை சமையற் பாத்திரங்களில் மடைப்பள்ளியில் இருக்குமதோடு கலந்து இஷ்டப்படி உண்பர். இவர் அவனது உண்கலத்திலே மிகுந்த ஸ்வல்ப்பமல்லது வேறு கொள்ளமாட் டார். உண்கலத்தில் ஒருவன் கழித்ததை உண்பதென்பதை உலகத்தில் பெரும்பாலும் இசை யமாட்டார்கள். அது நீசன் செய்வதாக நினைப்பர், தம்மை அவ்வளவு கீழ்ப்படுத்திக் கொள்ளும் இவரது குணவிசேஷமும் இதனால் குறிக்கப்படும். இவர் கீழிறங்க இவரை எம் பெருமான் எல்லாருக்கும் மேலாகத் தன் அதிகாரத்தையே அளித்து பெருமைப்படுத்து கிறன். ஆகா என்ன ப்ரீதி, என்ன சேஷ சேஷிகளின் அற்புத குணமென்று ஆளவந்தார் வியந்து இவ்வாறு அருளினதாம். ஈட்டில் இந்த ச்லோக விஷயமாக பட்டரின் உபந்யாஸம் வரையப் பெற்றிருப்பதையும் காண்க.

த்வதீயபுக்தோச்சித சேஷ போஜிநா - த்வதீய எனறிருப்பதாலே எம்பெருமானைச் சேர்ந்தவர்களால் உண்டு மிகுத்தப்பட்ட என்ற பொருள் கொள்ள வேண்டா. உன்னுடைய தான உண்கலத்து வஸ்து என்றல் நீ உண்டு மிகுவித்த வஸ்து என்றே சொன்னதாம். சேஷ என்கிற சொல் எதற்கென்னில் - சேஷமென்ற சொல் பொதுவாகும். உண்கலம் சமை கலம் இரண்டிலிருப்பதையும் சொல்லும். அதில் புக்தோச்சிதமான சேஷமே சேனைமுதலியார் கொள்வதென்னவாம். த்வதீய என்பது பகவானுக்கு நிவேதனம் செய்வதற்காகக் கொணரப்பட்ட என்கிற பொருளதாம். புக்தோச்சித என்பதால் பாகபாத்ரத்திலுள்ளதையோ பிறர் உண்டு மிகுந்ததையோ கொள்ளாமைக்காக த்வதீய என்றது. மற்றபேர் வேறு சேஷத் தையும் உண்பார்கள். இவர் சேனுபதியாகையாலே, யாராவது விரோதமாக ஏதாவது உண்ணவைப்பார்களோ என்றஞ்சி ஒரரசன்தன் சேனுபதிக்குத் தான் உண்டு மிகுந்ததையே கவனித்துக் கொடுப்பது போல், எம்பெருமான் கவனித்துக்கொள்கிருனென்று அதிஸ்னேக மும் குறிக்கப்படும். புக்த பதத்திற்கு புசித்த இடமென்றும் பொருள் சிலவிடங்களில் கூறுவ துண்டு. அதன்படி த்வதீய புக்த-உனது உண்கலத்தில், உச்சித-விடப்பட்ட என்னலாம். த்வதீய - உனதுஉண்கலத்தில், புக்தோச்சித-உண்டு கழிக்கப் பெற்ற என்னலுமாம். த்வதீய சேஷம் - உன்னுல் திருக்கண்களால் கடாக்ஷிக்கப் பெற்று ஸத்வ குணம் அதிகமான சேஷ மென்னலுமாம். நிவேதிதம் என்னுமே ந்யவேதி தத் என்ற பாடமே ஸர்வஸம்மதம். (42)

முக்கியமான நித்யஸூரிகளாம் மூன்று பேர்களைக் கூறின பிறகு மற்றும் அடிமை செய்யும் அளவற்ற நித்யஸூரிகளை யெல்லோரையும் மொத்தமாக அருளிச் செய்கிருர்—

**43. ஹதாகில க்லேசமலை: ஸ்வபாவத: த்வதாநுகூல்யைகரஸைஸ் தவோசிதை:
க்ருஹீததத்தத் பரிசார ஸாதநைர் நிஷேவ்யமாணம் ஸசிவைர் யதோசிதம்.**

ஸ்வபாவத:- இயற்கையாகவே - அநாதியாகவே, ஹத அகில க்லேச மலை:— அஜ்ஞானம் அஹங்காரம் ஆசை த்வேஷம் ஆக்ரஹமெனப்படும் எல்லா க்லேசங்களும் அவற்றிற்குக் காரணமான ப்ரக்ருதி ஸம்பந்தமென்ற மலமும் (அழுக்கும்) அண்டப் பெருத வர்களும், த்வத் ஆநுகூல்ய ஏகரஸை :-உனக்கு உவப்பாக நடந்து கொள்வதிலேயே நோக்கு உடையரும், தவ - உனக்கு, உசிதை:-தகுந்தவரும், க்ருஹீத தத் தத் பரிசார ஸாதநை:-தாம் தாம் செய்யும் பணிவிடைக்கான கருவிகளைக் கொண்டவர்களும், ஸசிவை:- உனக்குத் தோழன்மார்கள் அல்லது மந்த்ரிகள் போன்றவருமான நித்யஸூரிகளாலே, யதோசிதம் - தக்கவாறு, நிஷேவ்யமாணம் - நன்கு ஸேவிக்கப்பட்டவனும்.

யோக சாஸ்த்திரத்தில் க்லேசமாகக் கொள்ளப்பட்டவை ஐந்து. அவை அஜ்ஞானாதிகள். அவைகளும் அவற்றிற்குக் காரணங்களான ப்ரக்ருதி ஸம்பந்தம் முதலானவையும் ஸம்ஸாரி களானஜீவர்களுக்கு உண்டு. இவற்றை யெல்லாம் க்லேச கர்ம விபாகாசயங்களென்றும் யோகசாஸ்த்ரம் கூறும். இவையெல்லாம் கழிந்தவர்கள் முக்தர்கள். எப்போதுமே இவை அண்டும்படி யிராமல் உன்னைப் போலிருப்பவர்கள் நித்யஸூரிகள். ஆகவே உன்னைப் போல் அனாதி சுதந்தரர்களானமையால் உனக்குத் தோழன்மாரென்னலாம். நீ அவர்களைத் தோழன் மாரைப்போலே நினைத்தாலும் அவர்கள் ஸதாபச்யந்தி என்கிறபடி உனக்கு அடிமையான நிலையைக் கண்டிருப்பதால் உனக்கு அனுகூலம் தவிர வேறொன்றில் நோக்கில்லாதவரா யிருப்பர். ஒவ்வொருவருக்கும் எல்லா அடிமைகளைச் செய்ய ஆவல் விஞ்சியிருந்தாலும் போட்டி ஆக்ரஹமென்ற குற்றங்களின்றி தங்களுக்கு ஏற்பட்ட கைங்கர்யங்களைத் தவறுமற் செய்ய, குடை சாமரம் விசிறி பாதுகை ஆஸனம் தூபம் தீபம் கொடி படை என்றாற் போன்ற கருவிகளை ஏந்தி ஸமயத்திற்குத் தக்கவாறு அடிமை புரிகின்றனர். இப்படி தனித்தனி ஏதே னும் ஒரு கைங்கர்யம் பெற்றிருக்கும் பல கோடிக்கணக்கான ஸூரிகளின் குழாங்களுடன் கூடுவது என்று கொலோ என்றபடி.

ஸ்வபாவத : என்று முதற் பாதத்திலே இருக்கும் சொல்லை மேற் பாதத்திலே பெரிய வாச்சான்பிள்ளை சேர்த்தாலும் முன்னே சேர்வதை எல்லோரும் இசைந்தனர். மேலே ஸதா என்ற பாடம் சில வடங்களிற் கண்டாலும் த்வதாநு கூல்ய என்பதே ஸர்வ ஸம்மதம். (43)

எம்பெருமான் பெரியபிராட்டியின் உவப்பையே முக்கிய நோக்காகக் கொண்டிருப்ப தால் கீழ்க் கூறிய பரிஜனங்களின் பணிவிடை யாவும் இருவரையும் குறித்தே என்பதில் ஐயப்பட வேண்டா என்ற கருத்தாலே மீண்டும் அவனுக்கும் பிராட்டியினிடமுள்ள காதலை வெளியிடுகிறார். ப்ரஹர்ஷயிஷ்யாமி என்று மேலே சொல்லுமிடத்தில், **மஹிஷீம் ப்ரஹம் ஷயந்தம் ப்ரஹர்ஷயிஷ்யாமி** என்று இத்துடன் சேர்த்து அந்வயமாவதாலும் இது தேறும்.

44. அபூர்வ நாநாரஸபாவ நிர்ப்பர ப்ரபத்த யா முக்த விதக்தலீலயா.
க்ஷணுணுவத் க்ஷிப்தபராதிகாலயா ப்ரஹர்ஷயந்தம் மஹிஷீம் மஹாபுஜம்.

அபூர்வ - இதற்கு முன் அனுபவிக்கப்படாதவையென்னவாகிற, நாநா-பலவான, ரஸ பாவ - விர ச்ருங்காராதி ரஸங்களும் அவற்றிற்கான உத்ஸாஹாதி மன நிலேகளும், நிர்பர - நிறைந்தே, ப்ரபத்யா - தொடர்ந்தவாறே யிருப்பதும், க்ஷண அணுவத்-நொடிப் பொழுதினும் குறுகிய காலவளவு என்னும்படி, க்ஷிப்த பராதிகாலயா - பரமென்ற (பிரமனின் ஆயுட் காலமாம்) பெரிய காலத்தை முதலாக உடைய மேன்மேற் காலமெல்லாம் கூட போக்குவது மான, முக்த்த விதக்த லீலயா - அழகும் ஸாமர்த்தியமுமான விளையாட்டினுலே, மஹிஷீம் தன்னேடு ஸமாநமான ஐச்வர்யம் உடைய மனேவியான பெரிய பிராட்டியை, ப்ரஹர்ஷயந்தம் - ஆனந்தப்படுத்துகின்றவனும், மஹாபுஜம் - அதற்கேற்ற நீண்டு திரண்டு உருண்ட புஜங்களே யுடையனும்.

பார்யையின் லீலேகள் பர்த்தாவின் உவப்பிற்காக என்பது தெரிந்த விஷயம். அது போல் எம்பெருமான் செய்யும் லீலே எல்லாம் பெரிய பிராட்டிக்குப் பரமானந்தம் அளிப்பதற் காகவேயாம். ஸ்த்ரீயினிடம் மதிப்பால் அதிகவேலே கொடுப்பதில்லே. ஒவ்வொன்றும் வெகு அழகாயும் அவனுடைய சக்தி சாதுர்ய மெல்லாம் தோற்றும் படியும் அவள் நினேத்தபடியு மிருக்கும். அனுதியாய் விரச்ருங்காராதி ரஸானுபவமும் அதற்கான மனேபாவங்களும் எல்லாம் நிறைந்து தொடர்ந்தே யிருந்தும், ஒவ்வொன்றும் புதிது புதிதாகவே அனுபவத் திற்கு வருமேயன்றி வேண்டாமென்று உபேக்ஷிக்கும்படியாகா. விச்வாமித்ராதிகள் சில காலம் ஸ்திரீகளிடம் வசப்பட்டு பல்லாயிரக்கணக்காண காலத்தைப் போனது தெரியாதபடி போக்கினுர்கள் என்பதுண்டு; அது சொற்பம். இது மிக மேலானது. பிரமனின் ஆயுட் காலத்திற்குப் பரமென்று பெயராகும். அதைத் தொடங்கி அதற்கு மேலாக எத்தனே பிரமன்களின் ஆயுளேக் கூட்டினுலும் அவ்வளவு காலமும் இந்த லீலேயை அனுபவிப்பவ ராஞலும், பிராட்டி அந்த காலத்தை, ஒரு க்ஷணத்திலுள்ளடங்கும் ஒரு துளியான காலமே போனதாக நினேப்பாள்; அவனுக்கும் அவ்வாறே தோன்றும். இப்படி காலம் சென்றதே தெரியாதபடி அனுபவத்திலாழ்ந்திருக்கச் செய்யும் லீலேகள் இவை. லீலேயென்றபோது திருப்பள்ளியில் திவ்ய தம்பதிகள் கொண்ட பேச்சு முதலான விளேயாட்டு மட்டுமல்ல; ஸ்ருஷ்டி ஸ்த்தி ஸம்ஹாரம் முதலான ஜகத் வ்யாபாரமெல்லாங்கூட கொள்ளலாம். இவ்வளவு செய்கின்றவன் இவ்வுலகில் சிலவற்றிற்காக அவதரித்துத் தன் புஜ பலத்தை ப்ரகாசப்படுத்தி பக்தர்களுக்கு ஸுகம் அளிப்பதும் அது கண்டு பிராட்டி பேருவப்போடு அவனே ஆலிங்கனம் செய்வதும், அவள் தழுவும்போது அவன் அவளுடைய தடமுலேகளேக் கட்டி அணேத்துக் கொண்டு அவளே உவப்பிப்பதும் நடக்கப் பாங்கான புஜங்களின் பெருமையுடையனுமாகிறுன்.

பராதிகாலயா – ஆதிபதத்தால் கீழ்க்கால அளவைக் கொள்ளாமல் பல பரங்கள் கொண்ட மேற்காலங்களேக் கொள்வது தகும். ப்ரஹர்ஷயந்தம். அவள் 'மாஸாத் ஊர்த்வம்

ந ஜீவிஷ்யே என்று பிரிவாற்ருமையை யறிவித்தால் இவன், ந ஜீவேயம் க்ஷணமபி விநா த்வாம் அஸிதேக்ஷணும் என்று சொல்லி ஆனந்தப்படுத்திக் கண்ணழகைக் கண்டு உவப் பவன். மஹாபுஜம் என்பதற்குப் பெரியவாச்சான்பிள்ளை பணித்த பொருளையே சிறிது அழகு படுத்தி விரித்ததை ஸ்ரீதேசிக பாஷ்யத்திற் காண்க. ப்ரபத்தயா என்ற பாடமே ஸர்வ ஸம்மதம். ப்ரபுத்தயா என்பதன்று. ப்ரபந்தமாவது தொடர்ச்சி. (44)

லீலயா என்று வியாபாரத்தை ப்ரதானமாக அருளினர். திருமேனி அவயவ வர்ணனம் கீழே செய்யப் பெற்றது. இங்கே போக்யதையை மேன்மேலாக்கும் திருமேனி குணமும் சேர்த்தியழகும் ஆத்ம குணமும் சுருங்க அருளப்படும்.

45. அசிந்த்ய திவ்யாத்புத நித்ய யௌவந ஸ்வபாவலாவண்ய மயாம்ருதோததிம்.
ச்ரிய: ச்ரியம் பக்த ஜநைக ஜீவிதம் ஸமர்த்தம் ஆபத் ஸகம்அர்த்திகல்ப்பகம்.

அசித்த்ய - நினைக்க முடியாத; யுக்திக்கு அகப்படாத, திவ்ய – அப்ராக்ருதமான - அத்புத - ஆச்சர்யமான, நித்ய - அழிவற்ற, யௌவந ஸ்வபாவ - யௌவனத்தை இயற்கை யாக உடைய, லாவண்ய மய - நீரோட்ட வொளிநிறைந்த, அம்ருதோததிம் - அமிதக் கடலான திருமேனியுடையனுய், ச்ரிய : ச்ரியம் - திருவுக்கும் திருவாய், பக்தஜந - பக்தர் களுக்கு, ஏகஜீவிதம் - முக்கியமான உயிராய், ஸமர்த்தம், ஸர்வ சக்தனுய், ஆபத்ஸகம் - ஆபத்தில் உதவுகின்றவனுய், அர்த்திகல்ப்பகம் - பலனைக் கேட்பவருக்கு கல்ப்ப விருட்சமு மானவனும்.

வானிளவரசான எம்பெருமான் திருமேனி என்றும் யௌவனமாகவே யிருக்கும். அது நித்யமென்ருல் அழிவற்றமை. ஸ்வபாவ என்பதாலே அநாதி யென்றதாகும். யௌவந ஸ்வபாவன் எம்பெருமானென்ருலும் திருமேனி வாயிலாகத்தான் யௌவனத்தைச் சொல்ல வேண்டும். லாவண்யமயன் அவன் என்பதும் திருமேனி மூலம்தான். ஆகவே அம்ருதோததி என்று திருமேனியைக் கொண்டு அது யௌவன ஸ்வபாவமாய் லாவண்ய மயமாயிருக்கிற தென்றுரைக்கப்பட்டது. அம்ருதோததி என்று திருமேனியைச் சொன்னுல், சரீரத்தைச் சொல்லும் சொல் சரீரியையும் சொல்லுமாகையாலே பகவானும் சொல்லப்படுவான். பஹுவ்ரீஹிஸமாஸமும் கொள்ளலாம். அசிந்த்ய இத்யாதிகளை யௌவனத்திற்கு விசேஷணமாக்குவதே உரையின்படியாம். அப்போது திவ்ய என்பது–திருமேனி அப்ராக்ருதமாகையாலே யௌவனமும் திவ்யமென்ற கருத்தாலாம். நித்ய என்று யௌவனத்திற்கு அழிவில்லாமை கூறப்பட்டதால், ஸ்வபாவ என்பது அநாதியானமையை யறிவிக்கும். இனி எம்பெருமானின் பரவாஸுதேவரூபமே அசிந்த்ய திவ்யாத்புத நித்யமாய் யௌவன ஸ்வபாவமாய் லாவண்யமயமாய் அம்ருதோததியாயிருப்பதென்ருலும் தகும் இப்போது, “நித்யஸித்தே ததாகாரே தத்பரத்வே ச பௌஷ்கர. யஸ்யாஸ்தி ஸக்திர் ஹ்ருதயே

தஸ்யாஸௌ ஸந்நிதிம் வ்ரஜேத்'' என்கிற பாரமேச்வர ஸம்ஹிதா வசனத்திற் சொன்ன பரவாஸ" தேவரூப நித்யத்வம் சொல்லப்பட்டதாம். யௌவநஸ்வபாவ என்றதால் அதற்கு எப்போதும் யௌவனத்துடனே இருப்பு, முன்னே பால்யமோ பின்னே மூப்போ பெருமை பகர்ந்ததாம். அம்ருதோததிம்—அமுதவெள்ளமான. ச்ரிய : ச்ரியம். இவள் அவனை யாச்ரயித்து எல்லா பரிஜனங்களையும் அவனது கைங்கர்யத்திலே ஏவுகின்றவள். பக்த ஜநைகஜீவதம் என்பதற்கு, பிராட்டியைப்போலே பக்தஜனங்களையும் தனக்கு முக்கியமான உயிராகக் கொண்டவனென்றும் பொருளாம். இவையெல்லாம் சேரும்போது ஸாமர்த்யமும் போக்யமாகிறது. ஆபத்ஸகனுகை விலா விபூதியில். பிரிவாற்றுமையாலோ, கஜேந்த்ரனைப் போல் கைங்கர்யம் கூடாமையாலோ வருந்துகிறவர்களுக்கு அதே ஆபத்தாம். அதையும் போக்குகின்றவன். அர்த்திகல்ப்பகம்—எல்லாப் பலன்களையும் அளிப்பவன். அர்த்திகளை— யாசிப்போர்களை கல்ப்பவிருட்சமாகவுடையவன். அவர்களைக் கல்ப்பவிருட்சமாக்குகின்ற வன். இவனிடம் பெற்ற வஸ்துவை அவர்களே பிறர்க்கு அளிக்கும்படி பூர்ண செல்வமும் அவர்கள் பெறுகிறுர்களாதலினென்னலுமாம். ப்ரஜைகளைப் பலார்த்திகளாக்குகின்றவன்; இவனைக் காணும்போதெல்லாரும் கேட்க முன்வருகிறுர்களெனவும் உரையாம். (45)

ப்ராப்யனை பரமாத்மாவை இவ்வாறு விரிவாக வர்ணனம் செய்தது என்ன கருத்தினுலோ, அதை வெளியிடுகிறுர்—

46. பவந்தமேவாநு சரந் நிரந்தரம் ப்ரசாந்த நிச்சேஷமநோரதாந்தர :
கதாऽஹமைகாந்திக நித்யகிங்கர: ப்ரஹர்ஷயிஷ்யாமி ஸநாத ஜீவித :

அஹம் - நான், ப்ரசாந்த நிச்சேஷ மனோரதாந்தர :- வேறு மனோரதங்கள் எல்லாம் நன்கு ஒழிந்தவனுய், ஐகாந்திக நித்யகிங்கர: - ஒரேவிஷயமாக அழிவற்ற கிங்கரனுகி, நிரந்தரம் - இடைவிடாமல், பவந்தம் ஏவ - உன்னையே, அநுசரந் - அடிமைக்காகத் தொடர்கின்றவனுய், ஸநாதஜீவித :- நாதனுடன் சேர்ந்த வாழ்க்கையுடையனுகி, கதா – எப்பொழுது, ப்ரஹர்ஷயிஷ்யாமி - விசேஷமாக உவப்பிக்கப் போகிறேனே.

இங்கிருக்கும்போது என்ன விவேகம் பெற்றுலும் மனம் என்னென்னவோ தகாத பலன்களில் ஓடிக் கொண்டிருக்கிறது. ஒன்றிலிருந்து ப்ரயாசையுடன் விடுவித்தாலும் மற்றென்றில் செல்லுகிறது. எல்லா மனோரதங்களும் ஒழியவேண்டும். ஆனுல் உன் பணி விஷயமாக முடிந்தவரையில் மனோரதங்கள் வளரவேண்டுமாகையால் வேறு மனோ ரதங்களே மாயவேண்டும். அவை யொழிந்த உறக்கம் முதலான காலங்களிலும் அவற்றிற் கான வாசனைகள் நிறைந்திருக்கும். வேருடன் எல்லாம் தொலைய வேண்டும். அந்நிலையைப் பெறுவது பரமபதத்திலேயேயாகும்: அப்போதுதான் ஒரே விஷயமாய் திருமாலான உன்னைப் பற்றியே கிங்கரனுவேன். அந்நிலை யழியாமல் நிற்கும். அங்ஙனம் கிங்கரனுகி

நான் நீ ஸஞ்சரிக்குமிடமெல்லாம் பின்னே சென்று இளைய பெருமாள் போலே இடைவிடாமல் பணிசெய்துவரவாகும். அப்போதே எனது வாழ்க்கை நாதனோடு சேர்ந்த பதிவ்ரதையின் வாழ்க்கைக்கு ஒப்பாகும். அவ்வாறு நான் என்னை யாக்கிக் கொள்ள விரும்புவதும் எனக்காக வன்று. உன்னை ஆனந்தப்படுத்தவே. சேஷனான எனக்கு சேஷியின் உவப்புக்கு மேலான பலன் ஏது. இங்கே எவ்வளவு விவேகமிருப்பினும் ஸ்வார்த்தமாக (தனக்காக)ச் செய்கிறவண்ணம் புத்தி மாறும். உனக்கு ஹர்ஷம் வரும்படி நடக்காமலே நாள்கள் செல்லும். இந்நிலையை நீ இப்போதே எனக்கு அளித்தால்கூட நன்றெனத் தோன்றுகிறது. உன்தனக்கு அடியோமென்று பட்டிருந்தாலும் இந்நாள் எந்நாளென்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்றபடி.

**பவந்தம்.** கீழ்க்கூறியபடி ஸர்வபரிபூர்ண ஸ்வாமியான உன்னை தானே வழிபடவேண்டும். ஏவ, தேவதாந்தரங்களுக்கும் பாமரஜனங்களுக்கும் உழைக்கும் நிலைமாற வேண்டுமே. **அநுரசந்.** உன்னை இப்போது நினைத்து வந்தாலும் நீ அவதரித்து என்னைப் பிதா, சினேகிதன் போலாக்கினால் நான் உனக்குக் கீழ்ப்படாமல் மாறிவிடுகிறேன் ப்ரக்ருதி ஸம்பந்தத்தினால். மோக்ஷம் பெற்றால்தான் இது மாறும். **பவந்தமேவாநுசரந்.** நான் எப்போது மோக்ஷம் பெறுவேனோ என்று வருந்தி, என் பிறப்புக்கள் தோறும் 'யதா தருணவத்ஸா வத்ஸம்' என்கிற கணக்கிலே நீ என்னைத் தொடர்ந்தே வந்தாய். இப்போது சரணாகதனானேன். உன் கவலை விலகிற்று. ஆனால் உன்னைத் தொடரும் நிலை வரவில்லை, (வத்ஸோ வாமாதரம்) நான் உன்னைத் தொடர்வது பூர்த்தியாக வேணும். இப்போதுள்ள தெளிவு நிரந்தரமாகத் தொடரப் போதாது. **ஸநாதஜீவித:** இப்போது எனக்கு விவாஹம் செய்து கொண்ட பெண் புக்ககம் புகாதவரையிலுள்ள நிலை. மங்களவாழ்க்கைதான். ஆயினும் நாதனோடில்லையாகையால் உன்னை ஆனந்தப்படுத்த முடியவில்லை. திருவாய் மொழி 10வது பத்து நிலைவர அதனால் எனது எல்லாச் செயலும் உன் உவப்புக்காக வேண்டும். (46)

கீழே சரணாகதி அனுஷ்டித்தார். அதற்குப் பலனாக மோக்ஷத்தை விரிவாகக் கூற வேண்டினார். மேல்-முனிவர்கள் ப்ரபத்தியை பக்தி முதலானவற்றிற்கு அங்கமாகச் செய்வது உண்டு. வெகுநாள் பக்தியிலிழிந்து ஆயாசப்பட்டு கஜேந்த்ராழ்வானைப் போலே விரைந்தாலும் சரணாகதியைக் கொள்ளலாம். நீர் நேராகவே ப்ரபத்திக்கு அநாயாஸமாக, பெரும் பலனைக் கேட்கிறீரே என்று பெருமாள் நினைப்பனென்று ஆகிலும் தயை புரியவேணுமென்று இரண்டு ச்லோகத்தினாலும் சேர்த்துச் சொல்லுகிறார். அதில் தகாமையைக் கூறும் ச்லோகம் இது. வளவேழுலகில் ஆழ்வார் அருளினது போலிருக்கும். அநேகம் ச்லோகங்கள் ஆழ்வார் அருளிச்செயல்களின் நடையில் அமைந்தவையே. ஆயினும் அங்கு ஆழ்வார் தசைக்கும் ஏற்கனவே ப்ரபன்னரான இவர் நிலைக்கும் வாசியும் உண்டு.

47. திகசுசிமவிநீதம் நிர்ப(த)யம் மாமலஜ்ஜம்
பரம புருஷ யோऽஹம் யோகிவர்யாக்ரகண்யை:.
விதிசிவ ஸநகாத்யைர் த்யாது மத்யந்த தூரம்
தவ பரிஜநபாவம் காமயே காமவ்ருத்த:.

பரமபுருஷ - மிகவும் மேனிலையிலுள்ள புருஷோத்தமனே ! ய: அஹம் – நீசரிலும் கேடுகெட்ட யாதொரு நான், யோகிவர்ய - யோகம் செய்பவரில் ச்ரேஷ்டர்களுக்கும், அக்ரகண்யைஃ முன்னே எண்ணப்பட வேண்டிய (மிகப்பெரிய), விதிசிவ ஸநக ஆத்யை:- ப்ரஹ்மா, ருத்ரன், ஸனகயோகி முதலானவர்களாலும், த்யாதும்—நினைக்க, அத்யந்த தூரம் - வெகுதூரமான (ஆகாத) தவ பரிஜநபாவம் - பரமபதத்தில் உனக்கு அடிமையான இருப்பை, காமவ்ருத்த: - இஷ்டப்படி நடந்துகொண்டிருப்பவன் - சாஸ்த்திரத்திற்கு அடங்காதவன்: காமயே–ஆசைப்படுகிறேன். இப்படிப்பட்ட, அசுசிம் - மனோவாக்காயங்களில் சுத்தியற்ற, அவிநீதம் - அடக்கவொடுக்கத்துடன் சிக்ஷை பெறாத, நிர்பயம்—பயங்கெட்ட, (நிர்தயம், என்னையண்டினவரைக் கெடுக்கிறேனே என்று அவர்களிடமும் தயையில்லாத) அலஜ்ஜம்–பிறர் சிரிப்பரென்ற வெட்கமுமில்லாத, மாம் என்னை, திக் - நானே வெறுக்கிறேன்.

சாஸ்த்ரங்களில் தெரிவித்தபடி நடந்து ஸாத்துவிகமான ஆஹாரங்களையுட்கொண்டு தேஹயாத்ரை செய்பவராய் இந்திரியங்களை போகத்திற்கு விடாமல் மனத்தையும் ஸாத்விகமாக்கி, பெரியோர்களிடம் அடக்க ஒடுக்கத்துடன் நெருங்கி அவர்கள் சொன்னபடியெல்லாம் பணிவிடை செய்து அவர்கள் பூர்ணமான புருஷகாரமாயிருக்கும் போதும் உன்னிடம் நெருங்க அஞ்சி, தமக்கு யோக்யதையுள்ளதாகச் சிலர் புகழ்ந்தாலும் பெரியோர்களுடைய கோஷ்டியிற் சேர்ந்திருக்க வெட்கப்பட்டுத் தங்கள் அனுஷ்டானங்களைப் பிறர் தெரியாதபடி செய்துகொண்டிருக்கும் மஹான்கள்கூட ப்ரஹ்மருத்ரர்கள் போன்ற சிறந்த தேவர்களுக்கும் ப்ரஹ்ம பாவனை தவிர வேறறியாத வைராக்ய நிதிகளான ஸநகாதிகளுக்கும் ஈடாகமாட்டார்கள். அவர்களே உன்னை மோக்ஷத்தைக் கேட்டுப் பெற அஞ்சுகிறார்கள். இல்லையேல், என்றோ அவர்கள் மோக்ஷம் சென்றிருக்கலாமே. நானோ ஒருவித சக்தியுமில்லாதவன். முறைப்படி எல்லா சிக்ஷையும் பெறாதவன். ஆதலால் துணிந்து வெட்கமின்றி வேண்டுவது தகாதென்னலாம். இதனால் நான் காமவ்ருத்தன் என்பது தெளிவாயிற்று. எல்லா சாஸ்த்ரங்களையும் மீறி நடப்பது போல் மோக்ஷத்திற்கு நடந்துகொள்ளும் முறையும் மீறித் துணிந்து கேட்கிறேன். இதனை யாராயும்போது என்னை நான் வெறுத்துக் கொள்ளவேண்டியவனே. ஆயினும் மேலே விண்ணப்பம் செய்வதைக் கேட்டருள வேணுமென்றபடி.

அசுசிம். இங்கே ப்ராக்ருதமான தேஹ ஸம்பந்தமே அசுத்தி என்கிறாரா. ப்ராக்ருதமான தேஹத்திலும் அசுத்தமான தேஹமென்கிறாரா என்றாராய்ந்தால், நித்யர்களும் முக்தர்களும் செய்யும் கைங்கர்யத்தை ப்ராக்ருத தேஹமுடைய நான் அபேக்ஷிப்பது தகாது,

அதனுல்தானே இது ப்ரஹ்மருத்ராதிகள் கூட விரும்பத்தகாததாயிருக்கிறதென்று கருத்து உரைத்தால் முதற் பொருள் பொருந்தும். இப்போது ப்ரஹ்மாதிகளையும் அசுசிம் அவிநீதம் என்று குற்றங்கள் உள்ளவராக நினைத்ததாகும். அதற்காக சுசியாய் விநீதராய் பயலஜ்ஜாதி களையுமுடைய ப்ரஹ்மாதிகளுக்கும் எட்டாத கைங்கர்யம் நித்யரும் முக்தருமே செய்யத் தகுந்ததை அசுசி அவிநீதன் யான் வேண்டலாமோ என்ருல், அசுசிம் என்பதற்கு ப்ராக்ருதமாயினும் கைங்கர்யம் செய்யத் தகுதியற்ற பலதோஷமுள்ள தேஹஸம்பந்த மென்னல் வேண்டும். ஸ்ரீதேசிகன் 'த்வத்கைங்கர்யவிருத்தப்ரகிருதிஸம்ஸ்ருஷ்டம்' என்றது இவ்வளவையும் கருதி என்னலாம். இப்போது ஆஹாராதிகளின் அசுத்தியால் வரும் அசுத்தியும் கொள்ளத்தக்கது.

**நிர்பய** மென்ற பழைய பாடத்திற்கு உரையிட்டு, **நிர்தய** மென்பது சிலர் பாடமென்ருர் ஸ்ரீதேசிகன். நிர்பயமென்று பாடமிருக்கலாமென்று ஊஹிக்கவில்லை. அதுதான் பெரும்பாலும் கொண்ட பாடம், நிர்தயமென்பது சிலர் பாடமென்றே ஸ்ரீதேசிகன் உரையில் தெளிவாயிருக்க, நிர்பயமென்றிருந்தால் நன்ருயிருக்குமென்று ஸ்ரீதேசிகன் ஊஹித்ததாகச் சொல்வது தவறு. மேலே **நிர்தயம்** என்ற பாடத்தில் பெரியவாச்சான்பிள்ளையுரைத்த ரஸமான பொருளை விட்டு ரஸமற்ற பொருளைக் கொண்டதாக தூஷித்ததும் சரியல்ல. சுத்தர்களுக்கு போக்ய மான பரதத்துவத்திற்கு என் ஸம்பந்தம் அமுதத்தில் விஷம் கலப்பது போல் அதை கெடுப்பதாகுமென்று உரைத்தால், கலப்பது பெரும் ஸாஹஸமென்று சொல்லலாம்; நிர்தயம் என்ற சொல்லின் பொருளுக்கு இங்கே எப்படி ஸம்பந்தம். அமுதத்தில் விஷம் கலந்தால் கலப்பவன் தயையில்லாதவனென்பதை நிர்வஹிப்பது எவ்வாறு ? அமுதினிடத்தில் தயை யில்லை என்று இங்குச் சொல்லவாகுமா. அது சேதனமன்றே. அவனையனுபவிக்கும் சுத்தமான மஹான்களிடம் எனக்கு தயையில்லை யென்றும் சொல்லலாகாது; மேற்பட்டவன் கீழ்பட்ட வனுக்கு அநிஷ்டம் செய்தாலன்ருே தயையில்லை யென்னலாம். ஆகையால் நான் என்னேடு சிலரையும் (ஆத்மீயர்களையும்) சேர்த்துக் கொண்டு அதை விரும்பி உன் கைங்கர்யத்திலே ஸம்பந்தப்படுத்தினுல் என்னைப்போலே அவர்களையும் அபராதிகளாக்குவதால் நான் தயை புரியவேண்டியவர்கள் விஷயத்திலே தயைக்கு மாருக நடந்ததாகுமென்று கருத்தாகுமென்று ஸ்ரீதேசிகன் உரைத்தது, இது பெரியவாச்சான்பிள்ளையின் உரைக்கு அழகான நிர்வாஹ (வ்யாக்யான) மே யல்லது தூஷணமன்று. தயை என்பதற்குப் பொருந்தாமல் வேறு கருத் துக் கூறுவது தகாதென்று திருவுள்ளம். இப்படி கவனியாமல் தோஷங்களை ஏறிட்டுக் களிப்பதே ஸாஹஸமாகும். இது நிற்க.

ஆளவந்தார் இந்த தேஹத்தோடு அவன் கைங்காயத்தைச் செய்ய ஆசைப்பட வில்லையே. பரமபதம் சென்றுதானே. வளவேழுலகில் ஆழ்வார்திருமேனியோடு எம் பெருமான்ஸம்பந்தம் அவருக்குத் தகாததாகத் தோன்றிற்று. அது தகும். இது அவ்வா றில்லையே. இனி, இந்த தேஹத்தோடு இங்கே சில நாள் கைங்கர்யம் செய்யலாமே என்று எம்பெருமான் கேட்க, அது தகாதென்கிருரென்று கருத்து உரைக்கலாமே யென்னில், அப்போது **காமயே** என்பது கூடாது. இவர் ஆசைப்படவில்லையே. ஆகையால் அவ்வளவு

உயர்ந்த பலனை விரும்பத்தக்க அதிகாரமான ஒருவித மேம்பாடும் தமக்கில்லை யென்பதே ச்லோகத்தின் கருத்தாகும். (47)

இப்படியிருந்தும் நான் விரும்புவது எதனுலென்னில், சிலருக்கு நாளடைவில் அதிகாரம் வரலாம், எனக்கு அது வராதென்று தெரிந்திருப்பதாலும், அகிஞ்சனனை தயையை மட்டும் கொண்டு காப்பது உண்டென்று ப்ரமாணங்களால் ஏற்பட்டிருப்பதாலுமென்கிருர். (பெருமையோடு நீர்மையும் ப்ராமாணிகமென்றதாயிற்று).

48. அபராத ஸஹஸ்ரபாஜநம் பதிதம் பிமபவார்ணவோதரே.
அகதிம் சரணுகதம் ஹரே க்ருபயா கேவலம் ஆத்மஸாத்குரு.

அபராத - குற்றங்களின், ஸஹஸ்ர - எண்ணற்ற ஆயிரத்திற்கு, பாஜநம் – கொள்கலமாய், பிம - பயங்கரமான, பவ அர்ணவ - ஸம்ஸாரக்கடலின், உதரே - நடுவில், பதிதம் - விழுந்தவனும், அகதிம் - வேறு உபாயமும் வேறு பலனில் விருப்பமுமில்லாதவனும், சரணுகதம் - ப்ரபத்தியை யனுஷ்டித்தவனுமான (என்னை) ஹரே - அபராதங்களைப் போக்க வல்லனே, க்ருபயா கேவலம் - உபாயத்தை எதிர்பாராமல் தயைமட்டினுல், ஆத்மஸாத்குரு - உனக்கு அடிமையாக்கிக்கொள்.

கற்பகோடி காலம் கழிந்தாலும் வேறு உபாயம் செய்யவாகாதபடி எண்ணற்ற குற்றங்களுக்குக் கொள்கலமாகிறேன். ஆகையால் அகிஞ்சனனே, ஸம்ஸாரத்தில் ஸ்வர்க்காதிகளும் நரகம் போலவே பயங்கரமாய்த் தோன்றுகிறன. அதனுல் வேறு பலனை வெறுத்தவன். ஆகவே எவ்விதத்திலும் அகதியானேன். ஆனுல் நீயாகக் காப்பதில்லை, வியாஜம் ஒன்று நீ விதித்தபடி வேண்டும். அதற்காக சரணுகதி அனுஷ்டித்தேன். இப்படி உன் தயையை உபாயமாக்கின பிறகு நீ வேறு உபாயத்தை எதிர்பார்க்கலாகாதென்றபடி. என்னை யென்ற பதம் சேர்க்கப்பட வேண்டும். கீழ்க்கூறியபடி பெருங்குறைகள் உள்ள தன்னை மாம் என்று வாயால் சொல்லிக் கொள்ள விரும்பாமையால் சொல்லவில்லை. (48)

கர்மயோகாதிகளை நீர் செய்யவில்லையென்று 'ந தர்மநிஷ்ட்டோஸ்மி' என்றெல்லாம் கூறினீர். நீர் செய்யாமலிருப்பதாலேயே சரணுகதிக்கு அதிகாரியாகக் கூடுமா. அப்படியானுல் பக்தியோகாதிகாரிகள் எல்லோரும் அவற்றைச்செய்யாமல் சரணுகதி செய்யலாமே. அபராத ஸஹஸ்ரபாஜந மென்றேனே என்பீர்-அநாதிஸம்ஸாரத்திலே இவ்வாறில்லாதார் யார் உண்டு. ஆகையால் நிர்பந்திப்பது நியாயமன்று என்கிருன். அதன்மேல் நியாயமென்பதை வெளியிடுகிருர்—

49. அவிவேக கநாந்ததிங்முகே பஹுதாஸந்ததுக்க வர்ஷிணி
பகவந் பவதுர்திநே பத : ஸ்க்கலிதம் மாமவலோகயாச்யுத.

பகவந் - அகிலஹேயப்ரத்யநீகனுய் கல்யாண குணபூர்ணனே ! அச்யுத - ஆச்ரிதர் களைக் கீழே விடாதவனே ! அவிவேக - பரதத்துவஹித புருஷார்த்தங்கள்விஷயமான விவேகமில்லாமை யாகிற, கந-மேகங்களால், அந்த்த, இருண்ட, திங்முகே-எல்லா திக்கின் முகங்களையும் உடையதும், பஹுதா - தாபத்ரயம், சாரீரம் மானஸம் என்று பலவிதமாக, ஸந்தத - இடைவிடாமல் தொடர்ச்சியான, துக்க–துக்கங்களையே, வர்ஷிணி - பெய்கின்றது மான, பவதுர்திநே - ஸம்ஸாரமென்கிற துர்தினத்தில், பத :—வழியினின்று, ச்யுதம் - நழுவி விழுந்த, மாம் – என்னை, அவலோகய - கடாக்ஷிக்கவேணும்.

தான் ஒரு தோஷத்திற்கும் இடமாகாமல் எல்லா குணங்களும் நிறைந்திருப்பதோடு பிறருடைய தோஷத்தையும் போக்கித் தன்னைவிட்டுப் பிரியாதபடி ஆச்ரிதர்களைக் காக்கின்ற வன் நீ. அதனுல் உன்னிடம் நான் வேண்டுவது யாதெனில் - என்நிலை மிகக் கேவல மானது. இந்த ஸம்ஸாரமென்பது பெரிய துர்தினம். அதாவது ஒரு நொடிகூட ஸூர்ய ப்ரகாசத்திற்கு இடமாகாமல் மேகங்களால் மூடப்பட்ட முழுநாள். இங்கே இருள்விளைக்கும் மேகங்களாவன அவிவேகங்களே. தேஹாத்ம விவேகம், ஆத்ம பரமாத்ம விவேகம், மோக்ஷா மோக்ஷ விவேகம் உபாயபாய விவேகம் ஒன்றும் எனக்கில்லையாகையாலே எல்லா மேகங்களும் சூழ்ந்தன. அக்ருத்யகரணம், க்ருத்யாகரணம் என்ருற் போன்றவைகள் அவிவேகத்தினுலேயாகின்றன. இவைகளை நான் பெற்றிருப்பது எல்லா திக்குகளிலும் நடு வானத்திலும் எங்கும் மேகங்கள் சூழ்ந்து இடியும் மின்னலுமாயிருப்பதற்கு ஒப்பாகும். அஸார ஸம்ஸாரத்திலே ஆதிபௌதிகம், ஆதிதைவிகம், ஆத்யாத்மிகம், அதிலே சரீரம் மானஸம் மற்ற இந்திரியங்கள், ப்ராணவாயு இவற்றில் உண்டாம் தாபம் என்றவாருன துக்கங்களின் தொடர்ச்சிகளே மழையின் ஆஸாரமென்ற ஸந்ததாரைகளாகும். ஓயாத மழை யினுலேற்பட்ட பெரும் வெள்ளத்தில், பாதை புறம் மேடு பள்ளம் ஒன்றுமே தெரியாமல் ஓரிடத்தில் நிற்கவும்மாட்டாமல் செல்லும் நான் வழியினின்று வெகுதூரம் விலகி விழுந்துழல் கிறேன். என்னை நீ காண்பதே அரிதாய்விட்டது. அன்புடன் அடியேனைக் கண்டால் போதும், விடமாட்டாய், அச்யுதனல்லையோ. பக்தியோகம் ஜ்ஞானயோகம் கர்மயோகம் என்றவாருன பாதைகளில் எதிலாவது என்னைச் சேர்க்க முடியாதே. வெகுதூரத்திலிருக் கிறேனே. வழிநடக்கமாட்டாத என்னைக் கையில் எடுத்தணைத்துக் கரையேற்ற வேண்டுமே யன்றி வழியில் விட்டு வரச் சொல்லவாகாதே. இங்கே க்ஷத்ரபந்து வாக்யப்படி, மூடோऽயம் அல்ப்பமதி: அல்ப்பவிசேஷ்டிதோऽயம் க்லிஷ்டம் மநோऽஸ்ய விஷயை: ந மயி ப்ரஸங்கீ’ என்று பார்த்து கிருபை பண்ணவேணுமென்றதாம். ஆகச் சிறிதும் சக்தியும் அறிவு மில்லாமையால்தான் கர்மயோகாதிகளில்லாதவனென்றே னென்றது கருத்து.

இப்போது அவற்றைச் செய்ய சக்தியும் அறிவும் இல்லையாகில் விரைவில் அவற்றைப் பெறப் பார்க்கலாமே என்று நினைக்க வேண்டா. ப்ரபத்தி சாஸ்த்ரமே என்னை நீ அருளாத போது வீணுகும்; இது உண்மை என்கிருர்.

50. நம்ருஷா பரமார்த்தம் ஏவ மே ச்ருணு விஜ்ஞாபநமேக மக்ரத:•
யதி மே ந தயிஷ்யஸே ததோ தயநீயஸ் தவ நாத துர்லப :.

நாத - இமையோர் தலைவா ! நம்ருஷா - பொய்யாகாத, பரமார்த்தம் ஏவ - மெய்யே யான, மே ஏகம் விஜ்ஞாபநம் - எனது விண்ணப்பமொன்றை, அக்ரத: - எதிரே நின்று ச்ருணு - கேளாய். என்னவெனில் - நீ, மே-என்விஷயத்திலே, ந தயிஷ்யஸே யதி - தயை புரியப் போகிறாயல்லையானால், தத :- அப்போது, தவ - உனக்கு, தயநீய : - தயைபண்ணப் படவேண்டியவன், துர்லபன் - அகப்படமாட்டான் (யாருமில்லை).

அறிவிலியாய் அசக்தனாயிருப்பவனை ப்ரபத்தியை வியாஜமாகக் கொண்டு தன் அருளாலே நீ காப்பதாக ப்ரமாணம் கூறியது. கடைத்தலையிலிருக்கும் யான் தயை பண்ணத் தகுந்தவன். என்னை ப்ரபத்திக்கு அதிகாரியாக நினைக்காமல் தயை புரியாயாகில், தயாபாத்ரமாகக் கூடியவன் யாருமில்லை. இது நான் சொல்வது உண்மை. பொய்யன்று. ஸம்மதமில்லாத காரணத்தாலே நேரில் நின்று கேட்கவிரும்பாமல் விலக வேண்டா. உன் தயையும் அது விஷயமான சாஸ்த்ரமும் வீணாகாமைக்காக இதனை மெய் நின்று கேட்டருளா யென்றபடி.

பெரியவாச்சான்பிள்ளையுரையில் பரமார்த்தமேவ என்றவரையில் தனிவாக்யம் போல் தோன்றினாலும், பூர்வார்த்தம் ஒரே வாக்யமாம், பரமார்த்த சபதம் உண்மை என்ற பொருளிலே புல்லிங்கமான (ஆண்பாலான) படியால், பரமார்த்தமென்பது இரண்டாம் வேற்றுமையாய் விஜ்ஞாபநம் என்பதற்கு விசேஷணமாகும். நம்ருஷா என்று நகாரமானாலும் பொய்யல்லாத என்று விசேஷணமாகக் பொருள் கொள்ளலாம். இனி வாக்யத்தைப் பிரித்தா லும் குற்றமில்லை. அப்போது, ந ம்ருஷா-இது பொய்யன்று, பரமார்த்தமேவ-நான் சொல்லப் போகிற வாக்யம் உண்மையான பொருளையுடையதே எனவுரைக்க. பஹுவ்ரீஹி. அங்கே வாக்யமே கேட்பிக்கப் படுகிறபடியால் இவ்வாறும் உரைக்கலாம். இதற்காகவும் பாஷ்யத்தில் வாக்யபதம் உள்ளது. அக்ரத : என்பதற்கு முந்துற முன்னம் என்ற பொருள் உரைக்கப் பட்டது. இவ்வளவுதூரம் விண்ணப்பம் செய்த பிறகு ப்ரபத்திக்கும் பிறகு இது சொல்லப்படு கிறபடியாலே, எதிரில் என்ற பொருள் பாஷ்யத்தில் உள்ளது. இனி, முன் நான் விண்ணப் பித்ததை கவனித்துக் கேட்கவில்லை, இதை முன்னே கவனித்துக் கேட்டருள். பிறகு அதை யும் கவனிக்கவாகுமென்ற கருத்துக் கூடுமாகில் கொள்க. அடுத்த ச்லோகத்திலே சிறிது பொய் கலக்கப் போகிறாராகையால் இங்கே சொன்னது உண்மையென்று உறுதியாகச் சொல்லுகிறார். அதனால் இருபொருளான சொல் 'அக்ரத:' என்பதென்னலாம். இதெல்லாம் ருசிக்கிறபடி கொள்ளலாம். (50)

என்ன, உமக்கொருவருக்காக ப்ரபத்தி சாஸ்த்ரத்தை நான் ஏற்படுத்தினேனா. வேறு ப்ரபன்னர்கள் பலரை அனுக்ரஹித்திருக்கிறேன்; இனியும் அனுக்ரஹிப்பேன். தயநீயன் கிடைப்பது அரிதென்றது தவறு என்பான் எம்பெருமான். இதற்கு மறுமொழி - ப்ரபத்தி

சாஸ்த்ரத்திற்கு அதிகாரிகளாக ஏற்பட்டவர்களில், உபாயம் அனுஷ்டித்திருந்தும் காரண மில்லாமல் சிலரை விடுவதானுல் எல்லாரையுமே விடவேண்டியதுதான். இதற்கு முன் மோக்ஷம் பெறுவிக்கப்பட்ட வரையும் கீழே அனுப்ப வேண்டியதுதான். ஆக தயநீயனில்லை யென்று சொன்னது உண்மையே யென்றவாறு.

இனி மோக்ஷத்திற்கு அவன் தவிர வேறு கதியில்லை யென்பதையும் சேர்த்து உறுதி யாக ப்ரார்த்திக்கிருர்—

51. ததஹம் த்வத் ரிதே ந நாதவாந் மத்ரிதே த்வம் தயநீயவாந் நச.
விதிநிர்மிதமேதமந்வயம் பகவந் பாலய மா ஸ்ம ஜீஹப:.

தத் – ஆகையால், அஹம் - நான், த்வத் ரிதே - உன்னைத் தவிர்த்து. ந நாதவாந் - வேறு நாதன் உடையனல்லேன், த்வம் ச - நீயும், மத் ரிதே - என்னைத் தவிர்த்து, ந தய நீயவாந் – தயாவிஷயமாகத் தகுந்தவனற்றவனுகிருய். ஆனபடியால், பகவந் - குறைவற்ற குணவானே ! விதி நிர்மிதம் - தெய்வாதீனமான, ஏதம் - இந்த, அந்வயம் - இணைப்பை, பாலய - காக்கவேணும். தயைக்கு என்னை விஷயமாக்கவேணும். மா ஸ்ம ஜீஹப: - விடச் செய்யவேண்டாம்.

எப் பலனும் நீ அளிக்காமல் யாராலும் பெறப்படவாகாது. மோக்ஷம் விடாதபடி கவனத் துடன்அளிப்பது நீ மட்டுமே. நானும் வேறு யாரையும் கேட்கவாகாது. எனக்கு நீயே ஸ்வாமியுமாகிருய். அதுபோல் உன் அருளுக்குப் பாத்ரமாக வேண்டியவன் என்னை விட்டு யாருமில்லை. மற்றவர்களை நீ அருளாமற் போனுலும் எப்படியாவது நாளடைவில் வேறு விரகில் இழிந்து உன்னை அவர்கள் பெறலாம். அவர்கள் நிலை எனக்குக் கிடையாது. நான் மிகவும் நீசன். ஒருநாளும் மேலெழ என்னுலாகாது. ஆதலால் நானே முதற்பாத்திரமா வேன். நான் உன்னை வேண்டும் படி யமைந்ததே ஆச்சர்யம். ஏதோ தெய்வாதீனம் அஜ்ஞாதஸுக்ருதாதிகள் மூலமாக எப்படியோ வந்தது. நிஷ்காரணமாய் நீ விதிக்கமாட் டாய். மீண்டும் காரணம் கூடுவதரிது. நீ விடாமல் தயைக்கு விஷயமாக்கு. என்னையும் விடாதபடியிருக்கச் செய்.

முதற் பாதத்திற்கு இணங்க இரண்டாம் பாதத்திற்கு நான் ஒருவனே தயநீயன் என்பது பொருள். இது தம்மை மிக நீசனுக நினைத்துச் சொன்னதாம். பல தயநீயர்களில் என்னைவிட்டுப் பிறரால் மட்டும் தயநீயரை உடையவனுக உன்னை நீ கொள்ளலாகாதென்ற பொருளும் உண்டு. நீ நாதனுய் (ஸ்வாமியாய்) உடைமையைக் காக்க உரிமை கொண்ட வனுயிருப்பதாலே பல தயநீயர்களைக் காத்தாலும் என்னை ஒருவனைத் தவறிவிட்டால் மற்றவ ரோடு சேர்ந்த உன் இருப்பும் உனக்கு இருப்பாகத் தோன்ருமல் தயநீயரெல்லோரையும்

விட்டது போலவே தோன்றுமென்பதும் இங்குக் கருத்திலுள்ளது. இதனுல் ஸ்வாமித்வ-வாத்ஸல்யங்கள் புஷ்கலமாகக் குறிக்கப் பெற்றன. ஏததந்வயம் என்ற பாடமே பெரியவாச்சான் பிள்ளை கொண்டிருந்தாலும், ஏதமந்வயம் என்ற ஸ்ரீ தேசிகன் பாடத்தையும் ப்ராசீனமென்று இசைந்தது போல் கிழே நிர்பயம் மாம் என்றதும் ப்ராசீனமென்க. இங்கே கர்மதாரயனை விடுவது போல் நிவேசிதாத்மா என்றவிடத்திலும் அதை விடுவது ஸ்வரஸமாகும்.

பாலய :—முன்னேருரையில் 'புஜபாலநாப்யவஹாரயோ:' என்ற வாக்யம் அவசியமன்று. விடவேண்டாமென்னுமல் மா ஜீஹப: விடுவிக்க வேண்டா என்றது, எனக்கு வந்த தெளிவை மாற்ற யாரையாவது உபதேசம் செய்பவர் போல் காண்பித்து ப்ரபத்தி சாஸ்த்ரார்த்தத்தில் அவிச்வாஸாதிகளை உண்டுபண்ண வேண்டா. இந்த ஸமயம் விட்டால் அவ்வாறு கூட நேருமோ என்றஞ்சுகிறேன். புத்தி கெடாதபடி காக்க வேணுமென்றெல்லாம் கருத்திற் கொண்டென்க. (51)

'இவ்வளவு நீர் சொல்வதெல்லாம் நீர் ப்ரபத்தி செய்ததாக வைத்துதானே. கீழ் க: ச்ரீ: ச்ரிய: என்றெல்லாம் என்னைப் பற்றி விரிவாகச் சொன்னீர். உம் ஸ்வரூபத்தை நீர் அறிந்தீரா. என்னவென்றறிந்து ப்ரபத்தி செய்தீர். என்னிடம் போல் வேறுயாரிடமாவது நீர் ஸம்பந்தபட்டிருக்கிறீரோ என்னவோ. புருஷார்த்தம் என்பது ஆத்மாவை எப்படி அறிகிருர்களோ, அதற்குத் தக்கவாறு தானே அமையும். மானிட தேஹமே ஆத்மா என்பவனுக்கு ஸ்வர்கத்தில் ஸுகானுபவம் புருஷார்த்தமாகுமா அதுபோல்' என்று எம்பெருமான் வினவ— அதற்கு மறுமாற்றம்—

52. வபுராதிஷு யோऽபி கோऽபிவா குணதோऽஸாநி யதாததாவித:.
ததயம் தவ பாதபத்மயோ: அஹமத்யைவ மயா ஸமர்ப்பித:.

ப்ரபத்தி பண்ணுகிற நான் என்று கர்த்தாவைச் சேர்த்துக் கொள்க. வபுராதிஷு. தேஹம் முதலான வஸ்து ஸ்வரூபங்களிலே, ய: கோऽபி அபிவா - ஏதேனுமாகவும், குணத: -ஆத்ம குண விஷயத்திலே, யதாததாவித: - ஏதேனுமுடையவனுகவும், அஸாநி-ஆகக்கடவேன். எனது ஸ்வரூபஸ்வபாவங்களை நான் உள்ளபடி யறியாமலிருக்கலாம், தத்-அறியாமலே ப்ரபத்தியதிகாரியாகையாலே, அயம்-கீழ்ச் சொன்னவற்றில் ஒரு ஸ்வருஸ்வபாவமுடைய, அஹம்-நான், தவ-உனது, பாத பத்மயோ:-திருவடித் தாமரைகளிலே, அத்ய ஏவ-இப்போதே, மயா - என்னுலே, ஸ்மர்ப்பித: - ஸமர்ப்பிக்கப்பட்டேன்.

ஆத்ம விசாரத்திலே வாத ப்ரதிவாதங்கள் ப்ரபலமாயிருக்கின்றன. தேஹமே ஆத்மா என்பர். தேஹம் இருந்தும் இந்திரியம் இல்லையாகில் அறிவு கிடையாதாகையால் இந்திரியம் ஆத்மா என்பர். கண் காது முதலான இந்த்ரியங்கள் பலவாயிருப்பதால் ஒரு

தேஹத்தில் ஒரே ஆத்மா என்பதற்காக மனதே ஆத்மா என்பர். ஜீவிப்பது ப்ராணவாயுவைக் கொண்டாகையால் உறக்கத்திலும் உழைத்துவரும் ப்ராணனையே ஆத்மா என்பர். இவற்றை விட்டு வேருக ஆத்மாவைச் சொல்பவரும் பலவிதமாயிருக்கின்றனர். ஆகையால் எனக்கு ஸ்வரூப நிச்சயம் எப்படி யேற்படும். இதனுல் குணவிஷயத்திலும் நிச்சயமில்லை யென்பது சொல்லாமலே விளங்கும். ஆத்மா நித்யமா அநித்யமா, அணுவா விபுவா உடலளவா, ஜடமா ஸ்வயம்ப்ரகாசமா, ஞானமென்ற நிலையான குணமுள்ளதா இல்லையா என்றவாருக பக்தியோகம் செய்கின்றவர்கள் ஆத்ம ஸ்வரூபத்தை ஆராய்ந்து கண்டு அதன் பிறகே அதை அனுஷ்டிப்பதால் அவர்களுக்கு அது விஷயமான தெளிவு வேண்டுமாயினும் ப்ரபத்தி பண்ணுமெனக்கு இது வேண்டாமென்று நினைக்கிறேன். நான் வேறெருவருக்கு ஸம்பந்தபடவில்லை யென்பதை அநந்யகதி என்று முன்னமே தெரிவித்தேன். ஐகாந்திக நித்யகிங்கர: என்றேனுகையாலே தேஹமே ஆத்மா என்ருல்கூட ஆத்மா உள்ள வரையில் உனக்கே கிங்கரனுக வேண்டும். அதற்காக நான் தெளிய வேண்டிய விஷயமாவது உனக்கே நான் சேஷனென்பதே. இதை உனக்கே என்னை அர்ப்பணம் செய்து அறிவிக்கிறேன். இப்போதே அர்ப்பணம் செய்கிறேன். ஆத்ம ஸ்வரூப ஸ்வபாவங்களை உள்ளபடி உணர்ந்த பிறகு ஸமர்ப்பிக்கிறேனென்பதில்லை. எந்த ஸ்வரூப ஸ்வபாவமானுலும் உனக்கே சேஷம். 'யோஹமஸ்மி ஸ ஸந் யஜே' என்றது வேதமென்றபடி.

இந்த ச்லோகத்தினுல் உள்ளபடி ஆத்மாவை சாஸ்த்ர மூலம் அறியாதாரும் ப்ரபத்தி பண்ணிக்கொள்ளலாம். ஸ்ரீமந் நாராயணனுக்கே சேஷபூதன், ஸ்வதந்த்ரனல்லேன் என்ற அம்சம் முக்கியம் அறிய வேண்டுமென்றதாயிற்று. ஜ்ஞாநாநந்த ஸ்வரூபன் என்ருற் போன்ற அம்சங்களைவிட ஸாரமானசேஷத்வம் முக்கியமாக அறியப்பட வேண்டியதாயிருப்பதால் சேஷத்வம் ஸ்வரூப நிரூபகமென்று ஸ்ரீபாஷ்யகாரருக்குத் திருக்கோட்டியூர்நம்பி அருளினதாகச் சொல்வது. இந்த ச்லோகம் அதற்கு மூலமாகும். முதலில் ஆத்மாவைத் தெரிந்துகொண்டுதானே இது பகவானுக்கு சேஷமென்றறிய வேண்டும். முதலில் தெரிந்து கொள்வது எவ்வாறெனில், அஹம் என்று அறிவதே போதுமென்க. இதற்காகவே இங்கு **'அஹம்'** என்றது. அன்றி, தேஹாத்மப்ரமம், ஸ்வதந்த்ராத்மப்ரமம் என்று இருவகை ப்ரமங்கள் உண்டு. அவற்றில் தேஹமே ஆத்மா என்ற ப்ரமம் இருந்தால் கூட பகவத் கடாக்ஷத்தினுல் பிறகு தேறலாம், ஸ்வதந்த்ரன் ஆத்மா, ஈச்வரனில்லையென்ருே ஜீவனும் ஈச்வரனும் ஒன்றேயென்ருே ப்ரமம் இருக்கலாகாதென்று, சார்வாக மதத்தை விட அத்வைத மதத்திற்குள்ள கீழ்மையும் இங்கே குறிக்கப்பட்டதாம்.

**யோபிகோபிவா.** ய: கோபி என்பதே போதுமாயிருக்க எதற்காக அதிகமான சொல் என்னில். 'யோபிகோபி பஜதே கிரீசதாம்' என்றிப்படியும் ப்ரயோகமுண்டு. மேலும் அபி என்றும் வா என்றும் சொற்களுக்குப் பலனும் உண்டு, தேஹமாவது இந்த்ரியமாவது என்று ஏதேனுமொன்று ஆத்மா என்றதுபோல், தேஹேந்த்ரியாதி ஸங்காதம்—அதாவது எல்லாவற்றின் சேர்க்கையோ, சிலவற்றின் சேர்க்கைமட்டுமோ ஆத்மாவாகலாமென்றும்

பக்ஷங்களைக் காட்டவாம் அவை. இனி, மீமாம்ஸாதி சாஸ்த்ரங்களிலே ஒரு பக்ஷம் கூறின பிறகு வேறுபக்ஷம் கூறும்போது அபிவா என்பது உண்டு. அதற்கு இணங்க [வபுராதிஷ" ய : கோபி என்று சொல்லத் தொடங்கும்போது அபிவா என்று ஆரம்பம் கருதப்படுகிறது. அதனால் முன்னே 'த்வத்பாத மூலம் சரணம் பரபத்யே' என்று ப்ரபத்தி பண்ணும்போது ஆத்மஸித்தி க்ரந்தத்தில் நான் விரித்துரைத்து ஸ்த்தாபித்தபடி எல்லாம் விசதமாக அறிந்து தான் ப்ரபத்தி அனுஷ்ட்டித்தேன். அத் தெளிவைத் தெளிவாக இசையாமற் போனாலும் எனக்கு நஷ்டமில்லை. சேஷத்வஜ்ஞானம் மட்டும் போதுமென்று வேறு பக்ஷம் தொடங்குவதை யறிவிக்க அபிவா என்று அதிகமாக அருளினர். இதனால் அவிசத ப்ரபத்தியும் உபாயமென்று இருவகைகளை யறிவித்ததாம். இது, "தவ பரோऽஹமகாரிஷி தார்மிகைச் சரணமித்யபி வாசமுதைரிரம்" என்று பட்டர் ஆசார்ய நிஷ்ட்டை உக்திநிஷ்ட்டை என்ற ப்ரபத்திகள் இரண்டைக் காட்டினது போலாம். இப்படியும் உபாயமுண்டென்பதற்காக இவ்வாறு கூறினாலும், ஜீவாத்மா தேஹாதிகளைக்காட்டிலும் வேறாய் அணுவாய் ஜ்ஞானானந்தமாய் நித்யமாய் அபஹத பாப்மா என்றவாறெல்லாம் கூறப்பட்டதாய் திவ்ய தம்பதிகளுக்கே நித்ய சேஷமாய் எல்லாம் அறியவும் அனுபவிக்கவுமான ஜ்ஞானமென்ற குணத்தை எப்பொழுதும் உடையதாய் பரிபூர்ண ப்ரஹ்மானுபவ கைங்கர்ய யோக்யமாய் ஒன்றொடொன்று வாசியில்லாமலிருக்குமென்கிற நிச்சயம் இவருக்கு உண்டென்பதை ஆத்ம ஸித்தி முதலான இவர் க்ரந்தங்களே அறிவிக்கும். (52)

உன் திருவடியில் என்னை இப்போது ஸமர்ப்பிக்கிறே னென்றார். இதைக் கேட்ட எம்பெருமான், இதுவரையில் பலபேருக்கு சேஷமாகவோ ஸ்வதந்த்ரமாகவோ உம் இஷ்டப் படியிருந்த உம்மை இப்படி எனக்கே சேஷமாக்கி ஏன் ஸ்வாதந்த்ர்யத்தைக் கைவிடுகிறீர். எனக்கு மட்டுமாக ஸமர்ப்பணம் செய்கிறீரே, பிராட்டிக்கும் எனக்குமாக இருவருக்குமாக வில்லையானால் நான் எப்படி இசைவது. இப்படி ஸ்வதந்த்ரமாகி மாற்றும் நீர் பின்னே இதை வேறுவிதம் மாற்றினால் என் செய்வது. உமக்கு ஸ்வாதந்த்ரயம் இருப்பது மயா என்ற உமது சொல்லாலேயே வெளியாகிறதே என்றான். அதன்மேல் நான் அவ்வாறு கருதுவேனோ, என் வாசகத்திற்கு அவ்வாறு பொருளல்லவே என்றறிவிக்கிறார்:—

53. மம நாத யதஸ்தி யோऽஸ்ம்யஹம் ஸகலம் தத்த்தி தவைவ மாதவ.
நியத ஸ்வம் இதி ப்ரபுத்த தீ: அதவா கிந்நு ஸமர்ப்பயாமி தே.

நாத - நித்ய ஸ்வாமியே, யத்- எந்த வஸ்து, மம-எனதாக, அஸ்தி-இருக்கின்றதோ, அஹம் - நான், ய: அஸ்மி - எதாயிருக்கிறேனோ, தத் ஸகலம் - அதெல்லாம், மாதவ - திருமாலே, தவ ஏவ ஹி - திருவுடன் சேர்ந்த உனக்கேதானே, நியதஸ்வம் - எப்போதும் சொத்தாகும். இதி - இவ்வாறு ப்ரபுத்ததீ:- ஏற்கனவே தெளிவான அறிவு உடைய நான், அதவா - அவ்வறிவுக்கும் பின்னால் கூட, தே – உனக்கு (மட்டும்) கிம் நு - எதைத்தான் ஸமர்ப்பயாமி - எனதாகக் கொண்டு நானாக ஸமர்ப்பிப்பேன்.

நானும் என்னைச் சார்ந்த சேதநாசேதன வஸ்துக்களும், என் பரம் முதலானவையும் எல்லாம் உனக்கும் திருவுக்கும் என்றும் பொதுவாக சேஷமாயிருப்பதை நான் முன்னமே உணர்ந்திருப்பதால் நான் ஸ்வதந்த்ரமாய் புதிதாய் ஸமர்பிப்பது ஒன்றுமில்லை. நான் செய்த தெவ்வாறெனில்—சேதநனுன என்னை உனக்கு அதீனமான கர்த்தாவாக்கி, 'ஸ்வாத்மாநம் மயி நிக்ஷிபேத்' என்று என்னைப் பார்த்து எவ்வாறு செய்ய விதித்தாயோ, அவ்வாறேயாகு மென்றபடி. இங்கே பெரியவாச்சான்பிள்ளை உரையில் முன் ச்லோகத்திலே தாம் பண்ணின ஆத்ம ஸமர்ப்பணத்தை அநுசயிக்கிருர் என்று அவதாரிகை வைத்து, முடிவில் 'அதவா என்று கீழில் ஸமர்ப்பணபக்ஷ வ்யாவ்ருத்தி. உனக்கு எதை ஸமர்ப்பிப்பேன் ஸமர்ப்பணீயம் எது. ஸமர்ப்பிப்பார் ஆர். ஸமர்ப்பணீயமாகைக்கு ஸ்வாம்யமில்லை. ஸமர்ப்பிக்கைக்கு ஸ்வாதந்த்ர்யமில்லை' என்ருர். இங்கு அநுசயமென்ருல் பச்சாத்தாபம்—ஏன் செய்தேனென்று வருந்துதல். இதனை விரிவாக முடிவில் சொன்னதால் தாம் செய்த ஸமர்ப்பணம் தவறென்று தெளிந்தாரென்றதாயிற்று. இதைத் தான், அநுசயித்து முன் செய்த ஸமர்ப்பணத்திற்கு ப்ரதிக்ஷேபம் இந்த ச்லோகத்தில் செய்யப்படுவதாக இவர் உரைத்ததாக தேசிகன் அறிவித்தது. வ்யாவ்ருத்தி என்ற பதமும் உரையில் உள்ளதே. இதைவிட ப்ரதிக்ஷேபமாவது மறுப்பு-அதாவது நான் ஸமர்ப்பணம் செய்யவில்லையே என்று பொய் சொல்வது என்று யாரும் சொல்லவில்லை. ஆகையால் அனுசயித்தாலும் ப்ரதிக்ஷேபிக்கவில்லை யென்று எதிர்ப்பது சரியல்ல. அனுசயமும் ப்ரதிக்ஷேபமும் இவருக்கு ஒன்றில் முடியும். பூர்ணப்ரதிக்ஷேபமின்றி ஒருவாறு அநுசயம் கொண்டால் ஸ்ரீ தேசிகன் ஸாங்க ப்ரபதநாதிகாரத்தில் 'அநுசயம் பண்ணிற்றும்' என்றதோடு ஒன்ருகும். விவாதமில்லை. உண்மையை மாற்றி ஒன்ருக்கலாகாது.

பிறகு அவர் வரைந்திருப்பதாவது 'ஸம்ஸாரபீதியாலே ஸமர்ப்பிக்கையும் ஸ்வரூப—யாதாத்ம்யஜ்ஞானத்தாலே அநுசயிக்கையும் இரண்டும் யாவந்மோக்ஷம் அநுவர்த்திக்கக்கடவது' என்ரும். செய்தது தவருகில் செய்யாமலிருப்பதே உசித மென்று நினைக்காமைக்காக ஸமர்ப்பிக்கையும் அநுசயிக்கையும் இரண்டும் வேண்டும் என்கிருர். ஒன்றுக்குக் கர்த்தாவானமை பிசகென்றபோது இரண்டுக்குக் கர்த்தாவாக வேண்டுமென்கிருர். ஒரு தரம் செய்ததே தவறென்றபோது மோக்ஷம் பெறும்வரையில் தொடர வேண்டுமென்கிருர். இல்லையேல் ஸம்ஸாரபீதனுகமாட்டான், அநுசயிப்பது தொடரா விட்டால் தத்துவஜ்ஞானமுடையனுக மாட்டானென்கிருர்.

இதை யெல்லாம் வீணுகக் கிளராமல், ''கீழ் ச்லோகத்திற்கு விவரணமாகப் பிறந்தது இந்த ச்லோகம் என்று அருளிச் செய்கிற தேசிகன் திருவுள்ளமும் அநுதாபபரமாக வ்யாக்யானித்தருளுகிற பெரியவாச்சான்பிள்ளை திருவுள்ளமும் பர்யாயத: ஒக்குமேயன்றி வேறுபடாது'' என்று எழுதினதோடு நின்றிருந்தால் நன்ருக இருக்கும். இதை விட்டு வேறு கருத்தைக் கூற முன் வருகிறவர்கள் சொல்வதெல்லாம் பொருந்தா என்பதே தேசிகன் திருவுள்ளம்.

இப்படி உண்மையிருக்க, இதைவிட்டு, ஸமர்ப்பணம் செய்து அனுசயித்து வரட்டுமே. அதனுலென். ஆழ்வார் உலகிலுள்ள வஸ்து ஒன்றும் உயர்வற உயர்ந்த பிரானுக்கு ஒப்பாகாதென்று சொல்லிக்கொண்டே, கொண்டல்வண்ணு, கடல்வண்ணு என்றெல்லாம் கூறவில்லையா. யார் புகழ்ந்தாலும் பழிப்பேயாகும், ஒழுங்காகக் கூறலாகாதென்று சொல்லிக்கொண்டே இத்தனை பாசுரங்களால் புகழ்கின்ருரே. கூரத்தாழ்வான் மூவுலகும் ஜெயித்து விளங்கும் உனக்கு, கம்ஸாதிகளை ஜெயிப்பது ஒரு பெருமையா என்று கூறிக்கொண்டே, அதையே பெருமையாகக் கூறுகிருரே. ஆழ்வார் இந்த விஷயத்தையே எடுத்து, (2. 3. 4.) எனதாவியுள் கலந்த பெருநல்லுதவிக் கைம்மாறு எனதாவி தந்தொழிந்தேன் இனி மீள்வதென்பதுண்டே. எனதாவியாவியும் நீ, பொழிலேழும் உண்ட எந்தாய்! எனதாவி யார் யானுர் தந்தநீ கொண்டாக்கினையே' என்று தன்னைஸமர்ப்பணம் செய்து பிறகு அநுசயிக்கவில்லையா; திருக்குருகைப்பிரான்பிள்ளான் கூட அங்கு அவ்வாறே உரைத்தருளவில்லையா என்றெல்லாம் ஆக்ஷேபத்தை வளர்த்துவதெதற்கு? இரண்டு ஆசார்யர்களுடைய திருவுள்ளமொன்றே. சொல்லில் பேதமேயன்றி கருத்து வேறில்லை யென்றதோடு நிற்பதே தகும்.

·

குறித்த உதாரணங்களி லொன்றும் இங்கே பயன்படாது. எம்பெருமானுக்கு ஒப்பாக ஒன்றையும் சொல்லவாகாதென்பது உண்மை. ஏனெனில், உபமேயத்தைவிட உபமானம் உயர்ந்ததாயிருக்கவேண்டும். எந்த அம்சத்தில் ஒன்றை உபமானமாகக் கூறுகிரேமோ, அதற்கு அந்த அம்சத்தில் உபமேயத்தைவிட உயர்ச்சி வேண்டும். எம்பெருமானிடமே எல்லா அம்சமும் உயர்ந்திருக்க, வேருென்று ஒப்பாகாது. இதை யறிவித்த ஆழ்வாரே கடல்வண்ணு என்றது, கடலுக்கு அவ்வம்சம் உயர்ந்ததென்ற கருத்தாலல்ல. நமக்குத் தெரியாத வஸ்துவைத் தெரிந்த வஸ்துவோடு ஒப்பிட்டுக் கூறினுலல்லது எளிதில் அறிய முடியாதென்ற கருத்தினுல். உயர்ச்சியிராமற் போனுலும் ஒருவாறு ஒப்புமை யுண்டாகையாலே எல்லாம் தகும். புகழ்வது பழிப்பதாகுமென்பதற்கும் புகழக்கூடாதென்ற கருத்தில்லை. நேர்த்தியாய்ப் புகழவாகாதென்பதேயாம். கம்ஸாதி வதமும் பகவானுக்கு கீர்த்தியாகும் பிறர் செய்யும் செயலுக்கும் அதற்கும் வாசியைக் காணும்போது. அவனுடைய பெருஞ் செயலைக் காணும்போது மட்டும் இது சிறியதாகலாம். அதனுல் ஒவ்வொன்றும் புகழிற் சேரும். ஸௌசில்யாதி குணங்களில் ஈடுபடும்போது சொற்பமான செயலும் அனுபவிக்கப்படும். நம்மாழ்வார் ஆத்மஸமர்ப்பணம் பண்ணி அனுசயித்தாரென்பதையும் இந்த ஸ்தோத்ரரத்ன ச்லோகத்தையும் சேர்த்து நாம் ப்ரபந்தரக்ஷையில் விரிவாக உரைத்திருப்பதைக் காண்க. ஆழ்வார் ஆரும்பத்தில் ப்ரபத்தி அனுஷ்டிக்கப் போகிருர். அதற்கு முன்தசை அங்கு. இங்கு ப்ரபத்தி ஏற்கனவே அனுஷ்டித்தாய்விட்டது. இது பின்தசை. அங்கே எம்பெருமான்கலவியில் வந்த களிப்பால் கைம்மாறு வேண்டியிருந்தது. இங்கே அதற்கு நேர்மாருகும். எம்பெருமான் எங்கு விடுகிருனே என்றஞ்சி தவருமல் கீழ்த் தாம் செய்ததை யெல்லாம் விரித்துரைக்கும் ப்ரகரணம் இது. எங்கும் சரணுகதியில் பரந்யாஸம் முக்யமாகையாலே அதுமட்டுமன்றி பலனின் ஸமர்ப்பணமும் செய்யப்பட்டதை ப்ரஹர்ஷயிஷ்யாமி என்றவிடத்திலே காட்டி ஸ்வரூப ஸமர்ப்பணம் செய்ததை யறிவிக்

கும் இடம் இது. அவன் பரீட்சையில் தேறி வருகிற இடத்தில் இவர் தவருக நடந்து அனுசயிக்காமலிருப்பது யுக்தம். கீழே, திகசுசிம் என்ற ச்லோகத்திலே அனுசயித்தாரேயென்னில், அந்த ச்லோகம் மேல் ச்லோகத்துடன் சேர்ந்து ஒரே வாக்யமாகும். அன்றி, யோகத்திற்கும் வசமாகாத உன்னை ப்ரபத்தியை ப்ரதான காரணமாக்கி வேண்டினுல் என்னை நிந்திப்பதாம்; உன் தயையையே ப்ரதானமாக்குகிறேனென்கிருர். ஒருக்கால் ஆளவந்தார் தமக்கு சாஸ்த்ர ஜ்ஞானம் நன்ரு யிருந்திருந்தும், தேஹாத்ம விவேகம் செய்தவர்களுக்கும் பழைய வாசனையாலே தேஹாத்ம ப்ரமம் வருகின்றது போல் தமக்கு வந்ததால் ஸ்வதந்த்ரமாய் அவனுக்கு முன்னே சேஷமாகாத வஸ்துவாக ப்ரமித்து ஸமர்ப்பித்துவிட்டுப் பின்னே பச்சாத்தாபப் பட்டார் என்றே கொண்டாலும் அவர் அதேபோல் மோக்ஷம் வரும்வரையில் ஸமர்ப்பணமும் அனுசயமும் செய்துவர வேண்டுமென்றும், ஒவ்வொரு ஆஸ்திகனும் இந்த விதமே கடைவரையில் நடத்திவர வேண்டுமென்றும் விதிப்பது தகுமா? யாராவது புத்தி மாருட்டத்தால் தெரியாமல் ஸமர்ப்பணத்தைச் செய்தால் உடனே அனுதாபப்பட வேண்டுமென்று ஒன்றைமட்டும் விதித்தால் நியாயமாகும்.

இதை யெல்லாம் அறியாமல் ஆசார்யனிடம் ஜீவாத்ம பரமாத்ம விவேகம் பெற்று ஒருவன் ப்ரபத்தி செய்யத் தொடங்கினுல், அதை எப்படி செய்வது. தான் ஸ்வதந்த்ரகர்த்தனல்லன், தான் எப்போதுமே எம்பெருமானுக்கு சேஷபூதன் என்றறிந்தவன் ப்ரபத்தியை அனுஷ்டிக்கும்போது எப்படி ப்ராந்தியாகச் செய்ய முடியும். இப்படி நித்ய கர்மானுஷ்டானம், கைங்கர்யமெல்லாம் கூட ஸ்வதந்த்ரமாய்ச் செய்து ஒவ்வொன்றுக்கும் அனுசயப்பட வேண்டியது அவசியமாகுமே. 'அங்கே ஸாத்விகத்யாகத்தோடு செய்யும்படி எம்பெருமானும் அருளினுர்' என்னில், ப்ரபத்தியும் அவ்வாறுதான் அஹிர்புத்ந்யஸம்ஹிதாதிகள்படி செய்யப்பட வேண்டும். அப்படி செய்த ஆளவந்தாருக்கு ப்ராந்தி வருமா. நமக்கே ப்ராந்தி, செய்யும்போதில்லையே.

சிலவிடங்களில் விவேகமிருந்தாற்கூட ஏறிட்டுக் கூறுவதுண்டு. 'அமர்யாத: க்ஷுத்ர:' என்னப் போகிருரே. அதெல்லாம் பின்னுள்ளாரான பாபிகள் தங்களை அவ்வாறு நினைத்துத் திருத்திக் கொள்வதற்காகவேயன்றி தமக்காகாதென்று நிர்வஹிக்கிருேம். அவ்வாறு பின்னுள்ளார் தம்மை பகவானுக்கு முன் சேஷமல்லாமலிருப்பதாகத் தாமே வைத்துப் புதிதாக ஸ்வதந்த்ரமாக ஸமர்பிக்க வேண்டும், பின்னே அனுசயிக்க வேண்டுமென்று சிக்ஷிக்கிருரென்னலாகாதே. இனி, தேஹாத்ம விவேகமிராமற் போனுலும் ஆத்ம ஸமர்ப்பணம் ப்ரபத்தியாகுமென்பதுபோல் பூர்ண விவேகமில்லாமல் தேவதாந்தரம் முதலான ஜீவர்களுக்குத் தன்னை யடிமையாக்குவதுபோல் பகவானுக்குத் தன்னைப் புதிதாக சேஷமாவதாக நினைத்து அர்ப்பணம் பண்ணுலும் அதையே அந்த அதிகாரிவிஷயத்திலே ப்ரபத்தியாக நினைத்து அருள்கிருனென்று தெரிவிப்பதற்காக இந்த ச்லோகமென்ருல், மேலே அநுசயிப்பது அவச்யமில்லை. அவிவேகியின் ப்ரபத்தியை முதலில் மொழிந்து அதவா என்று பக்ஷாந்தரமாக விவேகியின் ப்ரபத்தியை மமநாத என்கிற ச்லோகத்தாலே அருளிச் செய்கிருர்; அவனதான வஸ்துவை அவனதாக இசைவதே ஸமர்ப்புணமென்னில், அப்போதும்

அநுசயிக்கிருரென்பது சேராது. மேலும் அனுசயம் என்பதற்கு ஸூசகமான பதம் இங்கே ஒன்றுமில்லை. அதவா என்றிருப்பதால் இரண்டாவது ச்லோகத்தில் வேருெரு பக்ஷம் சொல்லுவதாகவே ஸ்வரஸமாய்த் தோன்றும். அது அநுசயிப்பதாக வ்யாக்யானம் செய்கிற போதும் நன்ருக அமையவில்லை. ஸமர்ப்பணமும் அனுசயமும் சேரவேண்டுமென்று ஸமுச்சய மன்ரூ அவர்கள் சொல்வது. ஸமர்ப்பித்தாலும் மோக்ஷம் உண்டு; ஸமர்பிக்காவிட்டாலும் மோக்ஷமுண்டு என்று இரு பக்ஷங்களுக்கு இரு ச்லோகங்களென்னில், ஸமர்ப்பண மில்லாமலே மோக்ஷம் கூடுமாகில் ஸமர்ப்பணத்தை விதிக்கும் சாஸ்திரமெல்லாம் வீணுகுமே. இந்த அதவா என்கிற பதமொன்றுக்காக அவ்வளவு ப்ராமாணத்திரளையும் தொலைப்பதா. திருமந்த்ரத்திலே பகவச்சேஷத்வம் அநாதியாய் அவிநாசியாயிருப்பதைத் தெளிந்து த்வயத்திலே ப்ரபத்தி செய்பவன் தன்னைப் புதிதாக ஸமர்ப்பித்து ஔபாதிகசேஷ த்வத்தைத் கொள்ளுகிருனென்னலாகாது. ஆகையால் அதவா என்று இருபக்ஷங்கள் பொருந்தாமையால் பெரியவாச்சான்பிள்ளையின் அனுசயபக்ஷத்திலும் அதவா என்பது சேராதாகையால் ப்ரமாணம் யுக்தி எல்லாவற்றிற்கும் முன்பின் வசனங்களுக்குமிணங்க முன்சொன்ன ஸமர்ப்பணதத்துவத்தைத் தெளிவிக்கிருர் இந்த ச்லோகத்தில் என்பதே தகுமென்பது தேசிகன் திருவுள்ளம்.

அதவா என்பதற்குப் பதவுரையிற் சொன்ன பொருளைக் கொள்ளலாம். அல்லதென்றே பொருளானாலும் கருத்தொன்றே. நைவ ஸமர்ப்பயாமி என்னுமல் கிந்து ஸமர்ப்பயாமி என்றதால் ஒருவிதமான ஸமர்ப்பணம் உண்டென்று கருதுகிருர். கிம் என்பது க்ரியாவிசேஷணமாகில்—எந்த அர்ப்பணத்தைச் செய்கிறேன். அர்ப்பணம் பலவிதம். அதில் கூடுமான அர்ப்பணமல்லது வேறு விதமாகச் செய் வேனே, அதுபோல் நான் அர்ப்பணம் செய்வதென்ற கர்த்ருத்வம் எத்தகையது. ஸ்வதந்த்ர கர்த்ருத்வம் கொள்வேனே என்றும் பொருள் ஆகிறது. அதனாலேயே இங்கே ச்லோகத்தில் ஸ்வதந்த்ரகர்த்தாவா ப்ரதந்த்ரகர்த்தாவா என்கிற விசாரத்தில் இரண்டாவது பக்ஷத்தை ஸ்தாபிக்கப் பதமில்லாமலிருந்தும் அதையும் எல்லோரும் சேர்த்துக் கொண்டனர். நியதஸ்வ மென்று சேஷத்வம் அநாத்யந்த மென்றதினின்றே அதுவும் கிடைக்குமென்ரூ, தே இத்யாதி பதங்களுக்கும் அதுவும் கருத்தாகுமென்ரூ கொள்வதுமாம். ஆக, சரணம் ப்ரபத்யே, ப்ரஹர்ஷயிஷ்யாமி, அஹம் ஸமர்ப்பித: என்ற மூன்ருல் பரஸமர்ப்பணம் பலஸமர்ப்பணம் ஆத்ம ஸமர்ப்பணமென்ற மூன்றும் மொழியப் பெற்றன. அததன் அர்ப்பணத்திலும் ஒவ்வொருவிதமான பேதம் உண்டு. அதெல்லாம் கூட கிந்து என்றவிடத்திலே கருதப் பெறும். அந்த ப்ரமாணங்களாலேற்பட்ட விஷயங்களையே ஆசார்ய ஸ்ரீ ஸூக்திகளுக்கும் கருத்தாகக்கொள்வது தகும். (53)

இதுவரையில் தாம் ப்ரபத்தி செய்த விஷயமான விரிவாயிற்று. தமக்குள்ள அதிகார மும் ப்ரபத்தி ஸ்வரூபமுமெல்லாம் விரித்துரைத்த பிறகு, தாம் இங்கு சில காலம் வாழ்ந் திருந்து பிறகே அவன் திருவடியைச் சேர்வதென்றேற்பட்டதற்கிணங்க இங்கே சில

நன்மைகளை வேண்டுகிருர். அவற்றில் இந்திரியகிங்கரனுகாமையும் புக்தியும் இங்கே வேண்டப்படுகின்றன.

**54. அவபோதிதவாந் இமாம் யதா மயி நித்யாம் பவதீயதாம் ஸ்வயம். க்ருபயைவம் அநந்ய போக்யதாம் பகவந் பக்திமபி ப்ரயச்ச மே.**

பகவந்—நிர்தோஷ குண நிதியே, இமாம்—கீழ்ச்சொன்ன, நித்யாம்—சாச்வதமான, மயி பவதீயதாம்—என்னிடத்திலுள்ள உன்னைப்பற்றிய சேஷத்தன்மையை, யதா—எப்படி, ஸ்வயம்—தானுகவே அவபோதிதவாந்—(எனக்கு) அறிவித்தாயோ, ஏவம்—இதுபோல், அநந்யபோக்யதாம், உன்னைத் தவிர்த்து வேருென்றை போக்யமாகக் கொள்ளாத தன்மையையும், பக்திம் அபி-உன்னிடத்தில் அன்பையும், மே-எனக்கு, ப்ரயச்ச-அளிப்பாயாக.

மஹாபாபியான எனக்கு உன்னைப் பற்றிய நித்யசேஷத்வமே ஸ்வரூபம் என்ற தத்துவ ஜ்ஞானம் பிறந்ததற்குக் காரணமென்ன நான் சொல்வேன். நீ பகவானுயிருப்பதே. உனது தன்மையினுலேற்பட்ட நன்மை இது. இது போலவே வேருெரு காரணத்தைத் தேடாமல் சேதநா சேதநம் வேருென்றும் போக்யமாய்த் தோன்ருதபடியையும் உன்னிடத்திலே சிறந்த அன்பையும் இவ்வுலகில் யான் உள்ள வரையில் எனக்கு அளித்து வரவேணும். "விண்ணுளார் பெருமாற்கு அடிமை செய்வாரையும் செறும் ஐம்புலனிவை மண்ணுளென்னைப் பெற்ருல் என் செய்யா மற்று நீயும் விட்டால்" (திருவா. 7. 1. 6) என்றனரே என்றபடி.

இங்கே ஏததநந்யபோக்யதாம் என்று பெரியவாச்சான்பிள்ளை கொண்ட பாடமாம். ஏவமநந்யபோக்யதாம் என்றது ஸ்ரீதேசிகன் கொண்டது. இது கற்பித மென்னுமே ப்ராசீன மென்று இசைந்தார்களென்பது மெச்சத்தக்கது. யதா என்ற சொல்லுக்கு ஏவம் என்ற சொல் வேண்டியிருப்பதாலும் வேறு பாடத்தில் பொருள் கொள்வதில் க்லேசமிருப்பதாலும் ஸ்வரஸம் தேசிகன் ஆதரித்த பாடமே. அதை ஒரே பதமாக்கி பக்திக்கு விசேஷணமென்று உரைப்பர். அப்போது ஏதத்-இதைக் காட்டிலும் அந்ய – வேருென்றில் போக்யதையை உடைத்தாகாமலிருக்கிற என்று போக்தியதாபதத்தின் மேல் பஹுவ்ரீஹி. ந என்ற சொல் நடுவே புகுந்தது; இப்படியும் ப்ரயோகம் காண்பதால் தகுமென்ன வேண்டும். பக்திக்கு வேருென்று போக்யமென்றது கூடாதாயினும் வேறு போக்யதையோடு சேராத பக்தி என்னலாமே. நீ தவிர வேறில்என்னும்படி த்வதநந்ய என்னுமல் ஏததநந்ய என்றிருப்பதால் ஏதத் என்ற சொல்லாலே கீழ்ச் சொன்ன சேஷத்வத்தையோ, மேல் சொல்லும் பக்தியையேயோ கொண்டு அது தவிர வேருென்றில் போக்யதையற்ற பக்தியை யென்றதாகிறது. ஏதத்-இந்த அநந்ய போக்யதையை உடையதான பக்தியை என்றுமுரைப்பதாம். நிவேசிதாத்மா என்ற விடத்தில் கர்மதாரயஸமாஸம் சொல்லுகிறவர்கள் இங்கும் வெவ்வேறு விதமாக பஹுவ்ரீஹிஸமாஸம் பண்ணி பக்திக்கு விசேஷணமாக்குவதை விட்டு, ஏதத் இந்த,

அநந்ய போக்யதையை என்று உரைக்கலாம். தேசிகன் தெரிவித்த மற்ெருரு நிர்வாஹமு முண்டு. அதாவது, ஏதத் என்பது தனிப்பதம். க்ருபயைதத் என்பது தனிவாக்யம். சேஷத் வத்தை எனக்கு நீ அறிவித்தாயே, இது உனது கிருபையினுலேயே என்பது பொருள். இது போல் மற்றவற்றையும் அருள் என்று மேலே சொல்வதாம். (54)

வேறென்று போக்யமாகக் கூடாதானுலும், உன்னிடத்தில் பக்திபோல் பாகவத பக்தி யும் வேண்டும். அவர்களுடன் எப்போதும் சேர்க்கையும் வேண்டு மென்கிருர். 'தத்பாதபக்தி ஜ்ஞாநாப்யாம் பலம் அந்யத் கதாசந - ந யாசேத்' என்று பகவான்விஷயத்தில் அறிவும் அன்பும் வளரும்படி வேண்டலாம். அது காம்யமாகாது. அதுபோல் பாகவத பக்தி முதலானவையும்.

**55.** தவ தாஸ்யஸுகைகஸங்கிநாம் பவநேஷ்வஸத்வபி கீடஜந்ம மே.
இதராவஸதேஷு மா ஸ்ம பூத் அபி மே ஜந்ம சதுர்முகாத்மநா.

தவ - உனது, தாஸ்யஸுக ஏக - அடிமை செய்வதால் பெறும் ஆனந்தமொன் றிலேயே, ஸங்கிநாம் - பற்றுடைய பரமைகாந்திகளின், பவநேஷு - திருமாளிகைகளில், கீடஜந்ம அபி - புழுவாகப் பிறப்பதே, மே - எனக்கு, அஸ்து - ஆகுக. இதர - உன் அடிமையிற் பற்றில்லாதாரின், ஆவஸதேஷு - இல்லங்களில், சதுர்முகாத்மநா - நான் முகனுக, ஜந்ம அபி - பிறவியும், மா ஸ்ம பூத் - வேண்டா. புண்யதீர்த்தங்களுக்கும் மேலாவார் பாகவதர்கள். பல புண்ய தீர்த்தங்களின் ஸ்னனத்திற்குப் பலனுகும் பாகவத ஸங்கம். வெண்மையான ஆடையானது வர்ணம் பெறுவது சேர்க்கையால், அது போல் ஸத்ஸங்கம் ஸுவர்ணமாக்கும். ஆகவே பரமைகாந்திகளின் திருமாளிகையில் நித்யவாஸம் வேண்டும். மனிதப் பிறவியில் அங்குச் சேர்ந்து அப்பால் விலகிப் போவதைவிட அங்கே நிலைத்திருக்கும் சாக்கடைப் புழுவாழ்க்கையே மேலாகும். அடிக்கடி அவர்கள் கடாக்ஷித்து வருவர். அதே போதும். 'பசுர் மநுஷ்ய: பக்ஷிவா' என்றபடி ஒருக்கால் கிருபை கூர்ந்து விசேஷானுக்ரஹமும் செய்வார்கள். இதை விட்டு நான்முகனுய் ப்ரஹ்மாண்டாதிபதி யாகுகையும் கேடே. நீடூழி காலம் ஸம்ஸார நரகத்தில் நடமாட வேண்டியதாகுமே. வைராக்யம் பகவத் பக்தி முதலானவையில்லாத படிப்பும் பணமும் பெருமையும் எதற்கு என்றபடி.

அபி என்றது பூர்வார்த்தத்தில் புழுவான பிறப்பு தாழ்ந்ததானுலும் வேண்டு மென்று விரோதத்தைக் காண்பித்து அதில் ஆவலைக் குறிக்கும். அவதாரணமென்று பெரிய வாச்சான்பிள்ளையுரைக்கும் இதே கருத்தாகும். பிற்பகுதியில் அபி என்பது பிறவியின் உத்கர்ஷத்தைக் குறிப்பதாய் வெறுப்புக்காகிறது. க்ரியாபதத்திற் சொன்னதற்கும் அதற்குமுள்ள விரோதமே இரண்டிலும் பொருளாம். வேண்டுகைக்கு புழுவாகை விருத்தம்;

வேண்டாமைக்கு நான்முகனுகை விருத்தம். ஆயினும் தகுமென்கிருர். நான்முகனின் இடம் நாபீகமலமே. பகவத் ஸந்நிதியைவிட பாகவத ஸந்நிதிக்குப் பெருமையும் பகர்ந்த தாகிறது. கீழே, ப்ரபத்தி செய்துகொள்ள விசதமான ஜ்ஞானமில்லேயாகிலும் உள்ள அறிவைக் கொண்டும் ப்ரபத்தி பண்ணலாமென்ருர். இந்த ஜன்மத்தில் பயன்பெறவாக வில்லேயாகில் ஒரு பாகவத சரணுகதிக்கான பிறவியும் போதும். வேறு ஒரு பெருமையும் வேண்டா என்ருர் இதில் என்பதையும் நோக்குக. சரணுகதியாவது வீட்டிற் சேர்ந்திருக்கை யும். புழுகுக்கு அவ்வளவுதான் கூடும். 'ஸித்திர் பவதி வா நேதி ஸம்சயோऽச்யுதஸேவிநாம். ந ஸம்சயோऽத்ர தத்பக்தபரிசர்யாரதாத்மநாம்' என்கிற ச்லோகம் இங்கே பாஷ்யத்தில் உதாஹரிக்கப்பட்டது. (55)

பாகவதஸங்கத்தின் பெருமையை நோக்கினுல் ப்ரபன்னன் கூட புழுவாக பாகவத இல்லத்தில் பிறவி வேண்டலாம். அது நிற்க. அப்ரபன்னர்கள் அடுத்த ஜன்மம் பெறுதல் நிச்சயமான படியால் அவர்களுக்கு அப்போது பாகவதரில்லத்திற் சேர்க்கையும் போது மென்ருர். இனி அச் சேர்க்கையை வேண்டினதும் அவர்களின் கடாக்ஷத்திற்காகவே யாகை யால் ப்ரபன்னர் அப்ரபன்னர் எல்லோரும் இவ்வுலகில் வேண்டுமவற்றில் முக்கியம் மஹா பாகவத கடாக்ஷமென்கிருர்—

56. ஸக்ருத் த்வதாகாரவிலோகநாசயா த்ருணீக்ருதாநுத்தமபுக்திமுக்திபி:-
மஹாத்மபிர் மாம் அவலோக்யதாம் நய க்ஷணேபி தே யத்விரஹோऽதிதுஸ்ஸஹ:-

யத்விரஹ:- எந்த மஹாத்மாக்களின் பிரிவானது, தே-உனக்கு, க்ஷணேऽபி - ஒரு நொடிப்பொழுதுகூட, அதிதுஸ்ஸஹ : - அடியோடு ஸஹிக்க முடியாததாகுமோ, அப்படிப்பட்டவராய், ஸக்ருத் - ஒரு தடவை, த்வத் ஆகார - உனது திருமேனியின், விலோகந – காட்சியில், ஆசயா - ஆவலினுல், த்ரணீக்ருத அநுத்தமபுக்திமுக்திபி : - பெரு மிக்க ஐச்வர்யத்தையும் மோக்ஷத்தையும் கூட த்ருணமாக்கினவருமான, மஹாத்மபி : - ஞானிகளாலே, அவலோக்யதாம் - கடாக்ஷிக்கப்படும்படியை, மே - எனக்கு, நய - கூட்ட வேணும்.

வேறு பலன்களுக்கென்றே கண்டபடி திரியுமிவ்வுலகிலே என்னேயே எல்லாமாக நினேக்கும் ஜ்ஞாநீ அடியோடு கிடைக்கமாட்டான் என்று நீயே கீதையில், ஸ மஹாத்மா ஸுதுர்லப: என்ருய். தேவதாந்தரங்கள் மூலம் பெறப்படும் பலனேயன்றி உன் மூலமாகவே பெறவேண்டும் பெறும் பதவிகளான, ப்ரஹ்மருத்ரஸ்த்தானங்கள், விஷ்ணு லோகப்ராப்தி, கைவல்யம் முதலான பலன்களேயும் வெறுத்து உன்னே ஒரு நொடி காண்பதற்கு அவை யெல்லாம் சேர்ந்தும் ஈடாகா என்று நினேத்தவர்களே மஹாத்மாக்களிற் சிறந்தவர். அதுவே யன்றி, பரமபதத்தில் அனுபவத்தையும் உடனே விரும்பாமல் இங்கு உன்னே உட்

கண்ணாலும் அனுபவிக்க ஆசைப்பட்டவர் பலர். 'குறுகாநீளா......அளவிலின்பம் சேர்ந்தாலும், மறுகாலின்றி மாயோனுக்கே யாளாகும் சிறு காலத்தை யுறுமோ', ஏரார் முயல் விட்டுக் காக்கைப் பின்போவதே 'அலமத்ய ஹிபுக்தேந பரமார்த்தைரலஞ்ச ந:. யதா பச்யாம நிர்யாந்தம் ராமம் ராஜ்யே ப்ரதிஷ்ட்டிதம்', 'பத்யு: ப்ரஜாநாமைச்வர்யம் பசூநாம் வா ந காமயே', 'துலயாம லவேநாபி ந ஸ்வர்க்கம் நாபுநர்ப்பவம், பகவத் ஸங்கிஸங்கஸ்ய' என்று பலவிதமாகப் பணிப்பரே. அவர்களுடைய கடாக்ஷத்தை யான் விரும்புவது எதற்கென்னில், நீ அவர்களுடைய பிரிவை ஒரு நொடி கூட பொறுக்காமலிருப்பது எதற்கு? எனக்காவது மேல் சில நன்மைகளைக் காரணமாக்கி அது விரும்பப்படுவதாம். அவாப்தஸமஸ்த காமனுன உனக்கு அவர்களின் பிரிவால் என்ன நஷ்டம். ஆயினும் வேறு பலனின்றி அவர்களின் சேர்க்கை உனக்குப் பெரிதாயிருப்பதுபோல் எனக்கும் அதே இஷ்டமாகிறது. அதற்குக் காரணம் அவர்கள் உன்னிடம் வைத்திருக்கும் சிறந்த விருப்பந்தான். ப்ரபன்னனுக்கு இதுவே பரமபுருஷார்த்தம். ப்ரபத்தி இனி ஆக வேண்டியிருப்பவனுக்கு இது உபாயமுமாகுமென்றபடி. பகவானுக்கு மஹாத்மாக்களின் பிரிவு பொறுக்கப்படுவதில்லையென்ற விடத்தில் பிரிவாவது என்னவெனில்—அவனது அனுபவாதிகள் அவர்களுக்கு இராமற் போகையே. அதைப் பொருதவனென்றதாலே அவர்களுக்கு அந்நிலை வராதபடி கவனித்துக் கொள்ளுகிறுனென்றதாகும். அவர்களின் கடாக்ஷம் பகவத்பக்தி ஜ்ஞானங்களை மேன்மேல் விருத்தி செய்து அவர்களைப் போலவே நன்மை பெற்றவனுக்கும். (56)

அவலோக்யதாம் நய என்ற விடத்தில் காலக் குறிப்பில்லை யாகையால் எப்போதுமே அவர்களின் கடாக்ஷம் பெறல் மிகவும் இஷ்டமென விளங்கிற்று. இனி இங்கு அநிஷ்ட நிவ்ருத்தியில் ஸாரம் வேண்டப்படுகிறது—

57. ந தேஹம் ந ப்ராணுந் ந ச ஸுகமசேஷாபிலஷிதம்
நசாத்மாநம் நாந்யத் கிமபி தவ சேஷத்வவிபவாத்.
பஹிர்ப்பூதம் நாத க்ஷணமபி ஸஹே யாது சததா
விநாசம் தத் ஸத்யம் மதுமதந விஜ்ஞாபநமிதம்-

மதுமதந - மதுவென்ற அசுரனை ஸம்ஹரித்தவனே, நாத - ஸர்வஸ்வாமியே, க்ஷணம் அபி - ஒருநொடிப்போது கூட, தவ சேஷத்வ விபவாத் - உனக்கு சேஷமாயிருக்கை யென்ற பெருமையினின்றே, பஹிர்பூதம் வெளிப்பட்டிருக்கும். ந தேஹம் ஸஹே-உடலைப் பொறுக்க மாட்டேன்; ந ப்ராணுந்-ப்ராணன்களையும் பொறேன்; அசேஷ அபிலஷிதம் - எல்லாராலும் விரும்பப்பட்ட, ஸுகம் ச - ஸுகத்தையும், ந - சேஷமாகாமலிருக்கப் பொறேன்; ஆத்மாநம் ந ச - என்னையும் பொறேன்; அந்யத் கிம் அபி ந - சார்ந்த வேறு வஸ்துவையும் அவ்வாறிருக்கப் பொறேன். (அப்படி சேஷத்வம் ஒருநொடி பெறவில்லையாகில்) சததா விநாசம்

யாது - நூறு சுக்கலாகி ஒழியட்டும். தத் – அப்படி பொறுக்கமாட்டாமைவிஷயமாய், இதம் ஒழியலாமென்ற விஷயமுமான விஜ்ஞாபநம் - எனது விண்ணப்பமானது, ஸத்யம் - உண்மையானது. தத்ஸத்யமென்பது தனி வாக்கியமாய் அது உண்மையென்ற பொருளாய், விஜ்ஞாபநம் இதம் என்பது வேறு வாக்யமாய், இது எனது விண்ணப்பமென்ற பொருளதா மெனவும் உரைப்பர். 'பரமார்த்த மேவ மே ச்ருணு விஜ்ஞாபநம்' என்ற தத்-அந்த விஜ்ஞாபநமும் இதுவும் ஸத்யம் என்னலுமாம். யாது என்ற ஒருமைக்கு தத் என்பதைக் கர்த்தாவாக்கி, தத் - அந்த தேஹாதியானது விநாசத்தைப் பெறட்டும். இதம் விஜ்ஞாபநம் ஸத்யமென்றுமுரைக்கலாம். (தத் என்பது ஸமாஹாரைகவசநம், ததந்வேஷ்டவ்யம் என்றவிடத்திற் போல. மொத்தமே ஒழிந்தாலுமிஷ்டமென்றபடி.) தேஹம் ப்ராணன் முதலானவை துக்கமிச்ரமாயிருப்பனவாகையாலே, சிலர் வேண்டா என்று வெறுப்பர் - ஸுகமென்பது எல்லோரும் இஷ்டப்படும் குணம். அதைத் தனக்கென்றே அவனவன் உணர்வான். அதைக்கூட உனக்காக என்னுமல் உணர நான் இசையேனென்ருர். நாந்யத் கிமபி என்பது இந்திரியங்கள் புத்ர மித்ரக்ஷேத்ராதிகள் வேதாந்த ப்ரவசநாதிகள் எல்லாவற்றையும், ஏருளுமிறையோனில் (4-8) ஆழ்வார் 'மாருளன் கவராத மணி மாமை குறைவிலமே. மடநெஞ்சால் குறைவிலமே, நிறையினுல் குறைவிலமே, தளிர்நிறத்தால் குறைவிலமே, அறிவினுற் குறைவிலமே, கிளரொளியாற் குறைவிலமே, உடம்பினுற் குறைவிலமே, உயிரினுற் குறைவிலமே, என்று சொன்னவை போன்ற எல்லாவற்றையும் கொள்ளலாம். அங்கே ஆழ்வார் நாயகியாகிய அத்தன்மைக்கேற்ப அவனுக்காகாத வஸ்துக்களை வெறுத்தார். இங்கே தம் தன்மையில்நின்றே அருளினர் எல்லோருக்கும் கூடுமாறென்பதே விசேஷம். அவனுக்கு சேஷமாகைக்கு உதவினுல் சாஸ்த்ர விரோதமிராத எதுவும் தகும். இல்லையேல் தன்னையே வெறுக்கவேண்டியிருந்தபோது மற்றவற்றை வெறுப்பதில் என்ன வியப்பு, ஸுகம் உண்டாகும்போது அனுகூலமாகவே தோன்றியிருக்கும். ஆத்மா எப்போதும் தனக்குத் தான் அனுகூலமாகவே தோன்றிவருவது மாற்றமுடியாது. அத் தோற்றங்களும் எம்பெருமானுக்கு சேஷமென்று நாம் தெளிய வேண்டும். சேதநாசேதநங்களுள் எல்லாவற்றிற்கும் பகவச் சேஷத்வம் சாச்வதமானது. அதில்லையாகில் ஸ்வரூபஹானி. ஆதாரத்வம், நியந்த்ருத்வம் சேஷித்வமென்ற மூன்றும் ஆத்மத்வஸாதகம். ஆதாரமாயும் நியந்தாவுமாகுகைகூட சேஷியாவதற்கேயாகையால் இது ப்ரதானமாகும். (57)

சில நாள் ஒருவனுக்கு அடிமையாவதே பெருங்கேடாகக் காணப்படுகிறது. அங்ஙனமிருக்க எப்போதுமே இங்கும் எல்லாவற்றையும் எனக்கு அடிமையாக்க நீர் விரும்புகின்றீரே, தகுமோ. இதென்ன அறிவின்மை என்கிருன் எம்பெருமான். நான் குணைர்தாஸ்யமுபாகதன். உன்னிடமுள்ள குணங்கள் அவ்வாருக்குகின்றன. கர்மவச்யமான இடத்திலும் எனக்கு அதை அளிக்கவான குணங்களும் உன்னிடம் நிறைந்திருப்பதால் வினைகளிருப்பினும் இங்கும் அந்நிலையை வேண்டுகிறேன் என்கிருர். (ப்ரபத்திக்குப் பிறகு தேஹாவஸானம் வரையில் அநந்ய போக்யத்வம், பக்தி, பாகவதர் வாழுமிடத்தில் இருப்பு, அவர்களின் கடாக்ஷம் எல்லாவற்றையும் சேஷத்வத்திற்கு ஏற்ப, பயன்படுத்துவது என்ற

இவற்றையெல்லாம் கேட்டு, பின்னே, 'மோக்ஷம் போலே எல்லாம் பெறலாம், உனது குணங்கள் இருக்க ஏன் அச்சம்' என்கிருரென்றதாயிற்று).

58. துரந்தஸ்யாநாதே ரபரிஹரணீயஸ்ய மஹதோ
நிஹீநாசாரோऽஹம் ந்ருபசு ரசுபஸ்யாஸ்பதமபி.
தயாஸிந்தோ ! பந்தோ ! நிவரதிக வாத்ஸல்ய ஜலதே !
தவ ஸ்மாரம் ஸ்மாரம் குண கணமிதீச்சாமி கதபீ:.

அஹம் - மிகச்சிறியனுய் அஹங்காரியான நான், துரந்தஸ்ய - கோரமான பயன்களிலே முடிவுபெறுகின்றதும், அநாதே: - முன் எல்லையற்றதும், அபரிஹரணீயஸ்ய. ப்ராயச்சித்தம் செய்துமாளாதபடியால் அனுபவித்தேயாகவேண்டியதும், மஹத: - ஒவ்வொன்றும் மலைமலையாகிறதுமான, அசுபஸ்ய - பலவித பாபராசிக்கு, ஆஸ்பதம் - முக்கியஸ்த்தானமாய், நிஹீநாசார:- ஆசாரமென்பது அடியோடு இல்லாதவனுமாய், ந்ருபசு: அபி-மனிதனுகியும் ம்ருகமாகவேயிருப்பினும், தயாஸிந்தோ - பிறர் துக்கமெல்லாம் போக்கும் நோக்குக்குக் கடலானவனே, பந்தோ - ஸர்வவித பந்துவானவனே, நிரவதிக - எல்லையற்ற, வாத்ஸல்ய - ஆச்ரிதரின் தோஷத்தை யநாதரிக்கும் அன்புக்கு, ஜலதே - கடலே, தவ - உனது, குண கணம் - ஸௌலப்யாதி குணக் குவியலை, ஸ்மாரம் ஸ்மாரம் - நினைத்து நினைத்து, கதபீ: – அச்சமற்றவனுய், இதி - கீழ்ச்சொன்னபடி எல்லாவற்றையும் அங்குப் போல் இங்கும், இச்சாமி – விரும்புகிறேன்.

நான் ந்ருபசு. மானிடப் பிறவி எனக்கு பாபம் செய்ய வழியெல்லாமாராயவும் தண்டனைக்கு ஆளாகைக்குமேயாகிறது. ஸத்விஷயத்திலே பசு. ஆஹார விஹாரங்கள் புஷ்கலமாகின்றன. இங்குள்ள வாழ்நாளில் உனது கைங்கர்யங்களையே செய்துவரத் தடையான அக்ருத்யகரண, க்ருத்யாகரண பகவதபசார பாகவதாபசாராதிகளெல்லாம் நிறைந்ததோடு ஆசாரமென்பது சிறிதுமில்லாமையால், 'ஆ சா ர ஹீ ந ம் ந புநந்தி வேதா:, ஆசாரப்ரபவோ தர்ம.' என்றெல்லாமிருப்பதால் ஒரு பரிஹாரமும் செய்யவல்லனல்லேன். ஆகிலும் அசக்தனுய் ஆச்ரியித்தால் இவ்விஷயத்திலும் காக்கும் உனது தயாதிகுணங்களைக் கண்டு அச்சமின்றி ஆசைப்படுகிறேன்; அருளவேணுமென்றபடி. (58)

உனது சேஷவ்ருத்தி தவிர வேறென்றும் வேண்டா; இல்லையேல் அழிக என்று தீரமாகச் சொல்லுகிறீரே. இப்போது உம் மனத்தை மாற்ற ஓர் அழகான வஸ்துவை எதிரில் நிறுத்துகிறேன்; மாருமலிருப்பீரா? ஆகையால் நீர் இப்படி ஆசைப்படுவதாகச் சொல்வது பொய் என்கிறான் பிரான். இவ்வாசை வலிவற்றதாயினும் இப்பேச்சுக்காவது அருள்புரிய வேணும். இச்சையோடு ப்ரார்த்திக்கும்படி மனத்தைத் திருத்தவாவது இப்பேச்சை வ்யாஜமாக்கவேணுமென்கிருர்.

59. அநிச்சந் அப்யேவம் யதி புநரிதீச்சந்நிவ ரஜஸ் -
தமச்சந்நச் சத்மஸ்துதிவசந பங்கீமரசயம்.
ததாபீத்தம்ரூபம் வசநமவலம்யாபி க்ருபயா
த்வமேவைவம்பூதம் தரணிதர மே சிக்ஷய மந:.

ரஜஸ்தமஸ்ச்சந்ந: - ரஜோகுண தமோகுணங்களால் மறைக்கப்பட்டவனாய், இதி அநிச்சந்-கீழ்ச்சொன்னபடியிலே தீவ்ரமான இச்சையில்லாதவனாகவே, இதி இச்சந் இவ புந:- -இப்படி யிச்சிக்கிறவன்தான்போல, சத்ம-கபடமான, ஸ்துதிவசந-ஸ்தோத்ர வார்த்தையின், பங்கீம் - ஒருவகையை, அரசயம் யத்யபி - செய்தேனாகலாம்; ததாபி-ஆயினும், இத்தம்ரூபம் - கபடமாகப் பிறந்ததான வசநம்அபி - வார்த்தையையும் அவலம்ப்ய - ஒரு வியாஜமாக்கி, ஹே தரணீதர - எல்லாம் பொறுக்கும் பூமியையிடந்தெடுத்து எங்களுக்கு உதவியவனே, க்ருபயா - அதே தயையினால், மே – எனது, மந: - மனத்தை, சிக்ஷய - திருத்தியமைக்க வேணும்.

தீவ்ரமான இச்சையில்லாமலே நான் சொல்வதாக ஸர்வஜ்ஞனான நீ நினைத்தாயானால், எனக்கு இச்சையுண்டென்று நான் எதிர்க்கமுடியுமோ. இச்சை எனக்கு அவ்வளவில்லையென்றுதான் கொள்ள வேண்டும். ஆயினும், இது சத்ம ஸ்துதிவசனம் - இசையவில்லையென்று வேறு யாரும் என்னைச் சொல்லவாகாதபடி, பூர்ணமான இச்சையால் வந்த ஸ்தோத்ரம்போல் அமைந்திருக்கிறது. ஆகையால் வேண்டியும் அளிக்கவில்லையென்று பிறர் பழிக்கவாகாதபடி, நீ மனம் திருத்தித் தந்தருளவேணும்.

இங்கே அபி என்பதை யுள்ளவிடத்திலேயே வைத்து, இச்சியாதபோதிலும் இச்சிப்பவன் போலே தயாஸிந்தோ என்றவாறு மேலுக்கு ஸ்தோத்ரம் செய்திருக்கிறேனானால், என்றும் பொருள் கூறலாம். அப்போதும் இப்படி செய்திருந்தால் மனத்தைத் திருத்தியருள் என்றே சொல்லலாமாகையால், ததாபி என்பது வேண்டுவதில்லை. அது இருப்பதால், முன் வாக்யத்தில் யத்யபி என்று சேர்ப்பது அழகாயிருக்கும். இப்போது அபி என்பது, அநிச்சந், சத்மஸ்துதி என்ற எல்லாவற்றிற்குமாகிறதென்ற கருத்துடன் தேசிகன் யத்யதபி என்று சேர்த்தருளினார். (59)

கீழ் அகிஞ்சநோऽநந்ய கதிச் சரண்ய, தயாஸிந்தோ பந்தோ என்று சொன்ன சரண்ய பந்து சப்தங்களின் பொருளை விரித்துரைக்கின்றாராய், 'சரீராரோக்யமர்த்தாம் ச' என்கிறபடி கேட்காமலே செய்யவேண்டிய உரிமை என்விஷயத்தில் உனக்கு உண்டென்கிறார்—

60. பிதா த்வம், மாதா த்வம், தயிததநயஸ்த்வம், ப்ரியஸுஹ்ருத்
த்வமேவ, த்வம் பந்து: குருரஸி கதிச்சாஸி ஜகதாம்.
த்வதீயஸ் த்வத் ப்ருத்ய: தவ பரிஜநஸ் த்வத்கதிரஹம்
ப்ரபந்நச் ச ஏவம் ஸத்யஹமபி தவைவாஸ்மி ஹி பர:.

ஜகதாம்–எல்லாவுலகுக்கும், த்வம் ஏவ-நீயே, பிதா அஸி–தகப்பனாகிறாய், மாதா– தாய், தயிததநய:- ப்ரியமான புத்ரன், ப்ரிய ஸுஹ்ருத் - இஷ்டமான மித்ரன், பந்து:–உறவு,

குரு :-இருள் நீக்கும் ஆசார்யன், கதி : - அடையும் பேறு எல்லாமாகிருய். அஹம் நான், த்வதிய: - உனக்கு சேஷன்; த்வத்ப்ருத்ய: - உன்னுல் வளர்க்கப்படவேண்டியவன். தவ பரிஜந : உனக்கு ஊழியன்; த்வத்கதி: - உன்னேயே பேருகக் கொண்டவன், ப்ரபந்ந:ச - சரணுகதி செய்தவனுமாகிறேன். ஏவம்ஸதி-இப்படியிருக்கும்போது, அஹம் அபி-நானும், தவ ஏவ - உனக்கே, பர: அஸ்மி ஹி-பரமாகிறேனே.

வேறு பலனே விரும்பி உன்னே விட்டோ, சரணுகதி செய்யாமலோ இருந்தால், நீ உபேக்ஷிக்கலாம். இப்போது உன் பரமேயாவேன் நான். அஹமபி என்ற அபிசப்தம், தோஷமுள்ளவனுனலுமென்கிறது. அல்லது முன்னோர்கள் போலே நானும் என்றதாம். அன்றி, இந்த தேஹாதிகளோடே சேர்ந்திருக்கும் நானும் என்றதாம். அதனுல், தேஹாவஸானத்திற்குப் பின்னேபோல் முன்னும் உனக்கே பரமென்றதாயிற்று. வபுராதிஷு என்றபடி தேஹம் கூட ஆத்மாவோ என்று நினைப்பவன் என்னைக் காக்கவேணு மென்ருல் தேஹத்தைக் காக்கவும் நான் கேட்டதாக நீ அபிமானிக்கலாமே. 'தேஷாம் வைச் சிந்நத்ருஷ்ணுநாம் யோகக்ஷேமவஹோ ஹரி: இத்யாதி வசனங்களை இங்குக் கொள்க. (60)

தமக்கு இவ்வளவு நிர்வேத மேற்பட்டதற்கு முக்கியமான காரணத்தை வெளியிட்டு என்னைக் காப்பது உனக்கு பரமென்பதை நீயே இங்குப் பிறவியளித்ததன் மூலமே யறிவிக்கிருயென்கிருர்—

61. ஜநித்வாऽஹம் வம்சே மஹதி ஜகதி க்யாதயசஸாம்
சுசீநாம் சிஷ்டாநாம் குணபுருஷதத்வஸ்த்திதி விதாம்.
நிஸர்காதேவ த்வச்சரணகமலைகாந்தமநஸாம்
அதோऽத: பாபாத்மா சரணத நிமஜ்ஜாமி தமஸி.

அஹம்-நான், ஜகதி-உலகிலெங்கும், க்யாத யசஸாம்-ப்ரகாசமான புகழ் உடையர்களும், சுசீநாம்-ஆசாரபூர்த்தியுடையர்களும், யுக்தாநாம்-வைதிகயாகாதி தர்மாநுஷ்டான யுக்தர்களும், யோகம் செய்தவர்களும், குண-ஸத்வரஜஸ்தமோகுணமயமான மூலப்ரக்ருதியென்ன, புருஷ-ஜீவனென்ன இந்த இரண்டு தத்துவங்களின், தத்துவ ஸ்த்திதி-உனக்கு சேஷமாயிருக்கை முதலான உண்மை நிலைகளை, விதாம்-அறிந்தவர்களும், நிஸர்காத் ஏவ-பிறவியினின்றே, த்வத் சரணகமல-உன் திருவடித் தாமரையிலே, ஏகாந்த மநஸாம் - ஒரே பற்றுன மனமுடையருமானவர்களின், மஹதி – பெரிய, வம்சே - வம்சத்தில், ஜநித்வா - பிறந்தும், பாபாத்மா-பாபமே வடிவாய், தமஸி-இருளிலே, அத:-வரவரக் கீழே, நிமஜ்ஜாமி-மூழ்கா நிற்கிறேன்-சரணத! - சரணமளிக்கின்றவனே ! பாராய்.

என் வம்சத்து முன்னோர்கள், ஆசாரப்ரபவோ தர்ம: என்றபடி ஸதாசாரபூர்த்தியுடையவர்கள். யோர்த்தே சுசி : ஸ ஹு சுசி: என்றபடி பணம் முதலானவற்றில் தனது

பிறரது என்று விவேசித்து வைராக்யமுடையவர்கள். வைதிகயாகாதிகளையும் அனுஷ்டித்து யோகத்திலும் தேற்ச்சியுற்றவர்கள், ஸாங்க்யாதிகளைப் போலே ப்ரக்ருதி புருஷவிவேகம் அரை குறையாகக் கொள்ளாமல் தத்துவத்ரயம் அறிந்து அவ்விரு தத்துவங்களை அவற்றின் உண்மை நிலையில் அறிந்தவர்கள்-உனது திருவடித் தாமரையே ப்ராப்யமென்று அதனையே விரும்பிய பரமைகாந்திகள். இந்த விஷயம் உலகமெல்லாம் சொல்லும். இந்த மஹாவம் சத்திலே, சுசீநாம் ச்ரீமதாம் கேஹே, அதவா யோகிநாமேவ என்றபடி எல்லாம் சேர்ந்த இடத்திலே, யோகப்ரஷ்டன் பிறந்து முன்னேறவேண்டுமிடத்திலே, ஸர்வ ப்ரஷ்டனான நான் பிறந்தேனே. ஆகா! மஹாபாபி. பிறகாவது ஆராய்ந்தேனா. நாளுக்குநாள் கீழே போய்க்கொண்டிருக்கிறேன். இன்னும் சில நாள் சென்றால் கடலில் முழுமையும் முழுகின பிறகுத் தூக்கக் கைகூட காணப்படாது. நீ கைகொடுத்துக் காக்கவேணும். நீ சரணதன். இவர்களின் இல்லத்தை எனக்கு அளித்தாயே; எனக்கு சரணமளிக்கிறேனென்றறிக்கவே யாம் இது என்று நினைக்கிறேன். அப்படியிருக்க ஏன் மூழ்கிப்போகிறேன். பாபாத்மாவா யிருப்பதே காரணம். வம்சத்தைக் கெடுத்தவனென்ற பாபமும் சேருமோ. இந்த நிர்வேதத்தையே வியாஜமாகக் கொள் என்றபடி.

குணபுருஷவதத்வ. ஸத்துவ ரஜஸ்தமோ குணங்கள் ப்ரக்ருதியைச் சேர்ந்தவை, ஆத்மா நிர்குணன். அந்த குணங்களில்லாதவன். தர்மபூதஜ்ஞானமே இவனுக்கு குணம் என்றவாறெல்லாமும் இங்கே கருதப்பெறும். யுக்தாநாம் என்பதற்கு பல பொருள் கொள்வது உண்டு. ஆளவந்தார் மஹாவம்சத்தில் ஜனித்ததற்குத் தக்க எல்லாப் பெருமைகளை யும் பெற்றிருந்தும் தாம் வரவரக் கீழில் விழுவதாகக் கூறியது உயர்ந்தவம்சத்தில் பிறந்து கெட்டவர்கள் தங்கள் நிலைமையை இப்படி அனுஸந்திக்கவேண்டுமென்று பின்னுள்ள நம்மைப்போன்றாரை சிக்ஷிப்பதற்காக என்று கொள்க. (61)

கீழ் பாபாத்மா நிமஜ்ஜாமி என்றதை விரித்துரைத்துத் தமக்கு வேறு உபாயமில்லை யென்று ஆகிஞ்சன்யத்தை ஸ்த்திரப்படுத்துகிறார்—

62. அமர்யாத: க்ஷுத்ர: சலமதி: அஸூயாப்ரஸவபூ:
க்ருதக்நோ துர்மாநீ ஸ்மரபரவசோ வஞ்சநபர:.
ந்ருசம்ஸ: பர்பிஷ்ட்ட: கதமஹமிதோ துக்க ஜலதே:
அபாராத் உத்தீர்ணஸ் தவ பரிசரேயம் சரணயோ:.

உயர்ந்த குலத்திற் பிறந்தவர், வேறு குலத்தில் பிறந்தவர் எல்லோரும் தங்கள் நிலையை நினைத்து வருந்த வேண்டும் வகை மேலே மொழியப்படுகிறது. அதனால் அமர்யாத:- வர்ணாச்ரமவரம்பைக் கடந்தவன், க்ஷுத்ர:-அற்பன், அற்ப விஷயங்களைப் பெரியனவாக நினைத்து கோபாதிகளைப் பெறுகிறவன், சலமதி:-உபதேசம் பெற்ற ஸத் விஷயங்களிலே

புத்தி நிலையற்றவன், அஸூயாப்ரஸவபூ:- பிறரின் குணத்தை தோஷமாக நினைப்பதாம் துர்குணத்திற்குப் பிறப்பிடமானவன், க்ருக்ந: - நன்றிகெட்டவன், துர்மாநீ - தகாதகர்வ முடையவன், ஸ்மரபரவச:-தகாத காமத்திற்கு அதிகமாக வசப்பட்டவன், வஞ்சநபர:-பிறரை ஏமாற்றம் செய்வதில் நோக்குள்ளவன், ந்ருசம்ஸ: -- ஹிம்ஸிப்பவன், பாபிஷ்ட்ட: - பாபம் செய்தவர்களிற் சிறந்தவன். இப்படியான அஹம்-நான் கதம் -எப்படி, இத:-இந்த, அபாராத் - அக்கரையற்ற,' துக்கஜலதே: - துக்கக்கடலினின்று, உத்தீர்ண: - மேற்சென்றவனாகி, தவ- உனது, சரணயோ: - திருவடிகளில், பரிசரேயம் - பணிசெய்வேன்.

சாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்ட ஸம்ஸ்காரங்களில் சில குறைந்தாலும் ஸர்வபூததயை முதலான நற்குணங்கள் எட்டு இருந்தால் ப்ரஹ்மப்ராப்தியுண்டென்றார் கௌதம தர்ம ஸூத்திரத்தில். எனக்கு அதற்கு நேர்மாறாக பத்து துர்குணங்களே இருக்கின்றன. இங்கு மானஸம் வாசிகம் காயிகமெல்லாம் சேரும். இவற்றிற்கெல்லாம் பலனான துக்கம் கடலாக இருக்கிறது. கரையிருந்தாலும் கடக்கமுடியாது. கரையுமில்லை; கடப்பதேது? இனி மேற்புறம் எழுந்து வானம் சென்று விலகவேண்டும். நிமஜ்ஜாமி என்று கீழ்ச்செல்லும் நான் மேலெழ மாட்டிலேன். ப்ரக்ருதியானது கீழும் குறுக்கும், எங்கும் பரவினதாகையால் அபாரமே. மேலே செல்லவானால் ப்ரக்ருதி மண்டலம் கடந்து பரமபதம் புகலாம். இது எப்படியென்ற படி. கீழே 'சரணத' என்று எம்பெருமான் சரண்ம் தக்கவாறு அளிப்பவனென்று கூறினவர் இப்போது எப்படி என்கிறது எங்ஙனம் கூடுமென்னில், நீ கொடாவிட்டால் எப்படியென் கிறார். அவன் கொடுப்பானென்ற உறுதியுண்டு. அதற்கு இணங்க மற்றொருவிதமாகவும் பொருளாம். அமர்யாத: என்றது முதலான தோஷங்கள்உடைய நான் கதம். எப்படியாவேன், நான் நினைத்திருப்பது என்னவெனில், இப்படியிருந்தும் இக்கடலினின்றெழுந்து உன் திரு வடியில் கைங்கர்யம் செய்வேன் என்பதே. உயர்ந்த வம்சத்திற் பிறந்து கீழே மூழ்கிப்போ கிறேன் நான். இப்படி போகின்ற நான் மேலே சென்று உனக்குப் பணிசெய்வேன். கதம்— எப்படி யென்றால், மேலே சொல்வேன் என்கிறாரென்னலாம்.

ஆளவந்தாருக்கு அமர்யாதத்வாதிகள் உண்டோ என்னில், அவருக்கு இல்லை. நமக்குண்டானபடியாலே நாம் இப்படி அநுஸந்திக்கச் செய்த உபதேசமாகும். ஒவ்வொரு வரும் நமக்கு இவையில்லை, இருப்பவருக்கு ஆகட்டுமென்று இதை விட்டுவிட்டால் என் செய்வது? ஒன்றிருந்தாலும் மற்றொன்றில்லையென்று எல்லோரும்விடப் பார்ப்பார்களே. இப்படி யிருக்க, பட்டர் பெருமாள்ஸந்நிதியிலே தம்மை அமர்யாத: க்ஷுத்ர: என்று உருகி யனுஸந்தானம் செய்ததாக ஐதிஹ்யமுளதே. அவருக்கு இந்த துர்குணங்கள் உண்மையில் இல்லையே - என்னலாம். ஒவ்வொருவருக்கும் சித்தம் பலபடி மாறும். யாசிக்கப்போகிறவன் கொடையாளியைக் குபேரனாகக்கொண்டாடுகிறான். கொண்டாடுகிறவனுக்கோ கேட்பவ னுக்கோ அது பொய்யாகத் தோன்றுவதில்லை. அது ஒருவிதமான அபிமானம். 'அதிஸ்நேஹ: பாப சங்கீ' என்றபடி சிலருக்கு அஸ்த்தானபயம் முதலானவை ஏற்படுவது உண்டு. அந்தந்த மனோபாவத்தில் சிறியது பெரியதாகவும் பெரியது சிறியதாகவும் தோன்றும். அற்ப விஷயத்திற்கு ஐயோ குடிகெட்டுப்போயிற்

றென்பரே. அதனுல் ஒருநாள் ஆளவந்தார் கௌண காலத்தில் ஸந்த்யாவந்தனம் செய்ய நேர்ந்தது கொண்டு, ஐயோ வரம்பு கடந்தேனே என்று நினைத்து இப்படி ஒவ்வொன்றிலும் மேன்மேல் அந்த மனுேபாவத்தை நைச்யானுஸந்தானத்திலுள்ள ஈடு பாட்டினுல் வளர்த்திப் பேசலாம். அவருக்கு தோஷமில்லாமலிருக்கும்போதே இந்த அனுஸந்தானமேற்பட்டது. இப்படியே பட்டருக்கும். இப்படி மனம் மாறுவது குணமே யல்லது தோஷமாகாது. மாறிற்றென்பது தெரியாமல் மாறவேண்டும். பெருமாள் வெய்யிலில் எழுந்தருளினுல், அகிலஹேயப்ரத்யநீகனுக்கு இதனுலென்ன என்று தத்துவஜ்ஞானத்தைக் கொண்டு பேசுகிறவன் பக்தனுகான். அதுபோலிங்கும் ஒவ்வொருவரும் தனக்குக் குற்றமிருந்தாலும் இராமற்போனுலும் இருப்பதாக நினைப்பதே நலம். மேலும் அநாதி ஜன்ம பரம்பரையில் இவையெல்லாம் பலகால் உண்மையில் இருந்தவையே என்றும் கொள்க. (62)

எப்படி நான் கைங்கர்யத்திற்காவேன் என்ற சொல்லுக்கு, 'விஜ்ஞாதாரமரே கேந விஜாநீயாத்' என்கிற வாக்யத்திற்கு, கீழ்க்கூறிய வழியன்றி வேறு எவ்வாறு அறிய முடியு மென்று எம்பெருமானுர் பொருள் கொண்டதுபோல், கீழ்க்கூறிய வியாஜம் தவிர வேறு எப்படி கைங்கர்யம் கூடுமென்றது பொருளாம். இந்த வியாஜத்திற்காக இவ்வளவு அபராதங் களைப் பொறுப்பதா என்பாயோ. இதற்கு மேலான அபராதங்களையும் இதற்கும் கீழான் வியாஜத்தைக் கொண்டு பொறுத்திருக்கிருயே என்றறிவிக்கிருர்—

63. ரகுவர யதபூஸ் த்வம் தாத்ருசோ வாயஸஸ்ய
ப்ரணத இதி தயாளுர் யச்ச சைத்யஸ்ய க்ருஷ்ண:
ப்ரதிபவ மபராத்துர் முக்த்த ஸாயுஜ்யதோऽபூ :
வத கிம் அபதம் ஆகஸ் தஸ்ய தேऽஸ்தி க்ஷமாயா :

ரகுவர - சரணுகதரக்ஷணம் பண்ணும் ரகுவம்சத்தாரிற் சிறந்தவனே, த்வம் - நீ, தாத்ருச :- அப்படிப்பட்ட, வாயினுல் சொல்லவாகாத பாபம் செய்த, வாயஸஸ்ய – காகா சுரனுக்கு, ப்ரணத: இதி-பூமியில் விழுந்ததையே சரணுகதியாகக் கொண்டு, தயாளு: அபூ:- தயை புரிபவனுய், இதி யத் – என்பது யாதொன்ருே, முக்த—குற்றத்தை அறியாதவன் போலிருப்பவனே! க்ருஷ்ண: - ஸுகமளிக்கும் கண்ணனுய், ப்ரதிபவம் - ஒவ்வொரு பிறவி யிலும், அபராத்து:-அபராதம் செய்த, சைத்யஸ்ய–சிசுபாலன் விஷயத்திலே, ஸாயுஜ்யத:- மோக்ஷம் அளிப்பவனுக அபூ : - ஆனுய், இதி ச யத் - என்பதும் யாதொன்ருே, தஸ்ய - அப்படி செய்த, தே - உன்னுடைய, க்ஷமாயா:-அந்தப் பொறுமைக்கு, அபதம் - அடக்க மாகாத, ஆக: - குற்றமானது, கிம் அஸ்தி - என்ன இருக்கின்றது, வத - சொல்வாயாக.

யத் - எதனுல் தயாளுவானுயோ, மோக்ஷம் அளித்தாயோ அந்த பொறுமைக்கு என்னலுமாம். அன்றி, யத் யத்-யாது யாது, அவையிருக்கும்போது என்று சேர்ப்பதாம். இதற்கிணங்க, வத கிமபத மாகஸ் தேऽஸ்தி தஸ்யா: க்ஷமாயா: என்று க்ஷமா விசேஷணமாக

தஸ்யா: எனப் பாடமிருக்கலாமாகில் கொள்க. க்ருஷ்ண: என்றவிடத்திலே; க்ருஷண என்று விளிச் சொல்லான பாடம்போல் இதுவுமிருக்கலாம். மேல்ச்லோகத்தில் ரகுவர என்பது சேர வேண்டுமென்று அதைமட்டும் விளிச்சொல்லாக்கி க்ருஷ்ண என்பது சேராமைக்காக க்ருஷ்ண : என்றருளினரென்னலுமாம்.

காக்கையின் உயிரையழிக்க ப்ரயோகித்த அஸ்திரத்தினுல் வலக்கண்ணை மட்டும் துணித்துவிட்டு உயிரளித்துக் காத்தாய். காரணமென்ன. அதற்கு சரணுகதிபண்ண யோக்யதை ஏது? ஸ தம் நிபததம் பூமௌ என்றபடி ஆச்ரமத்தில் எதிரில் பூமியில் விழுந்த தத்தனே. ரகுமஹாராஜன் சரணுகத ரக்ஷகனென்று ப்ரஸித்தன். அவனுக்கு மேலானுய் அந்த வம்சத்தில். அது செய்த குற்றமோ மஹாகோரமானது, பிராட்டியின் ஸ்தனத்தில் மாம்ஸம் எடுக்கக் குத்தினதே. அதற்கு மேலான குற்றம் சிசுபாலனிடத்தில். ஒரு ஜன்மமே யன்றி மூன்று ஜன்மங்களிலும் தொடர்ந்து குற்றம் செய்தான். முன்ஜன்மத்தில் பிராட்டி யையே தூக்கிச் சென்று காமியாகப் பேசினுன். இந்த சன்மத்தில் பிராட்டியை முன்னமே மணம்புரிய முயன்றுன். செவிசுடும் வசவுமொழிகளை வாயில் வந்தபடி சொல்லிவந்தான். போருக்கு அவன் அழைத்ததால் சக்ராயுதம் ஏவித் தலையைத் துணித்தாய். அதற்குமுன் செய்த குற்றங்களுக்கு என்ன பலனுயிற்று. பொறுத்தாயத்தனே. வியாஜமின்றியே பொறுத்தா யென்னலாம். அல்லது அவன்தாய் பால்யத்தில் உன்னை வேண்டினதை வியாஜமாக்கிப் பொறுத்தாய். மூன்று கண்ணும் நாலு கையுமாக அவன் பிறக்க, இஃதென்ன விந்தை என்று அவள் பார்த்திருக்க, சத்ரு தொட்டவுடன் சரியாயிடுமென்று அசரீரி சொல்லக் கேட்டிருக்க, பந்துவான நீ ஒரு சமயம் சென்று தொட்டபோது இருகண்ணும் இருகையுமாக மிகுந்து அவன் ஒழுங்காக, அவள் உன்னை சத்ருவெனவறிந்து பொறுக்கும்படி வேண்டினளே. அதையே சரணுகதியைப்போல் நினைத்தாய். நான் அவ்வாறெல்லாமில்லாமல் சரணுகதியே செய்தேன். என் பாபங்கள் எல்லாம் சேர்ந்தாலும் அதற்கு ஈடாகா. இனி, நான் அங்கே பொறுத்தேன் என்பது எங்ஙனம் அறிந்தீர். வேறு ஜன்மத்தில் அவற்றிற்குப் பலன் உண்டு என்பாயோ. அஃதில்லை. ஸாயுஜ்யமளித்துவிட்டாயே. ஸாயுஜ்யமாவது பகவானேடு ஸமானமான குணமுடையனுகை என்று, த்வா ஸுபர்ணு ஸயுஜா ஸகாயா என்றவிடத்தில் சொன்னுர்கள். ஏதாஸாமேவ தேவதாநாம் ஸாயுஜ்யம் இத்யாதிகளைக் கொண்டு ஸமானமான போக்யத்தை யுடையனுகை என்பதுமாம். எப்படியும் மோக்ஷமே ஸாயுஜ்யமாகிறபடியால் குற்றங்கள் பொறுக்கப்பட்டன என்பதில் ஸம்சயமில்லை. மோக்ஷத்திற்குக் காரணம் என்ன அவனிட மிருந்ததென்னில். குற்றங்கள் பொறுக்கப்பட்டன. சாபமும் தீர்ந்தது. பண்டைய நிலையைப் பெற்றுன். இதற்குக் காரணம் என்ன வேண்டும்? இப்படி விஷ்ணுலோகத்தில் மீண்டும் த்வாரபாலகனுனுகில், ஸாயுஜ்யமுண்டோ என்னில், இந்த ஸாயுஜ்யம் பூர்ண ஸாயுஜ்ய மன்று. ஸார்ஷ்டித்வமில்லாத ஸாயுஜ்யமாகலாம். அல்லது குற்றம் போய் சக்ராயுதம் பட்ட போதே அந்திமப்ரத்யயம் பக்திருபாபந்நமாய் முக்ய மோக்ஷத்திற்காம்படி பிறந்ததென்க.(63)

காகாசுரன் சிசுபாலன் இவர்களது குற்றத்தை எனது க்ஷமைக்கு விஷயமாக்கினது கண்டு நீர் அச்சம் விட்டிருப்பதாகச் சொல்லுகிறீர். இது உண்மை. என் க்ஷமைக்கு அந்தக் குற்றமே விஷயமானபோது எதுவும் விஷயமாகலாம். ஆயினும் இப்படி எல்லாருக்கும் க்ஷமிக்க வேண்டுமென்று என்னை நீர் நிர்ப்பந்திக்கவாகுமோ? மேலும் நீர் ப்ரபத்தி செய்தீர். தேஹாவஸானம் வரையில் இது தொடர்ந்த பிறகன்றோ க்ஷமிக்கக் கேட்கவேண்டுமென்றான் எம்பெருமான். அதன்மேல் நீ பொதுவாகவே ப்ரபத்தி விஷயத்திற் பணித்திருப்பதால் க்ஷமை எங்குமாவதே. ப்ரபத்தி ஒரு தரம்தானே செய்யப்படுவது என்று விண்ணப்பம் செய்கிறார்.

64. நநு ப்ரபந்நஸ் ஸக்ருதேவ நாத தவாஹமஸ்மீதி ச யாசமாந:-
தவாநுகம்ப்ய: ஸ்மரத: ப்ரதிஜ்ஞாம் மதேகவர்ஜம் கிமிதம் வ்ரதம் தே.

ரகுவர - ரகுநாதா! (இது முன்ச்லோகத்தில்) நாத - எனக்கு நாதனே! ஸக்ருத் ஏவ - ஒரே தரம், ப்ரபந்ந:–சரணாகதி செய்தவனும், அஹம் - நான், தவ அஸ்மி - உனக்கு அடிமையாகவேணும், இதி யாசமாந:–என்று வேண்டுகிறவனும், (யாராயினும்) ப்ரதிஜ்ஞாம் - நீ செய்த ப்ரதிஜ்ஜையை, ஸ்மரத:-மறவாமலிருக்கிற, தவ - உனக்கு, அநுகம்ப்ய: நநு - தயாவிஷயமாகிறவனேயல்லனோ. இதம் - இந்த, தே வ்ரதம் - உனது ஸங்கல்ப்பமானது, மத் ஏகவர்ஜம் கிம் - என்னை ஒருவனை நீக்கியா என்ன?

கடற்கரையில் பெருங்குழாம் கூடியிருந்தபோது, ''ஒருக்காலே சரணாகவடைகின்றாற்கும் உனக்கடிமையாகின்றனனென்கின்றாற்கும் அருக்காதே அனைவர்க்கும் அனைவராலும் அஞ்சேலென்றருள் கொடுப்பன்'' என்று நீ வெளியிட்டிருப்பதால் என் விஷயத்திலும் க்ஷமை கொள்ள வேண்டுமே. உம்மை நீக்கி மற்றபேர் விஷயத்திலேயே நான் சொன்னதென்று நீ கூறமுடியாதே. அங்கு அவ்வாறு சொல் இல்லையே. தேஹாவஸாநம் வரையில் தொடரவேண்டுமெனவும் சொல்லலாகாது. ஸக்ருதேவ என்று சொல்லியிருக்கின்றாயே என்றபடி.

இந்த அபய ப்ரதான ச்லோகத்தின் பொருளை அபயப்ரதானஸாரத்திலும் நிக்ஷேப ரக்ஷையிலும் காண்க. அங்கே நமது டிப்பணியையும் நோக்குக. இங்கும் பூர்வார்த்தத்திற்கு மட்டும் சுருக்கமாகப் பல பொருள்களையும் பாஷ்யத்திற் காண்க. ஸக்ருதேவ என்பதற்கு ஸஹஸைவ என்ற பொருள் சிலர் கூறினர். ஒரேதரம் செய்யப்படுமென்று உரைத்தால் அச்சொல்லின் ப்ரஸித்தமான பொருளை நேராகக் கூறினதாகும். ப்ரயோஜனமும் விசேஷமாக உண்டு, ப்ரமாணத்தை அறிவித்ததுமாமென்று பாஷியத்தில் சுருக்கமாக அருளினார். இங்கே நவீனர், ''கைவல்யவிஷயத்திலே எம்பெருமானார்க்கு தூஷணம். அஞ்ஜலிவிஷயத்திலே பட்டர்க்கு தூஷணம், இங்கே ஆழ்வானுக்கு தூஷணம்'' என்று வந்ததெல்லாம் வாயால்கொட்டி ஆக்ரஹப்படுவது எதற்கு? ஆழ்வான் ஒருவிதம் அருளியிருக்க எம்பார் வேறு சொன்னால் அது ஆழ்வானுக்கு தூஷணமன்று. அவ்விருவர் கூறினவற்றை விட்டு பட்டர் வேறு சொன்னால் அவ்விருவரையும் தூஷித்தாரென்பதாகவில்லையா? பலர் பலவிதம் யோஜனை கூறலாம். அதனால் தூஷணம் என்ன என்னில், அவ்வாறு வேறு யோஜனை தேசிகன் மட்டும் அருளக்கூடாதென்ற வ்யவஸ்த்தை ஏனோ? உண்மையில் இங்கு தேசிகன் பட்டர் திருவுள்ளமுவந்த யோஜனை சிறந்ததென்று கூறினாரல்லது வேறொன்றும் கூறவில்லை.

இதெல்லாம் பெரியவாச்சான்பிள்ளையின் உரையில் ஊன்றினால் தெளியலாகும். அங்கே ''ஸஹஸைவ என்று ஆழ்வான் நிர்வஹிக்கும். அனாதியாக ஸம்ஸரித்துப் போந்த இவன் ஒரு ஜன்ம மெல்லாம் ப்ரபத்தியை அனுஸந்தித்தால்தான் ஸக்ருத் என்கைக்குப் போருமோ என்பர் எம்பார். பகவத் ப்ரபாவத்தைப் பார்த்தால் ஒருகாலுக்குமேல் மிகை. ப்ராப்யருசி ப்ராப்தியளவும் அனுவர்த்திக்கும் என்பர் பட்டர்'' என்றாரே. இங்கு ஸஹஸா என்கிற பொருள் ஆழ்வான் கொண்டது. ஒருஜன்மத்தில் என்ற பொருள் எம்பார் ஸூக்தியில் தேறும். ப்ரபத்தி யனுஷ்டானம் ஒரேதரம் என்பது பட்டர் பணித்ததாம். ஆழ்வானும் எம்பாரு மான இருவரும் பட்டருக்கு ஆசார்யர்கள். அவர்களுக்கு பட்டர்செய்த ஸத்காரம் என்று பட்டரை தூஷிக்க வேண்டியிருக்க தேசிகன்மேல் ஏற்றுவதெதற்கு? பட்டர் முன்னோர்கள் மொழிந்ததை விட்டு வேறென்று பணித்தால் அது, 'தாம் பணிப்பது' ஸ்வரஸமானது என்ற திருவுள்ளத்தால்தானே. அதனை வெளியிட்டார் தேசிகன். ஸித்தாந்த விரோதமின்றி பலபேர் பலவிதமாக யோஜனைகள் கூறலாம். ஆராய்கின்றவர்கள் தாரதம்ய விசாரமும் செய்யலாம். முன்னோர் மொழிந்ததைத் தான் ஸ்தாபிக்க வேண்டும், பின்னோர் சொல்வது ப்ராமாணிக மானாலும் புறக்கணிக்கப்படவேண்டியதே என்கிற நிபந்தனை உண்டோ? அதனால் பெரியோர்களிடத்தில் வைத்த கௌரவத்தை விட்டதாகாது.

ஸஹஸைவ என்ற பொருள் கிடைக்கும் வழியையும் கூறினார் தேசிகன். எண்ணிறந்த குற்றங்கள் செய்தவன் தனித்தனியே அதற்கு ப்ராயச்சித்தம் செய்தால் பல செயல்களாகும், முடிந்தவரையில் அவற்றைச் செய்வதென்று தாமதிக்காமல் எல்லாவற்றிற் கும் ஒரே ப்ரபத்தி விரைவில் செய்யப்படுவதென்ற ஆராய்ச்சியில் ஸஹஸைவ என்பது கிடைக்குமே. கீதாபாஷ்யம் இரண்டாவது யோஜனையை இங்கே கூட்டி யாராய்க. எம்பார் அநாதியாய் அநந்தஜன்மங்களில் செய்த குற்றங்களுக்கு ஒரு ஜன்மத்தில் ப்ரபத்தி பண்ணுகிறவன் ஜன்மமெல்லாம் ப்ரபத்தியனுஸந்தானம் செய்தால் கூட அதற்குமேல் சேர்த்தால் கூட ஸக்ருத் என்றுதான் சொல்லவேண்டும் என்றார். இவர் வாக்கியத்திலுள்ள அநுஸந்தான பதத்தின் ஸ்வாரஸ்யத்தை யுட்கொண்டு ஒருதரம் ப்ரபத்தி என்றே அவர்கள் ஸித்தாந்தமென்பதையே நேர்ப்பொருளாக வெளியிட்டார் பட்டர். அதனை ஆதரித்தார் தேசிகன். வேறு பொருள் கூறுவதும் முன்னோருக்கு தூஷணமாகாது. விமர்சம் செய்வதும் தூஷணமாகாது. பெரியோரையே தாக்கிப் பேசுவதுதான் தூஷணம். அங்கங்கு வெவ்வேறு பொருளும் கூற வழிகாட்டினவர் எம்பெருமானார், எம்பார், பட்டர் எல்லாருமே யாவர். பல உதாரணங்கள் இங்கே க்ரந்தங்களை ஸேவித்துவருகிறவர்கள் ஸுகமாய்க் காணலாம். அஸ்வாரஸ்யம் தெரிந்தும் அபிநிவேசமாகப் பேசுகிறவர்களுக்கும் பெரியோர்களையே தூஷிப்பவர்களுக்கும் உத்தரம் சொல்வது அனவச்யகமாயினும் எங்கும் விவேகிகள் ப்ரமேய விசாரம் மட்டும் செய்வது தகுமென்று சில அம்சங்களை ப்ராமாணிகருக்கு எழுதினோம்.

இங்கு பூர்வார்த்தத்தில் நான்குவிதமாகப் பொருள் பணிப்பர் முன்னோர் என்றார் தேசிகன். அவையாவன—சரணாகதியிலடங்கிய ஆத்மநிக்ஷேபமும் கோப்த்ருத்வ வர்ணமும் அடைவாகச் சொல்லப்படுகின்றன; மானஸ ப்ரபத்தியும் வாசிக ப்ரபத்தியும்; வேறுபலனுக்கான ப்ரபத்தியும், மோக்ஷார்த்த ப்ரபத்தியும்; ப்ரபத்தியும் பக்தியும் என்றவை. இனி, மோக்ஷத்திற்காக ப்ரபத்தி செய்து இங்குள்ள காலத்திலும் அவனது கைங்கர்யத்தைக் கேட்பவனுக்கு என்றும் பொருள் கூறலாம். விபீஷணாழ்வான் போரில் துணையாயிருப்பது தொடக்கமாக பகவத் கைங்கர்யம் செய்தாரே; செய்தும் வருகின்றாரே. ஆளவந்தாரும் ப்ரபத்தி செய்த பிறகு, அவபோதிவாந் என்று தொடங்கி, நதேஹம் நப்ராணாந் என்கிற

வரையில் உத்தர காலத்தில் அந்நிலையை வேண்டியுள்ளாரே. இப்படி ஒரு பொருள் கூறினுல் இது தேசிக தூஷணமாகுமா. அனுபவங்கள் பலபடியிருக்கும். பெரியோர்களே ஓரிடத்தில் சொல்லாத விஷயத்தை மற்ருேரிடத்திலும் சொல்வதுண்டு. எம்பெருமானுரே ஸூத்திரத்திற்கு ஸ்ரீபாஷ்யத்திலும் தீபாதிகளிலும் வெவ்வேறு பொருள் பணித்தருளினுர். அவகாசமிருந்தால் ஒவ்வொருவருமே எல்லாப் பொருள்களையும் நாளடைவில் சொல்வர்.

தவாஹமஸ்மீதி ச யாசமாந: என்றவிடத்தில் அஸ்மி என்ற நிகழ்காலத்திற்கிணங்க, உனக்கு சேஷனுகிறேன்-இதி-என்ற காரணத்தினுல் உன்னிடம் யாசமாந:,யாசிக்கிறவன் என்றும் பொருள் கொள்ளலாம். தேசிகன் அஸ்மி என்பதை ஸ்யாம் என்று மாற்றி, உனக்கு நான் ஆகக்கடவேன் என்றதை யாசிக்கிறவன் என்றும் உரைக்கலாமென்றனர். ஸ்யாம் என்னுமே அஸ்மி என்ற ப்ரயோகம் ஏனெனில், நான் புதிதாக சேஷத்வம் பெறப் போவதில்லை; அனுதியாகவே சேஷனுகிறேன்; அதனை யிப்போது அறிந்தேன்; இவ்வறிவும் செயலும் நீடிக்க வேண்டுகிறேன் என்று குறிக்க. 'மம நாத' என்ற ச்லோகத்தின் கருத்தும் இதில் அடங்கும். (64)

அனுதியாய் அனந்தாபராதங்களைச் செய்து ஸம்ஸாரக் கடலில் மூழ்கியிருக்கும் தமக்கு இன்று தத்துவ ஹிதபுருஷார்த்த விவேகமும் வைராக்யமு மேற்பட்டு ப்ரபத்தி யனுஷ்டித்த நிலை வந்ததற்கு மூலகாரணம் நாதமுனிகளுடன் தமக்குண்டான இருவிதமான ஸம்பந்தமே என்பதை நினைத்து க்ருதஜ்ஞராய் அதை எம்பெருமானிடத்தில் அதற்கு ப்ராதான்யம் தோற்ற விஜ்ஞாபித்துக்கொள்ளுகிருர்.—

65. அக்ருத்ரிமத்வச்சரணு ரவிந்தப்ரேமப்ரகர்ஷாவதிம் ஆத்மவந்தம்—
பிதாமஹம் நாதமுநிம் விலோக்ய ப்ரஸீத மத் வ்ருத்தம் அசிந்தயித்வா.

அக்ருத்ரிம - க்ருத்ரிம மல்லாத - செயற்கையன்றிக்கே இயற்கையான, ஒரு பலனுக்காகவுமாகாததான, த்வத் - உனது, சரண அரவிந்த - திருவடித்தாமரைகளில், ப்ரேமப்ரகர்ஷ - அன்பின் ஏற்றத்திற்கு, அவதிம்-எல்லை நிலமானவரும், ஆத்மவந்தம்-ஆத்மாவைப் பெற்றவரும், பிதாமஹம் - பாட்டனுருமான - நாதமுநிம், நாதரென்ற யோகி புருஷரை, விலோக்ய - பார்த்து - அவர் ஸம்பந்தத்திற்காக, மத்வ்ருத்தம் - எனது குற்றத்தை, அசிந்தயித்வா - பாராட்டாமல், ப்ரஸீத - எனக்கு அருள்புரிவாயாக.

நாதமுனிகளுக்கு எம்பெருமானிடத்திலே அன்பு பிறப்பிலிருந்தே தொடர்ந்தது. ஒரு பலனுக்காக வந்து மறைந்ததல்ல. அது கடையெல்லையைப் பெற்று விளங்கினமை முதலிலேயே விரித்துரைக்கப் பெற்றது. அவ்வன்போடு இவ்வுலகில் வாழ்ந்து இப்போது உன்னைப் பெற்று உனது பூர்ணுபிமான பாத்ரமாக விளங்குகிருர். அவருக்குப் பேரனுனபடியாலே குடல்துவக்கோடு அவர் கடாக்ஷபாத்ரமானதோடு, அவர் மூலமான ஸம்ப்ரதாயமும் பெற்று இவ்வளவு நிலை பெற்றேன். கீழ் அமர்யாத: க்ஷுத்ர: என்றெல்லாம் சொன்னபடி என்னிடம் தவறுகள் எண்ணற்றிருந்தாலும் அவற்றுடன் எனக்கு அடியிலிருந்து நிற்கும் பிதாமஹஸம்பந்தமும் உனக்குக் கூடவே காணப்படுகிறபடியால் உனக்கு என்னிடம் தீவிரமான நிக்ரஹ ஸங்கல்பத்திற்கு அவகாசமில்லை. விபீஷணுதிகளுக்கு எத்தகைய ஆசார்ய

ஸம்பந்தம் ப்ரதான காரணமாயிருந்ததென்று அந்த ப்ரகரணத்தில் காணலாவதில்லை. அவர்களையே காக்கும் நீ என்னை விடவாகுமோ. ஆசார்ய ப்ரஸாத மடியாக உன் ப்ரஸாதத்தை அடியிலே நான் பெற்றவனாகிறேனே என்றபடி.

மத்வருத்தம் அசிந்தயித்வா என்றவிடத்தில் வ்ருத்தமாவது துர்வ்ருத்தம் மட்டும் என்பது ப்ரஸீத என்ற சொல்லினின்றே தேறும். கலக்கத்திற்குக் காரணமான வ்ருத்த்தையே தானே கொள்ள வேண்டும். 'வ்ருத்தவாந்' 'வ்ருத்தஹீநே ததா ச்ருதம்' இத்யாதி ப்ரயோகங் களைக் கொண்டு ஸத் வ்ருத்தத்தைக் கொள்ளலாமென்றார் பெரியவாச்சான்பிள்ளை. கீழே 'என்னுடைய நன்மைதீமைகளைப் பார்த்தே' என்று தீமையையும் கொண்டிருக்கிறார். அப்போது ஆளவந்தார் தாம் செய்த ப்ரபத்தியாதிகளை வேண்டாவென்று தள்ளி ஆசார்ய ஸம்பந்தமொன்றே தஞ்சமாக வேணுமென்று ப்ரார்த்திக்கிறாரென்றதாயிற்று. இது ஆசார்ய ஸம்பந்தத்தின் பெருமைக்குச் செய்த ஸ்தோத்ரமாகும். இல்லையேல் கீழ்ச்லோகங்க ளெல்லாம் வீணும். இந்த ச்லோகமும் வீணே. ஆசார்ய ஸம்பந்தம் தஞ்சமேயல்லது ஆசார்ய ஸம்பந்தத்தைக் கண்டு என்னையருள வேணுமென்ற ப்ரார்த்தனை தஞ்சமன்றே. இத்தகைய வாக்யங்களில் ரஸானுபவத்தோடு நிற்காமல் உள்ளபடியே கொள்வதால்தான் அடியினின்று விவாதங்கள் ஏற்பட்டு நின்றன. இதைப் போல் தான் அனுசயிக்க வேண்டுமென்று முன் சொன்னதற்கும் கருத்தாகும். இல்லையேல், அநுசயம் பண்ணாது தவறென்று இப்போது சொன்னதாகும். அப்போது ப்ரபத்தி செய்தது ந்யாயமாகும். மத் வ்ருத்தமென்ற விடத்திலே பொதுவாக எல்லாச் செயலையும் கொள்வதானாலும், என்னுடைய நன்னடத்தையில் ஏதேனும் குறையிருப்பினும் அதைக் கணிசியாமல், இனி நான் தேஹாவஸானம் வரையில் ஒழுங்காக நடப்பேனா என்றெல்லாங்கூட ஆராயாமல், நாதமுனி ஸம்பந்தாபிமானத்தாலே சிக்ஷையைக் குறைத்து அத்தை ஒழுங்காக்கிக் கொண்டு பூர்ணாதிகாரிக்கு ஈடாக்கி யருளவேணு மென்று ஆசார்யானுக்ரஹத்தின் பெருமையைக் காண்பித்து க்ருதஜ்ஞரானாரென்க.

முடிவில் ஸ்ரீதேசிகன் அருளிச்செய்த இந்த ஸ்தோத்ரரத்ன விஷயச் சுருக்கம் பின் வருமாறு—த்வய மென்கிற மந்த்ரரத்னத்தின் பொருளையடக்கி ஸ்தோத்ரரத்னம் செய்தருளும் ஆளவந்தார்-ஐந்து ச்லோகங்களாலே அறிவளித்தவரை வணங்கி 6-ல் ஸ்தோத்ரம் தொடங்கி 7-ல் ஸ்தோத்ரத்தில் அச்சம் தரும் பரத்வத்தைக் காட்டி 8-9-ல் அஞ்சாமைக்கான ஸௌலப்யத்தை யறிவித்து 10 முதல் 21வரையில் நாராயண சப்தார்த்தத்தை விரித்துரைத்து 22-ல் ப்ரபத்தியை யனுஷ்டித்தார். 23-27 வரையில் ப்ரபத்திக்கு அதிகாரம் தமக்குள்ளதை வெளியிட்டு 28-29ல் இலகுவான உபாயத்திற்கும் பெரிய பலனுண்டென்று தெரிவித்து, மேலே 30 முதல் 46 வரையில் த்வயத்தில் உத்தரகண்டத்தின் பொருளான பலனை வெளியிட்டார். 47ல் பலனில் ஆசையுடன் தகுந்த உபாயம் செய்யும்படியாகாமல் கெட்டேனே என்று வருந்தி 48-51ல் ப்ரபத்தியே யளிக்குமென்று காட்டி, 52, 53-ல் ஸமர்ப்பண தத்துவத்தை சோதித்து, மேலே 54-57ல் இங்குள்ளவரையில் செவ்வனேயிருக்க அனுக்ரஹம் வேண்டி, 58 முதல் அவனுடைய காருண்யம் பந்துத்வம் வாத்ஸல்யம் முதலான குணங்களே தஞ்ச மென்று ஸாக்ஷியுடன் ரூபித்து 64-ல் வ்ரதத்தை வெளியிட்டு 65-ல் ஆசார்யானுக்ரஹத்தின் பெருமையையும் கூறி, நைச்யம் நிர்பயத்வமெல்லாம் சேர்த்து வெளியிட்டருளினர். ப்ரஹர் ஷயிஷ்யாமி என்பதினின்று மேலெல்லாம் நமச்சப்தத்தின் பொருள்விரிவாகும்.

ச்ருதி மௌளி ஸூரிசரணப்ரவண: சுபயாமுநஸ்துதியுகிஹ்ருதயம்.

இதி வீரராகவஸுதீர் வ்யவ்ருணோத் நதரங்கலக்ஷ்மணமுநீந்த்ரபத:.

ஸ்ரீமத்யாமுநமுநயே நம:—

சுபமஸ்து.